ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 ஜூலை 1938 கதிர் 12

அடுத்த பங்கங்களில்

நமது நியாய சபை	—	1
உலக வல்லரசுகளின் படை பலம்	—	8
உலகத்திலே என்ன நடக்கிறது	(கார்ட்டூன்கள்)	12
விசால பாரதம் அல்லது மகா ஆர்யா வர்த்தம்	வி. ராகவேந்திர ராவ் B. A., B. T.,	14
சமஷ்டி அரசியல்	கே. வி. ராம சுப்ரமணியம் B. A., B. L.,	17
கசங்கின புஷ்பம்—சிறு கதை	எம். வி. வேங்கடராமன்	20
சக்திகள் ஒன்றுபடட்டும்	வி. தேவாச்சாரியன்	25
ஒரு பேராசிரியரின் வரலாறு	ச. மு.	29
ஸர். சி. சங்கரன் நாயர்	"ஒரு காங்கிரஸ் வாதி"	33
யுத்தமில்லாத யுத்தம்!	ஆர். ஜி. எஸ்.	36
யுத்தம் ஏற்படுமானல்—?ட்ரோட்ஸ்கியின்கருத்து	ஏ. எம். ஜே.	38
வருமானமுள்ள தொழில் எது?	—	44
ஐந்து மலர்கள்—பாடல்	வித்வான் எஸ். உமைதாணுப் பிள்ளை	45
புரட்சி மனப்பான்மை—ஒரு சிறுகதை	"புதுமைப் பித்தன்"	46
லஜாரோ கார்டேனஸ்	—	50

பார்லிமெண்ட் நடைமுறை	மு. துரைசாமி	52
ஒரு பரீட்சை—அரசியல் வாதிகளுக்கு	"மலையமான்"	56
கிழக்கிந்தியா கம்பெனி தோன்றிய வரலாறு	வி. தேவராஜன்	57
உலகத்திற்கு இந்தியாவின் பாடம் என்ன?	சுவாமி விசுவானந்தா	61
தர்ம ராணி—குழந்தைகளுக்கான சிறு கதை	எஸ்.	63
சுசீலை மணம்—ஒரு சிறு பிரஹஸனம்	எஸ். எஸ்.	65
தட்டு ஜய பேரி!—பாடல்	"குழந்தைகளின் அன்பன்"	72
ஒளி மின்சாரக் கருவியின் அரிய சேவைகள் யாவை?	"விஞ்ஞான போதகர்"	73
இந்தியாவின் ஏற்றுமதி—இறக்குமதி வியாபாரம்	—	83
சினிமாவும் தேச முன்னேற்றமும்	டி. வீரராகவன்	86
நமது நிருபர்களுடன்—	—	89
டாக்டர் ஷுஸ்நிக்கின் காதல் கதை	"நேசன்"	93
மனித சமூகத்தை உத்தாரணம் செய்வது இந்தியா தான்	—	95
துலாக்கோல்	(புஸ்தக விமரிசனம்)	96
பரஸ்பரப் புகழுரைகள்—முஸோலினி-ஹிட்லர்		100
சினிமா பக்தர்களுக்கு	—	103
கட்டுரைப் பஞ்சம்	"வருணன்"	105
அன்றாட உலகம்	—	108

ஜோதி

சுடர் 1 ஜூலை - 1938 கதிர் 12

ஜவஹர்

ஆசீர்வாதம் செய்தவருக்கு நன்றி செலுத்துவது நமது பரம்பரைத் தருமம். அந்த முறையில் பண்டித ஜவஹர்லால் நேருவின் நல்லாசி பெற்றுத் தோன்றிய "ஜோதி" இன்று ஒரு வருஷக் குழந்தையாகி, சுவர் பிடித்து நடக்கிற நிலையில் ஜவஹரின் அருள் நிறைந்த முகத்தை நோக்குகிறது. அவருடைய உலக திருஷ்டியிலே தானும் பார்க்க முயல்கிறது. மற்றவர்களுடைய பார்வையும் இப்பொழுதுதான் இந்தக் குழந்தையின் மீது விழ ஆரம்பித்திருக்கிறது.

"ஜோதி"யின் உதய காலத்தில் ஜவஹர் ராஷ்ட்ரபதியாக இருந்தார். இன்று அவர் விசுவ மேடையில் வீரனாகத் திகழ்கிறார். அதைக் கண்டு "ஜோதி" எவ்வளவு ஆனந்தப்படுகிறது!

ஜவஹர் இப்பொழுது மேனாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார். பிரதிநிதித்துவப் பதவியோ, அதிகார அந்தஸ்தோ ஒன்றும் அவருக்கு இல்லை. பாமர ஜனங்களிடத்திலே பிரமிப்பைக் கொடுக்கக்கூடிய தீர்க்கதரிசி அல்லது மஹாத்மா முதலான பெயர்கள் அவருக்கு முன்னால் கட்டியங்கூறிக் கொண்டு செல்லவில்லை. ஆனாலும், ஜவஹருக்கு மேனாடுகளிலே நடைபெற்றுவருகிற உபசாரங்கள், முடியணிந்த மன்னர்களும் பொறாமைப் படத்தக்கவையாயிருக்கின்றன. மன்னர்கள் பெறுகிற உபசாரம், ஏதோ ஒருவிதமான தூண்டுதலை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கும். ஆனால் ஜவஹருக்கு மேனாட்டு அரசியல் தலைவர்களும் பிறரும் காட்டுகிற மரியாதைகள், செலுத்துகிற அன்புக்காணிக்கைகள் யாவும் அவர்களுடைய உள்ளத்தின் அஸ்திவாரத்தினின்று தோன்றியவை. ஜவஹரை ஒரு தனி மனிதர் என்ற முறையில்தான் இவர்கள் போற்றுகிறார்கள். இது பெரிய விசேஷம். யாருக்குமே, இதற்குமுன் இத்தகைய பெருமை ஏற்பட்டதில்லை. இந்தப் பெருமை இந்தியாவையும் சேர்ந்தது. ஜவஹரின் இந்த வருஷத்து மேனாட்டுப் பிரயாணத்தினால் இந்தியாவின் அந்தஸ்து, விசுவ திருஷ்டியில், ஒரு படி உயர்ந்திருக்கிறதென்பதை நாம் நினைக்கிற போது, நாமும் ஒரு படி உயர்ந்

திருப்பதாகிற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது.

ஜவஹர் இப்பொழுது மேனுடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்வதன் நோக்கமென்ன? ஓய்வு கொள்ளவா? உல்லாச யாத்திரை தானு? அல்லது தன்னருமந்த மகளைப் பார்க்கவேண்டு மென்ற ஆவலா? தமது அரசியல் நண்பர்களைச் சந்திக்கவா? இந்த மாதிரியான ஊகங்களுக் கெல்லாம் ஜவஹர் இடமே வைக்கவில்லை. 2-6-1938ல் பம்பாயி னின்று புறப் பட்டபோது, இவர் பாரத தேசத் திற்குப் பின்வரும் செய்தியை விடுத் தார்:—

நான் ஒரு நோக்கத்திற்காக ஐரோப்பா செல்கிறேன். ஸ்பெ யின், இங்கிலாந்து, பிரான்ஸ், கூடு மானுல் ருஷ்யா, அமெரிக்கா முத லிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு, சில மாதங்களில் திரும்பி வர உத் தேசித் திருக்கிறேன். முப்பத் தைந்து கோடி மக்களைக் கொண்ட நமது தேசம், சுதந்திரத்திற்காக இருப்பதா இறப்பதா என்ற ஒரு பெரிய போராட்டத்தில், பிரிட் டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோத மாக இறங்கி யிருக்கிறது. நமது ஜனங்கள், தங்களுடைய பிறப் புரிமையாகிற சுயராஜ்யத்தைப் பெறத் தீர்மானித்திருக் கிருர்கள். காங்கிரஸ், வளர்த்துக் கொண்டு வருவதற்கு இந்த உறுதிதான் கார ணம். பாரத தேசவாசிகள், இந்திய தேசியக் கொடியை எப் பொழுதும் பறக்கவிட்டுக் கொண் டிருப்பார்கள் என்று நான் பூரண மாக நம்புகிறேன். எப்பொழு தையும்விட இப்பொழுது சுயராஜ் யம் நமக்கு மிகவும் நெருங்கி யிருக் கிறது. ஆகையால் நமது போராட் டத்தைப் பலப்படுத்துவோமாக.

இவர் குறிப்பிடுகிற நோக்கம் எது? இதை இவர் இது வரையில் தெளி வாகக் கூறிஞரில்லை. சர்வ தேச நிலை மைகளை அறிந்து, அவற்ருேடு இந் தியா எவ்விதத்தில் சம்பந்தப்பட்டி ருக்கிறது என்று நிர்ணயித்துக் கொள் வதே தமது நோக்கமென்று ஓரிடத் தில் இவர் கூறியிருப்பது உண்மையே. ஆனுல் அதற்காக இவர் இவ்வளவு சிரமமான சுற்றுப் பிரயாணத்தை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்.

உருட்டலும் மிரட்டலும் நிறைந்த ஐரோப்பிய அரசியல் நிலைமையோடு இந்தியா தன்னை எப்படிப்பொருத்திப் பார்த்துக் கொள்ள முடியும்? ஒருவர் முதுகை ஒருவர் சொரிந்து கொள்கிற மாதிரி அமைந்திருக்கிற ஹிட்லர்—முஸோலினி புகழுரைகளை 100ம் பக் கத்தில் வெளியிட்டிருக்கிருேம். இவற் றை நாம் சிறிது துருவிப் பார்க்கும் போது, ஐரோப்பா கண்டத்தில் தெய் விக ரோம ஏகாதிபத்தியத்தை ஸ்தா பித்து அதற்கு இரண்டு தூண்களாகத் தாங்களே அமைந்துவிட வேண்டு மென்ற எண்ணம் மேற்படி இரண்டு சர்வாதிகாரிகளிடத்திலும் குடி கொண்டிருப்பதை நாம் நன்ருகக் காண்கிருேம். எந்த நிமிஷத்திலும் ஐரோப்பாவில் யுத்தம் ஏற்படலாம். இதை பண்டித ஜவஹர், தமது பாரிஸ் ரேடியோ பிரசங்கத்தில் குறிப் பிட்டிருக்கிருர்.

அப்படி யுத்தம் ஏற்படுமானுல், இந் தியாவின் நிலைமை யென்ன? கடமை யென்ன? இந்த நிலைமையையும் கட மையையும் தெளிந்து கொண்டு வரு வதே இவருடைய சுற்றுப்பிரயாணத் தின் நோக்கம் என்று நாம் ஊகிக்

கிறோம். ஏனென்றால் இந்தத் தெளிவு ஏற்பட்ட பின்னர்தான், நமது வருங்காலப்போராட்டத்தை எந்த முறையில் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நிர்ணயித்துக் கொள்ள முடியும். தற்போதைய ராஷ்டிரபதியான ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், அடிக்கடி தமது பிரசங்கங்களில் இந்த வருங்காலப் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தப் போராட்டம் என்ன, அஃது எத்தகையதா யிருக்கும் என்பதைப்பற்றி யாருமே இன்னும் குறிப்பிடவில்லை. இதை நிர்ணயிக்கவே பண்டித ஜவஹர் மேனாட்டுப் பிரயாணத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று நாம் கருதுகிறோம்.

அடுத்த போராட்டத்திற்குக் காந்தியடிகள் தலைவராயிருப்பாரா, அல்லது பண்டித ஜவஹர்லால் இருப்பாரா என்பதை இப்பொழுது நாம் துணிந்து கூறமுடியாது. தேசத்தின் ஜன சக்தியானது யாருடைய தலைமையை நாடிச் செல்கிறதென்பதை நாம் இதுகாலை ஒருவாறு ஊகித்தறிய முடிகிறதாயினும், அதை இப்பொழுதே பகிரங்கமாகச் சொல்லிவிட நாம் விரும்பவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நாம் நிச்சயமாகக்கூற முடியும். எந்தவிதமான போராட்டம் நடந்தாலும், அஃது யாருடைய தலைமையில் நடந்தாலும், அஃது அஹிம்சா தர்மத்தையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். அப்படி நடைபெறுகிற போராட்டம் கடைசிப் போராட்டமாகவும் வெற்றி தருவதாகவும் இருக்கும்.

ஹிந்து முஸ்லீம் சமரஸம்

ஹிந்து-முஸ்லீம் சமரஸம் சம்பந்தமாக மகாத்மா காந்திக்கும் ஜனாப் ஜின்னாவுக்கும், பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் ஜனாப் ஜின்னாவுக்கும் முறையே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவை படிப்பதற்கு மிகவும் துக்ககரமாயிருக்கின்றன. இந்தக் கடிதப் போக்கு வரத்து வெளியீட்டினால் காந்தியடிகளின் பெருந் தன்மை அதிகப்பட்டிருக்கிறது. மாதிரிக்காக கடிதப் போக்குவரத்தில் காணப் பெறும் சில பகுதிகளை மட்டும் கீழே மொழி பெயர்த்துக் கொடுக்கிறோம்.

ஸ்ரீ ஜின்னாவுக்கு,

லட்சுமணபுரியில் தாங்கள் பேசியதை நான் ஜாக்கிரதையாகப் படித்துப்பார்த்தேன். என்னுடைய நோக்கத்தைப்பற்றித் தாங்கள் தவறாக நினைத்துக் கொண்டிருப்பதைக் குறித்து என் மனம் புண்பட்டது. நீங்கள் அனுப்பிய ஒரு கடிதத்திற்குப் பதிலாகவே நான் அக் கடிதத்தை அனுப்பினேன். எனது உள்ளுணர்ச்சியை அது வெளிப்படுத்தியது. உங்களுக்கென்றே அந்தக் கடிதம் எழுதப்பட்டது. நீங்கள் அதை இந்த மாதிரி உபயோகப்படுத்தியது சரிதானா? உங்களுடைய பேச்சு, யுத்தங்கொடுக்கிற முறையிலே தான் அமைந்திருக்கிறது. இரண்டு சமூகத்தாருக்கும் இடையே என்னைஒரு பாலமாக ஒதுக்கி விடுவீர்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அந்தப்பாலமே வேண்டாமென்று சொல்வதுபோலிருக்கிறது உங்கள் பேச்சு. இரண்டு பேரிடையேதான் சண்டை நிகழும். சமாதானத்தை உண்டுபண்ண என்னால் முடியாவிட்டாலும், யுத்தஞ் செய்ய நான் தயாராயில்லை. * * *

—காந்தி.

ஸ்ரீ ஜின்னுவுக்கு,

* * * 1915ம் வருஷம் நான் தென்னுப்பிரிக்காவிலிருந்து திரும்பிவந்த பிறகு, நீங்கள் ஒரு பெரிய தேசியவாதி என்றும், ஹிந்துக்களுடையவும் முஸல்மான்களுடையவும் நம்பிக்கைப் புருஷரென்றும் உங்களைச் சொன்னூர்கள். நீங்கள் அதே ஜின்னுவாகத்தான் இப்பொழுதும் இருக்கிறீர்களா? * * *

—காந்தி.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காந்திக்கு,

* * * என்னுடைய பேச்சுகளில் பழைய தேசியவாதியைக் காணவில்லையென்று சொல்கிறீர்கள். அப்படி நீங்கள் சொல்வது நியாயந்தானு? 1915ம் வருஷத்தில் ஜனங்கள், உங்களைப்பற்றி என்ன சொல்லிக் கொண்டார்கள்; இப்பொழுது என்ன சொல்லிக்கொள்ளுகிறூர்கள், என்ன நினைக்கிறூர்கள் என்பதைப்பற்றி நான் கூறத் தயாராயில்லை. தேசியவாதியாக இருப்பது எந்தத் தனி மனிதருடைய உரிமையு மல்ல. இந்தக் காலத்தில் இதை வரையறுத்துக் கூறுவது மிகவும் கடுமை. * * * —ஜின்னு.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காந்திக்கு,

* * * எப்படியும் மார்ச் மாதம் பத்தாந் தேதிக்குள் உங்களைப் பார்க்க நான் சிவகான் கிராமத்துக்கு வரமுடியாது. நான் பம்பாய்க்குப் போக வேண்டும். தவிர எல்லா சுற்றுப்பிரயாண ஏற்பாடும் செய்து விட்டேன். ஆனுல் நம்மிருவருக்கும் பொருத்தமான ஓர் இடத்தையும் காலத்தையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். * * *

—ஜின்னு.

ஸ்ரீ ஜின்னுவுக்கு,

* * * நீங்கள் சிவகான் கிராமத்துக்கு வர முடியாமல் போனுல், என் தேக நிலை இடங் கொடுக்குமாயின் நான் சந்தோஷமாக பம்பாய்க்கு, உங்களை வந்து சந்திப்பேன். * * *

—காந்தி.

ஃ ஃ ஃ

ஸ்ரீ ஜின்னுவுக்கு,

* * * சிவகான் கிராமத்துக்கு வந்து சேர்ந்ததும், முதன் முதலாக பம்பாய்க்கு வந்து உங்கள் பேட்டிக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். * * *

—காந்தி.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காந்திக்கு,

* * * நான் கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்ததும், ஏப்ரல் மாதம் 25ந் தேதிவாக்கில் உங்களை பம்பாயில் சந்திப்பேன். * * *

—ஜின்னு.

ஸ்ரீ ஜின்னுவுக்கு,

* * * நீங்கள் பம்பாய்க்குப் போகிற வழியில் ஒருநாள் வார்தாவில் இறங்கிவிட்டுப் போனுல், பம்பாய் பிரயாணத்தினுல் எனக்கேற்படுகிற தேக சிரமத்தைக் குறைத்தவர்களாவீர்கள். எப்படியும் மௌலானு அஸாத், என்னேடு தங்களைக்காணவரலாமென்று கருதுகிறேன். * * *

—காந்தி.

ஸ்ரீ காந்திக்கு,

* * * திட்டத்தை மாற்ற முடியாததைக் குறித்து வருந்துகிறேன். 25ந் தேதி வாக்கில் உங்களைப் பம்பா

யில் சந்திப்பேன். உங்களைத் தனியாகக்காணவே விருப்பம். * * *

—ஜின்னா.

ஃ ஃ ஃ

ஸ்ரீ ஜின்னாவுக்கு,

* * * 25ந்தேதி திங்கட்கிழமை. ஆதலின் தங்களுக்கு அசௌகரியமில்லாவிட்டால் 28ந் தேதிக்கு வந்து சேருவேன். * * * —காந்தி.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காந்திக்கு,

* * * வந்தனம். 28ந் தேதி உங்களை என் வீட்டில் சந்தோஷகரமாக வரவேற்பேன். —ஜின்னா.

இந்தக் கடிதப் போக்கு வரத்துகளினால், சமரஸ முயற்சிகள் முறிந்து விட்டனவென்று சொல்லுகிற நிராஜனுகூல வாதிகளின் கோஷ்டியில் நாம் இப்பொழுதே சேர்ந்து கொள்ள விரும்பவில்லை. இதைப் பற்றிக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆலோசித்து ஒரு முடிவு கூறுகிற வரையில் நாம் பொறுத்துப் பார்க்க விரும்புகிறோம். ஆனால் பம்பாய் ஷெரீப்பும், முஸ்லீம்களிடையே செல்வாக்குப் பெற்றவருமான ஜனாப் மகம்மதுபாய் ஐ. எம். ராவ்ஜி என்பவர் இந்த சமரஸப் பேச்சுக்களைப்பற்றி என்ன கூறுகிறார் என்பதைக் கேளுங்கள்.

'இந்த சமரஸப் பேச்சை இன்னும் நீடித்துக்கொண்டு போவது தவறு. அப்படிச் செய்துகொண்டு போவது, தேசிய மனப்பான்மையும், சுதந்திர உணர்ச்சியுமுள்ள முஸ்லீம்களிடையே, காங்கிரஸிடத்தில் ஒருவித அவநம்பிக்கையை உண்டு பண்ணும்.'

பூமியின் வயது

பூமி சாஸ்திரிகள், பூமியின் வயது 300,000,000 வருஷங்கள் என்று நிர்ணயித்திருந்தார்கள். இப்பொழுது அமெரிக்காவி லுள்ள இரண்டு அறிஞர்கள், பூமியின் வயதை 13,000,000,000 வருஷங்களுக்கு முன்னால் தள்ளிப்போட்டிருக்கின்றனர். தவிர, பூமியில் பிராணி வர்க்கம் தோன்றி 1,500,000,000 வருஷங்களாகின்றன வென்று தீர்மானித்திருக்கின்றனர். இதைக் கேட்டு நாம் சந்தோஷிக்கவோ துக்கிக்கவோ வேண்டுவதில்லை. ஆனால், நாகரிக வேஷந்தரித்து பூமி மீது உலவிக் கொண்டிருக்கிற மனிதன், மனிதத் தன்மையடைய இன்னும் எத்தனை வருஷ காலம் செல்லும் என்பதைப் பற்றித் தான் நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. இதை எந்த மஹா தத்துவ சாஸ்திரியாவது, விஞ்ஞான நிபுணராவது அறுதியிட்டுக் கூற முடியுமா?

கனவா?

ஐரோப்பிய மகா யுத்தம் முடிவுற்று இருபது வருஷங்களுக்கு மேலாகிறது. மற்றொரு யுத்தத்திற்குக் கூட நாகரிக உலகம் தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க ஐரோப்பிய யுத்தத்தின்போது, தான் அநேக அரசாங்கங்களுக்குக் கொடுத்த கடனைத் திருப்பிப் பெற வேண்டுமென்ற கனவு உலகத்தில் இன்னும் அமெரிக்கா வாழ்ந்துகொண்டிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. கடன் தவணையாக 15-6-38க்குள் பதின்மூன்று அரசாங்கங்களிடமிருந்து 18,910 லட்சம் டாலர் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று மேற்படி பதின்மூன்று அரசாங்கங்களுக்கும் அமெரிக்கா அறிக்கை அனுப்பி

யிருக்கிறது. இந்த அறிக்கைக்கு என்ன பதில் கிடைக்கும் என்பதை ராய்ட்டர் நிருபரே முடிவு கட்டியிருக்கிறார். எஸ்தோனியா என்ற நாடு தன்னால் ஒன்றும் கொடுக்க முடியாதென்று தெரிவித்து விட்டது. இதே மாதிரியான பதில்தான் மற்றத்தேசங்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. இதை நன்றாக அறிந்திருந்தும் அமெரிக்கா ஏன் இப்படிப் பண ஆசைகொண்டு விரட்டுகிறது?

மாதிரி

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மன்னருடைய லண்டன் வாசஸ்தலத்துக்கு பக்கிங்ஹாம் அரண்மனை யென்று பெயர். இதேமாதிரி தமது சமஸ்தானத்திலும் ஓர் அரண்மனை கட்டவேண்டு மென்று ஒரு சுதேச மன்னர் தீர்மானித் திருப்பதாகவும் இதற்குச் சுமார் இருபது லட்சம் பவுன் செலவழிக்கப் படுமென்றும் பிரிட்டிஷ் பத்திரிகை யொன்று கூறுகிறது. இது வெறும் சரடா யிருக்க வேண்டு மென்று நாம் விரும்புகிறோம். இப்படிப்பட்ட செயல்களினால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் தலைவர்களோ, பிரிட்டிஷ் பொது ஜனங்களோ தங்களைப் பெருமையாக நினைத்துக் கொள்வார்களென்று எந்தச் சமஸ்தானாதிபதியாவது நினைத்துக் கொண்டிருப்பாரானால், விரைவிலே அவர்கள் அதனை மறந்து விடுதல் நல்லது. தேசீய விழிப்புப் பெற்ற இந்தியாவில் இத்தகைய ஆடம்பரங்களுக்கும் போலி கௌரவங்களுக்கும் இடமேயில்லை. சமீபத்தில் பாடியாலா மன்னர் ஜப்பானிய முறையில் தமது அரண்மனை யொன்றைக் கட்டுவிப்பதற்காக ஜப்பானி லிருந்து சில சிற்பிகளையும் இஞ்சினீர்களையும் வரவழைத்திருக்கிறார் என்று அறிகிறோம். முற்காலத்தில் நமது மன்னர்கள், சுதேச கலைகள் அனைத்திற்கும் ஆதரவளித்து வளர்த்து வந்தார்கள். ஆனால் தற்போது மன்னர்களென்ற பெயரையுடைய சமஸ்தானாதிபதிகள், சுதேசக் கலைகளை ஆதரியா விட்டாலும், வெளி நாடுகளுக்குப் பணத்தை வாரி இறைக்காமலாவது இருக்கக் கூடாதா?

தினம் பத்து லட்சம் பவுன்

பிரிட்டிஷ் அரசாங்கம், யுத்த தளவாடங்களை அதிகரித்துக் கொள்ளும் முயற்சியில் தினந்தோறும் பத்து லட்சம் பவுன் விகிதம் செலவழித்துக் கொண்டு வருகிற தென்று ஸ்ரீ ஹோரே பெலிஷா என்ற மந்திரி கூறியிருக்கிறார். அமெரிக்காவி லிருந்து புது மாதிரியான நானூறு ஆகாய விமானங்களை வாங்க பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. தவிர, கப்பற் படைக்காக 1938ம் வருஷத்தில் 2,410,500 பவுன் செலவழிக்கக் கடற்படை மந்திரிக் காரியாலயத்தார் தீர்மானித் திருக்கின்றனர். இத்தனை சந்நாகங்களும் எதற்குத் தெரியுமா? எல்லாம் இந்தப் பாழான உலக சமாதானத்தைக் காப்பாற்றுவதற்குத்தான்! இதை விட நகைச்சுவை நிரம்பிய விஷயம் வேறேதேனு முண்டோ?

ருஷ்யாவில் கல்வி

ருஷ்யாவில் சோவியத் ஆட்சிமுறை ஏற்பட்ட பிறகு, பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிற தென்று, அந் நாட்டை நேரில் பார்த்துத் திரும்பியவர்கள் கூறுகிறார்கள். சிறப்பாக, பல மதங்களும் பல பாஷைகளும் நிறைந்த ருஷ்யாவில்,

கல்வி முன்னேற்றம் மிகவும் சிலாகிக்கத் தக்கதாயிருக்கிறது. கல்வியைப் பரப்புவது சுலபந்தான். ஆனால் கல்வி கற்றவர்களுக்குத் தக்க மாதிரி வேலைகளை ஏற்பாடு செய்து கொடுப்பது சிரம சாத்தியமான காரியம். எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைந்திருப்பதாகப் பெருமை கூறிக்கொள்ளும் அநேக நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் உக்கிரமாயிருக்கிறது. ஆனால் ருஷ்யாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையென்று, மேற்படி அரசாங்கத்து அதிகாரி யொருவர் கூறுகிறார்.

'எங்கள் நாட்டிலே வேலையில்லாத ஒரு விஞ்ஞான சாஸ்திரியையோ, அல்லது நிபுணரையோ காண்பியுங்கள். வேலையில்லாத படிப்பாளி யொருவரை எங்கள் நாட்டிலே காண்பிக்கிறவர்களுக்கு இனாம் தருகிறோம்'.

இது கொஞ்சம் மிகைப் படுத்திக் கூறுவதாயினும் இதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் வேண்டும். தவிர, ருஷ்யாவி லுள்ள சர்வ கலாசாலைகள், உயர்தரப் பள்ளிக்கூடங்கள் முதலியவற்றில் படிக்கிற மாணாக்கர்களின் எண்ணிக்கையோடு, மற்ற நாட்டுச் சர்வ கலாசாலைகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் படிக்கிற மாணாக்கர்களுடைய தொகையை ஒப்பிட்டுப் பேசுகிறார் இவர்.

பிரிட்டனில்	51,000	மாணாக்கர்கள்
ஜெர்மனி	74,000	,,
இத்தலி	73,000	,,
பிரான்ஸ்	74,000	,,
ஜப்பான்	146,000	,,
ருஷ்யா	400,000	,,

காந்தி வழி

ஸ்ரீ ஜார்ஜ் லான்ஸ்பரி, பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் செல்வாக்கு நிரம்பிய தலைவர். யுத்தத்தின் மூலமாக ஒரு நாட்டோடு மற்றொரு நாடு சம்பந்தம் வைத்துக் கொள்ள முடியாதென்பதில் பூர்ண நம்பிக்கையுடையவர். இவருக்கு எண்பது வயதாகிறது. இவர் சமீபத்தில் ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்று அந்தந்த நாட்டுத் தலைவர்களைக் கண்டு பேசி, சமாதான முறையில் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ முடியாதா வென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து இப்பொழுது 'சமாதானத்தில் எனக்குள்ள ஆவல்' என்ற ஒரு நூல் வெளியிட்டிருக்கிறார். அதில் ஓரிடத்தில் பின் வரும் வாக்கியங்கள் காணப் படுகின்றன :—

'காந்தி ஒரு வழியைக் கோலியிருக்கிறார். இந்த வழியில் நாம் சென்றோமானால், யுத்தங்கள் எந்தக் காரணங்களால் ஏற்படுகின்றனவோ அந்தக் காரணங்களிலிருந்து மானிட சமூகம் விடுதலை பெறும். ஆ ன ல் அவருடைய வழியை அறை குறையாகப் பின் பற்றாமல் முழு மனதுடன் பின் பற்ற வேண்டும்.'

காந்தியத்தினால் தான் உலகத்திற்கு உய்வு உண்டு என்பதற்கு இதை விட வேறு அத்தாட்சி வேண்டுமா?

உபகாரச் சம்பளம்

'நியுஸ் ரெவ்யு' என்ற பத்திரிகையில் கனம் ஆகாகான்—ஹிட்லர் சந்திப்பைப் பற்றி வெளியாகியுள்ள ஒரு கட்டுரையில் பின் வரும் குறிப்பு காணப்படுகிறது:—

உலக வல்லரசுகளின் படை பலம்

உலகத்தில் எந்த மூலே முடுக்கை நோக்கினுலும் யுத்த முழக்கம் கேட்கிறது. ஒவ்வொரு நாட்டுத் தொழிற்சாலேயும் தினத்திற்குப் பதினெரு மணி பன்னிரண்டுமணி விகிதம் வேலே செய்து ஏராளமான யுத்த தளவாடங்களே உற்பத்தி செய்து குவித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலேயில் யுத்தம் எந்தச் சமயத்திலும் ஏற்படலாமென்று அரசியல் நிபுணர்கள் எதிர் பார்ப்பதில் ஆச்சரியமில்லே யல்லவா?

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள படை பலம் எவ்வளவு என்பதைப் பற்றி வெகு சமீபத்திலே எடுக்கப்பட்ட சில புள்ளி விவரங்களேக் கீழே கொடுத்திருக்கிறேம். இவை ஜெனீவீவேடபோயிஸ் என்ற ஒரு ஸ்திரீ பத்திரிகை நிருபர் எழுதிச் சமீபத்தில்

'பிரபல கோடீசுவரரான கனம் ஆகாகான், ராணுவ சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் செய்கிற உதவிக்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடமிருந்து மாதம் 751 பவுன் பென்ஷன் பெறுகிறார்'. கனம் ஆகாகானுக்கு ஜே!

தாய் மொழியில்

சர்வ கலாசாலேகளின் பட்டமளிப்பு விழாவின்போது யாரையாவது ஒருவரைக் கொண்டு பிரசங்கங்கள் செய்விப்பது வழக்கம். இந்தப் பிரசங்கம் ஆங்கிலத்தில் செய்யப்படுவது ஒரு சம்பிரதாயம். இதையொழித்து அந்தந்த மாகாணபாஷைகளில் செய்யப்பட வேண்டுமென்று நடைபெறுகிற முயற்சியை நாம் பூரணமாக ஆதரிக்கிறேம். தேசப் பற்றுக்கு அடிப்படையானது தாய்மொழிப் பற்று. அந்தப்பற்று வளர்வதற்கான முயற்சிகளே, காங்கிரஸ் மந்திரிகள் ஆங்காங்கு செய்துவருகிருர்கள். எனவே, சர்வகலாசாலேப் பிரசங்கங்கள் தாய் மொழியிலே செய்யப்பட வேண்டுவது பொருத்தந்தானே.

சர்வதேச சங்கம்

தென்னமெரிக்காவி லுள்ள சிலி என்ற தேசம் சர்வ தேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டு போய் விட்டது. இந்த நாட்டின் பிரதிநிதி இதற்குக் காரணம் கூறுகிறபோது, சர்வதேச சங்கத்தின் முன்னிலேயில் பஞ்சாயத்துக்கு வந்திருக்கிற 42 அரசியல் விவகாரங்களில் 11 தான் சமரஸமாகத் தீர்ந்திருக்கிற தென்று குறிப்பிட்டார். சர்வதேச சங்க உபாசகர்களுக்கு இதைவிட வேறு சவுக்கடி தேவையில்லே. ஒரு நாட்டை மற்றொரு நாடு பலாத்காரமாக ஆக்ரமித்துக் கொள்ள முயற்சி செய்யுமானுல், அதைக் காப்பாற்ற சர்வ தேச சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லே யென்று சிலி பிரதிநிதி பேசியதில் புதுமையொன்றுமில்லேயே.

வெளியிடப்பட்ட நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

கிரேட் பிரிட்டன்: மொத்த ஜனத்தொகை 47,098,000. தரைப் படையில் 115,000 பேர் பிரிட்டனிலும் 90,000 பேர் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளிலும் இருக்கின்றனர். எந்தச் சமயத்திலும் படையில் வந்து சேரக்கூடியமாதிரி 9,000,000 பேர், ராணுவப் பயிற்சிபெற்று வேறு வேலைகளில் இருக்கிறார்கள்.

கப்பற் படை மொத்த நிறை 1,296,353 டன். ஆதாவது பெரிய கப்பல்கள் 18ம், ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லக்கூடிய கப்பல்கள் 6ம், க்ருயிஸர்கள் 59ம், நாசகாரி கப்பல்கள் 129ம், நீர்மூழ்கிக்கப்பல்கள் 54ம் அடங்கியிருக்கின்றன. கீழ்க்கண்டவை செய்யப்பட்டு வருகின்றன:—பெரிய கப்பல்கள் 5; ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லக்கூடிய கப்பல்கள் 17; நாசகாரிக் கப்பல்கள் 33; நீர்மூழ்கிக் கப்பல்கள் 18.

ஆகாயப் படை; மொத்தம் 2,000 ஆகாய விமானங்கள் இருக்கின்றன. இவற்றில் 1500 விமானங்கள் கிரேட் பிரிட்டனில் இருக்கின்றன. 5,500 உத்தியோகஸ்தர்களும் 65,000 சாதாரணப் போர் வீரர்களும் ஆகாயப் படையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ராணுவம் இப்பொழுது பரிபூர்ணமாகச் சீர்திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. இயந்திரங்களைக் கொண்டு யுத்தஞ் செய்வதென்ற நவீன முறைக்கு ஏற்றாற்போல் அநேக மாற்றங்கள் ராணுவத்தில் செய்யப் பட்டிருக்கின்றன. கப்பற் படையில் ஐந்து பெரிய யுத்தக்கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஹாங்காங்கிலும் சிங்கப்பூரிலும் ஏராளமான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பிரான்ஸ்: மொத்த ஜனத்தொகை 41,906,000. 8,900,000 பேர் எந்தச் சமயத்திலும் ராணுவத்தில் வந்து சேரக்கூடியவர்கள். பிரெஞ்சு குடியேற்றநாடுகளில் 145,000 துருப்புகள் இருக்கின்றன.

கப்பற் படை: மொத்த நிறை 511,817 டன். பெரிய கப்பல்கள் 6ம், ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லக்கூடிய கப்பல் 1ம், நாசகாரி கப்பல்கள் 68ம், நீர்மூழ்கிக்கப்பல்கள் 75ம் இருக்கின்றன. கீழ்க்கண்ட கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன:—

- பெரிய கப்பல்கள் 3.
- ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லக்கூடிய கப்பல்கள் 2.
- யுத்தக் கப்பல்கள் 2.
- நாசகாரி கப்பல்கள் 10.
- நீர்மூழ்கிக் கப்பல்கள் 11.

ஆகாயப்படை: மொத்தம் 1500 விமானங்கள் இருக்கின்றன. இதில் 50,000 பேர் இருக்கிறார்கள். இவர்களில் 3,000 பேர் உத்தியோகஸ்தர்கள்.

அமெரிக்கா: மொத்த ஜனத்தொகை 128,430,000. இவர்களில் 20,000,000 பேர் எந்தச்சமயத்திலும் ராணுவத்தில் வந்து சேரக் கூடியவர்கள். தரைப் படையினர் தொகை 170,000. தேசியப் பாதுகாப்புப் படை என்ற பெயரால் உள்ள படையினர் தொகை 190,000.

கப்பற் படை: மொத்த நிறை 1,163,240 டன். பெரிய கப்பல்கள் 5 ம்,

ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லக் கூடிய கப்பல்கள் 4 ம், க்ரூயிஸர்கள் 30 ம், நாசகாரிக் கப்பல்கள் 216 ம், நீர் மூழ்கிக் கப்பல்கள் 85 ம் இருக்கின்றன. கீழ்க் கண்டவை செய்யப்பட்டு வருகின்றன:—பெரிய கப்பல்கள் 4; ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லக் கூடிய கப்பல்கள் 2; க்ரூயிஸர்கள் 10; நாசகாரிக் கப்பல்கள் 36; நீர் மூழ்கிக் கப்பல்கள் 22.

ஆகாயப் படை: 2,885 ஆகாய விமானங்கள் இருக்கின்றன. இவற்றில் 32,000 பேர் இருக்கிறார்கள். இவரில் 2,800 பேர் உத்தியோகஸ்தர்கள். தேசியப் பாதுகாப்பைப் பற்றி ஸ்ரீ ரூஸ்வெல்ட், அமெரிக்க காங்கிரஸ் முன்னர் சில முக்கியமான விஷயங்களைச் சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். யுத்தம் ஏற்படுமானால், அமெரிக்கா அரசாங்கம் உடனே 400,000 பேரைத் திரட்டிப் போர் முகத்தில் கொண்டு நிறுத்தும். பிறகு ஒரு மாதத்திற்குள் 5 லட்சம் பேர் முதல் 6 லட்சம் பேர் வரையில் திரட்ட முடியும். அமெரிக்காவின் ஆகாய விமானப் படை மிகவும் திறமை வாய்ந்தது. 900 ஆகாய விமானங்களும், 900 கப்பற் படை விமானங்களும் நவீன சாதனங்களோடு அமைக்கப்பட்டிருக்கின்றன.

ருஷ்யா: மொத்த ஜனத் தொகை 170,000,000. இவர்களில் 35,000,000 பேர் எந்தச் சமயத்திலும் ராணுவத்தில் சேர்க்கப்படலாம். தரைப்படையில் மொத்தம் 1,300,000 பேர் இருக்கிறார்கள்.

கப்பற் படை: மொத்த நிறை 250,000 டன். இவற்றில் பெரிய கப்பல்கள் 4ம், யுத்தக் கப்பல்கள் 4ம் நாசகாரிக் கப்பல்கள் 25ம், நீர் மூழ்கிக் கப்பல்கள் 150ம் அடங்கியிருக்கின்றன.

ஜெக்கோ-ஸ்லோவேகியா: மொத்த ஜனத்தொகை 15,187,000. இவர்களில் 2,500,000 பேர் எந்தச் சமயத்திலும் ராணுவத்தில் சேரக் கூடிய மாதிரி யிருக்கிறார்கள். தரைப்படையில் மொத்தம் 171,850 பேர் இருக்கிறார்கள்.

ஆகாயப்படை: மொத்தம் 500 ஆகாய விமானங்கள். இதில் 8,500 பேர் இருக்கிறார்கள். இவரில் 900 பேர் உத்தியோகஸ்தர்கள்.

ஜெர்மனி: மொத்த ஜனத்தொகை 67,105,000. 13,000,000 பேர் எந்தச் சமயத்திலும் ராணுவத்தில் சேரக்கூடியவர்கள். தரைப் படையில் மொத்தம் 1,000,000 பேர் இருக்கிறார்கள்

கப்பற்படை: மொத்த நிறை 147,271 டன். பெரிய கப்பல்கள் 6ம், யுத்தக்கப்பல்கள் 6ம், நாசகாரிக் கப்பல்கள் 35ம், நீர் மூழ்கிக் கப்பல்கள் 36ம் இருக்கின்றன. கீழ்க் கண்ட கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன:—பெரிய கப்பல்கள் 4; ஆகாய விமானங்களை எடுத்துச் செல்கிற கப்பல்கள் 2; யுத்தக் கப்பல்கள் 7; நாசகாரிக் கப்பல்கள் 27; நீர் மூழ்கிக் கப்பல்கள் 23.

ஆகாயப்படை; மொத்தம் 2,606 ஆகாய விமானங்கள் இருக்கின்றன. இதில் 130,000 பேர் இருக்கிறார்கள். இவரில் 5500 பேர் உத்தியோகஸ்தர்கள் கப்பற் படையையும் ஆகாயப் படையையும் அதிகரிக்க, ஜெர்மனியின் தொழிற்சாலைகளில் துரிதமான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மாதம் 250 ஆகாய விமானங்கள் வீதம்

உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது தவிர தரைப்படையும் பெருக்கப் பட்டு வருகிறது.

இத்தலி: ஜனத்தொகை 42,801,000. 8,000,000 பேர் எந்தச் சமயத்தி லும் ராணுவத்தில் வந்து சேரக்கூடிய வர்கள். தரைப் படையில் 550,000 பேர் இருக்கின்றனர்.

கப்பற்படை; மொத்தநிறை 429,243 டன். பெரிய கப்பல்கள் 4ம், யுத்தக் கப்பல்கள் 22ம், நாசகாரி கப்பல்கள் 114ம், நீர்மூழ்கிக் கப்பல்கள் 81ம் இருக்கின்றன. கீழ்க்கண்டவை கட்டப்பட்டு வருகின்றன:— யுத்தக் கப்பல்கள் 4; நாசகாரிக்கப்பல்கள் 42; குறைந்தது நீர்மூழ்கிக் கப்பல்கள் 30.

ஆகாயப் படை; 2,200 ஆகாய விமானங்கள் இருக்கின்றன. 50,000 பேர் இதில் இருக்கின்றனர். இவரில் 5,000 பேர் உத்தியோகஸ்தர்கள்.

இத்தலியில் கருஞ் சட்டைப் படையினருக்கு அதிகமான செல்வாக்கு உண்டு. இன்னும் இரண்டு பெரிய யுத்தக் கப்பல்களை இத்தலி தயார் செய்து கொண்டு வருகிறது. ஆகாயப்படை மிகவும் திறமையாக அமைக்கப் பட்டிருக்கிறது.

யூகோ–ஸ்லேவியா : மொத்த ஜனத்தொகை 15,174,000. 3,000,000 பேர் எந்தச் சமயத்திலும் ராணுவத்தில் சேரக்கூடியவர்கள். தரைப் படை: 110,900. கடற்படையின் மொத்த நிறை: 9,500 டன்; ஆகாயப் படை : 300.

ருமேனியா : மொத்த ஜனத்தொகை 19,423,000. 3,500,000 பேர் எந்தச் சமயத்திலும் ராணுவத்தில் சேரக் கூடியவர்கள். தரைப்படை: 141,000; கப்பற் படை : 10,000 டன் நிறை; ஆகாயப்படை : 280.

போலந்து : மொத்த ஜனத்தொகை 34,221,000. எந்தச் சமயத்திலும் 6,500,000 பேர் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படலாம். தரைப் படையில் 255,000 பேர் இருக்கின்றனர். கப்பற்படையின் மொத்த நிறை 8,500 டன்; ஆகாயப்படை : 500.

பெல்ஜியம் : மொத்த ஜனத்தொகை 8,300,000; தரைப்படை 65,000; ஆகாயப்படை 200.

சீனு : மொத்த ஜனத் தொகை: 374,000,000. 600,000 பேர் வீரர்கள் யுத்த களத்தில் இருக்கிறார்கள். தெற்கு சீனுவில் பத்து லட்சம் பேருக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிகிறது.

ஜப்பான் : மொத்த ஜனத்தொகை ; 71,000,000. தரைப்படையில் சுமார் 400,000 பேர் இருக்கலாமென்று ஊகிக்கப் படுகிறது. கப்பற் படை விவரம் :—பெரிய கப்பல்கள் 9; ஆகாய விமானங்களைத் தூக்கிச்செல்கிற கப்பல்கள் 4; யுத்தக் கப்பல்கள் 35; நாசகாரிக்கப்பல்கள் 112; நீர்மூழ்கிக்கப்பல்கள் 57.

ஆகாயப் படை : 1,670 விமானங்கள்.

ஸ்பெயின் : அரசாங்கப் படையில் 500,000 பேர் இருப்பதாகத் தெரிகிறது.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து கீழ்க்கண்ட சாரத்தைத் திரட்டலாம்.

ஜன நாயக நாடுகளின் படை பலம்.

தரைப் படை—2,916,850
கப்பற் படை—4,221,410 டன்
ஆகாயப் படை— 11,385

சர்வாதிகார நாடுகளின் படை பலம்.

தரைப் படை—2,364,900
கப்பற் படை—1,406,776 டன்
ஆகாயப் படை—7800

உலகத்திலே என்ன நடக்கிறது?

அமெரிக்காவின்வேலைத்திறத்தைப் பார்த்தீர்களா? ஒரு பக்கம், 'ஏன் சண்டை போடுகிறீர்கள்? சமாதானமாக வாழுங்கள்' என்று ஐரோப்பிய வல்லரசுகளுக்கு உபதேசம் செய்கிறது. இன்னொரு பக்கம் யுத்த தளவாடங்களை எல்லா நாடுகளுக்கும் சப்ளை செய்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் கூட பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நானூறு ஆகாய விமானங்களுக்கு, இரண்டு ஆர்டர் கொடுத்திருக்கிறார்களே; நீங்கள் பத்திரிகையில் படிக்கவில்லையா?

யுத்த தேவன் யுத்த மணியை எப்பொழுது அடிக்கலாமென்று காத்துக் கொண்டிருக்கிறான்.



ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நாட்டுப் பிரஜையும் இப்படி ஆயுதச் சுமை தாங்க மாட்டாமல் தவிக்கிருன். இவனுக்கு விடிவு காலம் எப்பொழுது?



வரப் போகிற உலக யுத்தத்தை சர்வதேச சங்கம் தடுக்க முடியுமா? ஒவ்வொரு நாட்டின் ஆயுத பலத்தையும் 8ம் பக்கம் பார்க்க.

விசால பாரதம் அல்லது மகா ஆர்யா வர்த்தம்

—வி. ராகவேந்திர ராவ்
M. A., B. T.

இந்தக் கட்டுரை, நம்மைப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் இழுத்துச் செல்கிறது. 'சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னே இந்தியாவுக்கு விஜயஞ் செய்து, இங்கிருந்த செழிப்பைப் பார்த்துச் சென்ற ஒருவன் மீண்டும் புனர் ஜன்மம் எடுத்து இப்பொழுது இந்தியாவுக்கு வந்து பார்ப்பானுகில் அவன் மனம் என்ன வேதனையடையும்' என்று பிரபல அறிஞரான டாக்டர் ஆனந்தா குமாரசாமி என்பவர் ஓரிடத்தில் கேட்கிருர். அஃது இப்பொழுது நமது ஞாபகத்தில் வருகிறது. இந்தக் கட்டுரை எழுதிய அன்பர், மைசூர் சர்வகலாசாலையில் சரித்திர போதகராயிருக்கிருர். இவர் தாய்மொழி கன்னடமே யாயினும், தமிழின் மீது கொண்டுள்ள ஆர்வத்திஞல் இந்தக் கட்டுரையைத் தமிழில் எழுதியனுப்பி யிருக்கிருர். விசால பாரதத்தைத் தமிழர்கள் இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள இந்தக் கட்டுரை ஒரு தூண்டுகோலா யிருக்குமல்லவா?

சரித்திரம் ஏற்படுவதற்கு முன்னுலிருந்து கி. பி. பதினைந்தாவது நூற்றுண்டு வரை இந்தியாவானது இந்து மகா சமுத்திரத்தைச் சுற்றியுள்ள நாடுகளுக்குத் தன்னுடைய ஜனங்களையும், வியாபாரிகளையும், அறிஞர்களையும் அனுப்பி யிருக்கிறது. தேவர்கள் நாடென்றும், தர்மம் பரவும் நாடென்றும் கருதப்பட்டு வந்திருக்கிறது. இந்த விஷயத்தை நாம் சற்றுக் கவனித்துப் பார்ப்போம்.

நமது முன்னேர்கள், ஜப்பான், சீனு தேசங்கள் முதல் எகிப்து தேசம் வரை தங்கள் வியாபாரிகளையும், அறிஞர்களையும் அனுப்பி இந்து தேச நாகரிகத்தைப் பரவச்செய்து இருக்கிருர்கள்; மற்றவர்களைப் போல் குடியேற்ற நாடுகளுக்குச் சென்று அங்கு முதலிலிருந்து வசிக்கிற ஜனங்களைக் கொன்று, அவர்களுடைய நாட்டைப் பறிக்காமல் அவர்களுடன் ஒத்து வாழ்ந்து, நம்தேசத்துக் கல்வியைப் பரவச் செய்து இருக்கிருர்கள். இதுவே அவர்களுடைய சிலாக்கியம்.

இந்தியர்கள் முதலாவது குடியேறின நாடு எகிப்து. புராணங்களில் 'நைல்' நதி, நீல நதியென்றும், காளி என்றும், கிருஷ்ண என்றும் சொல்லப்படுகிறது. இந்த நதி ஸோமகிரி மலையினடியி லிருக்கும் அமர ஏரியில் உற்பத்தியாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் 'விக்டோரியா நியான்ஜா' என்ற ஏரிக்கு 'அமர' அல்லது 'தெய்விகம் பொருந்திய' என்றும் அதனருகி லிருக்கும் மலைக்கு 'சந்திர மலை' அல்லது 'சோமகிரி' என்றும் பெயர். கி. மு. 1377ம் வருஷத்தில் 'மூன்ருவது ஆமன் ஹெடாப்' (Amenhotep III) என்பவன் தசரதன் என்னும் ஆசியா தேசத்து மன்னனின் மகளை விவாகம் செய்து கொண்டான். இவருடைய குமாரன் நான்காவது ஆமன் ஹெடாப் என்பவன் தான் எகிப்து தேசத்தில் 'ரா' (ஸம்ஸ்ருதம் ரவி) என்ற ஆரிய பகவானின் பூஜையையும், 'அய்ஸில்' அல்லது 'ஈஸ்வரனு' டைய பூஜை

ஸையும், 'ஹோரல்' அல்லது 'ஹரி' யின் பூஜையும் வழக்கமாக்கினான். 'ஹோரஸ்' என்னும் கடவுள் தாமரை மலர் மேல் வீற்றிருக்கிறார். எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய நாடகம் ஒன்றில், ஒருவன் கள் குடித்துவிட்டு ஒரு கன்னடப் பாட்டைப்பாடுகிறான்!

கிரேக்க தேசத்தின் பிரபல ஞானியான 'ஸாக்ரடீஸ்' என்பவர் இந்திய அறிஞர்களுடன் வாக்குவாதம் செய்ததாகத் தெரிய வருகிறது. கிறிஸ்தவ மதத்தில் கிரேக்கருடைய ஞானமும், பௌத்த மத ஆசாரங்களும் பல இருக்கின்றன.

ஆப்கானிஸ்தானம் இந்து தேசத்தைச் சேர்ந்ததாகவே இருந்தது.

காபூலுக்கு அருகில் இருக்கும் 'கபார்தி—சிவா' என்னும் மலைக்கு 'சிவன் இருக்கும் மலை' என்று அர்த்தம். பாரசீக தேசத்துக்கு 'இரான்' அல்லது 'ஆர்ய தேசம்' என்று பெயர். இவ்விரண்டு தேசங்களுக்கும் மத்தியில் உள்ள 'ஹிந்து—குஷ்' மலைக்கு 'ஹிந்துக்களைக்கொல்லும் மலை' என்று அர்த்தம். அதாவது இந்த மலையைக் கடந்து செல்லும் வியாபாரிகளில் அனேகர் மடிவது வழக்கம்.

மத்திய ஆசியா, மகா ஆர்யா வர்த்தத்தின்வடக்கு எல்லையாய் இருந்தது. இதற்கு உத்தர குரு என்று பெயர். கி. பி. இரண்டாவது நூற்றுண்டில் எழுதப் பட்ட ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் பல இங்குள்ள மணல் நிறைந்த பாலை வனங்களிலிருந்து எடுக்கப் பட்டிருக்கின்றன. அஜண்டாவிலும் கர்லாவிலும் உள்ள சித்திரங்களைப் போல் இங்கேயும் சித்திரங்கள் அகப்படுகின்றன. புத்த மதத்தை இங்கே பரவச் செய்தவர்களில் காசியபர் என்பவர் பெயரும், குமார ஜீவன் என்பவர் பெயரும் நம் ஞாபகத்தில் இருக்க வேண்டியது.

சீன தேசத்தில் புத்த மதம் கி. பி. 200ம் வருஷத்தில் பரவியது. மாதங்கர் என்பவரும் புத்தகுப்தர் என்பவரும் இந்த மதத்தை அங்குப் பரவச் செய்தார்கள். இவர்களுக்கப்பால், கி. பி. 700ம் வருஷத்தில் வஜ்ரபோதி என்பவரும், அமோகன் என்பவரும் புத்தமதத்திற்காக சீனாவில் உழைத்து வந்திருக்கிறார்கள். சீனாவில் அநேக ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் பௌத்த பிட்சுக்கள் இருக்கும் இடங்களில் இருக்கின்றன. ஸம்ஸ்க்ருத—சீன அகராதிகளும் இருக்கின்றன.

கொரியா தேசம் கி. பி. 380ம் வருஷத்திலும், ஜப்பான் கி. பி. 500ம் வருஷத்திலும் பௌத்த மதத்தைத் தழுவின. வங்காள எழுத்தில் எழுதப் பட்ட ஸம்ஸ்க்ருத ஓலைகளை, இன்னும் ஜப்பானில் அவற்றினுடைய அர்த்தம் தெரியாமல் பூதங்களையும் பிசாசுகளையும் ஓட்டுவதற்கு உபயோகப் படுத்துகிறார்கள்!

திபெத்து தேசத்தில் 'மகா—காள' (சிவ—நீல கண்ட) என்னும் கடவுளும், கணேசனும், வெள்ளைக் குதிரைமேல் ப்ரஹ்மாவும், குதிரைக் கழுத்துடைய ஹயக்ரீவரும் வணங்கப் பட்டு வருகிறார்கள்.

பர்மாவுக்கு 'ஸ்வர்ண பூமி' என்பது பழைய பெயர். அபிராஜ என்னும் காசி இளவரசன் ஒருவன் பர்மாவில் கி. பி. 900ம் வருஷம் முதல் ஹிந்து அரசாங்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரிய வருகிறது. அதன் பிறகு அசோகர் பௌத்த

மதத்தைப் பரவச் செய்தார். கதம்ப (கன்னட) தேசத்திலிருந்து அதிக மான பேர் இங்கே குடியேறினார்கள். தென் பர்மாவுக்கு 'கிடாரம்' என்று பெயர். இது சோழ அரசர்கள் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. பர்மாவின் நீதி நூல்களில் மனு, நாரதர் இவர்களுடைய முக்கிய தத்துவங்கள் அடங்கி இருக்கின்றன.

சையாம் (ச்யாம்=கருப்பு) தேசத்திலும் இந்திய நாகரிகம் பரவி இருந்திருக்கிறது. கோசல நாட்டு அரசன் ஒருவன் இதில் முதல் முதல் போய் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தினான். இவன் பெயர் ராம ராஜா. இவன் முக்கிய பட்டணம் சாகேதா. (அயோத்தி நகரத்திற்கு இது மற்றொரு பெயர்.) இதற்குப் பின்னால் பௌத்த மதமும் இங்கே பரவிற்று. இங்கே கி. பி. 1510ம் வருஷத்தில் எழுதப்பட்ட ஒரு கல் சாஸனத்தில் புத்தரும் சிவனும் ஒன்றே என்றும், எல்லாரும் ஒன்று பட்டு வாழ வேண்டும் என்றும் எழுதப் பட்டு இருக்கிறது.

சையாம் தேசத்தில் வருஷப் பிறப்பிற்கு 'சொங்கரம்' அல்லது 'சங்கராந்தி' என்று பெயர். ஜனக மகாராஜன் காலத்தைப் போல் வருஷத்தில் ஒரு நாள் அரசனும் மந்திரியும், நிலத்தில் கலப்பை பிடித்துச் செல்கிறார்கள். அவர்களை அப்பொழுது 'யஜமான்' என்று அழைப்பது வழக்கம். நதிகளில் விளக்கேற்றி விடும் உற்சவமும் அங்கு உண்டு. காது குத்தும் பண்டிகையும் க்ஷவரம் செய்யும் பண்டிகையும் உண்டு—சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும்! சையாம் தேசத்தில் பௌத்த மதத்துடன் கணேசர், நாராயணர், கருடன் முதலிய தேவதைகளும் பூஜிக்கப் பட்டு வருகின்றன.

கம்போடியா (காம்போஜம்) என்னும் தேசம், கி. பி. நான்காம் நூற்றாண்டில் கௌண்டின்ய கோத்ர ப்ராஹ்மணர்களால் குடியேறப் பட்டது. இங்கே அநேக ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் கிடைக்கின்றன. மகாலிங்கர், ஹரிஹரர், வாமனர், நரசிம்மர் இவர்களுடைய உருவச் சிலைகள் அகப்படுகின்றன. சையாம் தேசத்தைப்போல் எல்லா மதங்களின் தெய்வமும் ஒன்றே என்று இங்கும் சொல்லப் படுகிறது. இங்கே இருக்கும் ப்ராஹ்மணர்கள் குடுமி வைத்துக் கொள்கிறார்கள். பூணூலும் போட்டுக் கொள்கிறார்கள். இங்கே சிவ, கிருஷ்ண, சங்கர—நாராயண, லக்ஷ்மி, மருத், பாரதி இவர்களுடைய கோயில்கள் அநேகம் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானது 'அங்கோர்—வாட்' அல்லது விஷ்ணுபரம லோகம் என்னும் கோயில். இந்தக் கோவிலின் சுவர்களில் புராணங்களிலிருந்தும் பஞ்ச தந்திரத்திலிருந்தும் அனேக கதைகள் சித்திரமாகக் காட்டப்பட்டு இருக்கின்றன.

ஜாவா என்பது மகா ஆர்யாவர்த்தத்தின் கிழக்கு எல்லை. இது ராமாயணத்தில் 'யாவத்வீபம்' என்று சொல்லப் பட்டு இருக்கிறது. பாஹியான் என்னும் சீன யாத்ரீகன் இங்கே ப்ராஹ்மணர் அதிகம் என்றும் பௌத்த மதம் முன்னுக்கு வரவில்லை என்றும் வருத்தப் படுகிறான். இங்கே கண்டு பிடிக்கப்பட்ட கி. பி. 400ல் எழுதப் பட்ட பூர்ணவர்மன் என்னும் அரசனுடைய கல் சாசனம் ஒன்றில் விஷ்ணுவே எல்லாருக்கும் பெரிய கடவுள் என்று எழுதப்பட்டு இருக்கிறது. கலிங்க தேசத்தி லிருந்து பல்

சமஷ்டி அரசியல்

—கே. வி. ராமசுப்ரமணியம்
B. A., B. L.,

(1) இந்திய சமஸ்தானங்கள் சமஷ்டியில் இஷ்டப்பட்டால் சேரலாம். இஷ்டப்படாவிட்டால் சேர வேண்டியதில்லை. ஆனால் தற்காலம் பிரிட்டிஷ் இந்தியாவாக உள்ள மாகாணங்கள் சமஷ்டியில் சேர்ந்தாகவேண்டும்.

சமஷ்டி என்பது யாதொரு நிர்ப்பந்தமும் இல்லாமல் சுயமாகவும், மனப்பூர்வமாகவும் ஏற்படுத்தப்படும் ஆட்சியானபடியால் ஒரு பிரதேசம் சமஷ்டியில் சேர்ந்துதான் ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்துவது சரியல்ல. சமஷ்டியில் சேர விரும்பும் பிரதேசங்கள் சுயமாகவே சமஷ்டி அரசிலை ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் ஏற்படுத்தப்படும் சமஷ்டியில் பின்னுடி மற்றப் பிரதேசங்கள் சேர விரும்பினால், அதற்கும் வேண்டிய சௌகரியங்கள் சமஷ்டி அரசியல் திட்டத்தில் ஏற்படுத்துவது வழக்கம். உதாரணமாக கானடாவில் சமஷ்டி அரசியல் ஏற்பட்ட பொழுது நான்கு மாகாணங்கள் மட்டுமே (அதாவது குபெக் (Quebec), ஒன்டாரியோ (Ontario) நோவா ஸ்கோஷியா (Nova Scotia) நியூ பிரன்ஸ்விக் (New Brunswick)மட்டுமே சேர்ந்தன. மற்ற மாகாணங்கள் பின்னால், பற்பல சமயங்களில் இந்த சமஷ்டியில் சேர்ந்துகொண்டன. ஆகையால் இந்தியா ஆக்டில் இந்திய சமஸ்தானங்கள், இஷ்டப்படா விட்டால் சமஷ்டியில் சேர

லவ அரசர்களால் ஜாவா குடியேறப்பட்டது. சீன பாஷையில் ஜாவாவுக்கு அதனால்தான் 'க்ளிங்' என்று பெயர். 'ஆர்யராஜா' 'ப்ரபு' என்னும் பெயர்கள் இன்னும் பட்டங்களாக அங்கு வழங்கப் படுகின்றன. பழைய காலத்து இந்தியாவில் இருந்ததுபோல், நிலம் எல்லாருக்கும் பொதுமை. போர்பந்தர், பரம்பானம் என்னும் இடங்களில் பழைய கோயில்கள் இருக்கின்றன. போர்பந்தர் கோயில் மூன்று மைலுக்குமேல் நீளமுள்ளது. இதில் ஆயிரக் கணக்கான உருவச் சிலைகள் செதுக்கப்பட்டு இருக்கின்றன.

போர்பந்தரில், ஒன்பது அடுக்குகளான கோபுரங்கள் இருக்கின்றன. இங்கே புத்தர் சரித்திரம் சித்திர மூலமாகக் காண்பிக்கப்பட்டு இருக்கிறது. பரம்பானில், பிரம்மா, விஷ்ணு, சிவன், நந்தி முதலிய இந்து கோயில்கள் இருக்கின்றன. இவற்றிற் கெல்லாம் பெரிது மஹேசுவரர் கோயில். இங்கே கணேசருக்கும் துர்க்கைக்கும் சிறிய கோயில்கள் இருக்கின்றன.

பாலி (Bali) என்னும் தீவில் ஹிந்து மதம் இன்னும் வழங்கி வருகிறது. இந்திய தெய்வங்களும், இந்தியாவைப்போல் ஜாதி பேதங்களும் இங்கே காணப்படுகின்றன. கி. பி. 78 இவர்களுக்கு முதல் வருஷம். இதுவே சகவருஷ ஆரம்பம். இங்கே ஹிந்து தெய்வங்கள் வணங்கப் படுகின்றன. கருட—விஷ்ணு சிலைகளை எங்கெங்கும் பார்க்கலாம். ஆனால் துர்க்கைக்கும் சிவனுக்கும் அதிகமாகப் பூஜை நடக்கிறது. இந்தியாவில் இருப்பது போல, இங்கேயும் வேதம், மகாபாரதம், ராமாயணம், பிரமபுராணம், நீதிசாரம் முதலிய நூல்கள் ஜனங்களால் மதிக்கப்பட்டு வருகின்றன.

வேண்டாம் என்ற நிபந்தனை மட்டும் கண்டிருந்தால், அதை நாம் ஆக்ஷேபிப்பது சரியாக இராது. ஆனால், இந்தியா ஆக்டில் மேற்கொண்டு ஒரு நிபந்தனை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது இந்திய மாகாணங்கள் மட்டும் சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியல் ஏற்படுத்த முடியாது. குறிப்பிட்ட அளவுக்கு இந்திய சமஸ்தானங்களும் சேரச் சம்மதித்தால்தான் இந்தியாவில் சமஷ்டி அரசியல் ஏற்படுத்த முடியும். இந்த விதியில்தான் சூக்ஷமம் இருக்கிறது. ஒரு காரியத்தை இரண்டு பேர் சேர்ந்து செய்ய வேண்டும் என்று முதலில் ஒரு விதி ஏற்படுத்தி, அதன் பிறகு, அந்த இருவரில் ஒருவர் இஷ்டப்பட்டால் சேரவேண்டாம், ஆனால் மற்றவர் அவசியம் சேரத்தான் வேண்டும் என்று மற்றொரு விதி ஏற்படுத்தினால் அந்தக் காரியத்தை நிறைவேற்றுவது அல்லது நிறைவேற்றாம லிருப்பது என்பது ஒருவருடைய யதேச்சையைப் பொறுத்ததாக இருக்கிறதே தவிர இருவருடைய சம்மதத்தையும் பொறுத்ததாக இல்லை. குறிப்பிட்ட அளவுக்கு இந்திய சமஸ்தானங்கள் சேரச் சம்மதித்தால்தான் சமஷ்டி அரசியல் ஏற்படுத்தப்படும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் ஏன் வற்புறுத்துகிறார்கள் என்பதற்குக் காரணம் முன் இதழ்களில் வெளியான வியாசங்களில் கூறப்பட்டிருக்கிறது.

(2) இந்தியா ஆக்டில் ஏழாவது ஷெடியூலில் அரசியல் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் மூன்று பிரிவாகப் பிரித்து, ஒரு பிரிவில் கண்ட விஷயங்கள் சமஷ்டி சர்க்கார், சமஷ்டி சட்டசபை இவைகளின் ஆதீனத்திற்கு விடப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரிவில்கண்ட எல்லா விஷயங்களைப்பற்றியும் சமஷ்டி சட்ட சபை சட்டங்கள் ஏற்படுத்தலாம். இவைகளைச்சமஷ்டி சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இந்தப் பிரிவில் மொத்தம் 59 விஷயங்கள் இருக்கின்றன. இவைகள் சம்பந்தமாக மாகாண சட்ட சபைகள், மாகாண சர்க்கார் முதலியவைகளுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. ஆனால் சமஷ்டியில் சேரவிரும்பும் சமஸ்தானங்கள் 'இந்த விஷயங்களில் மட்டும் நாங்கள் சமஷ்டிக்குக் கட்டுப்படுகிறோம்; இந்த விஷயங்களில் கட்டுப்படமாட்டோம்' என்று சொல்லலாம். சமஷ்டியில் சேர விரும்பும் சமஸ்தானங்கள் இன்னின்ன விஷயங்களில் சமஷ்டி சர்க்கார், சமஷ்டிசட்ட சபை இவைகளின் ஆதிக்கத்தைத் தாங்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று கண்டு ஒரு பிரவேச சாசனம் எழுதிக் கொடுப்பார்கள். உதாரணமாக 'நாணயம்—நாணயமாற்று' என்ற ஒரு விஷயம் இந்தப் பிரிவில் காணப் படுகிறது. இந்தியாவில் இன்ன நாணயங்கள் செலாவணியாகலாம், இந்திய நாணயத்துக்கும் மற்றதேச நாணயங்களுக்கும் மாற்று விகிதம் இவ்வளவு என்று தீர்மானிப்பது சமஷ்டி சர்க்காரைச் சேர்ந்தது. மாகாணங்களுக்கு இந்த அதிகாரம் கிடையாது. ஆனால் தற்காலம் சில இந்திய சமஸ்தானங்கள் ரூபாய்கள் அச்சடிக்கின்றன. ஹைதராபாத்து சமஸ்தானம் நோட்டுகளும் அச்சடிக்கின்றது. இந்த சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேரு முன், தற்கால முறையை அனுசரித்து, தங்கள் சமஸ்தான எல்லைக்குள் செலாவணியாகக் கூடிய ரூபாய்களும் நோட்டுகளும் அச்சடித்துக் கொள்ளும் பாத்தியதையை, பிரவேச சாசனத்தின் மூலம் தங்களிடமே நிறுத்திக் கொள்ளலாம்.

3 மேற்படி ஜாப்தாவில் 'வருமான வரி' என்று ஒரு விஷயம் கண்

டிருக்கிறது. வருமான வரி விஷயமாகச் சட்டம் ஏற்படுத்துவது சமஷ்டி சட்ட சபைக்குத்தான் பாத்தியப்பட்டது. வரியை சமஷ்டி சர்க்கார் வசூலிக்க வேண்டும். சமஸ்தானங்களில் இந்த வரியை வசூலிக்கக் கூடாது என்று சமஸ்தானங்கள் வற்புறுத்தி அதற்கு பிரிட்டிஷ் சர்க்காரும் இணங்கி யிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டப்படி குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் வருமான வரியின் பேரில் "சர் சார்ஜ்" (Surcharge) என்ற வரியும் விதிக்க சமஷ்டி சர்க்காருக்கு பாத்தியமுண்டு. இந்த சர் சார்ஜ என்ற வரியும் இந்திய சமஸ்தானங்களில் இருக்கும் கம்பெனிகளின் பேரில் வருமான வரியும் தவிர யாதொரு விதமான நேர் முகமான வரியும் சமஷ்டிசர்க்கார் இந்திய சமஸ்தானங்களைப் பொறுத்து விதிக்கக் கூடாது என்று சமஸ்தானங்கள் வற்புறுத்தி அதற்கு பிரிட்டிஷ் சர்க்காரும் இணங்கியிருக்கிறார்கள்.

நேர்முகமான வரி (Direct Taxes) என்பது வருமானவரி, நிலவரி, வீட்டு வரி முதலியவை. இவைகள் குடிகளிடமிருந்து வசூலிக்கப் படுகின்றன. மறைமுகமான வரி (Indirect Taxes) என்பது சுங்க வரி, கலால்வரி, உப்பு வரி முதலியவை. இவைகள் குடிகளிடமிருந்து நேருக்கு நேராக வசூலிக்கப்படுவதில்லை. ஒரு சாமானை இந்தியாவுக்கு இறக்குமதி செய்தாலோ, அல்லது இந்தியாவிலே உற்பத்தி செய்தாலோ அந்தச் சாமானை இறக்குமதி அல்லது உற்பத்தி செய்பவர்கள் இந்த வரியைச் செலுத்த வேண்டும். இந்த வரித் தொகையையும் சேர்த்துக் கணக்கிட்டுத் தான் அந்தச் சாமானுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே இந்தவரித் தொகைகளையும் மேற்படி சாமான்களை வாங்கி உபயோகிக்கும் ஜனங்களே பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால்தான் ஜனங்கள் இந்த வரிகளை மறை முகமாகச் செலுத்துகிறார்கள் என்று சொல்லப் படுகிறது.

மேலும் இந்த இரண்டு வித வரிகளிலிருந்து எவ்வளவு தொகை வசூலாகக்கூடும் என்று சமஷ்டி சர்க்கார் நியாயமாக அபிப்பிராயப் படுகிறார்களோ அந்தத் தொகையை சமஸ்தானங்கள் ரொக்கமாகக் கட்டி விட்டால், சமஸ்தான ஜனங்களிடமிருந்து மேற்படி வரியை நேருக்கு நேராக வசூலிப்பதில்லை யென்றும் சமஸ்தானங்களுக்கு உறுதி கூறப்பட் டிருக்கிறது.

4 சமஷ்டி சர்க்காரின் அதிகாரத்துக்கு ஒப்படைக்கப் பட்டிருக்கும் விஷயங்கள் சம்பந்தமாக நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டிய பொறுப்பு சமஷ்டி சர்க்காரைச் சேர்ந்தது. இந்த அதிகாரிகள் சமஷ்டி சர்க்காருக்குக் கீழ்ப்பட்டு நடப்பார்கள். உதாரணமாக சுங்கவரியை யெடுத்துக் கொள்வோம். சுங்க இலாகா என்று ஒரு இலாகா இருக்கிறது. இந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் தற்காலம் மத்திய சர்க்காருக்கும், சமஷ்டி அரசியல் ஸ்தாபிக்கப் பட்ட பின்பு சமஷ்டி சர்க்காருக்கும் கீழ்ப்பட்டு நடக்க வேண்டியவர்கள். மாகாண சர்க்காருக்கு இவர்கள் பேரில் யாதொரு அதிகாரமும் கிடையாது. தபால், தந்தி, ரெயில்வே முதலிய இலாகா அதிகாரிகளும் இவ்விதமே நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் சமஸ்தான எல்லைக்குள் சமஷ்டி சர்க்காரின் அதிகாரிகள் நியமிக்கக் கூடாதென்றும், சமஷ்டி சர்க்காரின் தனித்த ஆதீனத்தில் ஒப்படைக்கப்பட்ட விஷயங்களின் நிர்வாகத்தை சமஸ்தானாதிபதிகளாலேயே நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகள்

கசங்கின புஷ்பம்—சிறு கதை

—எம். வி. வேங்கடராமன்

காற்று கொஞ்சம் வேகமாக வீசுகிறது. வரிசையாக நின்றிருந்தவைகளில் முதல் சைக்கிள் சாய்கிறது; அடுத்தாற் போலிருக்கும் சைக்கிள் பக்கத்தில் இருப்பதின் மீது விழுந்து தள்ளுகிறது. இப்படியே ஒன்று மீது ஒன்று விழுந்து எல்லா சைக்கிள்களும் கீழே விழுந்து விடுகின்றன. இதே மாதிரியான நிலைமைதான் நாலு மனிதர்களுக்கு மத்தியில் வாழும் மனிதனுக்கும். சுற்றுப்புறக் காற்று அவனை அசைக்கத்தான் செய்யும். முன் காலத்தில் இதற்காகத்தான் அவர்கள் சன்னியாசம் வாங்கிக் கொண்டதுமல்லாமல் காட்டிற்குத் தனிமையை நாடிச் சென்றார்கள் போலும். நான் தத்துவம் பேச உட்காரவில்லை. அனுபவத்தை விவரித்தால் தத்துவம் ஆகி விடுகின்றதே...............

முதலில் கமலா ஒரு லெட்டர் எழுதினாள். நான் அதற்குப் பதில் கூட எழுதவில்லை. அது என் மனதில் கிளர்ச்சி உண்டுபண்ணியது என்னவோ வாஸ்தவந்தான். லெட்டரை நான் மறக்கவில்லை. மறந்து விட்டவன்போல் செய்து கொண்டேன். ஏனென்றால் என் மனதில் கவலைக்கு இடம் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் இரண்டாவது கடிதம் என் ஸங்கல்பத்தைக் குலைத்து விட்டது. ஆம், அத்தனை கோபம், அத்தனை துக்கம் அதில் நிறைந்திருந்தது. ஆ! அந்த கடிதம் அழமுடியுமானால்......................!

நான் தாமதிக்கவில்லை. உடனே புறப்பட்டேன். ஓடும் ரயிலில் தள்ளாடும் மனதோடு சென்றேன். அவள் ஊரை அடைந்தேன். ஆனால் நேராக அவள் வீட்டுக்குப் போகவில்லை. மனதைத் திடமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று என் எண்ணம். அவளுடைய அலங்கோலத்தைக் கண்டு என் பலஹீனமான

மூலம் நடத்தப்படவேண்டும் என்றும் சமஸ்தானாதிபதிகள் வற்புறுத்தி, அதற்கு பிரிட்டிஷ் சர்க்காரும் இணங்கி இருக்கிறார்கள். இந்த ஏற்பாடு அமுலுக்கு வருமாயின் பம்பாய், கல்கத்தா முதலிய துறைமுகங்களிலிருக்கும் சுங்க இலாகா அதிகாரிகள் சமஷ்டி சர்க்காரால் நியமிக்கப்படுவார்கள். இந்திய சமஸ்தானத்திலுள்ள துறைமுகங்களின் சுங்க அதிகாரிகள் அந்தந்த சமஸ்தானாதிபதிகளால் நியமிக்கப்படுவார்கள்.

5 எந்தெந்த விஷயங்கள் சம்பந்தமாக சமஸ்தானங்கள் சமஷ்டி அரசியலை ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்று பிரவேச சாசனம் மூலம் நிர்ணயிக்கப் படுவதால் சமஷ்டி சட்டசபை ஏற்படுத்தும் ஒரு சட்டம் பிரவேச சாசனத்தின் மூலம் விலக்கப்பட்ட விஷயத்தைக் குறித்ததாக இருந்தால், அந்தச் சட்டம் சமஸ்தானங்களைக் கட்டுப் படுத்தாது; மாகாணங்களை மட்டும் கட்டுப் படுத்தும். ஆனால் இந்தச் சட்டம் சமஷ்டி சட்டசபையில் விவாதிக்கப் படும்போது சமஸ்தானப் பிரதிநிதிகள் விவாதத்தில் கலந்து கொள்ளலாம். ஆகவே சமஸ்தானங்களுக்கு யாதொரு சம்பந்தம் அல்லாததும் மாகாணங்களை மட்டும் பாதிக்கக் கூடியதாயுமுள்ள விஷயங்களில் சமஸ்தானப் பிரதிநிதிகள் தலையிட சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

ஹிருதயம் என்ன செய்துவிடுமோ என்று பயம்.

வழியில் இருந்த ஆற்றின் கோடையின் மெலிந்த நீரோட்டத்தை, வண்ணான் கல் மீது உட்கார்ந்து கொண்டு என் மனதைப்போல் கலக்கி கொஞ்ச நேரம் சிந்தனை செய்துவிட்டு எழுந்தேன். அவள் வீட்டுக்குப் போனேன்.

வீட்டு வாசலை மிதித்ததும் என் ஹிருதயம் படபடத்தது. மூன்று வருஷத்துக்குப் பிந்தின முதல் சந்திப் பல்லவா? அதுவும் அமங்களமான சந்திப்பு. மனதைத் தட்டிக் கொடுத்து விட்டு உள்ளே சென்றேன்.

அவள் மாமி, 'வா அப்பா!' என்று குசலம் விசாரித்தாள். நானும் ஏதோ பதில் அளித்தேன். ஆனால் என் நினைவு கமலா மீது. அந்தப் புஷ்பத்தை எந்த மூலையில் போட்டிருக்கிறார்களோ? என் கண்கள் அவளைத் தேடிக் கொண்டிருந்தன. கொஞ்ச நேரம் கழித்து அவளும் வந்தாள். நிலவின் ஒளி பகலில் மங்கி இருப்பதைப்போல் அவளுடைய முகக் களை, ஜோதி குறைந்திருந்தது. உடல் வாடி இருந்தது. யோகினியைப் போன்ற தோற்றம். எந்த தெய்வத்தைக் குறித்துத் தபஸோ? மாமி என்னைக் கவனிப்பதைக் கண்டு அவளோடு பேச ஆரம்பித்தேன். கமலாவுக்கு மாமி எதிரில், என்னோடு பேச தைரியம் வரவில்லை. மாமியோ அசையாப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அன்று நாங்கள் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. ஆனால் ஹிருதயங்களோ ஏகக் கூக்குரல் இட்டுக்கொண்டிருந்தன.

மறுநாள் மத்தியானம். நல்ல நிசப்தம். வெளியே உக்ரமான வெயில். மாமி தூங்கிக் கொண்டிருந்தாள். கமலாவின் மைத்துனர் எங்கோ வெளியே போயிருந்தார். திண்ணையில் உட்கார்ந்திருந்த எனக்கு இருப்புக்கொள்ளவில்லை; கூடப் பிறக்காத தோஷத்தால், இரண்டு பேருக்கு எதிரில் பேசக்கூட நமக்கு முடியவில்லை. எழுந்து உள்ளே போனேன். கமலா சமையலறைக்குப் பின்னாலிருந்த தனி அறைக்குள் தனியாக உட்கார்ந்திருந்தாள். அவள் அருகில் போனேன். சப்தம் கேட்டு குனிந்திருந்த அவள் நிமிர்ந்தாள். அவள் கண்களில் நீர் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு நான் உட்கார்ந்து விட்டேன்.

கொஞ்ச நேரம் மௌனம்.

என்னால் சகிக்க முடியவில்லை.

'கமலா!' என்றேன்.

மறுபடியும் அவள் நிமிர்ந்தாள். இப்போது அவள் கண்களில் நீர் இல்லை.

'கமலா, மனுஷ்யராகப் பிறந்தால், துக்கப் படத்தான் வேணும்........'

கடைசியில் அவள் பேசத் தொடங்கினாள்.

'ராஜு! நீ வேதாந்தி போலத்தான் பேசுவாய். துக்கம் அனுபவிக்க வேணும் என்று வாயால் சொல்லுவது வேறே; அதை அனுபவிக்கிறது வேறே. என் துர்அதிர்ஷ்டத்தைப் பாரேன். எனக்கு அண்ணனும் இல்லை; தம்பியும் இல்லை; இருந்தால் அவர்களால் எனக்கு இக்கஷ்ட காலத்தில் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்........'

எனக்கு 'சுருக்' என்றது.

'கமலா, நீ ஏன் இப்படிப்பேசுகிறாய்? உன்னுடைய அண்ணனாகவோ, தம்பியாகவோ இல்லை என்று நான் உன்னைப் பார்க்க வரவில்லை? என்னுடைய மனப்போக்கு உனக்குத் தெரியாதா? கடைசி முறை நாம் எப்படிப் பிரிந்தோம்? நான் அதை நினைத்தும் வராமல் இருக்கவில்லை. உன்னுடைய

அலங்கோலமான நிலைமையைக்கண்டு தாங்க முடியாது என்றுதான் வர வில்லை. அதற்காக நீ இப்படியா பேசு கிறது?..............'

'ராஜு! காரணம் காட்டி விட் டாய். நான் என்ன சொல்லப் போகிறேன்? உன்னை ரொம்ப கோபித்துக் கொள்ளவேணும் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் உன்னுடைய முகம் என் கோபத்தை எல்லாம் விரட்டிவிட்டது. உன்னைக் கண்டதும் பழைய நினைவுகள் ஞாப கம் வருகின்றன. நாம் இருவரும் ஒரு காலத்தில் சின்னக் குழந்தைக ளாகத்தான் இருந்தோம். என் தாயார் அடிக்கடி சொல்வாள்:—நான் பிறந்த மறுநாள் நீ பிறந்தாய். நீ பிறந்ததும் உன் தாய் பிரக்ஞை இழந்து விட்டாள். இரண்டு நாள் அசையாமல் அப்படியே கிடந்தாள், என் தாயார் கொஞ்சம் பலசாலி. அடுத்தகத்துக்காரர்கள் என்ற முறை யில் சினேகமானாலும் இருவரும் ஒரு வர் மீது ஒருவர் உயிர். உன் அம்மா வின் நிலைமையைக் கேட்டதும் அவ ளால் பொறுக்க முடியவில்லை. குழந் தை பெற்ற வேதனையும் மறந்தாள். இரவானதும் என்னைத் தூக்கிக் கொண்டு உங்கள் வீட்டுக்கு வந்து, உன் தாயார் இருந்த அறையிலேயே தங்கி விட்டாள்'.

இரண்டு தாய்களும், நீயும் நானும் ஒரே அறையில். ஆனால் உன் தாயார் குழந்தையின் மழலையைக் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. அவள் என் தாயிடம் உன்னை ஒப்பித்து விட்டுப் போய் விட்டாள். எங்கே போய் விட் டாள்? ராஜு! இப்போது அது எனக்கு ரொம்ப நன்றாகத் தெரிகி றது. அங்கே—என்னுடைய வெளிச் சம் எல்லாம் போயிருக்கிறதே அங்கே —என்னுடைய வாழ்வு எல்லாம் போயிருக்கே அங்கே—பெருமூச்சும் ஐயோவும் இல்லாத அந்த இடத் திலே.

நான் திடுக்கிட்டேன். திடீரென்று அவள் பழைய பேச்சை ஆரம்பித் ததே எனக்குப் பிடிக்கவில்லை. அவள் பேசும் மாதிரியோ மிகவும் பயங்கர மாக இருந்தது. கடைசிச் சொற் களின் கோர்வை நெஞ்சில் தீ வைப் பதுபோ லிருந்தது.

'கமலா, ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறாய்? இறப்பு, பிறப்பின் தண்டனைதானே?—'

'மறுபடியும் வேதாந்தம்! குறுக் கிடாதே. ஆனால் கேள் ராஜு! அவ ரைப் பற்றி நான் பேசவில்லை. பேசக் கூடாதென்றுதான் நினைத்திருந்தேன். என்னவோ வாய் தவறி வந்து விட் டது. அம்மா அடிக்கடி சொல்லு வாள். அவள் உனக்கு ஒரு புறமும் எனக்கு ஒரு புறமும் பால் கொடுத்து வளர்த்தாளாம். என் தாய் பலிஷ்டை; நாம் பாலுக்குக் குறைச் சல் இல்லாமல் வளர்ந்தோம். நீ என் சொந்தத் தம்பியில்லை; என் கூடப் பிறந்தவன் இல்லை. ஆனாலும் இருவருடைய உடம்பிலும் ஒரே ரத் தந் தானே ஓடுகிறது. நீ ஆடா விட் டாலும் உன் சதை ஆடாதா? ராஜு! என் முதல் கடிதாசிக்கு நீ பதில் கூட எழுதவில்லை. காரணம் சொல்லுகிறாய். சரி—ஆனால்—சரி—அப்புறம் என்ன ஆனேம்? வளர்ந்து விட்டோம். எப் படியோ வளர்ந்து விட்டோம். ஒரே உயிராக வளர்ந்து விட்டோம். எனக்கு வயது பதினாலு ஆகும்போது கூட உன்னோடு சகஜமாகக் கல்மஷம் இல்லாமலேயே பழகிக் கொண்டிருந் தேன். கடைசியில் நம் இருவரையும் பிரிக்கும் பிரயத்தனம் செய்ய ஆரம் பித்தார்கள். கலியாணத்துக்காக ஏற் பாடு எல்லாம் செய்யத் துவக்கினார் கள். கலியாணம்? நானும் அதற்கு எவ்வளவு தயாராக இருந்தேன்!

'கடைசியில்—கடைசியில் தானே? கலியாணத்துக்கு முந்தின நாள்-ஞாபகம் இருக்கிறதா ராஜு? கலியாணத்துக்கு முந்தின நாள் காலை, எப்படி மறக்க முடியும்? மழை தூறிக் கொண்டு இருந்தது. ராத்திரி பெரிய மழை பெய்திருந்ததால் தெருவெல்லாம் ஒரே வெள்ளமாக இருந்தது. இருந்தாலும் கலியாண ஏற்பாடுகள் ரொம்ப வேகமாக நடந்து கொண்டிருந்தன. நீயும் நானும் மாடி மீது உட்கார்ந்திருந்தோம். நான் மைத்துனரின் குழந்தையை அணைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தேன். ஏன் ராஜு, ஏன் அழுது கொண்டிருந்தேன் என்று ஞாபகம் இருக்கிறதா? அந்தக் கனவைச் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் கலியாணப் பந்தலில் உட்கார்ந்திருக்கிறேன். ஒரு கருப்பு உருவம் என் கழுத்தில் தாலி கட்டுகிறது. தாலி கட்டி ஆகி விட்டது. திடீரென்று தாலிக்கயிறு பாம்பாக மாறி விடுகிறது. என்னுடைய கழுத்தைப் பிடித்துக் கடிக்கிறது. நான் அலறுகிறேன்—பாம்பு, பாம்பு என்று கூவுகிறேன்—'

என்னால் தாங்க முடியவில்லை என்று சொல்லாமல் வேறு என்ன சொல்கிறது? எழுந்து சமையல் அறைப் பக்கம் சென்று நின்று கண்ணைத் துடைத்துக் கொண்டேன். ஹிருதயத்தின் கண்ணீரையும் துடைத்தேன். கொஞ்ச நேரம் அங்கேயே நடந்து கொண்டிருந்தேன். பிறகு மறுபடியும் அங்கே, அவள் அருகில் சென்றேன்.

'கமலா, இந்தப் பழங் கதை எல்லாம் இப்போது எதுக்கு? வீண் துன்பம்—'

'இல்லை ராஜு! இந்தப்பழங் கதையில் தான் எனக்கு கொஞ்சம் சந்தோஷம் உண்டாகிறது. இதை உன்னிடம் பேசாமல் வேறு யாரிடம் பேச முடியும்? என்னுடைய பேச்சைக் கேட்டு விட்டு நீ போய் விடலாம். நீ அதிகம் தங்கினாலும் கூடாது—சந்தேகம். அப்புறம் ராஜு, கலியாணம் நடந்தது.

'முதல் வருஷம் புது அன்பின் புதுமையிலே காலம் சந்தோஷம் ஆகி விட்டது. அவருடைய சுபாவமான கவர்ச்சி கொடுக்கும் நடத்தை என்னை மயக்கி விட்டது. ஆனால் கொஞ்ச காலத்தில் அவர் ஒரே அடியாக மாறி விட்டார். குடியும் கூத்தியும் ஆரம்பம் ஆகியது. நான் காலடி வைத்த வேளை என்று மாமியும் மைத்துனரும் கோபித்துக் கொண்டார்கள். அப்போதும் உனக்கு இரண்டு மூன்று கடிதம் எழுதினேன். அப்போதும் நீ மௌனமாக இருந்து விட்டாய். கடைசி லெட்டரில் 'சுமங்கிலியாக இருந்தும் பூ இல்லாத என் அழகை ஒரு முறை வந்து பார்த்து விட்டுப்போ' என்று எழுதினேன். அதற்காக எல்லாம் இப்போது நான் வருத்தப் படவில்லை. ராஜு! வருத்தப்பட வில்லை. ஆனாலும் கேள், அப்புறம் நீ திடீரென்று வந்தாய். வந்ததும் உன்னை நான் கோபித்துக் கொண்டேன். உன் மீது எனக்கு இருந்த அன்பின் உரிமையைக் கொண்டு வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டினேன். என் புருஷர் தான் எனக்குப் பூ வாங்கித் தருவதில்லை. என் தம்பி இருந்தால் ஓடி வந்து வாங்கித் தர மாட்டானா என்று வைதேன். ரொம்ப காரமாகப் பேசி விட்டேன். உனக்கும் கோபம் வந்து விட்டது. ரயில் செலவுக்காக வைத்திருந்த ஒரே ரூபாயுடன் கடைத் தெருவுக்குப் போனாய். அந்த முழு ரூபாய்க்கும் மல்லிகை சம்பங்கி முதலிய புஷ்பங்களை வாங்கிக் கொண்டு என் முன் குவித்து விட்டாய். ஏன்? எனக்கு ஆத்திர மூட்ட. உன்னிடம் ரயிலுக்குக் காசு இல்லை என்று எனக்

குத் தெரியும். அதற்காக நான் பைசா வும் கொடுக்க முடியாது, ஊருக்கு நடந்துபோ என்று ஏசினேன். அப்புறமும் நீ சும்மா இருந்தாயா? கலியாண சமயத்தில் நான் பிரியமாகக் கொடுத்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு போய் விற்று வந்து என்னிடம்பணம் காட்டினாய். அதைக்கண்டதும் நான் அப்படியே உருகி விட்டேன். என்னை மறந்து உன் கால்களில் விழுந்து விட்டேன். நீயும் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாய். அழுது கொண்டே என் தலையில் பூக்களைச் சொருக ஆரம்பித்தாய். அப்போது திடீரென்று அவர் வந்தார்—வந்து—'

'அப்புறம்?—அப்புறம்?'

நம்முடைய நிலைமையைப் பார்த்ததும் தவறாக நினைத்துக் கொண்டார். உன்னை ' ஏசினார். நீ சமாதானம் சொல்ல வாயெடுத்தாய். ஆனால் அவர் இடம் கொடுக்க வில்லை. மேலும் மேலும் திட்டினார். கோபமும் வெட்கமும் தாங்க முடியாமல் நீ ஓடிப்போய் விட்டாய். அதுதான் கடைசி முறையாக நாங்கள் சந்தித்தது!—'

'உன் கதை முடிந்து விட்டதா? வாயை மூட மாட்டாயா நீ?'

'என் மனதை யார் மூடுகிறது? கொஞ்சம் இரு. ஒரே அடியாக மூடி விடுகிறேன். அவர் அதை வெளியே சொல்லிக் கொள்ளவே இல்லை. உள்ளுக்குள் புகைந்து கொண் டிருந்தார். என்னைத் தண்டிப்பதாக எண்ணிக் கொண்டு,குடியையும்கூத்தியையும்அதிகம் செய்துகொண்டார். கடைசியில்—

'கடைசியிலா? அவர் சாகக்கிடக்கிறார். நான் கிட்டே நிற்கிறேன். அப்போதாவது அவர் தன் தவறைத் தெரிந்து கொள்ள மாட்டாரா, என்னை மன்னிக்க மாட்டாரா என்று தவித்துக் கொண் டிருக்கிறேன். திடீர் என்று அவர் வாய் திறந்தது. என்னை அருகில் கூப்பிடுகிறார். போகிறேன். திணறிப் பேசுகிறார். 'கமலா, நீ பரிசுத்தமானவள் என்று ஏதோ ஒன்று எனக்குள் இருந்து சொல்லுகிறது. அவன் உன் தம்பி இல்லை? நீகூடச் சொல்லி இருக்கிறாயே—'. என் கண்களை நீர் அடைத் திருக்கிறது. நெஞ்சைத் துக்கம் அடைத் திருக்கிறது. அதனால் வாய்க்குப் பூட்டு. நான் பதில் சொல்லுவதற்குள் அவர் போய் விட்டார்—ஹஹ—

'அவர் என்னைப் புரிந்து கொண்டு விட்டார். ஆனால் எத்தனை பயங்கரமாக—! அந்த மன்னிப்புக்காக இப்போது கொஞ்சம் சந்தோஷப் படுகிறேன் என்று நினைக்கிறாயா? அது தான் இல்லை. அவர் என்னைக் கடைசி காலத்தில் ஏன் மன்னித்தார்? அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால் எனக்கு அதிக துக்கம் கிடைத்திருக்கும் அல்லவா? என்னைத் தெரிந்து கொள்ளவில்லை என்ற நினைப்பு என்னை ஏங்கச் செய்யும் அல்லவா? ஆம், ராஜு! ஆம்! எனக்குத் துக்கம் வேண்டும்; கல்ப்பே இல்லாத துக்கம். சந்தோஷத்தின் நிழல் கூட வேண்டாம். நீ ஏன் வந்தாய்? ஏன் பேசச் செய்தாய்? வராமலும் பதில் எழுதாமலும் இருந்திருந்தால் இந்த நிமிஷ இன்பமும் கிடைத்திருக்காதுஅல்லவா?—'

'கமலா!—'

'இல்லையடா—நான் பேசவில்லை; அழவும் இல்லை—'

பெரிய மழை அடித்து நின்றுவிட்டது. ஆனால் இந்த பயங்கரமான சாந்தியை ரொம்ப நேரம் என்னால் பொறுக்க முடிய வில்லை.

'ஆனால் கமலா, இந்த மௌனமும் எனக்குப் பிடிக்க வில்லையே—'

அவள் பதில் அளிக்க வில்லை. நான் எழுந்தேன் வெற்றுக் கழுத்தைப் பார்த்தேன். வெள்ளைச் சேலையைப் பார்த்தேன். தூசிபடிந்திருந்த அழகையும் பார்த்தேன். அவளிடம்சொல்லிக் கொள்ளாமலேயே வந்து விட்டேன்.

சக்திகள் ஒன்றுபடட்டும்

—வி. தேவாச்சாரியன்

1936ம் ஆண்டு இறுதியில் பண்டித ஜவஹர், தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். நாட்டின் உண்மையான, பெரிய பிரச்னை எது என்பதைக்குறித்துத், தருக்க ரீதியில், பொருளாதார திருஷ்டியில் விமர்சனஞ் செய்து கொண்டே போனார். 'பட்டினி; வேலையில்லாத் திண்டாட்டம்; இவை இரண்டுமே நாட்டின் உண்மையான பெரிய பிரச்னைகள்' என்று கர்ஜித்தார். ஏழை எளியவர்கள், பண்டிதர் பாமரர்கள், ஈடில் மானிகள் யாவரும் இக்கர்ஜனையைக் கேட்டுப் பெருவிழிப்புக் கொண்டு, விமோசன காலங்கிட்டு மென்று எதிர்பார்த்துப் பெருமகிழ் வுற்றனர். பண்டிதரவர்களின் தமிழ் நாட்டுப் பிரசங்கங்கள், மறுஜன்ம மடைந்த இந்தியாவின் வேதம் எனவே பலராலுங் கொண்டாடப்பட்டன.

சென்னையில் வெளியாகும் 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' செட்டிமார் நாட்டில் ஏதோ ஒரு பத்திரிகை (பெயர் ஞாபகமில்லை) இவைகள் மட்டுமே 'பண்டிதர் காங்கிரஸ் பிரசாரம் செய்கிறார, அபேதவாதப் பிரசாரம் செய்கிறார' என்று கேட்கத் தொடங்கின. 'ஹிந்து'ப் பத்திரிகையும், 'சுதேசமித்திர'னும் எவ்வளவு தூரம் ஏழை மக்களின் பிரதிநிதிகளாக விளங்குகின்றன என்பதைக் குறித்துப் பொதுஜனங்கள் ஒரு முடிவுக்கு வந்து பல மாதங்களாகி விட்டன.

1907 முதல் 1917 வரையில் உள்ள காலம் லோகமான்ய பால கங்காதர திலகருடையதும், 1917 முதல் 1936 வரையில் காந்தியடிக ளுடையதுமானால் (இன்றைய வரையிலும்—ஏன்? —அவர் ஆயுட் காலம் வரையிலுங் கூட), 1937 முதல் ஜவஹர் காலம் என்று சொல்வதுதான் பொருந்தும். இதைத்தான் நாம் விளக்கமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இதனைத் தெரிந்து கொள்ளுவதில்தான் தற்கால அகில இந்திய அரசியல் பிரச்னையின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது.

ஜவஹருடைய மேலே பிரஸ்தாபித்த தமிழ் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்தில் பலவிடங்களிலும், 'ஹரிஜன முன்னேற்றம், கிராமப் புனருத்தாரணம், குடிசைத் தொழில் முன்னேற்றம் ஆகிய இவைகள்' நல்லவைகள்தான். ஆனால் நாம் நமது பிரதானலட்சியமான சுதந்தரப் போரை நடத்திக்கொண்டு போவதில், மேற் கூறியவைகள் நம்மைப் பின்னுக் கிழுக்கும் சக்திகளாக ஆகிவிடும். இவைகள், நாட்டின் அரசியல், பொருளாதார சுதந்திரத்தோடு நெருங்கிய சம்பந்த முடையவைகள்; நாடு விடுதலை யடைந்து விட்டால் பொருளாதார சுதந்திரம் பெருகும்; பட்டினிப் பிரச்னை, வேலையில்லாத கொடுமை தானாக மறையும்; ஹரிஜனப் பிரச்னை யென்று தனியாக ஒன்று கிடையாது; நாம் எல்லாம் ஹரி ஜனங்களே' என்று முழக்கினர்.

அன்றுதான் அதனைக் கூறினர்; இன்று அந்த அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டு விட்டார் என்று சொல்லுவதற்கில்லை. இதோ கேளுங்கள் சமீபத்தில் மஹாகோசல மகா

நாட்டைத் திறந்து வைத்த பொழுது என்ன சொன்னாரென்று,

'உலக வல்லரசுகள், ஏகாதிபத்திய, முதலாளித்துவ பக்கத்தில் சாய்ந்திருப்பதால்தான், தற்போது அமைதி யின்மை ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பரிகாரம் அபேதவாதந்தான்'.

பண்டிதரின் அபிப்பிராயம் ஸ்திரப்பட்ட அபிப்பிராயம். என்றும் ஒரே தன்மையுடையது. இந்த அபிப்பிராயம் இப்பொழுது உலக மடங்கலும் ஓங்கி நிற்கிறது. இதை மறைத்து வைப்பதில் பயனில்லை.

'கஷ்டங்களுக்குத் திட்டமான பரிகாரம் கிடைக்கும்; ஏழைகள் அந்தஸ்து உயரும்' என்று பூரணமாக நம்பியே தேசம் காங்கிரஸுக்கு மகத்தான ஆதரவை அளிக்கிறது. காங்கிரஸின் தீர்ப்பே தேசத்தின் தீர்ப்பு; தேசமே காங்கிரஸ் என்ற உணர்ச்சி வேரூன்றி யிருக்கிறது.

வீடு கட்டுவதற்குப் பலருடைய—பல திறப்பட்ட தொழிலாளிகளுடைய—உழைப்பு வேண்டி யிருக்கிறது. அங்ஙனமே தேசத்தின் புனருத்தாரணத்திற்கும் பலருடைய உழைப்புத் தேவை. பல சக்திகள் தேவை. மேதை ஒரே இடத்தில் குவிந்து நிற்காது. பலரிடத்தும் பரவி நிற்கும். இது சாமானிய உண்மை.

தேச விடுதலையை, பொருளாதார சுதந்திரத்தை விரைவில் கிட்டச்செய்யும் சக்திகள் நம் நாட்டில் சிதறுண்டு கிடக்கின்றன. இங்ஙனம் சிதறி நிற்றல் மிக்க இடையூறுகளையே விளைவிப்பதற்குக் காரணமாகும். ஒரு உதாரணம் மட்டில் தருகிறேன். காங்கிரஸ் ஆரம்பித்து, நீண்டநாள்வரையில் அது மிதவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. அமிதவாதிகள் பிறகு தோன்றினார்கள்; மிதவாதிகளும், இத்தீவிரவாதிகளும் ஒரு மனப்பட்டு வேலை செய்யவில்லை. வேலை செய்ய முடியவில்லை. இதுதான் உண்மை. இம்மிதவாதிகளை காங்கிரஸி விருந்து விரட்டி, தீவிரவாதிகள் முன்னணிக்கு வந்தனர். இத்தீவிர வாதிகளென்போர், காலக் கிரமத்தில் மிதவாதிகளாகி விட்டனர். இப்பொழுது புதிதாகத் தோன்றியுள்ள தீவிர வாதிகள் இனி காங்கிரஸின் பிரதான புருஷர்களாவார்கள். இந்த நிலைமைக்குத்தான் தேசம் இப்பொழுது விரைந்து சென்று கொண்டிருக்கிறது. இதனை அனைவரும் உணருகின்றனர். இனி கட்சிகள் மறைந்து, கலந்து நிற்கும் சக்திகள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டிய காலம் நமது காலம். இதை நன்றாக மனதில் பதிய வைத்துக் கொண்டே வேலை நடைபெற வேண்டும்.

'சிதறிக்கிடக்கும் சக்திகள்' என்று சொல்லும் பொழுது நாம் எதனைக் குறிக்கிறோம் என்பதை, வாசகர்களுக்கு வீண் பரபரப்பை யுண்டாக்காமல் விளக்கிவிட விரும்புகிறோம். அச் சக்திகள்தான் சோஷியலிஸ்டுகள் என்று கூறப்படுகிறவர்கள். இவர்கள் பிரிந்து நிற்கிறார்கள் என்று சொல்லுவதைவிடப் பிரித்துவிடப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுவதே பொருத்த மானது. 'சோஷியலிஸம்' 'கம்மியுனிஸம்' ஆகியவைகளைப்பற்றிப்பெரும்பாலான ஜனங்களுக்கு ஒன்றுமே தெரியாது. அக்கொள்கைகளை விளக்கும் முகத்தான் ஸ்ரீ ஜெயபிரகாச நாராயணர் ஆங்கிலத்தில் எழுதியதை யொட்டிய தமிழ் மொழி பெயர்ப்பொன்று 'அபேதவாதம் எதற்கு?' என்னும்

பெயருடன் வெளிவந்தது. பின்னர் சென்னையிலுள்ள 'சங்கு' பிரசுராலயத்தார் வெளியிட்டதும். ஸ்ரீ சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார் சிறையிலிருந்த காலத்தில் தன் சகாக்களுடன் அபேதவாதத்தைக்குறித்து நிகழ்த்திய சம்பாஷணையின் (புஸ்தக வடிவு) 'Chats behind the bars'ன் மொழிபெயர்ப்பு 'அபேதவாதம்' என்னும் பெயருடன் கூடியதுமான நூல் ஒன்று. இவை இரண்டே ஏக தேசமாக அபேதவாதத்தைப் பற்றிய கருத்துக்களை வெளியிடக்கூடியவைகள்.

மேற்கூறிய இரண்டு நூல்களிலிருந்தும் சோஷியலிஸ்டுகளின் பிரசாரத்திலிருந்தும் அறியக் கிடப்பது இதுவே. 'நிலம், தொழிற் சாலைகள், தங்கம், வெள்ளி, இரும்பு, எண்ணெய், நிலக்கரிச் சுரங்கங்கள் (மூலாதாரப் பொருள்கள்) தனிப்பட்ட நபர்களின் ஆதிக்கத்திலிருக்கக் கூடாது. இவையனைத்தும், தேச மக்களுக்குப் பயன் படும் வகையில் அரசாங்கத்தின் நிர்வாகத்தி லிருக்கவேண்டும்' என்பதே.

முற்றும் துறந்த முனிவர்கள், சந்நியாசிகள், கருமயோகிகள், தியாகிகள் நிறைந்த இந்நாட்டில் ஒருவருடைய பிரசாரமும், பிரயத்தனமும் இல்லாமலே இந்தக் காரியம் நடைபெறவேண்டி யிருக்க, அது, கேவலம், கட்டாயம், மனக்கசப்பு இவைகள் தோன்றிய பின்னரே அம்முறை நிகழவேண்டுமென்பது தற்பொழுது ஆதிக்கத்திலுள்ள தலைவர்களின் தீர்மானமானால் அது துக்கிக்க வேண்டியதே. ஆத்ம (சொந்த) நஷ்டம் ஏற்படும் பொழுது கொள்கைகள் பஞ்சாகப் பறந்துவிடுமோ என்னவோ அறியோம்.

அபேதவாதம் இன்றே வருகிறதோ, இன்னும் பல நூற்றாண்டுகள்தான் கழிந்து வருகிறதோ, அதைக் குறித்து நாம் திட்டமாக ஒன்றும் கூறமுடியாது. ஆனால், தேசம்—ஏன்? உலகமே—அபேதவாதத்தின் பக்கமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை. இதனை ஓர் உதாரணத்தால் விளக்க முயலுகிறேன்.

18—5—38 'தினமணி'யில் ஓர் செய்தி வெளியாகி யிருந்தது. இப்பொழுது சென்னை மாகாணத்தின் சில விடங்களில் 'கூட்டுறவு வாரம்' என்று ஓர் விழா நடைபெறுகிறது. அது சம்பந்தமாக, கீழ் கோதாவரி ஜில்லாவில் கொண்டீவரம் கிராமத்தில் ஒரு விழா நடைபெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கனவான் பதின்மூன்று ஏகர் நிலமும், 'பதினாயிர ரூபாயும் நன்கொடையாகக் கொடுத்தாராம். சம்பிரதாயத்தை யொட்டி அந்த ஜில்லா கலெக்டர் விழாவை ஆரம்பித்தார். ஜனங்களுக்கு உபதேசம் செய்தார். ஜனங்கள் எளிய வாழ்க்கை வாழவேண்டுமென்று. மற்றொரு கனவான் முப்பது செண்டு நிலத்தைக் கொண்டு ஒருவன் உண்டு, உடுத்து சௌகரியமாக வாழலாம் என்று பரிசைஷயின் மூலம் ரூபித்தாராம்.

நன்று. உலகத்திலே சுலபமான காரியம் எது என்று ஒருவர் கேட்டாராம். அதற்கு மற்றொருவர் 'பிறருக்கு உபதேசம் செய்வதுதான்' என்று பதிலிறுத்தாராம். இதனை யொட்டியதாகவே இருக்கிறது மேற்குறிப்பிட்ட இவருடைய கூற்றும். பிரஸ்தாப கலெக்டர் பிரசங்கத்திற்கு வருமுன் தன்னைத் தானே பின்கண்ட

மாதிரி சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டு கூட்டத்திற்கு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மாதிரிகேள்விகள். (பிறருக்குஉபதே சிப்பவருக்கெல்லாம் இக்கேள்விகள் பொருந்தும் என்பது எமது அபிப் பிராயம்.)

(1) நம்முடைய குடும்பச் சொத்து எவ்வளவு?

(2) நம்முடைய படிப்புக்கான செலவு எவ்வளவு?

(3) நம்முடைய மாத சம்பள மென்ன?

(4) குடும்பச் செலவு எவ்வளவு பிடிக்கிறது?

(5) எவ்வளவு ரூபாய்க்கு இன் ஷ்யூர் செய்து கொண்டிருக்கிறோம்?

(6) பாங்கியில் எவ்வளவு போட் டிருக்கிறோம்?

(7) நமக்குச் சம்பளம் கொடுக் கும் வரி கொடுப்போனுக்கு என்ன யோக்யதை?

(8) அவன் சிரமத்தை யறிந்து நாம் சம்பளம் பெறுகிறோமா?

இவை போல்வன.

இந்தப் பிரச்னைகள் தாம் குடும்பங் களைப் பற்றியவும், நாட்டைப் பற்றிய வும். இவைகளுக்குப் பதிலளிப்பவை கள் தான் அபேதவாதம். அபேத வாதம் உயர்ந்த அனுபவ வேதாந்த ரீதியைப் பின்பற்றியது.

பொருளைக் கொண்டு உலகியல் நடைபெற வேண்டி யிருக்கிறபடியால் அதைக் கவனியாது, பூர்வ ஜன்ம கர் மம், தலைவிதி, தெய்வ சங்கற்பம் என்ற வார்த்தைகளால் பசப்பப் பார்ப்பது கெட்ட நாளைத் தள்ளிப் போடுவதாகும். வாழ்க்கை சம்பந் தப் பட்டவைகளைப் பொருளாதார ரீதியில் கவனியாது, மதத்தைக் கார ணமாகக் கொண்டு பேசுவதாலேயே மதத்தை ஓர் மயக்க மருந்து என்று கூற வேண்டியதாயிருக்கிறது.

வாழ்க்கையைப் பொருளாதார ரீதி யில் பார்க்கவேண்டுமென்று வற் புறுத்தும் கூட்டத்தினர் ஸ்ரீ எம். என். ராய், ஜவஹர், மஸானி, ஜெயபிரகாச நாராயணர், மேஹர் அலி, டாக்டர் சன்யாஸல் முதலிய வர்களாம். இவர்களைத் தவிர இன் னும் பலரிருக்கின்றனர். இவர்கள் நானாதேசங்களுக்கும் சென்று, ஆங் காங்கு நடைபெறும் பொருளாதாரத் துறையின் மாறுபாடுகளை நேரில் ஆராய்ந்தறிந்தவர்கள்.

சமீபத்தில் ஸ்ரீ சரத் சந்திர போஸ் இராணுவ சம்பந்தமான பிரச் னையைக் காங்கிரஸ் துவக்கவேண்டும் என்று வெளியிட்டிருக்கிறார். சில வருஷங்களுக்கு முந்தி, இந்தியக் கடன் விஷயமாக ஓர் அறிக்கை தயா ரிக்கும்படி காங்கிரஸ் ஏவியது. அறிக் கையும் வெளிவந்தது. முடிவு தெரிய வில்லை.

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் குறு கிய மனப்பான்மை கூடியிருப்பதால், முக்கியமான பிரச்னைகளை மனம் விட்டுப் பேசவும், தீர்மானிக்கவும் வல்ல தீரர்களை ஒதுக்கி வருகிறது. இது பெருந்தவறு. காங்கிரஸ் அந் நிய நாட்டிலாகா நிர்வாகஸ்தர் ஸ்ரீ ராம் மனோஹர் லோஹியா அபேத வாதி. அவரின்கீழ் அந்த இலாகா ஜான்ஸிபார் விஷயமாக நடந்து கொண்ட முறையை எவர் மறப்பர்! அப்படியே மற்றும் பல இலாகாக்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டியின்கீழ் தோன்ற வேண்டி யிருக்கின்றன. அதற்குத் தீவிரவாதிகள் தேவை.

ஒரு பேராசிரியரின் வரலாறு

—ச. மு.

ஹென்றி பெஸ்டலோசி என்பவர் 1746ம் வருஷம் ஜனவரி மாதம் 12ந் தேதி ஸ்யூரிச் (Zurich) என்னும் நகரிற் பிறந்தவர். இவரது ஐந்தாம் வயதில் இவரது தந்தை தேகவியோக மானார். ஆகவே இவரது தாயே இவரை பால்யத்தில் ரட்சிக்க வேண்டியதாயிற்று. அந்த அம்மணி இவருக்கு அதிகச் செல்லங் கொடுத்து வந்ததினால் இவர் ஆண்பிள்ளைகளுக்குரிய தைரியம், திறமை முதலிய சாகச குணங்களுடன் விளங்கவில்லை. அதைக் கவனித்த இவரது பாலிய சினேகிதர்கள் இவருக்கு 'பேதைப் புரத்துப் பெருமான் (Harry Oddity of Foolsborough) என்று ஹாஸ்ய நாம மிட்டிருந்தனர். பாலப் பருவம் நீங்கி இளங் குமரனான பொழுது இவர் ரோஸோ (Rousseau) வின் எமிலி (Emile) என்னும் நூலை ஓதினார். அப்போது இவருக்கு அக் காலத்து ஜனங்கள் வீட்டிலும் பள்ளியிலும் படித்து வந்த விஷயங்களிற் சிறிதும் பயனில்லை யென்று தெரிந்தது. 1769ம் வருஷத்தில் இவர் தமக்கு ஏழு வருஷம் வயதில் மூத்தவரான ஆன் ஸ்கூல்தேஸ் (Anne Schulethess) என்னும் மாதை மணந்து அவருடன் நாற்பது வருஷ காலம் இல்லறம் நடத்திவந்தார். அந்த அம்மாள் தன்னுயுள் பரியந்தம் இவருக்கு மாறாத உதவி புரிந்து இவரைப் பாதுகாத்து வந்தார். இவர் முதலில் புரோகிதராகவும் (Clergy man) பின்பு தர்ம சாஸ்திரியாகவும் (Lawyer) அதன் பின் விவசாயியாகவும் உழைத்து வந்தார். அவ்வாறு உழைத்து வருகையில் மனிதர் படுங் கஷ்டங்களைக் கண்டு மனங் கசிந்து நொந்து, பின் உத்தமியான தனது இல்லறத் துணைவியின் சகாயங் கொண்டு, தமது வீட்டிலேயே ஒரு 'தரித்திரர் சரணாலயம்' ஏற்படுத்தி, அதில் அக்கம் பக்கத்துக் கிராமப் பிள்ளைகளைச் சேர்த்து வைத்தார். அந்தச் சரணாலயம் ஏற்படுத்திய கொஞ்ச காலத்திற் கெல்லாம் வீடு வாசல், சுற்றம் முதலியவை யொன்றுமில்லாத ஐம்பது பிள்ளைகள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர், குடியானவர்கள் ஈன ஸ்திதியிலிருந்து உயர்ந்து நல்ல ஸ்திதிக்கு வரவேண்டு மென்றால், அவர்களது குழந்தைகளுக்கு இளமையி லிருந்தே கல்வி கற்பிக்க வேண்டு மென்று தெளிவா யறிந்து தமக்கு எப்படிப்பட்ட கொடிய கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்திடினும், தமது ஆயுள், ஆஸ்தி, சக்தி முதலிய அனைத்தையும் செலவழித்து, அவர்களுக்கு அவரவர்கள் இருந்த விடத்திலேயே கல்வி கற்பிப்பதற்கு லகுவான வழி தேட வேண்டுமென்று தீர்மானித்தார்.

மனிதர் தங்களது சரீரங்களை வளைத்துப் பாடுபடவும் பஞ்சேந்திரியங்களை உபயோகிக்கப் பழகவும் வேண்டுவது அத்தியாவசியம் என்று அறிந்து, இவர் தம்மிடம் வந்து சேர்ந்த குழந்தைகளுக்கு விவசாயமும் கைத் தொழிலும் கற்பித்தார். ஆயினும் இவருக்கு அக் குழந்தைகளை அடக்கியாளப் போதுமான திறமையில்லாம லிருந்ததினாலும் இந்தச் சரணாலயம் நெடு நாள் நடைபெறவில்லை. இவரிடம் சேர்ந்த குழந்தைகள் நல்லொழுக்க மென்பதே அறியாதவர்

கள்; உடுக்கப் புதிய ஆடை கிடைத்த வுடன், சரணாலயத்தை விட்டு ஓடி விடுவார்கள். இதனால் பெஸ்டலோசிக் குப் பெருத்த நஷ்ட முண்டாகிக் கட னும் சுமந்து விட்டது. ஆகவே இவர் தமது சரணாலயத்தைக் கலைத்து, தமது நிலங்களையும் கடன்காரருக்கு ஒப்புக் கொடுத்து விட்டார். இவ்வாறு இவரது பிரதமப் பிரயத்தனம் வீணாய் விட்டது.

இதன் பின், 1798ம் வருஷம் வரை இவரைப் பலவிதமான கஷ்டங் கள் ஒன்றன் பின் னொன்றாகப் பிடித் தன. சோற்றுக்கும் துணிக்கும் வருந் தியும், மனத் தளர்ச்சிகொண்டுமே இவர் தமது காலத்தைக் கழித்தார். இக்காலத்தில்தான் இவர் வித்தியா விஷயமான பல கிரந்தங்களை யியற்றி னார். அவற்றில் முக்கியமானவை:— 'ஒரு தபஸ்வியின் மாலைப் பொழுது' 'லியோனார்டும் ஜெர்ட்ரூடும்' 'கிறிஸ் தபரும் எலிஜாவும்' என்பன. கதை, கற்பனை, சம்பாஷணை ஆகிய இவை களின் மூலமாய் பெஸ்டலோசி இந் நூல்களில் தமது கொள்கைகளைச் சித்தாந்தப் படுத்துகிறார். குழந்தை களின் குலாசாரங்களையும், சுபா வங்களையும் நன்றாக அறிந்து, அவை களை அனுசரித்து, இடை விடாமலும், படிப்படியாகவும் அவர்களது சகல சக்திகளையும் விர்த்தி செய்ய வேண் டும்; தாமாகவே உழைத்து அவர்கள், கண்ணோட்டமும் கைப் பழக்கமும் பெற வேண்டும்; இவ்வாறு, அவர் களுக்குப் பிற் காலம் ஜீவனம் செய்வ தற்கு ஒரு வித்தையைக் கற்பிக்க வேண்டியது அவசியம். என்றாலும், சித்த சுத்தி, அறநெறி, கண்ணியம் முதலிய குணங்களை அவர்களுக்கு உண்டாக்குதலும் அவர்களை அன்பும், நீதியும் தயாள குணமு முள்ளவராக ஒழுகப் பழக்குதலுமே கல்வியின் முக்கியமான உத்தேசம். இவையே அவரது கொள்கைகள்.

மேற்கூறிய கிரந்தங்களால் இவருக் குப் பேரும் புகழும் உண்டாயின. கோதே (Goethe), வீலாண்டு (Wieland), ஹெர்டர் (Herder), பிஷ்ட் (Fichte) முதலிய மஹா மேதாவிகள் இவரை வெகுவாக மதித்து இவரது நட்பையும் கோரி னார்கள். பிரான்சு தேசத்தார் இவ ரைத் தமது நாட்டுப் பெரிய மனித ரொருவராக நியமித்துக் கௌரவப் படுத்தினர். இவரது கிரந்தங்களைப் படித்த பிஷ்ட் என்பவர் இவரது கொள்கைகளைச் சாஸ்திர ரீதியாய் ஒழுங்கு செய்து எழுதி வெளியிட் டால் உலகுக்கே பெருத்த உபகார மாகுமென்று தெரிவிக்க, இவர் 1737-ல் 'மனிதரது சுபாவத்திற்கும் அவர்களது அபிவிர்த்திக்கும் உள்ள சம்பந்தம்' என்ற ஒரு கிரந்தம் எழுதினார்.

அப்போது ஹெல்வீஷியா நாட்டு அதிகாரிகள், பிரஞ்சுக்காரர் தீயிட்டுக் கொளுத்திக் குடியிருக்க வீடு மில்லா மல் பாழாக்கிய ஸ்டான்ஸ் (Stanz) என்னும் ஊரில் வீதி வீதியாய்த் திரிந்து கொண்டிருந்த அனாதைகளைக் காப்பாற்ற வரவேண்டு மென்று இவரை வேண்டிக் கொள்ள, இவர் அவ் வூருக்குச் சென்றார். கஷ்டங் களும் அசௌகரியங்களும் மலிந்து கிடந்த அவ்வூரில் எண்பது பிச்சைக் காரப் பிள்ளைகளைக் கட்டிக் கொண்டு பெஸ்டலோசி வெகு பாடுபட்டார்.

'அந்தப் பிள்ளைகளில் அனேகர் மிகக் கேவலமான ஸ்திதியி லிருந்த னர். அவர்கள் மிகக் கெட்ட சொரி சிரங்குகளினால் பீடிக்கப் பட்டவர்க

ளாகவும், ஒரு அடிகூட எட்டியெடுத்து வைக்க முடியாதவராகவும் இருந்தனர். வேறு சிலரது மண்டைகள் அழுகிக் கொண்டிருந்தன. அவர்கள் உடுத்திருந்த கந்தைகளில் சீலைப் பேன்களும் அழுக்குமே நிறைந்திருந்தன. அனேகர் எலும்புந் தோலுமாயிருந்தனர். அவர்களது முகம் இருண்டு, கண்களின் ஒளி மழுங்கியிருந்தது. அவர்களிற் சிலர் பிச்சைக்கார வேடம் பூண்டு மோசஞ் செய்தே காலங் கழித்தவர்கள். அவர்களது முகத்தில் விவேகிகளுக் குள்ள குறிகள் ஒன்றுமே யிருக்கவில்லை. தூர்த்தசையினால் பீடிக்கப்பட்ட மற்றுஞ் சிலர் பொறுமையும், பயமும் நிறைந்தவர்களாய் ஒருவரிடமும் நம்பிக்கையும் அன்பு மில்லாதவராய்த் தோன்றினர்.'

பெஸ்டலோசி, தாம் அவர்களுக்குக் கற்பிக்க உத்தேசித்திருந்த விஷயங்களை அவர்கள் எளிதிற் கற்குமாறு ஒழுங்கு படுத்திக் கொண்டு, அவர்களிடம் அன்பும் நம்பிக்கையும் பாராட்டி வர, கொஞ்ச காலத்தில் அவர்களது கெட்ட சுபாவ மெல்லாம் மாறி விட்டது. அப்போது இவரிடம் சேர்ந்த பிள்ளைகளைக் கண்ணுற்றவர்கள் அவர்கள் க்ஷேமமாகவும், அதி தீவிரம் வளர்ந்தும், நிறம் வேறுபட்டு மிருக்கக் கண்டனர். அக் குழந்தைகளும், 'வீட்டி லிருப்பதை விட இங்கிருப்பதுதான் எங்களுக்குச் சுகமாக விருக்கின்றது' என்றன. இந்தப் பெரிய ஆச்சிரமத்தை நடத்தி வருகையில், பெஸ்டலோசிக்குக் குழந்தை சுபாவம் இன்னதென்று சாங்கோபாங்கமாகத் தெரிந்தது மன்றி, சிறுவருக்குக் கல்வி கற்பிக்க முன் வருவோர்க்கு அந்த ஞானம் அத்தியாவசியமானது என்றும் பட்டது. இந்த ரகசியத்தை இவர் தமக்குச் சமயம் வாய்த்த போதெல்லாம் தம் காலத்தவர்க்கு வற்புறுத்தி வந்தார். 1799-ம் வருஷத்தில் பிரஞ்சுக்காரர் திரும்பவும் இந்தப் பிரதேசத்தைப் பிடித்து இவரது பள்ளிக் கூடத்தையும் ஒரு ராணுவ ஆஸ்பத்திரியாக்கிக் கொள்ளவே, இவர் அது வரை பட்ட பாடெல்லாம் வீணாகி விட்டது. இவரும், அச்சமயம் தமது தேகம் மிகவும் களைத்து மெலிந்திருந்தது கண்டு அருகாமையி லிருந்த மலைப்பிரதேசங்களுக்குச் சென்று இளைப்பாறினார். ஆனால் லோகோபகாரமே கண்ணாயிருந்த இவரும் இளைப்பாறுவதுண்டோ? இல்லை. மலைகளிற் கொஞ்ச காலம் மாத்திரமே கழித்து விட்டுப் பின், இவர் பெர்ன் (Berne) நகருக்கு அருகேயுள்ள பர்க்டார்ப் (Burgdorf) என்னும் ஊரிலும், இவர்டுன் (Yverdun) என்னும் ஊரிலுஞ் சென்று பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தார். அவைகளின் கீர்த்தி ஐரோப்பா வெல்லாம் பரவியது. வித்தியா பிவிர்த்தியில் கண்ணுங் கருத்துமாயிருந்தவரெல்லாம், தங்களது வேட்கையை ஞான சாகரமான இவர்டுனில் தான் தீர்த்தல் வேண்டுமென்று நினைத்து, நம்மவர் தீர்த்த யாத்திரை செய்வது போல், மூலை முடுக்குகளிலுமிருந்து இவர்டுனுக்கு யாத்திரை செய்யலாயினர். இவர்களிற் சிலர் கடலுக்கப்பால் நெடுந் தூரத்திலிருந்தும் வந்தனர். கொஞ்ச காலம் கழிந்த பின், இவரது உதவி உபாத்தியாயர்கள் ஒருவரோடொருவர் சண்டை சச்சரவுகள் செய்து கொள்ள இந்தப் பள்ளிக் கூடமும் க்ஷீணித்துக் கலைய ஆரம்பித்து விட்டது. இதைக் கண்டு மனந்தளர்ந்து கவலையுங் கொண்டவ

ராய் பெஸ்டலோசி மிகவும் வருந்தினார். இச்சமயம் உத்தமியான இவரது வாழ்க்கைத் துணைவியும், பரலோகம் சென்று விட, பெஸ்டலோசி, இனி வரக்கூடிய துக்கம் வேறொன்று மில்லை யென்று நினைத்துத் தமது சொந்தவூராகிய நியூஹாபுக்கு வந்து சேர்ந்தார்; அங்கு வந்தபின் 'ஹம்ஸத்வனி' என்று ஒரு நூல் எழுதினார். அதில் தமது சரிதையையும், தாம் வித்தியா விஷயமாய்க் கொண்டிருந்த சித்தாந்தங்களையும் விளக்கியுள்ளார். 1827-ம் வருஷம் பெப்ருவரி மீ 17உ இவர் மண்ணுலகை விட்டு விண்ணுலகெய்தினார். திக்கற்றுக் கவனிப்பாரின்றிக் கிடந்த ஜனங்களின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்றே கண்ணயிருந்தவரும், தெய்வத்துக்குச்சமானமான இளங்குழவிகளின் நன்மையை உத்தேசித்துக் கஷ்டங்களும் துக்கங்களும்மேன்மேலும்வந்தபோதும்அவைகளைப் பொருட்படுத்தாது எடுத்த கருமங்களிற் சிலவற்றை நிறைவேற்றியும், மற்றும் சிலவற்றை நிறைவேற்ற முடியாமலும் உழைத்து வந்த இந்த மஹானது ஆயுள் அன்றைய தினம் முடிந்தது.

இவரது சமாதியின் மேல் நாட்டிய கல்லில், அர்கா (Argau) நகரத்தார், 'எல்லாம் பிறர்க்கு; துறவே தனக்கு' என்று வரைந் திருக்கின்றனர். இது இவரது குணத்தை உள்ளபடி உரைக்கின்ற தல்லவா?

சுருங்கச் சொல்லின், 'புத்திக்கேற்ற படிப்பு' என்பதே பெஸ்டலோசியின் கொள்கை. வித்தியார்த்தியின் சொந்த அனுபவமே அஸ்திவாரமாகக் கொண்டு எளிதில் விளங்கும் அம்சங்களி லிருந்து படிப்படியாய்க் குழந்தைகளுக்கு வயது முதிரமுதிரக் கடினமான விஷயங்களை அவர்களுக்கும்போதிக்க வேண்டுவதும், குழந்தைகளின் மனோபாவங்களுக்கு ஒருவிதமான பங்கமும் வாராமல் அவைகளை வெகு பய பக்தியுடன் காத்துவர வேண்டியதும் உபாத்தியாயரது கடன். வீட்டி லுள்ள சுவாதீனங்களனைத்தும் பிள்ளைகளுக்கு அவர்களது பள்ளிக்கூடங்களில் இருத்தல் அவசியம். உபாத்தியாயர் தமது வித்தியார்த்திகளுக்குத் தகப்பன் போல் அன்புடன் வித்தியாப்பியாசம் செய்விக்க வேண்டும். இவ்வுண்மைகளையும், இவை போன்ற வேறு உண்மைகளையும் பெஸ்டலோசி சிறிதும் சலிப்பின்றித் தமது வாழ்நாள் முழுவதும் தம் காலத்தவர்க்குப் போதித்து வந்தார்.

ஐரிஷ் குடியரசுத் தலைவராகிய டிவேலரா குடிப்பது மில்லை; சிகரெட் பிடிப்பது மில்லை.

ஃ ஃ ஃ

பிரபல விஞ்ஞானியாகிய ஈன்ஸ்டீன் என்பவருக்கு ஐஸ்க்ரீம் மேல் அதிகஆசை. இதைத் தெருவில் நடந்து செல்லும் போதே தின்று கொண்டு போவாராம்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவிலுள்ள மாகாண சட்ட சபைகளில் மொத்தம் 7500 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 1800 பேர் வக்கீல்கள். எல்லாச் சட்ட சபைகளிலும் சேர்த்து மொத்தம் சென்ற வருஷம் 38,843 மசோதாக்கள் கொண்டுவரப் பட்டன.

ஸர் சி. சங்கரன் நாயர்

ஜனனம்—1857 மரணம்—1934

—"ஒரு காங்கிரஸ் வாதி"

பதின் மூன்ருவது இந்திய தேசிய காங்கிரஸ் 1897ம் வருஷம் டிசம்பர் மாதம் 27, 28, 29 தேதிகளில்பீஹார் மாகாணத்திலுள்ள அமரோட்டி என்ற நகரத்தில் நடைபெற்றது. 692 பிரதிநிதிகள் இதற்கு ஆஜரா யிருந்தார்கள். மிகக் கொந்தளிப் பான காலம் அது. ஏனென்ருல் ராண்ட், அயெர்ஸ்ட் என்ற இரண்டு ஐரோப்பியர்கள் கொலை செய்யப்பட் டார்கள். இதனுல் அரசாங்கத்தார் எந்தவிதமான தேசிய இயக்கங்களை யும் சந்தேகப் பார்வையுடனேயே பார்த்தார்கள். தவிர பிளேக் நோய், மேற்கிந்தியா பிரதேசங்களில் அதி தீவிரமாகப் பரவி அநேக ஆயிரம் பேரை இயமனுலகுக்கு அனுப்பி விட்டது. காங்கிரஸ் நடைபெற அர சாங்கத்தார் அநுமதிப் பார்களா வென்று கூடச்சிலர் சந்தேகித்தனர்.

இந்த நிலையில் கூடிய காங்கிரஸுக் குத்தலைமை வகித்துத் திறமையாக நடத்தியவர் ஸர் சித்தூர் சங்கரன் நாயர். சென்னை மாகாண வாசிகளில் காங்கிரஸுக்குத் தலைமைப் பதவி யேற்றவர்களுள் இவர் இரண்டாவ தவர். முதலாவது பி. அனந்தா சார்லு. எந்த வருஷம், சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்பட்ட இந்தி யாவின் முதல் சுதந்திரப் போராட் டம் நடைபெற்றதோ அந்த வருஷத் தில்தான்—அதாவது 1857ம் வருஷத் தில்தான்—ஸர் சங்கரன் நாயர் பிறந் தார்.

இவருடைய தகப்பனுர், மலை யாளப் பிரதேசத்தில் தாசில்தாராக வேலை பார்த்தவர். இவருக்கு ஆங் கில ஞானமே கிடையாது. ஆனுல் ஹிந்தி பாஷையில் நல்ல புலமை பெற் றிருந்தார். இவர் அரசாங்கத்தில் நல்ல மதிப்புப்பெற்றுப் பெரிய உத்தி யோகங்கள் வகித்தார் என்பது ஆச் சரியப்படத்தக்க விஷய மில்லையா? இவர், உத்தியோக தோரணையில் கண்ணனூர், கள்ளிக்கோட்டை முத லிய ஊர்களுக்கு மாற்றப்பட்ட பொழுதுதான் சங்கரன் நாயருடைய வித்தியாப் பியாசமும் ஆரம்பமா யிற்று. கள்ளிக்கோட்டையி லிருந்த போது இவர் எப். ஏ. பரீட்சையில் தேறிவிட்டார். பின்னர், மேல் படிப் புக்குச் சென்னை வந்து பிரசிடென்சி காலேஜில் சேர்ந்து கொண்டார். 1876ம் வருஷம் பி. ஏ. பரிட்சையில்

தேறினர். பின்னர் சட்டப் பரீட்சைக்குப் படித்து அதிலும் மாகாணத்தில் முதல்வராகத் தேறி, 1880ம் வருஷம் ஹைகோர்ட் வக்கீலாகப் பதிவு செய்துகொண்டார். சிறிது காலம் வக்கீல் தொழில் நடத்தினர். ஆனல் அரசாங்கத்தார் இவருடைய சட்ட ஞானத்தையும் அதைப்பிரயோகம் செய்வதில் இவர் காட்டுகிற திறமையையும் கண்டு இவரை ஒரு ஜில்லா முன்சீப்பாக நியமனம் செய்தார்கள். இந்த வேலையில் இவர் நல்ல பெயரெடுத்தார். இவர் வேறோர் ஊருக்கு மாற்றப்பட்ட பொழுது, இந்த ஊர் ஜனங்கள், இவர் மீண்டும் தங்களூருக்கே திரும்பிவர வேண்டுமென்று தேவாலயத்தில் அர்ச்சனே, அபிஷேகம் முதலியவைகளெல்லாம் செய்து வைத்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

பின்னர் இவர் முன்சீப் வேலையிலிருந்துவிலகி மறுபடியும் ஹைகோர்ட் வக்கீல் வேலையைத் தொடங்கினர். புகழும் பொருளும் நிறையச் சம்பாதித்தார். அந்தக் காலத்தில் சென்னை ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதியாயிருந்த ஸர் சார்லஸ் டர்னர் இவரை 'நியாயவாதிகளின் தலைவன்' என்று அழைக்கத் தொடங்கினர். இந்தக் காலத்தில் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்ட நிலவரிக் கமிஷனில் இவர் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டு, அதன் மூலமாக விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைச் செய்து கொடுத்தார். இது முதல் கிராம வாசிகள் இவரைத் தங்களுடைய ஒரு தலைவனுக மதித்துப் புகழ்ந்தார்கள்.

இதே சமயத்தில் இவர் பொது வேலைகளிலும் ஈடுபடலானர். இவருடைய தன்னலமற்ற சேவையானது பல இடங்களிலும் பிரகாசித்தது. இவர் சென்னைச் சர்வ கலாசாலையின் அங்கத்தினராகவும், சென்னைச் சட்டசபை அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார். இவர் சட்டசபையிலிருந்த காலத்தில் பொதுஜன நன்மைக்குகந்த மசோதாக்கள் பலவற்றைக் கொண்டு வந்தார். ஜன நன்மைக்கு விரோதமான மசோதாக்கள் ஏதேனும் அரசாங்கத்தார் கொண்டு வந்தால் அதைத் தீவிரமாக எதிர்த்துப்போராடினர். இந்தச் சமயத்தில், 'மதராஸ் லா ஜர்னல்' என்ற பத்திரிகைக்கும் 'மதராஸ் ரெவ்யு' என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராயிருந்து திறமையாக நடத்தினர்.

இவருடைய பொதுநலச் சேவைகளைப் பாராட்டி இவரைப் பொது ஜனங்கள் 1897ம் வருஷத்தில் நடைபெற்ற சென்னை மாகாண கான்பரென்ஸுக்குத் தலைவராகத் தெரிந்தெடுத்தார்கள். அதே வருஷத்தில் அமரோட்டியில் நடைபெற்ற காங்கிரஸுக்கும் இவர் தலைவராகத்தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் தமது தலைமைப் பிரசங்கத்தில், நாட்டின் தேசீய நிலைமையை விஸ்தரித்து அழகாகப் பேசினர்.

> இப்பொழுதைய இந்தியாவைக் கொண்டு நாம் திருப்தியடைவதா? அல்லது அதனைப் பல்வழிகளிலும் உயர்த்த நம்மாலான முயற்சிகளைச் செய்வதா? ஆண்டுகள் கணக்காக நாம் அடிமைப்பட்டுக் கிடந்ததால் இந்திய ஜன சமுதாயத்தின் பலமே போய் விட்டது. அதன் வளர்ச்சி குன்றி விட்டது. அதனிடத்திலேயிருந்த பெருமைகளெல்லாம் குலைந்து விட்டன. ஆகவே, மற்ற உலக வல்லரசுகளைப்

போல் இந்தியாவும் சம அந்தஸ்துடன் வாழ வேண்டுமானால், இந்தியாவினுடைய படித்த மக்களுடைய முயற்சியினால் தான் ஆகும். இஃது இவருடைய பிரசங்கத்தின் ஒரு பகுதி.

ஸர். சங்கரன் நாயர், அரசியல் வேலைகளோடு மட்டும் தம் உழைப்பைக் கட்டுப் படுத்திக்கொள்ளவில்லை. சமூகச் சீர்திருத்த விஷயங்களிலும் அதிக அக்கரை காட்டினார். 1908ம் வருஷம் நடைபெற்ற அகில இந்திய சமூகச் சீர்திருத்த மகா நாட்டுக்கு இவர் தலைமை வகித்தார்.

அரசாங்கத்தார் இவருடைய மதி நுட்பத்தை வியந்து பாராட்டுவதற்கறிகுறியாக இவரை சென்னை அட்வோகேட் ஜெனரலாக நியமித்தனர். பின்னர் 1908ம் வருஷம் ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். இதில் சுமார் ஏழு வருஷகாலம் வேலை பார்த்தும் 1915ம் வருஷம் இந்தியா அரசாங்கத்து நிருவாக சபைக் கல்வி அங்கத்தினரானார். இந்தக் காலத்தில் பெண் கல்வி அபிவிருத்திக்காக மிகவும் பாடுபட்டார். அரசாங்க நிர்ப்பந்தங்களில் இவர் இருந்த போதிலும், இவர் தமது அபிப்பிராயங்களைத் தாராளமாக எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார்.

1919ம் வருஷம் பஞ்சாப் படுகொலை நடைபெற்றது. அப்பொழுது அரசாங்கத்தார் நடந்துகொண்ட மாதிரி இவருக்குப் பிடிக்கவில்லை. உடனே தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டார். இதனால் இவருடைய புகழ் அதிகமாயிற்று. பின்னர், பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்குப் பஞ்சாப் படுகொலை சம்பந்தமான விவரங்களை எடுத்துச் சொல்வதற்குச் சென்ற காங்கிரஸ் பிரதிநிதிக் கூட்டத்தில் இவர் ஓர் அங்கத்தினராயிருந்தார்.

இந்திய அரசியல் மேடையில் மகாத்மா காந்தி முக்கிய நடிகராகத் தோன்றிய பிறகு, இவருக்கும் காந்தியடிகளின் கொள்கைகளுக்கும் அபிப்பிராய வேற்றுமைகள் ஏற்பட்டன. காந்தியடிகளைக் கண்டித்து 'காந்தியும் அராஜகமும்' என்று இவர் ஒரு நூல் வெளியிட்டார். இதனால் இவருடைய புகழ் கொஞ்சம் மங்கலாயிற்று. இந்தப் புஸ்தகத்தில் இவர், பஞ்சாப் மாகாண கவர்னரான ஸர் மைக்கேல் ஓட்வியரைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவர், இவர் மீது மானநஷ்ட வழக்குத் தொடுத்தார். இதனால் சங்கரன் நாயருக்குச் சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவேற்பட்டது. வழக்கும் வெற்றிபெறவில்லை.

1922ம் வருஷம், மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் தொடங்கப்போகிற சமயத்தில், அரசாங்கத்திற்கும் காங்கிரஸுக்கும் ஒருவித சமரஸத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கத்துடன், பம்பாயில் சர்வ கட்சியினரும் சேர்ந்து ஒரு மகாநாடு கூட்டினார்கள். அதற்கு இவர் தலைமை வகித்தார்.

பின்னர் ராஜாங்க சபையின் அங்கத்தினராயிருந்தார். 1928ம் வருஷம் சைமன் கமிஷன் விஜயத்தின் போது, இந்தியா முழுவதும் இந்தக் கமிஷனைப் பகிஷ்கரித்திருக்க இவர், மேற்படி கமிஷனுடன் ஒத்துழைக்கலானார். இது பலருக்கும் ஆச்சரியமுண்டாக்கியது. இவருடைய வாழ்க்கை முழுவதையும் கொஞ்சம் அலசிப்பார்த்தால் இப்படித்தான் ஒத்துழைப்பும் ஒத்துழையாமையுமாக மாறி மாறி வந்திருக்கிறது.

இவர் 1934ம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ந் தேதி பரகதியடைந்தார்.

யுத்தமில்லாத யுத்தம்!

—ஆர். ஜி. எஸ்.

கெல்லாக் ஒப்பந்தம் என்றால் என்ன வென்பது உங்களுக்குத் தெரியுமா? அமெரிக்கா அரசாங்கத்து மந்திரியாக பிராங்க். பி. கெல்லாக் என்ற ஒருவர் இருந்தார். இவர், பிரெஞ்சு மந்திரியாக இருந்த பிரையாந்து என்பவருடன் சேர்ந்து 1928ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 27ந் தேதி ஓர் ஒப்பந்தத்தைத் தயார் செய்தார். இந்த ஒப்பந்தம் மூன்றே மூன்று பாராக்களைத்தான் கொண்டது. எந்தத் தேசமும், யுத்தத்தின் மூலமாகத் தன் தேசியக் கொள்கையை நிலை நிறுத்திக் கொள்ளக் கூடாதென்பது இந்த ஒப்பந்தத்தின் சாரம். உலகத்தி லுள்ள சுதந்திர நாடுகள் மொத்தம் அறுபத்தேழு. இவற்றில் ஐம்பத்தொன்பது தேசங்கள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதற்குத்தான் கெல்லாக் ஒப்பந்தம் என்று பெயர்.

1928ம் வருஷத்திற்குப் பிறகு உலகத்தில் பல யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. மேலே கூறப்பட்ட ஐம்பத்தொன்பது தேசங்களில் பல இந்த யுத்தங்களில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு தேசந் தவிர, மற்றெல்லாத் தேசங்களும், இந்த கெல்லாக் ஒப்பந்தத்தை மீறாமலே இந்த யுத்தங்களில் சம்பந்தப் பட்டிருக்கின்றன! இது வேடிக்கையில்லையா?

தென்னமெரிக்காவி லுள்ள பராகுவே என்ற நாட்டுக்கும் பொலிவியா என்ற நாட்டுக்கும் 1930ம் வருஷம் யுத்தம் நடைபெற்றபோது, ஒன்றுக் கொன்று யுத்தந் தொடுப்பதாக முன்னறிக்கை செய்து விட்டே குண்டுகளைப் போட ஆரம்பித்தன. ஆனால் இந்த இரண்டு அரசாங்கங்கள் கூட, கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, தாங்கள் ஏதோ தவறான காரியத்தைச் செய்து விட்டமாதிரி, யுத்தந் தொடுத்திருப்பதாக வெளியிட்ட அறிக்கையை வாபீஸ் வாங்கிக் கொண்டுவிட்டன!

சைனாவின் மீது ஜப்பான் தொடுத்திருக்கிற யுத்தம், சட்ட ரீதியான யுத்தமல்ல. ஜப்பான், தன்னுடைய தற்காப்புக்காகத்தான் இந்தமாதிரி சீனாவிலுள்ள நிரபராதிகளின் மீது குண்டுமாரி பொழிகிறது! ஸ்பெயினிலே நடைபெறுகிற யுத்தம், யுத்தமா என்ன? இல்லை, இல்லை. உள்நாட்டுக் குழப்பம்! அபிசீனியாவிலிருந்து ஹெய்லி செலாஸியைத் துரத்தி விட்டதற்கு அவர் மீது தொடுக்கப்பட்ட யுத்தங் காரணமல்ல. அந்த நாட்டிலே ஏற்பட்ட குழப்பத்தை இத்தலி அடக்க முற்பட்டபோது அவர் ஓடி விட்டார்!

இந்தமாதிரி, 'சட்டபூர்வமான யுத்தம்' என்று சொல்லிக் கொள்ளாமல் ஒரு நாட்டை ஆக்ரமித்துக் கொள்ள முதல் முதல் துணிந்தது ஜப்பான். மஞ்சூரியாவை இது ஆக்ரமித்துக் கொண்ட போது, தற்காப்பு நிமித்தம் மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்டதாக இது கூறியது. இதற்குப் பிறகு மற்ற நாடுகள் இந்த வழியைப் பின்பற்ற ஆரம்பித்தன.

ஆனால் யுத்தமில்லாமல் யுத்தந் தொடுக்கிற இந்த முறையில் ஜெர்மா

னியர்கள்தான் தலை சிறந்தவர்கள். தங்கள் நாட்டிற்கு அருகாமையி லுள்ள ஜாதியாரை ஒன்று படுத்துகி ரும் என்பதை வியாஜமாக வைத் துக் கொண்டு, ரகசியமாகச் சூழ்ச்சி செய்து ஒரு ராஜ்ஜியத்தைக் கைப்பற் றிக் கொண்டு விடுகின்றனர். முதலில் டான்ஸிக் பிரதேசத்தில் இவர்களு டைய இந்த முறை வெற்றி பெற்றது. இரண்டாவது ஆஸ்திரியா. மூன்று வது ஜெக்கோ ஸ்லோவேகியாவோ என்னவோ? முதலில் இவர்கள் மேற் படி நாடுகளி லுள்ள ஜெர்மனியர்க ளிடையே நாஜி கொள்கையைப் பிர சாரஞ்செய்கின்றனர். பிறகு நாஜிகட்சி ஒன்று அமைக்கப் படுகிறது. அதன் பிறகு அந்தக் கட்சிக்குப் பிரதிநிதித் துவம் கோரப் படுகிறது. இதற்குப் பிறகு தேர்தலில் நாஜி கட்சிக்கு வெற்றி; அதிக வெற்றி. கடைசியில் அரசாங்க ஸ்தாபனத்தையே கைப் பற்றிக் கொண்டு விடுதல். இப்படித் தான் நடை பெற்றுக் கொண்டு வரு கிறது.

கெல்லாக் ஒப்பந்தத்தைச் சட்ட ரீதியாக மீறுமல் ஒரு நாட்டை மற் றொரு நாடு ஆக்ரமித்துக் கொள்வ தற்கு இந்த ஜெர்மானியர்கள் கண்டு பிடித்திருக்கிற வழிதான் நல்ல வழி!

ஸ்பெயினில் இந்த நவீன தந்திரம் கையாளப் பட்டு வருகிறது. மற்ற நாடுகளிலும் இது கையாளப் பட லாம். பொது வுடமைக் கொள்கையை எதிர்த்துப் போராடுவதற்காக, ஸ்பெயினில் பிராங்கோவுக்கு உதவி செய்யத் தொண்டர் படைகளை அனுப்பிக் கொண்டு வருவதாகவே இத்தலியும் ஸ்பெயினும் சொல்லிக் கொண் டிருக்கிறது. பொது வுடமை என்பது என்ன வென்பதைப் பொது வுடமை வாதிகளே இன்னும் நிர்ண யித்துக் கூறவில்லை. பாசிஸ்ட் கட்சி யைச் சேராதவர்கள் எல்லாரும் பொதுவுடமை வாதிகள் என்றுதான் முஸோலினியும் ஹிட்லரும் கருதிக் கொண் டிருக்கிறார்கள்போ லிருக் கிறது. முஸோலினி, ஸ்பெயினுக்கு ஒன்றேகால் லட்சம் காலாட் படை களையும், ஆயிரத்தைந்நூறு ஆகாய விமானங்களையும் அனுப்பி யிருக்கி ருன். இத்தலி, ஸ்பெயினிலே தலை யிட்டு நடத்துகிற யுத்தந்தான், இந்த நூற்றாண்டிலேயே பெரிய யுத்தம் என்று சொல்லலாம்.

ரகசியச் சூழ்ச்சிகளின் மூலமாக இப்படி ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆக்ரமித்துக் கொள்வதற்கு முன்னுல் தீவிரமான பிரசாரத்தைச் செய்ய வேண்டி யிருக்கிறது. இதில் ஜெர்மா னியரும் இத்தாலியரும் கைதேர்ந்த வர்கள். ஸ்பெயினில் இவர்கள் இந்த விஷயத்தில் வெற்றி பெற்று விட்டார் கள் என்று சொல்ல வேண்டும். ரேடியோ, சினிமா முதலிய நவீன சாதனங்கள் யாவும் இந்தப் பிரசாரத் திற்கு உபயோகப்படுத்தப் படுகின் றன.

இவைகளைப் பார்த்து, ஜனநாயக அரசாங்கங்களும் இப்பொழுது பிர சாரத்தில் இறங்கி யிருக்கின்றன. பிரிட்டிஷ் ப்ராட்காஸ்டிங் கார்ப்போ ரேஷனர், இப்பொழுது ஆறு பாஷை களில் பிரசாரஞ் செய்ய ஏற்பாடு செய்திருப்பது அன்பர்கள் அறிந்த விஷயமே.

ஆகையால், இனி யார் திறமையா கப் பிரசாரஞ் செய்கிருர்களோ அவர் களுக்குத்தான் இந்த உலகம் பூராவும் சொந்தமாகிவிடும் என்று ஒருவாறு துணிந்து கூறலாம்!

யுத்தம் ஏற்படுமானல்—?
—ட்ரோட்ஸ்கியின் கருத்து

ஏ. எம். ஜே.

ட்ரோட்ஸ்கி உலக அறிஞர்களில் ஒருவர். ருஷ்யாவில் ஸ்டாலின் ஆட்சி தோன்றிய பிறகு நாடு கடத்தப்பட்டு இப்பொழுது மெக்ஸிகோவில் வசிக்கிருர். இவர் தனிப்பட்ட வாசத்திலே இருந்தபோதிலும், உலக நிலையை எவ்வளவு நுணுக்கமாக அளந்து வைத்திருக்கிருர் என்பது இந்தக் கட்டுரையினுல் நன்கு தெரிகிறது. இந்தக் கட்டுரையை யெழுதியவர் ட்ரோஸ்கியைக் கண்டு பேசிய ஒரு பத்திரிகை நிருபர்.

மெக்ஸிகோ நகரத்தின் எல்லைப் புறத்தில் உள்ள ஒரு பகுதியில் அவெனிடா லான்ட்ரெஸ் என்னும் வீதி இருக்கிறது. இதில் 127ம் நெம்பர் வீடு. இந்த வீட்டைச் சுற்றிப் பெரிய காம்பவுண்ட் சுவர்கள் எழுப்பப் பட்டிருக்கின்றன. இந்தச் சுவர்களுக்கு நீல வர்ணம் பூசப் பட்டிருக்கிறது. இந்தக் காம்பவுண்டின் நுழை வாயிலுக்கு முன் இரண்டு போலீஸ்காரர் சதா பாரா கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த வீட்டிற்குள் இருக்கும் மனிதர் அரசாங்க விருந்தினராக இருக்கிருர். இதனுல் இவரைப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு போலீஸாரைச் சேர்ந்ததாயிருக்கிறது. காவலிருக்கும் போலீஸார், காம்பவுண்ட் கதவு எப்பொழுதேனும் ஓசைப் பட்டால் உடனே வந்து, யார் புது ஆட்கள் வந்து விட்டனர் என்று ஆத்திரத்தோடு பார்க்கிருர்கள். இவர்கள் திருப்தியடைந்தால், புதிய மனிதனை உள்ளே செல்ல விடுகிருர்கள். உள் பக்கம் எப்பொழுதும் ஒருவன் உஷாராகக் காத்துக் கொண்டிருக்கிருன். இவன், புதிதாக வந்தவரைக் கைலாகு கொடுத்து அழைத்துப் போகிருன். உடனே காம்பவுண்டு கதவும் மூடிக் கொண்டு விடுகிறது.

இங்ஙனம் உள்ளே செல்ல அநுமதிக்கப் படுகிறவர்கள் அநேகமாக பத்திரிகை நிருபர்களாக இருக்கிருர்கள். யாரைக்காண? உள்ளே இருக்கிறவர் லியோன் ட்ரோட்ஸ்கி என்பது இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையா?

லியோன் ட்ரோட்ஸ்கிக்கு இரண்டு அந்தரங்கக் காரியதரிசிகள் இருக்கிருர்கள். இருவரும் அமெரிக்கர்கள். இவர்களில் ஒருவர் ஸ்திரீ. ட்ரோட்ஸ்கி, தமது நூல்களிலிருந்து கிடைக்கிற வருமானத்தைக் கொண்டும், உலகத்தின் நாலு பக்கங்களிலும் பரவியிருக்கும் சிஷ்யர்கள் அனுப்புகிற பணத்தைக் கொண்டும் காலட்சேபம் செய்து வருகிருர். இந்த வருமானத்திலிருந்து தான் மேலே கூறப் பட்ட இரண்டு காரியதரிசிகளுக்கும் சம்பளம் கொடுக்கிருர்.

ட்ரோட்ஸ்கி இப்பொழுது தங்கியிருக்கிற வீடு, மெக்ஸிகோவின் பிரபல சித்திரக்காரரான டீகோ ரிவேரா என்பவரின் வீடு. நார்வேயிலிருந்து பிரஷ்டம் செய்யப் பட்ட ட்ரோட்ஸ்கி, மெக்ஸிகோ நகரம் வந்து சேர்ந்ததும், ரிவேரா, தற்காலிகமாகத் தமது வீட்டில் தங்கியிருக்கும்படி இவருக்குக் கூறினர்.

ட்ரோட்ஸ்கிக்கு இடங் கொடுத்தவர் என்ற காரணத்தினால், ரிவேராவுக்கு அதிக புகழ் ஏற்பட்டது. ஆனால் இரண்டு பேரும் நீண்ட நாள் ஒற்றுமையாயிருக்கமுடியவில்லை. ஏனென்றால் இருவருக்கும், தான் என்ற எண்ணம் அதிகமாக உண்டு. இதனால் ரிவேரா, தன்னுடைய வேறொரு வீட்டிற்குக் குடி போய் விட்டார். ஆனால் ட்ரோட்ஸ்கியை வேறு இடம் பார்த்துக் கொள்ளும் படி சொல்லவில்லை.

இந்தச் சமயத்தில், ட்ரோட்ஸ்கி எப்படி மெக்ஸிகோவுக்கு வந்து சேர்ந்தார் என்பதையும் நாம் தெரிந்து கொண்டு விட வேண்டியது அவசியமாகும். சோவியத் அரசாங்கத்தை மெக்ஸிகோ அங்கீகரித்துக் கொண்டு விட்ட சமயத்தில், ஸ்டாலினுக்கும் மெக்ஸிகோ குடியரசின் தலைவரான கார்டெனாஸுக்கும் சிறிது மனஸ்தாபம் ஏற்பட்டது. இந்த அங்கீகாரத்திற்கு ஏன் இவ்வளவு தாமதம் என்றும், இதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் கார்டெனாஸை, ஸ்டாலின் கேட்டார். இது கார்டெனாஸுக்குப் பிடிக்கவில்லை. ஸ்டாலின் மீது பழி தீர்த்துக் கொள்ள விரும்பினார். இதற்காக ஸ்டாலினுடைய வைரியாகிய ட்ரோட்ஸ்கிக்குத் தமது நாட்டிலே இடங்கொடுத்தார். இதற்கு முன் கார்டெனாஸுக்கும் ட்ரோட்ஸ்கிக்கும் எவ்விதப் பழக்கமுமில்லை.

ட்ரோட்ஸ்கி இப்பொழுது அந்நிய நாட்டுப் பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேச வேண்டுமென்று ஆவலுள்ளவராயிருக்கிறார். ஏனென்றால் இவரைப் பற்றிப் பல பொய் வதந்திகள் உண்டாகின்றன. இவற்றினின்று தம்மைப்பாது காப்புச்செய்து கொள்ள இவருக்கு வேறு வழிகளில்லை. எனவே இவர்கள் மூலமாகத் தம் கருத்துக்களை வெளிப்படுத்தி அவை உலகத்தில் பரவ வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் இவர் கூறியவற்றை, எந்தப் பத்திரிகை நிருபரேனும், தங் கொள்கைப் படியோ பத்திரிகைக் கொள்கைப் படியோ திரித்துக் கூறி விட்டால், அந்தப் பத்திரிகை நிருபருக்கு இரண்டாவது முறை பேட்டியளிக்க இவர் மறுத்து விடுகிறார்.

ட்ரோட்ஸ்கி, மெக்ஸிகோவைத், தமது வாச ஸ்தலமாக ஏற்றுக் கொண்ட பிறகு, எல்லாராலும் பேசப்படுகிற ஒரு நபராக இருக்கிறார். ஏதேனும் முரண் பட்ட வாதமாக யாராவது சொன்னால், 'இஃதென்ன, ட்ரோட்ஸ்கி வாதமோ?' என்பார்கள். இத்தகைய ட்ரோட்ஸ்கி யார்?

மேலே சொன்ன காரியதரிசிகளில் ஒருவர் நம்மை, வீட்டினுள் இருக்கும் பெரிய ஹாலுக்கு அழைத்துக் கொண்டு போகிறார். எதிர்ப்புறமுள்ள ஒரு கதவு திறக்கிறது. ட்ரோட்ஸ்கி உயர்ந்த வடிவம்; நரைத்த மயிர்; கீழும் மேலும் பார்க்கிற கண்கள்; முதுகைக் கொஞ்சம் முன் பக்கமாக வளைத்துக் கொண்டு நம்மைப் பார்க்கிறார். பிறகு, நம்மோடு கைகுலுக்கி விட்டு உட்காருகிறார்; நம்மையும் உட்காரச் சொல்கிறார்.

இவரோடு சம்பாஷிக்கிற போது நமக்கு ஐந்து விஷயங்கள் நன்றாகத் தெரிகின்றன. முதலாவது, இவர் தமது நிர்க்கதியான நிலைமையை உணர்ந்திருக்கிறார் என்பது. இரண்டாவது தம்மைப்பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது. மூன்றாவது உண்மையாளர் என்பது.

நான்காவது அநுபவத்திற்கொவ்வாத விஷயங்களைச் சொல்வதிலே திறமையுடையவர் என்பது. ஐந்தாவது இவர் மனம் எப்பொழுதும் குழம்பிக் கொண்டிருக்கிறது என்பது. மேஜையின் மீது இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு, இவர் பேசுகிற தொனியிலேயே, தான் எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்கப்படுவதாகவும், ஆனால் அவைகளினின்று தம்மைத் தடுத்துக்கொள்ள எவ்வித வசதிகளும் இல்லாமல் செய்யப்பட்டிருப்பதாகவும் இவர் உணர்கிறார் என்பது நன்கு தெரிகிறது. தவிர, தம்முடைய போராட்டம் ஓய்ந்த நிலைமைக்கு வந்துவிட்ட தென்பதையும் இவர் அதிகமாக உணர்கிறார் என்றுந்தெரிகிறது.

ட்ரோட்ஸ்கிக்கு சர்வாதிகார மனப்பான்மை உண்டென்றும், பிறரை அடக்கி யாள்கிற சுபாவந்தான் இவரிடம் முன்னணியில் வந்து நிற்கிறதென்றும் பொதுவாக எண்ணப்படுகிறது. ஆனால் இவரை நேரில் சந்தித்துப் பேசினால் இந்த எண்ணம் தவறானதென்று தெரியும். ஆனால் இவரைப்பிறர் தவறானபடி நினைப்பதற்குக் காரணம் என்னவென்றால் சமூக, அரசியல், பொருளாதார சம்பந்தமான பிரச்னைகளில் தாம் கொண்டுள்ள அபிப்பிராயங்களே சரியென்று இவர் சாதிப்பார். அதனோடு மற்றவர்களுடையது தவறென்றும் கருதுவார். இதுதான் இவரிடத்திலேயுள்ள கெட்ட குணம். தவிர, கார்ல் மார்க்ஸின் தத்துவங்களை உண்மையாக வியாக்கியானஞ் செய்யக் கூடியவர், தாம் ஒருவரே யென்றும், தாம் ஒருவர்தான் உண்மையான சீடரென்றும் இவர் நம்புகிறார். ஸ்டாலினும் அவருடைய சகாக்களும், முதலாளிகளோடும், முதலாளி அரசாங்கங்களோடும் சமரஸம் செய்து கொண்டு, கார்ல் மார்க்ஸை விற்று விட்டார்களென்று இவர் கருதுகிறார்.

இவரோடு சிறிது நேரம் சம்பாஷித்துப் பார்ப்போம்.

நிருபரின் கேள்வி: ஸ்பெயின் சண்டையின் விளைவு என்னாகுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ட்ரோட்ஸ்கியின் பதில்: இந்த உள் நாட்டுக் குழப்பத்தைப்பற்றி ஸ்பெயின் பொதுஜனங்கள் முன் போல் அவ்வளவு அக்கரை காட்டுவதில்லை. அப்படி இது நீடித்து நடக்குமானால், இரண்டு கட்சியினரும் சோர்ந்துபோய், எதைச் செய்தாலும் பாதகமில்லையென்ற ஒரு மன நிலைமைக்கு வந்துவிடுவார்கள். மேல் பதவியிலுள்ள இரண்டு கட்சி ராணுவ தளகர்த்தர்களும் சேர்ந்து, ஒரு ராணுவ முறையில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவார்கள். சமூகப்புரட்சி ஏற்படாமற் போனால், ஸ்பெயினில் பாஸிஸமோ அல்லது ராணுவ அதிகாரமோ ஏற்படுவது நிச்சயம்.

கேள்வி: கலகக்காரக் கட்சியுடன் ஜெர்மனியும் இத்தலியும் சேர்ந்திருப்பது, சட்ட ரீதியாகவோ, மானிட தர்மத்திற் கியையவோ நியாயமென்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: சட்ட ரீதியாகவோ, மானிட தர்மத்திற் கியையவோ, ஜெர்மனியும் இத்தலியும் எப்படி ஸ்பெயினில் தலையிட முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை. பாஸிஸ்ட்டுகள், இந்தக் கலகத்தில் தலையிட்டதற்குக் காரணம், கிரேட் பிரிட்டனுடைய நம்பிக்கைத் துரோகமும், பிரான்ஸின் கோழைத்தனமான அர



லியோன் ட்ரோட்ஸ்கி

பிறப்பு: 1879ம் வருஷம் அக்டோபர் மாதம்.

இவர் 1896ம் வருஷம் அபேத வாதியானார். 1898ம் வருஷம் கைதி செய்யப்பட்டார். பின்னர் 1900ம் வருஷம் சைபீரியாவுக்குத் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டார். அப்பொழுது சிறையிலே இருந்த ல்வோவ்னா என்பவளை விவாகஞ் செய்து கொண்டார். 1902ம் வருஷம் சிறையிலிருந்து தப்பித்து லண்டனுக்குச் சென்று லெனினுடைய நட்பைப் பெற்று அபேதவாதப் பிரசாரஞ் செய்தார். இதன் பிறகு இவர் ருஷ்யாவுக்கு வந்ததும், கைதி செய்யப் பட்டதும், தேசப் பிரஷ்டம் செய்யப் பட்டதும் பலமுறை. கடைசி முறையாக 1929ம் வருஷம் ருஷ்யாவிலிருந்து தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டார். பின்னர் கான்ஸ்டாண்டிநோபிளிலும், ஸ்பெயினிலும், ஸ்வீடன் முதலிய நாடுகளிலும் வசித்துக் கடைசியாக இப்பொழுது மெக்ஸிகோவில் வசிக்கிறார்.

சியனும், லண்டனையும் பாரிஸையும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற ஸ்டாலினின் அடிமைப் புத்தியுமே யாகும். ஜனநாயக சக்திகளெல்லாம் ஒன்றுசேர்ந்துபாஸிஸத்தை எதிர்க்கப் போகின்றன என்றெழுந்த கூக்குர லெல்லாம் வெறும் சொல்லடுக்குகள் என்று ஜெர்மானிய அரசாங்கமும் இத்தாலிய அரசாங்கமும் நன்கு தெரிந்து கொண்டு விட்டன. உண்மையில் இந்தப் போராட்டம் எதற்காக நடைபெறுகிறதென்றால், மத்திய தரைக் கடலிலேயுள்ள சில முக்கியமான இடங்களைக் கைப் பற்றிக் கொள்வதற்கும், ஸ்பெயினிலுள்ள மூலப் பொருள்களைச் சுரண்டுவதற்குமேயாகும்.

கேள்வி: ஸ்பெயின் அரசாங்கப் படைகளோடு, பிரான்ஸோ, கிரேட் பிரிட்டனோ, ருஷ்யாவோ சேர்வது சரியென்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: கலகப் படைகளுக்கு ஜெர்மனியும் இத்தலியும் உதவி செய்வதற்கு என்ன நியாயங் கூறப் படுகிறதோ அதை விட அதிகமான நியாயத்தை, கிரேட்பிரிட்டன் முதலிய வல்லரசுகள் அரசாங்கப் படைகளுக்கு உதவி செய்வதற்குக் கூறலாம். ஆனால் இவை ஏதோ தர்ம நியாயத்திற்காக உதவி செய்ய வில்லை. கிரேட் பிரிட்டனிலும் பிரான்சிலும் உள்ள மத்திய வகுப்பாருடைய ஆதரவு கிடைக்குமென்பதற்காகத்தான், சோவியத் அரசாங்கம் ஸ்பெயினுக்கு உதவி செய்கிறது. புரட்சி செய்கிற தொழிலாளர்களையும் குடியானவர்களையும் போராடித் தொலைக்க வேண்டுமென்ற நிபந்தனையை ஸ்பெயின் அரசாங்கத்திடமிருந்து வாங்கிக்கொண்டுதான், சோவியத் அரசாங்கம் உதவி செய்ய முன் வந்தது. டுர்ருட்டி, ஆண்ட்ரெஸ் நென் முதலிய புரட்சித் தலைவர்களெல்லாரும் கொலை செய்யப் பட்டது ஸ்டாலினுடைய உத்தரவின் பேரில்தான்.

கேள்வி: ஜெர்மனியிலும் இத்தலியிலும் பாசிஸ்ட் ஆட்சி நீடித்து நிலைக்குமென்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: மேற்படி இரண்டு நாடுகளிலும் சமுதாய முரண்பாடுகள் பல இருந்தன. இவை ஓர் உச்ச நிலைக்கு வந்த சமயத்தில்தான் பாசிஸ்ட் ஆட்சி தோன்றியது. இது தோன்றி, மேற்படி முரண்பாடுகளை அடக்கியது; ஆனால் அழிக்க வில்லை. என்றைக்கிருந்தாலும் இந்த முரண்பாடுகள் வெளிக்கிளம்பியே தீர வேண்டும். தற்போது ருஷ்யா அநுஷ்டித்துவருகிற கொள்கை, பாசிஸத்துக்குப் பெரிய உதவியாயிருக்கிறது. தொழிலாளர் தலைவர்களைச் சுயமாக நினைக்க வொட்டாதபடி தற்போதைய சோவியத் அரசாங்கம் செய்திருக்கிறது. மற்றொரு உலக யுத்தம் வருமானால், ஆரம்பத்தில் பாசிஸ்ட் அரசாங்கங்கள், வெற்றியடைவது போலவே இருக்கும். ஆனால் ஜெர்மனியிலும் இத்தலியிலும் அமுந்திக் கிடக்கிற சமுதாய முரண்பாடுகள் அப்பொழுது தலை தூக்கத் தொடங்கும். ஏனென்றால் இந்த இரண்டு நாடுகளிலும், பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களும், மற்ற உணவுப் பொருள்களும் அதிகமில்லை. யுத்தத்தினால் அநேக அரசாங்கங்கள் தலை கவிழ்ந்து போகும். ஆனால் முதல் பலியாக முஸோலினியினுடைய ஆட்சியும், ஹிட்லருடைய ஆட்சியுமாக

இருக்கும். இதை உறுதியாகக் கூற லாம். இவர்களுடைய ஸ்தானத்தில் தொழிலாளர் ஆட்சிதான் நடைபெறும்.

கேள்வி: உலகத்திலே பொதுவாக பாசிஸம் வலுத்து வருகிறதே; அதை எதிர்க்க, உலகத்தி லுள்ள மற்றச் சக்திக ளெல்லாம் ஒன்று திரள வேண்டியது அவசியமில்லையா? அப்படி ஒன்று சேருமானால் அதில் நீங்கள் ஏன் சேர்ந்து கொள்ளக்கூடாது?

பதில்: பாசிஸத்திற்கு விரோதமாகச் சர்வதேச சக்திகளை யெல்லாம் ஒன்று திரட்ட முடியு மென்று நான் நம்பவில்லை. இத்தலி, ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய நாடுகளிலே ஏற்பட்ட அநுபவம், ஜனநாயகத்திற்கு, பாசிஸத்தை எதிர்த்துப் போராடும் சக்தியில்லை யென்பதை ருஜுப்பிக்கிறது.

கிராமவாசிகளையும் நகரத் தொழிலாளர்களையும் ஒன்று திரட்டி, புரட்சிகரமான ஒரு திட்டத்தின் மீதுதான் பாசிஸத்தோடு போராட முடியும். பாசிஸத்திற்கு விரோதமாக நாங்கள் நிற்கிறோம் என்று சொல்லிவிடுவது சுலபந்தான். ஆனால் இதனாலேயே தொழிலாளிக்கும் விவசாயிக்கும் நன்மை யேதும் இல்லையே. தந்திரமாகப் பேசிக் காலங்கழிக்கிற பேர்வழிகளுக்கும், பத்திரிகையைப் படித்து அரசியல் சிக்கல்களையோ, பொருளாதாரப் பிரச்னைகளையோ தீர்க்கிற பெரிய மனிதர்களுக்கும் இப்படிச் சொல்வதுதான் சுலபமான வழி. உண்மையில், தொழிலாளர்களால் தான் பாசிஸத்தை ஒழிக்க முடியும்.

கேள்வி: பாசிஸத்திற்கு விரோதமாக ருஷ்யா கிளம்பி, ஜெர்மனியோடும் இத்தலியோடும் போர் தொடுக்குமானால், அந்தப் போராட்டத்திலே நீங்கள் கலந்து கொண்டு ஸ்டாலினுக்கு உதவி செய்வீர்களா?

பதில்: பாசிஸ்ட் அரசாங்கத்தோடு சோவியத் அரசாங்கம் போர் தொடுக்குமானால், நானும் என் சகாக்களும் சோவியத் அரசாங்கத்திற்குப் பின் பலமாக இருப்போம். ஸ்டாலினுடைய சர்வாதிகார ஆட்சியை நாங்கள் பொருட்படுத்த மாட்டோம்.

கேள்வி: உங்களுக்கும் ஸ்டாலினுக்கும் சமரஸம் ஏற்படுமா? அல்லது அது முடியாத காரியந்தானா?

பதில்: சுயேச்சாதிகாரி களுக்கும் அதிகார மோகத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் ஸ்டாலின் தலைவர். இதனால் இவர் ஒரு பிற்போக்காளராகவே இருக்க முடியும். இப்படிப்பட்டவருடைய அரசியலுடன் நான் எப்படி சமரஸம் செய்து கொள்ள முடியும்?

கேள்வி: ருஷ்யாவுக்குத் திரும்பிச் செல்ல அநுமதிக்கப்பட்டு போதிய அதிகாரமும் உங்களுக்குக் கொடுக்கப் பட்டால் நீங்கள் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்வீர்கள்?

பதில்: இந்த என்னைப் பொறுத்த விஷயமல்ல; ருஷ்யாவிலுள்ள தொழிலாளர்கள் எந்த விதமான சீர்திருத்தத்தை எதிர் பார்க்கிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. தற்போதைய சர்வாதிகார ஆட்சி அங்கிருந்து ஒழிந்த பிறகு, அவர்கள் தங்களுடைய தேவைகளை நன்றாக உணர்ந்து கொள்ளப் போகிறார்கள். முக்கியமாக வேண்டப்படும் சீர்திருத்தம் என்னவென்றால், அரசாங்க முறையில் ஜனநாயக முறையைப் புகுத்துதல்; எதிர்க் கட்சிகளுக்குச் சட்ட பூர்வ

மான ஒரு ஸ்தானத்தை அளித்தல்; அரசாங்க நிருவாகத்தை நடத்தும் உத்தியோகஸ்தர்கள் பொது ஜனங்களால் தெரிந் தெடுக்கப்பட வேண்டும்; பொது ஜனங்கள் நேரடியாகக் கலந்து கொள்கிற முறையில் பொருளாதாரத்திட்டங்களை வகுத்தல்; சமூகத்தில் எவ்வித ஏற்றத் தாழ்வுகளும் இல்லாமற் செய்து விடுதல்; சோவியத் அரசாங்கத்திலே யுள்ள பட்டம் பதவி முதலிய அனைத்தையும் ரத்து செய்தல்; சோவியத்தின் அந்நிய நாட்டுக் கொள்கையை, சர்வதேச நிலைமைக்குத் தக்கபடி மாற்றியமைத்தல் முதலியன. மற்றொரு முக்கியமான விஷயம் சமீபத்திலே நடைபெற்ற வழக்குகளைப் பற்றிப் புனர் விசாரணை நடத்துதல். இது மிகவும் அவசியமாகும்.

கேள்வி: ருஷ்யாவுக்குத் திரும்பிச் செல்ல உங்களுக்கு விருப்பமா?

பதில்: எல்லாம் அரசியல் நிலைமையைப் பொறுத்திருக்கிறது. ருஷ்யாவிலுள்ள தொழிலாளர்கள் சீக்கிரத்தில் இப்பொழுதுள்ள சர்வாதிகாரத்தை ஒழித்து விடுவார்களென்று நான் எதிர்பார்க்கிறேன். அத்தகைய போராட்டத்தில் கலந்து கொள்ள நான் தயாரா யிருக்கிறேன்.

நான் ஸ்பெயின் ஜனங்களின் விடுதலைப்போராட்டத்தில் கலந்து கொள்ளவும் தயாரா யிருக்கிறேன். இப்பொழுதுள்ள நெக்ரின் அரசாங்கத்தின் துரோகத்தை உணர்ந்து, ஸ்பெயினிலுள்ள குடியானவர்களும் விவசாயிகளும் புரட்சி செய்வார்களானால், அவர்களுக்கு உதவி செய்ய நான் தயார். அவர்களுக்குத் தலைமை பூண்டு நடத்துமாறு என்னை அவர்கள் அழைத்தால், நான் நாளையே ஸ்பெயினுக்குப் புறப்படச் சித்தமா யிருக்கிறேன்.

வருமானமுள்ள தொழில் எது?

உலகத்திலே அதிகமான வருமானத்தைத் தரக் கூடிய தொழில் எது என்பதைப் பற்றி ஒருவர் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கிறார். இது சராசரி கணக்கு. ஒருவருக்குக் கூடவும் வரலாம்; ஒருவருக்குக் குறைவாகவும் வரலாம். ஆனால் ஒருவருடைய ஆயுட் காலத்தில் எவ்வளவு வருமானம் சராசரி கிடைக்கிற தென்பதையே வரிசைக் கிரமமாக இந்தக் கணக்கு காட்டுகிறது.

பெயர்	ஆயுட் காலசராசரி வருமானம் ரூபாய்
1. வக்கீல்கள், டாக்டர்கள்	 351,000
2. பல் வைத்தியர்கள், இஞ்சினீர்கள் கட்டிடத்திற்குப் பிளான் போட்டுக் கொடுப்போர்	 324,000
3. காலேஜ் போதகாசிரியர்கள்	 222,000
4. சமூகத் தொண்டர்	 153,000
5. அரசாங்க மந்திரிகள்	 138,000
6. பத்திரிகாசிரியர்கள்	 132,000
7. தொழிலாளர்	 36,000

ஐந்து மலர்கள்

—வித்வான் எஸ். உமைதாணுப் பிள்ளை

(ஓர் ஆங்கிலப் பாடலைத் தழுவி யெழுதப் பட்டது.)

நந்த வனங்கள் சூழ்ந்த வொரு
நல்ல பொய்கைக் கரையடைந்தேன்;
அந்த விடத்தில் ஒரு ரோஜா
அன்பா யென்னை அருகழைத்தே,
'அன்பை யுலகிற் காட்டுதற்காய்
ஆண்டவன் என்னைப்
[படைத்திட்டான்'
என்ற மாற்றம் தனைக் கூறி
என்னை மகிழச் செய்ததடா! 1.

அந்தச் செடியி னருகினிலே
ஆடு முல்லை உடனெழுந்து;
சிந்தை முறுவல் செய்தென்னை
'வாராய் நண்ப' என் றழைத்து,
'சிந்தும் முறுவல் மொழிகளை யான்
தினமும் நண்பர்க் கோதிடவே
இந்த உலகில் எம்பெரு மான்
என்னைப் படைத்தா' னென்றதடா! 2.

அந்த வேளை மல்லிகையும்
'ஐயா! வாரும்' எனவழைத்து
கந்தம் கம் கம் மென வீசிக்
களிப்பை ஊட்டி எனை நோக்கி
'இன்பம் பயக்கும் நறுமணத்தை
என்றும் நல்கிக் களிப்பூட்ட
அன்பா யிறையு மெனைப் படைத்தான்'
அறிவாய் நண்ப' என்றதடா! 3.

அந்த மொழியைக் கேட்ட பின்னர்
அழகார் பொய்கை தனை நோக்கச்
சிந்தை யென்னை யிழுக்கையிலே
சிவந்த ஆம்பல் எனையழைத்து,
'வந்த வெற்றிக் கொடியதனை
மகிழ்ந்திவ் வுலகிற் காட்டிடவே
இந்த உலகில் இறையவ னும்
என்னைப்படைத்தா' னென்றதடா 4.

அந்த வாம்பலி னருகிருந்த
அழகிய தாமரை யெனைப் பார்த்தே
'இந்த உலகிற் கமைதியினை
இனிதா யென்று மெடுத்துரைக்கப்
பந்த மறுக்கும் பரந்தாமன்
பாரி லென்னைப் படைத்திட் டான்
இந்த மொழியை யெந் நாளும்
இதயங் கொள்வாய்' என்றதடா! 5.

புரட்சி மனப்பான்மை—ஒரு சிறு கதை

—"புதுமைப்பித்தன்"

அன்று என் நண்பரின் பத்திரிகை ஆபீஸிற்குப் போயிருந்தேன். அங்கே ஓர் புரட்சிக்காரர்,—அசல், 'அப்பட மானவர்' கொஞ்சம்கூட கலப்புக் கிடையாது—நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் மாஜி—ஏதோ ஓர்—சதிக் கைதி.

என் நண்பர் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். 'நம் போன்றவர்கள் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டியவராக்கும்' என்றார் என் நண்பர். புரட்சிக்காரர், 'ஓய்—உமக்கு—வெள்ளைக்காரனைச் சுடத் தெரியுமாங்காணும்' என்ற ஒரு பார்வை பார்த்தார்.

சரி, இதுதான் ஸ்ரீமான் புரட்சியா என்று நிர்ணயித்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். புரட்சிக்காரர் அணிய வேண்டிய அசல் விதேசிச் சரக்கு, யாரையும் எடுத்தெறிந்து பேசும் தன்மை........சர்வ லக்ஷணமும் பொருந்தியிருந்தது. சாட்சாத் புரட்சிக்காரர் தரிசனத்திற்காக, என் முன்னோர்கள் வழிபட்டு வந்த கடவுளை நான் கும்பிட்டுக் கொண்டேன்.

பாட்லிவாலா, பண்டார சன்னிதி, கங்காரு, 1939 மாடல் மோட்டார் கார், இரட்டைப் பெண்கள், ஸினிமா ஸ்டார் காந்தாமணி பாய், உயர்திரு தேசபக்தர், இத்யாதி இத்யாதி ரகத்தைப் பார்க்க மனுஷருக்கு சுபாவமாக உள்ள ஆசையை என் விஷயத்தில் திருப்தி செய்து வைத்த அந்த ஸ்ரீமான் இன்குவிலாப் ஜிந்தபாத்துக்கு என் மனமார்ந்த வந்தனம்.

என் நண்பரும் சிறை சென்ற தேசபக்தர். கார்ல்மார்க்ஸ் பாராயணமும் கொஞ்சம் உண்டு. சுருங்கச் சொல்லுகிறேனே,—வெகு தீவிரம்.

குசலப் பிரச்னங்களுடன், பரஸ்பர போலீஸ் காவல், சிறையில் கசையடி, இடைமறிக்கப்பட்ட கடிதங்கள், சமீபத்தில்வெளியான விக்டர் கொலான்ஸின் தீவிரவாதகிரந்தம்—சுங்க அதிகாரிகள் கண்ணில் பிஸ்கோத்து டின் மாதிரி இந்தியாவுக்குள் நுழைந்தது—எல்லாம் சேர்த்து, அந்தச் சமயத்தில் ஸ்ரீமான் எழுத்தாளரைச் சென்ற வருஷத்துப் பஞ்சாங்கமாக, அதாவது சமயா சமயங்களில் திருப்பிப் பார்க்க வேண்டிய விஷயமாக ஆக்கியது.

வேண்டாத இடங்களில், வெற்றிலை பாக்கு+புகையிலை என்ற அழுத்தமான வாய்ப் பூட்டை,—(144 உத்திரவை விட கடுமையானது)—பிரயோகித்துக் கொள்ள எனக்குத் தெரியும் என்பது அவருக்குத் தெரியாது........

எனது நண்பரை இப்படிப் புரட்சி சக்தி அமுக்கி விடும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. லாட்டியடி முதல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கோபம்வரை, தாலுகா டிவிஷன்களில் ஏற்றுத் தாங்கியவர். அவர் தாலுகா பிராந்தியம் என்று நான் விசேஷமாகக் குறிப்பிடுவதின் காரணம், அங்குள்ள மலையாளத்து ரிஸர்வ் போலீஸ்காரர்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் சொந்த பாங்கியில் இருக்கும் கரண்ட்—டிபாஸிட்டாகக் கருதி அதில் அத்துமீறித் தலையிடுகிறவர்களை

தங்கள் சொந்தக் கோபா வேசத்திற்கு ஆளாக்குகின்றனர். பட்டணத்துப் போலீஸ்காரன் என்றால் கொஞ்சம் தாராள புத்தியுண்டு. இப்படி எல்லாம் அனுபவமுள்ள ஒரு மனிதன், சர்வ சூன்யமாகத் தன்னை யிகழ்ந்து கொள்ளுவார் என்று நான் நினைக்கவே யில்லை.

வெற்றிலையின் நரம்பைக் கீறி எறிந்தேன். அது 'பிறைமி' (காரமில்லாத மெட்ராஸ்) வெற்றிலை. வெறுப்புடன் சுண்ணாம்பைத் தடவினேன். சுவரில் சுரண்டி எடுத்தது போல, உருண்டு உருண்டு வெற்றிலையை ஓட்டை போட்டது. இந்த சம்பிரமத்தில் களிப்பாக்கு. அதற்கு மேலாக முகப் பவுடர், செண்டு இவைகளில் நம்பிக்கை வைத்து ஆட்களை மயக்கிவரும் குரூபியான விபசாரிக்கு உதாரணம் போன்ற புகையிலை.

இவை போதாதென்பது போல, 'ஸ்ரீமான் வெங்குராவைத்தெரியுமோ, கவர்னர் ஸ்பெஷல் வெடி குண்டு வழக்குக் கைதி; பெல்லாரி ஜெயிலிலே, தனி வார்டில் போட்டு அடித்தார்களே. ஓகோ, அப்பொழுது உங்களை திருச்சி ஜெயிலுக்கு மாற்றி விட்டார்களோ,—வீரனா வீரன்தான் சார்.— என்ன வேலைகளெல்லாம் பண்ணியிருக்கிறான் தெரியுமோ........

'அவரைப் பார்க்க உங்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்குமே? பாவிப் பயல்கள் என்னை மாத்திப் போட்டானே!' என்று பரதவித்தார் புரட்சி மோஹன லாகிரியில் சிக்கிய என் நண்பர்........

'மூவ்மண்ட் டயம்லே என்னசெய்தார் தெரியுமா.......செப்டம்பர் நடு ராத்திரி ரூம்லே டார்ச் கூட இல்லை,........வெளியிலே சடபுட என்று கதவு தட்ற சப்தம் கேட்டது,— என்ன செய்தார் தெரியுமா?' என்று ஒரு ஆணித்தரமான கேள்வி போட்டார்........

'தெரியாது: அதற்கப்புறம்?' என்றேன் நான்.

அரிச்சந்திரன் மயான காண்டத்தில் ஊன்றிக்கொண்டு நிற்கவேண்டிய தடி சடக்கென்று ஒடிந்து விட்டால் எப்படியிருக்கும்? 'பின்—அரிச்சந்திரன்' அந்த சமயத்தில் சோகம் குலைய மிருதங்கக்காரனைப் பார்த்து உறுமுவது போலிருந்தது என் நண்பரின் பார்வை.

ஸ்ரீமான் புரட்சியின் ரசனை கொஞ்சம் கட்டை போலும்: அவர் அசல் கோதுமை சப்பாத்திதான் சார், பஞ்சாபிக்காரன் மாதிரி சாப்பிடுவார்' என்றார், பாவம் ஸ்ரீமான் புரட்சி.

சரி; நேரம் சரியில்லை என்று நினைத்துக் கொண்டு, 'உம்மிடம் ரெண்டு ரூபாய் கடன் வாங்கவேண்டும் என்று வந்தேன்; நாளைக்கும் வருவேன்; உம்மால் என்னை ஏமாற்ற முடியாது' என்று சொல்லிக் கொண்டு வெளியேறினேன்...............

உப்பங் காற்று மட்டிலும் வீசும் சமுத்திரக் கரைக்குப் போகும் பொழுதுதான் விஷமத்தனமான என் கசப்பு என்னை விட்டு அகன்றது.......

அப்பொழுது அங்கு வந்தான் ஸ்ரீ பானு, மெஸர்ஸ் பீபரிவாலா ஹுக்கும் சந்த் அண்ட் சன்ஸ் கம்பெனியின் பல ஜோலி குமாஸ்தா. கம்பெனியில் காப்பிக்கொட்டை கேஸ்களுக்கு ஆணி அடித்து விலாசம் ஒட்டுவது முதல், வரவு செலவு கணக்கு தயாரிப்பது, சேட்ஜி மகள் ஸோனியாவுக்கு வர்

ணப் பென்ஸில் வாங்கிக் கொடுப்பது வரை உள்ள வேலைகள் எல்லா வற்றையும் விரக்தியுடன் செய்யும் அபே தவாதி அவன்.

'என்ன சார் இப்படி உக்காந்திருககேள்! ஹி! ஹி! போனவாரம் நீங்க எழுதின கதை ரொம்ப ஜோர் சார்,–' வாழ்க்கையின் நுணுக்கங்களே, அப்படியே எழுத் தோவியமா பண்ணியிருக்கேள் சார் ஹி–ஹி!' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். அவன் அடிக்கடி என் கதைகளைப் படிப்பான்; அதைவிட என் விமர்சனங்களைப் படிப்பான். முக்கால்வாசி என் கைச் சரக்கே என் தலைமேல் தூக்கிப் போட்டு உடைக்கப்படும்.

என்ன இருந்தாலும் புகழல்லவா சார்? யாருக்குத்தான் இழக்க மனசு வரும். வர்ணக் கடுதாசி ஒட்டிய ஜப்பான் விளக்கு மாதிரியான சுடாத புகழ் வெளிச்சத்தில் உடம்பைக் கொஞ்சம் காய வைத்துக் கொண்டேன்.

'...............'என்ற பத்திரிகையைக் குறிப்பிட்டு 'போன வருஷம் மே மாச பிரதியைப் பார்த்தீர்களா?' என்றான்.

'எதற்கு?' என்றேன்.

'அதிலே ஓர் ஆழ்ந்த உண்மை இருக்கு; பார்த்தேன்சார். நேற்றுஇப்படி மூர்மார்க்கெட்பக்கம்போனேன். இதை அடுக்கி யிருந்தான். அட்டை படம் எல்லாம் கிழிஞ்சு போச்சு; காலணுவுக்கு ரெண்டுன்னான்; ஏன் சார் நமக்கு விஷயந்தானே வேணும்; அப்படியே ஒரு ரெண்டணுவுக்கு ஒரு கத்தைவாங்கினேன்.நம்மவீட்டுக்காரி இருக்காளே, அவளுக்கு காகிதக் கூடை பண்ணணுமாம்,—அப்படியே குடுத்துடுன்னு வாதாடினுள்; அதிலே ரொம்ப விஷயங்கள் இருக்கு; படிக்சுட்டுத்தான் தருவேன்னுப்டேன்; எப்பப்பாத்தாலும் இந்த தொந்திரவு தான் சார். நல்ல கோட் சார்,—மூணு வருஷந்தான் வாங்கினது; கை ஓரத்திலே தான் கொஞ்சம் கிழிசல்—அதைக் குடுத்து ஒரு கண்ணுடி ஜாடி வாங்கிப்பிட்டாள் சார்—என்ன பண்ணச் சொல்ரேள்—என்னெ?' என்று ஒரு மூச்சு பேசி முடித்தான்.

நான் எப்பொழுது ஒயப்போகிறதோ என்று கேட்டுக்கொண்டே இருந்தேன்.

'ஏன் சும்மா ஒரு மாதிரி இருக்கேள்? கொஞ்சம் வெத்திலெயே போடுங்களேன்' என்று விதேசி டப்பி நாலுக் வெற்றிலைச் செல்லத்தை என்னிடம் நீட்டிவிட்டு, நீங்கள் என்ன நினைக்கிறேள்,—எண்ணெ தேய்ச்சுக் குளிச்சால் உடம்புக்கு நல்லதா சார்?' என்றான்.

'எனக்கெப்படித் தெரியும்? நான் தேச்சுக்காமே இருந்த தில்லையே' என்றேன்.

'சும்மாத்தான் கேட்டேன். அதிலே போட்ருக்கான், எண்ணெ தேச்சுண்டா கெடுதல்னு. கெடுதல் எப்டின்னு ஜன்னி வந்துவிடுமாம் பாம்பு கீம்பு கடிச்சா. விஷத்தோட ரோஷம் (உக்கிரம்: மெட்ராஸ் வார்த்தை) ரொம்ப ஜாஸ்தியாம். இந்தக் கெடுதல்கள் எல்லாம் எதற்கு? அவன் ஒரு மருந்து சொல்ரான்; அதிலே எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லே—வெலெ ஜாஸ்தி—அது மட்டுமா (காதோடு காதாக)........... சுக ஜன்னி வந்துடுமாம்! இன்னிக்கு ஒரு காரியம் செய்ரதுன்னு தீர்மானம் பண்ணிப்புட்டேன்; இனிமே

எண்ணெயே தேச்சுக் கரதில்லென்னு; வீட்டிலே ஏக ரகளை. இன்னக்கி என்ன கிழமை தெரியுமா—புதன்! ஓரேயட்டா முடியாதின்னுப் புட்டேன். தலைலேகூட எண்ணெயைக் கொண்டு வந்துவச்சிப்புட்டா; நான் தீரமா உதறித்தள்ளிட்டு ஆபீஸுக்கு வந்துட்டேன். இன்னும் வீட்டுக்குப் போகல்லே. இப்படியே பீச்சுக்கு வந்துட்டு பூ வாங்கிக்கிண்டு போகலா முன்னு வந்தேன்.......

'ஏன் ஓய், உம்ம வீட்டு மூலக் கிரகத்து சமாசாரத்தை வெளியில் போட்டு உடைக்கிறீர்?—என்ன சமரசக் கமிட்டி ஏற்படுத்தணுமா?' என்றேன்.......

'போமையா! உங்களைப் பார்த்தும், ரொம்ப நாளாச்சே; வீட்டுக்கு வாருங்களேன் காபி சாப்பிட்டுப் போகலாம் என்று கூப்பிடலாம்னு வந்தேன்' என்றான் பானு.

'வீட்லே காபி சாப்டாதிருக்கட்டும்; என் கூட ஹோட்டல்லே காப்பி சாப்பிடுமே!' என்றேன்.

'ஹாஹாம்! வீட்லெ காப்பிபாழாப் போச்சேன்னு கத்துவா; வாருங்கள் போகலாம்!' என்றான் பானு.

'பானு நீ—பார்த் திருக்கையா?' என்றேன்.

'புரட்சிக் கைதி! அவரையா,........நான் எப்படிப் பாத்திருக்க முடியும்?'

'இல்லெ பார்க்கணும்னு ஆசையிருக்கா?'

'ஆசையா! மனசு அப்படியே துடி துடிக்கிறது; ஆமாம்; புரட்சிக்காரரா? எப்படி இருப்பார்? ரொம்ப தீவிரமாக இருப்பாரோ?'

'பார்க்கணும்னு கூட்டிண்டு போறேன்!' என்று புதிய சிஷ்யன் சேர்த்துக் கொடுக்கும் சேவையில் இறங்க முயன்றேன்.

'இல்லெ; வீட்லெ காபி ஆறிப் போயிடும்; சுருக்க போவோம் வாருங்க; இல்லாட்டா ஒரே தொல்லை தான்' என்று எட்டி நடந்தான் பானு.

இரண்டு தெய்வங்களுக்கு ஒரே சமயத்தில் சிஷ்யனாகும் திண்டாட்டத்தை பானுவுக்கு ஏற்படுத்தக் கூடாது என்ற ஜீவகாருண்ய சேவையில் ஈடுபட்டேன்.

ஹென்றிபோர்ட் என்பவர், தமது மோட்டார்கார்களை விளம்பரஞ்செய்வதற்காக, பதினைந்து லட்சம் ரூபாய் வருஷத்தில் சராசரி செலவழிக்கிறார்.

ஃ ஃ ஃ

வட துருவத்தில் ஏராளமான நிலக்கரி, தகரம், ஈயம் முதலியன இருக்கின்றன வென்றும் இவற்றை சோவியத் அரசாங்கத்தார் உபயோகப் படுத்தப் போகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றன.

ஃ ஃ ஃ

பிலிப்பைன் தீவுகள் என்று பல சிறு தீவுகளின் கூட்டத்தை அழைப்பதுண்டு. இந்தக் கூட்டத்தில் மொத்தம் 7083 தீவுகள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

ராஜா ஸர் டி. மாதவராயருடைய கொள் பேரனை டாக்டர் டி. வி. மாதவராவ் 6-6-38ல் சிம்லாவில் காலமாகிவிட்டார். இவர் தமது ஆஸ்தியில் சுமார் இரண்டு லட்சம் ரூபாயை காங்கிரஸுக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்.

லஜாரோ கார்டெனாஸ்

அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில், பிரிட்டிஷாருக்குச் சொந்தமாயிருந்த எண்ணெய்க் கிணறுகளை, அந்த நாட்டுக் குடியரசு அரசாங்கம் பறிமுதல் செய்து விட்டது உலக வியாபாரிகளிடையே ஒரு பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. அமெரிக்க ஐக்கிய மாகாண அரசாங்கங்கூட, மெக்ஸிகோவிலிருந்து வெள்ளியை வாங்க மறுத்திருக்கிறது. இந்தத் துணிச்சலான காரியத்தைச் செய்தவன், மேற்படி அரசாங்கத்தின் தலைவனான லஜாரோ கார்டெனாஸ். நானூறு வருஷ அந்நிய ஆதிக்கத்திற்குப் பிறகு, இவன் காலத்தில் இவனுடைய தலைமையில், மெக்ஸிகோ, மெக்ஸிகோ வாசிகளின் ஆதிக்கத்தில் வந்திருக்கிறது. இவனைப் பற்றி நாம் சிறிது தெரிந்து கொள்வோம்.

லஜாரோ கார்டெனாஸ்

கார்டெனாஸ், 1895ம் வருஷம் ஓர் ஏழை வலைஞர் குடும்பத்தில் பிறந்தவன். இவனுடைய தகப்பனாருக்கு எட்டுப் பிள்ளைகள். இவன்தான் மூத்தவன். இவனுடைய பதின்மூன்றாவது வயதிலேயே இவன் தகப்பனார் இறந்து விட்டார். இதனால் குடும்பபாரமனைத்தும் இவன் தலையிலேயே விழுந்தது. ஆரம்பத்தில் அச்சுத் தொழில் கற்றுக் கொண்டு, ஒரு அச்சாபீஸை ஆரம்பித்தான். இது தவிர, இவன் வசித்த நகரத்தில் உள்ள சிறைச்சாலையின் அதிகாரியாக இவனுக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. 1910ம் வருஷம், மெக்ஸிகோவில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. அது முதல் இவன் அரசியல் விவகாரங்களில் ஈடுபட ஆரம்பித்தான். 1912ம் வருஷம் நடைபெற்ற மற்றொரு புரட்சியில் இவன் நேரடியாகக் கலந்து கொண்டான். அப்படிக் கலந்து கொண்டது ஒரு வேடிக்கை. இவன் அதிகாரியாயிருந்த சிறையில் ஒரே ஒரு கைதி தான் இருந்தான். சிறையைத் திறந்து, அவனை விடுதலை செய்து அழைத்துக் கொண்டு, புரட்சிக் கூட்டத்திலேயே போய்ச் சேர்ந்து கொண்டான் இவன். பிறகு, அரசாங்கம் இவனைச் சிறையில் அடைக்கப் பகிரதப் பிரயத்தனங்கள் செய்தது. ஆனால் தப்பித்துக் கொண்டே வந்தான். மறைமுகமாகப் புரட்சி

இயக்கத்திலும் கலந்து, அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவதற்குரிய எல்லாக் காரியங்களையும் செய்துவந்தான். இது சம்பந்தமாக இவன் சுமார் நூறு யுத்தங்களில் கலந்து கொண்டிருக்கிறான். இவனுடைய போர்த் திறமையைப் பாராட்டி, இவனுடைய சொந்த மாகாணமாகிய மிக்கோவாகானுக்குக் கவர்னராகத் தெரிந்தெடுக்கப் பட்டான். இதன் பிறகு ஏற்பட்ட தொழிலாளர் அரசாங்கத்தில் யுத்த மந்திரியானான். 1934ம் வருஷத்தில் நடைபெற்ற தேர்தலில், மெக்ஸிகோ குடியரசின் தலைவனாகத் தெரிந்தெடுக்கப் பட்டான்.

குடியரசுத் தலைவனுடைய உத்தியோக காலம் ஆறு வருஷம். இதற்குள் ஆறு வருஷத் திட்டம் ஒன்று தயாரித்து அதன் மூலம், தேசத்தின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருக்கிறான்.

கார்டெனஸ் ஒல்லியாகவும் உயரமாகவும் இருப்பான். எவருடனும் கலகலத்துப் பேச மாட்டான். இவனுடைய மன உறுதிதான் இவனுக்கு இந்தப் பதவியை அளித்திருக்கிறது. எந்தக் காரியத்தையும் பொறுமையோடும் நிதானமாகவும் செய்வான். இயற்கையான வாழ்க்கை நடத்துவதிலே மிகவும் பற்றுடையவன். தினந்தோறும் காலை ஐந்து மணிக்கு எழுந்து விடுகிறான். அருகாமையிலுள்ள ஒரு குளத்திற்குச் சென்று நன்றாக ஸ்நானஞ் செய்கிறான். பின்னர், தன்னுடைய நாய்களுடன் துப்பாக்கி சகிதம் வெளியே கிளம்பி விடுகிறான். சுமார் இரண்டு மணி நேரம் வேட்டையாடி விட்டு வீடு திரும்புகிறான். கொஞ்சம் ஆகாரமருந்தி விட்டு அரசாங்க அலுவல்களைக் கவனிக்கத் தொடங்குகிறான். இந்த உத்தியோக அலுவல்களைக் கவனிக்கிற போது கொஞ்சநேரமாவது, மெக்ஸிகோ தொழிலாளர்களுடைய நலனுக்குப் பாடுபடுகிறான். மெக்ஸிகோ நகரத்தில் இரவு பத்து மணிக்குப் பிறகு யாரும் வேலை செய்யக் கூடாதென்பது இவன் உத்திரவு.

குடியரசுக்குத் தலைவர் தேர்தல் நடைபெற்ற போது, இவன் மெக்ஸிகோ முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தான். இதற்கு முன் எவரும் போகாத பல பிரதேசங்களுக்கு இவன் நடந்து சென்று, ஜனங்களுக்குத் தேர்தலின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பிரசாரஞ் செய்திருக்கிறான். திறந்த வெளியில் பல முறை படுத்துத் தூங்கியிருக்கிறான். இதனால் ஏழை ஜனங்களுக்கு இவனிடத்தில் ஒருவித விசுவாசம் ஏற்பட்டு விட்டது. தொழிலாளர்கள் இவனை ஒரு தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

அமெரிக்க அரசாங்கத்து உள்நாட்டு மந்திரியாகிய ஸ்ரீ ஹாரோல்ட் இக்கெஸ் என்பவருக்கு இப்பொழுது வயது 64. இவர் சமீபத்தில் 22 வயதுள்ள ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொண்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

அமெரிக்கர்கள், டீயை விட காபியைத்தான் அதிகமாகப் பானஞ் செய்கிறார்கள்.

ஃ ஃ ஃ

நூற்றைம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் துருக்கியில் முப்பது பேர் இருக்கின்றனர்.

பார்லிமெண்ட் நடை முறை

—மு. துரைசாமி

இந்தியாவில் அரசியல் போராட்டம் இன்னும் கட்சி முறையில் அமைய வில்லை யென்று சொல்லப் பட்டு வருகிறது. இதனால் நன்மை யுண்டா தீமை யுண்டா வென்பதைப் பற்றி நான் இங்கே பிரஸ்தாபிக்கப் போவ தில்லை. பிரிட்டிஷாருடைய அரசியல் கண் கொண்டு பார்த்தால் இதில் சிறிது உண்மை இருக்கிற தென்று ஒத்துக் கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷ் அரசியலில் அரசாங்க நிருவாகத்தை எந்தக் கட்சி ஏற்றுக் கொண்டு நடத்துகிறதோ அந்தக் கட்சிக்கு எதிர்க் கட்சி ஒன்று எப் பொழுதும் இருக்கும். அரசாங்கக் கட்சிகளுக்குள்ள எல்லா உரிமைகளும் —நிருவாக விஷயங்களைத் தவிர— இந்த எதிர்க் கட்சிக்கு உண்டு. இதற்கு 'சக்ரவர்த்தியின் எதிர்க் கட்சி' என்றே பெயர். சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியி லிருந்துதான் இந்தக் கட்சி முறை இங்கிலாந்தில் ஏற்பட்டது. அரசாங்கக் கட்சியினர் வேகமாகச் செல்கிற காலத்தில் அவர்களைச் சிறிது இழுத்துப் பிடிக்கவும், மெதுவாகச் செல்கிற காலத்தில் உற்சாகப் படுத்தவும் இந்த எதிர்க் கட்சி தேவையா யிருக்கிறது. பார்லிமெண்ட் எதிர்க் கட்சித் தலைவருக்கு மாதம் 2,500 ரூபாய் சம்பளம் உண்டு என்று சொன்னால் சர்வாதிகாரிகளின் ஆட்சி முறைக் குட்பட்ட நாடுகளிலுள்ளவர்களுக்கு அது ஆச்சரியமா யிருக்கும்.

இப்பொழுது பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில், அரசாங்கக் கட்சியினருக்கு எதிர்க் கட்சியினராக வீற்றிருப்போர் தொழிலாளர் கட்சியினர். இவர்கள் தவிர, லிபரல் கட்சியினர், சுயேச்சைத் தொழிலாளர் கட்சியினரும் உண்டு. தற்போது தொழிலாளர் கட்சியில் 160 அங்கத்தினர்களும், லிபரல் கட்சியில் 20 அங்கத்தினரும் சுயேச்சைத் தொழிற் கட்சியில் 4 பேரும் இருக்கிறார்கள். அரசாங்கக் கட்சியில் 420 பேர் இருக்கின்றனர். அதாவது அரசாங்கக் கட்சிக்கு எப்பொழுதும் 200 பேருக்கு மேல் மெஜாரிட்டி இருந்து கொண் டிருக்கும். தொழிற் கட்சிப் பிரதிநிதிகளில் முப்பது பேர், சுரங்கத் தொழிலாளரின் பிரதிநிதிகளும், ரெயில்வே குமாஸ்தாக்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும் இருக்கிறார்கள். தவிர இவர்களில் வக்கீல்கள், டாக்டர்கள், இஞ்சினீர்கள், அக்கவுண்டண்டுகள் முதலிய பல தொழில் துறையி லிருப்பவர்களும் இருக்கிறார்கள். ஸ்திரீகளில் சிலரும் இந்த எதிர்க் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள்.

தற்கால அரசியல் சம்பிரதாய மென்ன வென்றால், அரசாங்கம் கிளத்துகிற எந்த பிரச்னையையும் எதிர்ப்பதே எதிர்க்கட்சியின் வேலையாக இருக்க வேண்டுமென்பது. இரண்டாவது, தாங்கள் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொள்வதற்கு என்னென்ன உபாயங்களைக் கையாள வேண்டுமோ அவைகளை யெல்லாம் கையாள வேண்டு மென்பது. இதற்கு இரண்டு மார்க்கங்களை எதிர்க் கட்சியினர் அநுஷ்டிப்பர். ஒன்று, அரசாங்க முறைகளைக் கண்டித்துத்

தேசத்திலே பிரசாரஞ் செய்வது; இரண்டாவது பார்லிமெண்டிலே அரசாங்கக் கட்சியைக் கவிழ்க்க, ராஜதந்திரிகளால் அங்கீகரிக்கப் பட்ட முறைகள் என்னென்ன உண்டோ அவை யெல்லா வற்றையும் கையாள்வது.

எதிர்க் கட்சியினர் அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயல்வதும், அரசாங்கக் கட்சியினர் தங்கள் பதவிகளை விட்டுக் கொடாமல் இறுக்கிக் கொள்ளப் பிரயத்தனப்படுவதும் யுத்த களத்தில் இரண்டு கட்சிப் படையினரும் குறிப் பிட்டதோர் இடத்தை யடைய முயற்சி செய்வது போலிருக்கும்.

நம்பிக்கை யில்லாத் தீர்மானங்கள் கொண்டு வருதல், அரசாங்கத்தார் கொண்டுவரும் மசோதாக்களை நிராகரித்தல், கேள்விகளை எழுதியனுப்பி அவைகளுக்குப் பதில் பெறல், உப கேள்விகள் கேட்டல், சபைக்கூட்டத்தைத்தள்ளி வைக்க வேண்டுமென்று பிரேரணை கொண்டுவரல் முதலியவைகளைக் கொண்டு, அரசாங்கத்தாரை மடக்குவதே எதிர்க்கட்சியின் வேலையாக இருக்கும். சுருங்கச் சொன்னால், எதிர்க் கட்சியினர் எப்பொழுதும் அரசாங்கத்தைத் தாக்கும் நிலையிலும், அரசாங்கத்தார் தங்களைப் பாது காத்துக் கொள்ளும் நிலையிலும் இருப்பார்கள். இதனால் அரசாங்கத்தார் எப்பொழுதும் உஷாராகவே யிருக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

உபய கட்சிகளுக்கும் கொரடாக்கள் உண்டு. இவர்கள் கட்சியின் மானேஜர்கள் மாதிரி. அரசாங்கக் கட்சியின் பிரதம கொரடாவும் எதிர்க் கட்சியின் பிரதமகொரடாவும் முக்கியமான விஷயங்களைப்பற்றிக் கலந்து பேசிக்கொண்டுதான் பார்லிமெண்டரி காரியங்களை நடத்துவார்கள். இதனால், அரசாங்கக் கட்சியினர், எதிர்க் கட்சியின ரிடத்தில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்க வேண்டு மென்பது நன்கு புலனாகிறது.

கொரடா என்ற பிரயோகத்தை பார்லிமெண்டரி சம்பிரதாயமாக முதல் முதல் கொண்டு வந்தவர் எட்மண்ட் பர்க் என்பவர். 1769ம் வருஷம் காமன்ஸ் சபையில் ஒரு பலத்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது அரசாங்கத்தின் கட்சி தோல்வி யடையும் போலிருந்தது. இதற்காக மந்திரிமார்கள், தங்கள் கட்சியினரை ஒன்று திரட்டப் பலமான முயற்சிகள் செய்தார்கள். அப்பொழுது பர்க், வேடிக்கையாக 'ஆஜராகாத பார்லிமெண்டரி அங்கத்தினர்களை யெல்லாம் கொரடாவால் அடித்து அழைத்துவர அரசாங்கத்தார் தங்கள் நண்பர்களை வட இங்கிலாந்துக்கும் பாரிஸுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்' என்று கூறினர். அது முதற்கொண்டு, கொரடா ஓர் முக்கிய உத்தியோகஸ்தரானார்.

பார்லிமெண்டரி நடவடிக்கைகள் யாவற்றிற்கும் ஒருதிட்டம் தயாரித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறவர் இந்தக் கொரடா தான். எந்தெந்த பிரேரணைகளை வரிசையாகக் கொண்டு வரவேண்டும், யாரார் பேசுவது முதலியவைகளை யெல்லாம் ஏற்பாடு செய்கிறவர் இந்தக் கொரடாதான். அரசாங்கக் கட்சியிலும் இந்தக் கொரடா ஓர்முக்கியஉத்தியோகஸ்தர். இவர்அரசாங்க உத்தியோகஸ்தராக இருப்பார். இவர் அநேகமாகப் பொக்கிஷ மந்திரியின் காரியதரிசியாக இருப்பது வழக்கம். மற்ற உதவிக்கொரடாக்கள் பலர்

உண்டு. அரசாங்கக் கட்சியிலிருக்கும் உதவிக் கொரடாக்கள் லார்ட்ஸ் சபையில் அங்கத்தினர்களா யிருப்பார்கள். இவர்களில் ஒருவர் அநேகமாக அரண்மனை உத்தியோகஸ்தரா யிருக்க வேண்டுமென்பது ஒரு சம்பிரதாயம். எதிர்க் கட்சியிலிருக்கும் கொரடாக்களுக்குச் சம்பளம், கட்சி நிதியிலிருந்து கொடுக்கப் படுகிறது. இப்பொழுது தொழிற்கட்சியின் பிரதம கொரடா ஸர் சார்லஸ் எட்வர்ட் என்பவர். லிபரல் கட்சியின் பிரதம கொரடா ஸர் பெர்ஸி ஹாரிஸ் என்பவர். இந்தக் கொரடாக்களினுடைய முக்கியமான வேலை, கட்சியின் கட்டுப்பாடு குலையாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இந்தக் கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லாவிட்டால், எந்தக் கட்சியும் சீக்கிரத்தில் சீர்குலைந்து போகும். ஆகையால் ஓர் அங்கத்தினர் தம்மிஷ்டப்படி, பார்லிமெண்டு கூட்டங்களுக்கு வரவோ போகவோ முடியாது; கட்சி பலம் குறையாது என்று தெரிந்தால், கொரடா எந்த அங்கத்தினர்க்கும் வெளியேசெல்ல அநுமதிகொடுப்பார். ஆனால் பொதுவாக அங்கத்தினர்கள் வெளியே செல்வதாயிருந்தால் கொரடாவின் அநுமதி பெற்றுத் தான் செல்லவேண்டும். ஆனால் இப்படிச் செல்கிறவர், தம்முடன் எதிர்க் கட்சி அங்கத்தினர் ஒருவரையும்அழைத்துச் செல்வது ஒரு சம்பிரதாயம். ஏனென்றால் அப்பொழுதுதான் கட்சி பலம் சமமாக இருந்து கொண்டிருக்கும்.

சில சமயங்களில் எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானங் கொண்டுவருவார்கள். அப்பொழுது கொரடாக்கள் கூட்டத்திற்கு ஆஜராயில்லாத அங்கத்தினர்களுக் கெல்லாம் அவசரக் கடிதங்கள் அனுப்பி வரவழைப்பர். இந்த அவசரக் கடிதங்கள் அச்சிடப் பட்டிருக்கும். அதன் கீழ் மூன்று கோடுகள் இழுக்கப் பட்டிருக்கும். அதாவது அங்கத்தினர் ஆஜராக வேண்டியது அவ்வளவு முக்கியம் என்பதைக் காண்பிப்பதற்காக. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எப்பொழுது ஓட்டுக்கு வரலாம் என்ற உத்தேச காலமும் இதில் குறிப்பிடப் பட்டிருக்கும். இந்த மாதிரியான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிற போது, பார்லிமெண்டின் பெரும்பாலான அங்கத்தினர்கள் ஆஜராயிருப்பார்கள். மொத்த அங்கத்தினர்களாகிய 615 பேரும் ஆஜராயில்லா விட்டாலும் குறைந்தது 500 பேராவது ஆஜராயிருப்பார்கள். இந்தத் தீர்மானம் நிறைவேறி விட்டால், அரசாங்கக் கட்சியினர், உடனே ராஜீநாமா செய்துவிடுவார்கள். அதாவது தேசத்தாருடைய நம்பிக்கையை மட்டுமல்ல, தங்கள் கட்சியினருடைய நம்பிக்கையையும் அரசாங்கத்தார் இழந்து விட்டனர் என்று இதற்கு அர்த்தம்.

பார்லிமெண்டின் ஒவ்வொரு செஷனும், அரசர் பெருமானுடைய பேச்சுடன் தொடங்கப் பெறும். இதில் அடுத்த பன்னிரண்டு மாதங்களில் அரசாங்கத்தார் சட்ட சம்பந்தமாக என்னென்ன திட்டங்களைக் கிளத்தப் போகின்றனர் என்பது சுருக்கமாகக் குறிக்கப் பட்டிருக்கும். இந்தப் பேச்சைப் பற்றி ஒரு வாரம் வரை வாதம் நடைபெறும். இதன் மீது எதிர்க் கட்சியினர் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினால் அரசாங்கத்தார் உடனே ராஜீநாமா செய்து விடுவார்கள்.

அரசாங்கத்தார் முக்கியமான மசோதாக்களைக் கொண்டு வந்தால்

எதிர்க் கட்சியினர் அதைப் பலவகையிலும் எதிர்ப்பர். ஒன்று அதனை அடியோடு நிராகரிக்கவேண்டுமென்று பிரேரிப்பார்கள். அல்லது இன்னும் ஆறு மாதங்கழித்து இதனைக் கொண்டு வரலாமென்று பிரேரிப்பார்கள். அல்லது இரண்டாவது மூன்றாவது முறை கொண்டு வரக் கூடாதென்று எதிர்ப்பர். இந்த மாதிரியான பிரேரணைகளில் ஏதேனும் ஒன்று நிறைவேறினால், பிரதம கொரடா, பிரதம மந்திரிக்கு அறிவிப்பார். அவர், இதன் மீது அரசாங்கத்தார் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி யோசிப்பதற்காக, சபையைத் தள்ளி வைக்க வேண்டுமென்று பிரேரிப்பார்.

பார்லிமெண்டில் கேள்வி நேரந்தான் முக்கியமானது. திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய இந்த நான்கு நாட்களிலும் முதல் ஒரு மணி நேரம் இந்தக் கேள்விகளுக்கு ஒதுக்கி வைக்கப்படும். இந்த நேரத்தில் ஓர் அரசாங்கத்தின் நிருவாகத்திறமை எப்படி யிருக்கிறதென்று ஒருவாறு அளந்து கொண்டு விடலாம். இந்தக் கேள்விகளைக் கேட்கும் அங்கத்தினர்கள், தங்கள் கேள்விகளை ஒரு நாளைக்கு முன்னதாகவே பார்லிமெண்டின் காரியாலயத்திற்கு அனுப்பி விட வேண்டும். எந்த மந்திரியைக் குறித்து இந்தக் கேள்வி கேட்கப் படுகிறதோ அவர் இதற்குத்தக்க விடைகளைத் தயாரித்துக் கொள்ள வேண்டுமல்லவா? எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டுமென்ற கட்டாயம் மந்திரிக்கு இல்லை. பொதுஜன நன்மைக்கு விரோதமானதென்று சொல்லி எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல அவர் மறுத்துவிடலாம். ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்வதென்றால் அதற்காகச் செலவழிக்கிற தொகை ஏறக்குறைய முப்பது ரூபாயாகிறது. சராசரி தினம் நூறு கேள்விகளுக்குமேல் கேட்கப்பட்டுப் பதில் சொல்லப்படுகிறது. இந்தப் பதில்கள் தயாரிப்பதற்காக அநேகம் பேர், அரசாங்கக் காரியாலத்தில் சதா உழைத்துக் கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது. தந்திச்செலவு, டெலிபோன் செலவு இவற்றை யெல்லாம் செய்தல்லவோ ஒரு கேள்விக்கு விடைதர வேண்டியிருக்கிறது.

இந்தப் பார்லிமெண்டரி முறைகள் இப்பொழுது இந்தியாவிலுள்ள சட்ட சபைகளில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன; ஆனால் சில மாற்றங்களுடன்.

கழுகு, ஒரு மணிக்கு 180 மைல் வீதம் பறக்கிறது.

ஃ ஃ ஃ

ஹிட்லர் இப்பொழுது இத்தாலிய பாஷையைக் கற்றுக்கொண்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

1918ம் வருஷம் வார்சேல் சமாதான உடன்படிக்கையைப் பற்றி வாதம் நடைபெறுகிற போது, ஸர் வில்லியம் ராபர்ட்ஸன் என்பவரும், லார்ட் பால்பரும், ஜெர்மனியோடு ஆஸ்திரியாவைச் சேர்த்துவிடுவது நல்லதென்று யோசனை கூறியதாக லாயிட் ஜார்ஜ், தமது 'யுத்த நினைவுகள்' என்ற புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு பரீட்சை—அரசியல் வாதிகளுக்கு—

—"மலையமான்"

எங்களூரில் ஒரு தலைவர் இருக்கிறார். தலைவர் என்றால், மேடை மீதேறிப் பிரசங்கம் செய்கிறவர் என்பதை இந்த இருபதாவது நூற்றாண்டிலே நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையானால் அஃது என்னுடைய தப்பாகுமா? பிரசங்கம் செய்வதென்றால், புராணப் பிரசங்கமா? இல்லை. புராணப் பிரசங்கமெல்லாம் இருந்துகொண்டு செய்வது. ஆனால் இந்தப் பிரசங்கமோ நின்றுகொண்டு செய்ய வேண்டும். அது தான் அரசியல் சம்பந்தமாக. குறிப்பிட்ட சில வாசகங்களை மனப்பாடம்செய்துகொண்டு, நான்கு பக்கங்களில் திரும்பியும், இடையிடையே கொஞ்சம் குரலைக் கனைத்துக் கொண்டும், குரலை ஏற்றியும் இறக்கியும், இரண்டொரு கூட்டங்களில் பேசிவிட்டீர்களானால் உடனே உங்களுக்குத் தலைவர் பதவி கிடைத்து விடும். பிறகு கேட்கவேண்டுமா பூமாலைகளுக்கும் உபசாரப் பத்திரங்களுக்கும்?

இந்தக் காலத்திலே அரசியல் தலைவராவது மிகவும் சுலபம். அதற்கேதாவது முன்பின் அனுபவம் தேவையா? அல்லது ஏதேனும் பரீட்சைகளில் தேற வேண்டுமோ? அல்லது நிறையப்படித்துத்தான் இருக்கவேண்டுமா? இந்தியாவில் மட்டுமல்ல இப்படி. அரசியல் உலகமே இந்த ரீதியில் தான் இருக்கிறது.

எங்களூர்த் தலைவருடைய பேச்சுக்கள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். அவருடன் நெருங்கிப் பழகியுமிருக்கிறேன். இப்பொழுது எனக்குச் சில சந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. இவைகளை "ஜோதி" வாசகர்களோடு பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற ஆசையினாலேயே இந்தச் சிறு கட்டுரையை எழுதலானேன். என் சந்தேகம் தீருமோ தீராமலே போகுமோ அறியேன்.

ஒருவர் பிரபல டாக்டராக வர வேண்டுமானால், குறைந்தது ஐந்தாறு வருஷங்களாவது சிரமப்பட்டுப்படிக்க வேண்டியிருக்கிறது. வக்கீல்களாக வரவேண்டுமானால், இரண்டு வருஷ காலம் படிப்பு; பிறகு ஒரு வருஷ காலம் தொழில் அனுபவம் பெற வேண்டியிருக்கிறது. பின்னர் ஒரு கட்சிக்காரனைத் தேடிப்பிடிப்பது மிகவும் துர்லபமாயிருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்து அவனுக்காக வல்லடி வழக்கையாவது வாங்கிப் பேசினால், பணத்துக்கு அவனிடம் போராட வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடத்து வாத்தியாராக வேண்டுமானால் கூட, இரண்டு வருஷப் படிப்பு படித்தாக வேண்டும். இப்படி எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் ஆரம்பத்தில் எவ்வளவோ உழைப்பும், பணச்செலவும் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் அரசியல் தலைவராக வருவதென்றால் இந்தச் சிரமங்களெல்லாம் இல்லையே. ஏன் இவர்களுக்கும் ஒரு பரீட்சை வைத்து, இதில் தேறியவர்கள்தான் அரசியல் தலைவர்களாகவோ அல்லது சட்டசபை அபேட்சகர்களாகவோ வரலாம் என்று ஒரு விதி ஏற்படுத்தக்கூடாது? 'லைசென்ஸ் கட்டணம்' என்றுசொல்லி

கிழக்கிந்தியா கம்பெனி தோன்றிய வரலாறு

—வி. தேவராஜன்

கி. பி. 1583ம் வருஷத்தி லிருந்து நமது வரலாற்றைத் துவக்குவோம். இங்கிலாந்தில் அப்பொழுது தொழிலபிவிருத்தி ஆரம்ப தசையி லிருந்தது. ஆனால் பிச்சைக்காரர்களின் பட்டாளத்திற்குக் குறை வில்லாமல் இருந்தது. தவிர, ஜனங்கள் போதுமான வயிற்றுச் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் எங்கேனும் பிழைப்பு அகப்படுமோ வென்று ஊர் ஊராகத் திரிந்து கொண் டிருந்தனர். இங்கிலாந்தின் முக்கிய கைத்தொழிலாக அப்பொழுது இருந்தது துணி உற்பத்திதான். இந்தத் துணிகளுக்கு, சரியான மார்க்கெட்டுகளைக் கண்டு பிடிக்க வேண்டுவது அப்பொழுது அவசியமா யிருந்தது. ஆனால் ஐரோப்பாவி லுள்ள மற்ற நாடுகள், தங்கள் உற்பத்திப் பொருள்களை விநியோகிப்பதற்கு வேறு தேசங்களைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டன. பால்கன் பிரதேசங்கள், மத்திய ஆசியா, இந்தியா

ஒரு சிறு தொகையை இவர்களிடமிருந்து வசூலித்தால்கூட, அரசாங்க வரவு செலவு இனத்தில் துண்டு விழுவது கொஞ்சம் குறையுமே.

இந்த அரசியல் வாதிகளுக்கு என்னைப் பரீட்சாதிகாரியாக நியமித்தால் நான் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்பேன்:—

1. பணஞ் சம்பாதிப்பதற்காக நீங்கள், அரசியலில் பிரவேசிக்கிறீர்களா? அல்லது தேசத்திற்கா?

2. ஒரு பிரசங்க மேடையில் உங்களுடைய எதிர்க் கட்சியார் ஒருவரைப் பலமாகத் தாக்கிப் பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிற தென்று வைத்துக் கொள்வோம். அப்படி நீங்கள் பேசி விட்ட பிறகு, அந்த எதிர்க் கட்சிக் கனவான் உங்களை அன்றோ, மறுநாளோ விருந்துக் கழைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவரோடு நீங்கள் என்ன மாதிரி பேசுவீர்கள்? சுருக்கமாகப் பதினைந்து வரிகளில் எழுத வேண்டும்.

3. சட்டசபைகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன? சட்டசபையை, சொல்லம்புகளைக் கொண்டு யுத்தஞ் செய்கிற போர் வீரர்களின் யுத்த மேடையென்றோ, பகல் வேளைகளில் நல்ல மாதிரியான பலகாரங்கள் கிடைக்கிற பலகாரக் கடையென்றோ, மூட்டைப் பூச்சி உபத்திரவமில்லாமல் நல்ல பஞ்சணையில் உட்கார்ந்தபடியே தூங்குவதற்குரிய நித்திரா ஸ்தலமென்றோ பதில் எழுதினால் அதற்கு மார்க்கு கிடையாது.

4. மகாத்மா காந்தி இன்னும் ஏன் எந்தச் சட்ட சபைத் தேர்தலிலும் அபேட்சகராக நிற்கவில்லை?

5. நீங்கள் சொல்கிறபடி யெல்லாம் செய்வீர்களா? அல்லது செய்கிறபடியெல்லாம் சொல்வீர்களா?

6. மனச்சாட்சி, தேசம், வாக்காளர் இவற்றில் எதற்கு முதல் ஸ்தானம், எதற்கு இரண்டாவது ஸ்தானம், எதற்கு மூன்றாவது ஸ்தானம் கொடுப்பீர்கள்?

முதலிய நாடுகளில் இந்த அந்நிய நாட்டார் ஏற்கனவே செல்வாக்குத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

அமெரிக்காவை கொலம்பஸ் கண்டு பிடித்தா னல்லவா? இது அந்தக் காலத்து ஆங்கில மக்களுக்கு அதிக மான உற்சாகத்தைக் கொடுக்கவில்லை. அமெரிக்காவி லிருந்து திரும்பி வந்த வர்கள் கூறும் கதைகளை யெல்லாம் இவர்கள் காது கொடுத்துக் கேட் டார்களே யானாலும், தங்கள் சரக்கு கள் அங்கே செலவாவதற்கு ஏதே னும் மார்க்க மிருக்கிறதா வென்ப தைப் பற்றித்தான் இவர்கள் அதிக அக்கரை காட்டினார்கள். இந்தியா வைக் கண்டு பிடிப்பதற்காகவே கொலம்பஸ் சென்றான். ஆனால் அதற் குப் பதிலாக அவன் அமெரிக்காவை யே கண்டு பிடித்தான். அப்பொழுதே இங்கிலீஷ் வியாபாரிகளுக்குக் கொஞ் சம் சப்பிட்டு விட்டது. அமெரிக் காவை ஸ்பானிஷ்காரர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர். கீழைப் பிரதே சத்து வியாபாரத்தை போர்த்து கேசியரும், வெனிஸ் வர்த்தகர்களும், துருக்கியர்களும்கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள். என்ன செய்வது? இந்தத் திகைப்பு, எலிஜபெத் மகா ராணியின் காலத்தில் வாழ்ந்திருந்த பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு ஏற்பட் டிருந்தது. வியாபாரப் பெருக்கத்திற் காகப் புதிய நாடுகளை யாரேனும் கண்டு பிடிப்பதா யிருந்தாலும், அல் லது ஏற்கனவே போர்த்துகேசியர் முதலியோர் பரவி யிருக்கும் நாடு களுக்கு மார்க்கங்களைத் தேடிக் கொடுத்தாலும் அவர்களுக்குப் பிரிட் டிஷ் வியாபாரிகள் உதவி செய்யத் தயாரா யிருந்தார்கள். ஆனால் புதிய நாடுகளில் குடியேறுவதற்கு உதவி கேட்டால் அதற்குப் பிரிட்டிஷ் வியா பாரிகள் அவ்வளவாகச் செவி சாய்க்க வில்லை. ஏனென்றால் புதிய நாடுகளைக் கண்டு பிடித்து அதில் குடியேறுகிற ஐரோப்பியர்கள் மூலமாக எப்பொழு தோ கிடைக்கப் போகிற மார்க் கெட்டுகளுக்கு இவர்கள் காத்துக் கொண் டிருக்கச் சித்தமா யில்லை. கைமேல் கிட்டுகிற பலனைத்தான் இவர்கள் எதிர் பார்த்தார்கள். அமெ ரிக்கா, ஸ்பெயின் வசமானது குறித்து இவர்கள் அதிகமாக ஏன் கவலை கொள்ள வில்லை யென்றால் அமெரிக் காவி லிருந்து ஸ்பானியர்களுக்குக் கிடைத்த தெல்லாம் பொன்னும் வெள்ளியும் அடிமைகளுந்தான். இந்த மூன்றும், ஸ்பெயின் மூலமாக ஐரோப்பாவின் மற்றப் பாகங்களுக்குத் தேவையான அளவு கிடைத்துக் கொண்டிருந்தது. எப்படியென்றால் ஸ்பெயினிலே, அந்த நாட்டு ஜனங்களுக்குத் தேவையான பொருள்கள் உற்பத்தியாக வில்லை. இதனால் அமெரிக்காவி லிருந்து கொண்டுவரப்பட்ட தங்கம், வெள்ளி, அடிமைகள் முதலியன வற்றைக் கொடுத்து விட்டு, அவைகளுக்குப் பதிலாகத் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டது. இத னால் ஸ்பெயினானது, நாளா வட்டத் தில், பொருளாதாரச் செழிப்பிற்கு அடிப்படையான தங்கம், வெள்ளி முதலிய உலோகப் பொருள்களின்றி வறட்சியடைந்து விட்டது. பிரிட் டிஷ் வியாபாரிகள், ஸ்பெயின் வாயி லாகச் சுலபத்தில் தங்கமும் வெள் ளியும் கிடைக்கிற போது, ஏன் அதற் காக அதிகச் சிரமப் படவேண்டு மென்று கருதி, தங்கள் கவனத் தைக் கீழைப் பிரதேசங்களில் செலுத் தலானார்கள்.

கீழ் நாட்டைப் பற்றி மேனாட் டிலே அந்தக் காலத்தில் ஒரு பிரமை

இருந்தது. அதாவது கீழ் நாட்டில் தங்கம், வெள்ளி, ரத்தின வகைகள், ஏலக்காய், லவங்கம் முதலிய வாசனைச் சரக்குகள் முதலியன ஏராளமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகமாயிருந்தது. தவிர, வற்றாத ஊற்று கீழ் நாடு என்ற எண்ணமும் அப்பொழுது இருந்தது. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு ஏன் இந்த ஏலக்காய், லவங்கம் முதலிய வாசனைச் சரக்குகளில் இவ்வளவு பிரமை இருந்ததென்பது நமக்கு இப்பொழுது ஆச்சரியமாயிருக்கும். அந்தக் காலத்தில் பிரிட்டிஷாருடைய ஆகாரம், இப்பொழுது போல் பலசிறப்பட்டதாயில்லை. தவிர, அப்பொழுது தேயிலைப் பானமும் இங்கிலாந்தில் கொண்டு புகுத்தப் படவில்லை. இவர்களுடைய ஆகாரமெல்லாம் மீன் ஒன்றுதான். இவைகளுக்குக்காரசாரமான சேர்க்கை தேவையாயிருந்தது. இதற்காக இந்தியாவிலிருந்து கிடைக்கிற கிராம்பு வகையருக்களுக்கு இங்கிலாந்தில் அதிக கிராக்கி இருந்தது. இந்தக் கிராக்கிதான், இந்தியாவுடன் வியாபாரப் போக்குவரத்து வைத்துக் கொள்வதற்குச் சௌகரியமான ஒரு பாதையைத் தேடிக் கொள்ள வேண்டுமென்ற ஆவலை வியாபாரிகளிடையே உண்டாக்கியது. வெனிஷியர்கள், கீழ் நாட்டுக்குச் செல்கிற தரை மார்க்கத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள். போர்த்துக்கேசியரோ தென் ஆப்பிரிக்கா நன்னம்பிக்கை முனை வழியை ஸ்வீகரித்துக் கொண்டு விட்டனர். இந்த இரண்டு பேரும் சேர்ந்து கிராம்பு வியாபாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு, தங்களுக்கிஷ்டமான விலை வைத்து மேற்படி கிராம்பு வகையருக்களை ஐரோப்பாவில் விற்றார்கள். இதனால் இங்கிலீஷ் வியாபாரிகள், கண்குத்திப் பாம்பு மாதிரி தங்களுக்கு ஏதேனும் வழி ஏற்படுமோவென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் 1581ம் வருஷம் துருக்கிய சாம்ராஜ்யத்தில் பன்னிரண்டு இங்கிலீஷ் வியாபாரிகள் வியாபாரம் செய்ய அனுமதி கிடைத்தது. 1583ம் வருஷத்தில் இந்த வியாபாரம் இந்த நாட்டிலே வேரூன்றிக் கொண்டது. அலெப்போ போன்ற நகரத்தில் ஒரு பிரிட்டிஷ் ஸ்தானீகன்கூட நியமிக்கப்பட்டான். இங்கிருந்து தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்பது பிரிட்டிஷாருடைய ஆவலாயிருந்தது. அலெப்போவிலிருந்து பாக்தாத்; பாக்தாத்திலிருந்து இந்தியா செல்வது மிகவும் சுலபந்தானே. ஆனால் இவைகளுக்கிடையில் எவ்வளவோ தடைகள் இருந்தன. அராபியக் கொள்ளைக் கூட்டத்தினர் இடையிடையே வழி மறித்து வியாபாரிகளைச் சங்கடத்திற்குள்ஆக்கினர். தவிர அந்தந்தப் பிரதேசத்துப் பாஷைகளையும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. மற்றும் பாரசீக வளை குடாவின் வழியாகச் செல்கிற வழியும், வேறுவழிகளும் போர்த்துகேசியருடைய வசத்தில் இருந்தன.

கடைசியில் ஐந்தாறு துணிச்சலான வியாபாரிகள் சேர்ந்து 'டைகர்' என்ற ஒரு கப்பலைத் தயாரித்து அலெப்போவென்ற இடத்திலிருந்து புறப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் ஏற்கனவே கீழ் நாட்டாருடைய பழக்க வழக்கங்கள், பாஷைகள் முதலியவற்றை நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் அந்தந்த நாட்டுச் சுதேசிகளைப் போல் வேஷம்போட்டுக் கொண்டு

பிரயாணம் செய்ய வேண்டியதா யிருந்தது. இவர்களில் ரால்ப் பிட்ச் (Ralph Fitch) என்பவன் இந்தியா, பர்மா முதலிய பிரதேசங்களுக்குச் சென்று, தான் கண்டனவற்றை யெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டான். இது இங்கிலாந்தில் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணி விட்டது. இந்தியாவுடன் நேரான வியாபாரம் செய்தால் அதிக லாபம் கிடைக்குமென்ற எண்ணம் வியாபாரிகள் உள்ளத்தில் தீவிரமாக எழுந்து நின்றது. எனவே இதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

1599ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24ந்தேதி லண்டனில் 'பவுண்டர்ஸ் ஹால்' என்ற இடத்தில் எண்பது வியாபாரிகள்கூடினார்கள். கூட்டத்திற்கு, இந்தியாவில்சுற்றுப்பிரயாணஞ்செய்துபல தகவல்களையும் சேகரித்துக் கொண்டு வந்திருக்கிற மில்ட்ரெட் என்பவனும், பிட்ச் என்பவனும் ஆஜராயிருந்து தங்கள் அநுபவங்களை எடுத்துச் சொன்னார்கள். இதன் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டி, கூட்டம் தள்ளி வைக்கப் பட்டது. இடையில் எலிஜபெத் மகாராணியிடமிருந்து உரிமைச் சாஸனம் பெறவேண்டி, அரண்மனை உத்தியோகஸ்தர்களுக்கும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் நல்ல தனமாக நடந்து கொள்ள வேண்டியிருந்தது. பல சூழ்ச்சிகள் நடைபெற்றன. இவைகளுக் கெல்லாம் ஒரு வருஷம் பிடித்தது. மறுபடியும் 1600ம் வருஷம் செப்டம்பர் மாதம் 23ந் தேதி ஒரு கூட்டமும், அக்டோபர் மாதம் 2ந் தேதி ஒரு கூட்டமும் ஆக இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. கடைசியில் 1600ம் வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதி கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயருடன் ஒரு கம்பெனியை ஆரம்பித்து நடத்த எலிஜபெத் மகாராணியார் உரிமைச் சாஸனமொன்று கொடுத்தார்.

இதுவே முதன் முதலாகத்தொடங்கப் பெற்ற கிழக் கிந்தியக் கம்பெனி.

ஜெர்மனியில் ஹிட்லர் சர்வாதிகாரப் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் சான்ஸலராயிருந்த டாக்டர் ப்ரூனிங் என்பவர் இப்பொழுது அமெரிக்காவில் இருக்கிறார். இவர் விரைவில் ஒரு பாதிரியாகப் போகிறாரென்று சொல்லப் படுகிறது.

ஃ ஃ ஃ

லார்ட் நப்பீல்ட் என்ற பிரபல கோடீசுவரர், பிரிட்டிஷ் லார்ட்ஸ் சபையில் நான்கு வருஷ காலமாக அங்கத்தினரா யிருக்கிறார். இதுவரை இவர் 19 வார்த்தைகள் பேசியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இரண்டு அமெரிக்கக் கம்பெனிகளிலிருந்து 400 ஆகாய விமானங்களை வாங்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

1-2-1933லிருந்து 31-3-1936 வரை ஜெர்மனி யிலிருந்து ஒரு லட்சம் யூதர்கள் வெளி நாடுகளில் குடியேறி யிருக்கிறார்கள்.

உலகத்திற்கு இந்தியாவின் பாடம் என்ன?

—சுவாமி விசுவானந்தா

இப்பொழுது உலகத்திலே நடைபெறுகிற விவகாரங்களை நாம் சிறிது கூர்ந்து கவனித்தோமானால் தற்போதைய மனிதர்களின் மனோபாவங்கள் எவ்வளவு விசித்திரமான மாறுதலடைந்திருக்கின்றனவென்பது நன்கு புலனாகும். புதிய உலகமொன்றைச் சிருஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணம் இளைஞர்களின் உள்ளத்திலே உண்டாயிருக்கிறது. எங்குப் பார்த்தாலும்பழமையிலிருந்து ஒதுங்கி விடவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. 'முன்னேறிச் செல்' என்ற முழக்கந்தான் எங்கும் கேட்கப்படுகிறது. ஸ்திர வாசத்திலே பிடித்தங் கொண்டுள்ள கீழ் நாடு இப்பொழுது மாறுதலை யடைய முனைந்து நிற்கிறது. எப்பொழுதும் மாற்றத்திலேயே முனைந்திருக்கிற மேனாடு, இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறது. அரேபியா பாலைவனத்தில்கூட மோட்டார்கள் சகஜமாகச் செல்கின்றன. ஐரோப்பிய ஸ்திரீகளைப் போல் தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டு வெளியிலே சர்வ சகஜமாக உலவுகிற இந்தியப் பெண்களும் சீனப்பெண்களும் இப்பொழுது தங்கள் உரிமைக்காகப் போராடுகிறார்கள். வயதான பெரியோர்கள் எவ்வளவு முணு முணுத்துக் கொண்டிருந்தாலும், சிறியவர்கள் அதிதீவிரமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். நம்மைச் சுற்றி நவயுகம் பிறந்திருக்கிறதென்பதை யாராவது மறுக்க முடியுமா? இப்பொழுது விஞ்ஞான சாஸ்திரிகளும் முன் வந்து, இந்த நவயுகம் சீக்கிரம் வரவேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். கடலிலே எவ்விதக் கவலையுமின்றிப் பிரயாணஞ் செய்வதைப்போல் ஆகாயத்தில் பிரயாணஞ் செய்ய முடியும் என்று நூறு வருஷத்திற்கு முன் யாராவது நினைத்திருப்பார்களா? லண்டனிலேயோ பாரிஸிலேயோ பேசினால் அதனைக் கல்கத்தாவிலேயோ பம்பாயிலேயோ கேட்கலாமென்று ஐம்பது வருஷத்திற்கு முன் யாராவது நினைத்திருப்பார்களா?

உலகம் இப்பொழுது சுருங்கிக் கொண்டு வருகிறது. அன்றாட வாழ்க்கையில் உலகத்து எல்லா மக்களும் தோளோடுதோள், சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படி நெருங்கிப் பழகுவதனாலே பிணக்கும் ஏற்படுகிறது. தற்காலத்திய மனிதனுக்கு ஞானப் பசி குறைந்து விட்டது. அமர வாழ்வு வாழ வேண்டுமென்ற ஆசையும்போய் விட்டது. அரசியல் அரங்கத்திற்கும் பொருளாதாரத் துறைக்கும் மனிதன் இப்பொழுது இழுக்கப்பட்டு வருகிறான். நமது ஸ்தூலக் கண்களுக்குப் புலனாகாதவை யெல்லாம் இல்லாதவை யென்ற மனப்பான்மை இப்பொழுது சாதாரண கொள்கையாகி விட்டது. நமக்குப் புலனாகாத ஒன்றைப்பற்றி ஏன் தடுமாறிக்கொண்டிருக்கவேண்டுமென்றும் இறந்த பின் எந்த வாழ்வு வந்தால் தானென்னவென்றுமே இப்பொழுதைய இளைஞர்கள் பேசுகிறார்கள். இதனுடைய விளைவு என்ன ஆகிவிடுகிறதென்றால், தற்காலத்திய மனிதன், எவ்வளவு அறிவு பெற்றவனாயிருந்தபோதிலும்,

இன்பந் துய்க்கிற ஒரு மிருகமாகவும், பணத்தைக் குவிக்கிற ஓர் இயந்திர மாகவும் ஆகிவிடுகிறான். அதாவது பாரமார்த்திகத் துறையிலே உலகாயதம் போய்க் குடிகொண்டுவிட்டது. பொருளாதார விஷயத்திலேயோ, அவனவனும் தனித்து வாழ வேண்டுமென்ற எண்ணந்தான் முனைந்து நிற்கிறது. இந்த எண்ணம் மனித சமூகத்தினிடத்தில் பரவி யிருப்பதாலேயே, நல்ல விஷயங்களை ஸ்வீகரித்துக் கொள்கிற விஷயத்திலே மனிதர்களுக்குள் போட்டி உண்டாகிறது. உலகத்தில் எப்பொழுதுமே நல்ல விஷயங்கள் என்பது கொஞ்சமாகத்தானே இருக்கும். இதனால் போட்டி வலுக்கத் தொடங்குகிறது. தான் முன்னேற்றம் அடைந்து வருவதாகவே மனிதன் நினைத்துக் கொள்கிறான். ஆனால் அவனிடத்தில் குரங்குப் புத்தியும் புலியின் சுபாவமும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. உலகத்திலுள்ள ராஜ தந்திரிகளோ மீண்டும் ஒரு யுத்தம் வரப்போவதாகப் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில் கற்ற பாடங்கள் வெகு சீக்கிரத்தில் மறக்கப்பட்டு விட்டன. மீண்டும் உலகம், பிரளயாக்கினிக்குச் செல்லப் போகிறதா என்ன?

உலகத்திற்கு இந்தியா செய்ய வேண்டிய தொண்டு என்னவென்பதைப்பற்றி யாராவது சொன்னால், அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று கருதுவது ஒரு நாகரிகமாகக் கூடப்போய் விட்டது இப்பொழுது. மோஹென்ஜோ—தாரோ என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப் பட்ட சின்னங்களிலிருந்து, இந்தியாவின் நாகரிகம் மிகவும் புராதனமானதென்று ஊர்ஜிதமாகி விட்டது. மிகவும் குறுகிய புத்தியுடையவர்கள்கூட, இந்த நாகரிகம் ஐயாயிர வருஷ காலத்திற்கு முற்பட்டதென்று கூறுகிறார்கள். இந்திய ஜன சமுதாயம் எப்படி இத்தனை வருஷகாலம் இவ்வளவு கட்டுப்பாடாக இருக்கிறதென்பது எனக்கு விளங்கவேயில்லையென்று ஒரு பேராசிரியன் கூறுகிறான். இந்தியாவின் மீது பலர் படையெடுத்து வந்திருக்கிறார்கள். அநேக துன்பங்களும் இதற்கு ஏற்பட்டிருக்கின்றன: ஆனால் இந்தியர்கள் தங்கள் ஞானத்தை விடாமல் பற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு ஏதேனும் ருஜு வேண்டுமானால் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கம் வெற்றி பெற்றுள்ளது ஒன்றே போதும். ஒற்றைத் துணியுடுத்தியுள்ள இந்த ஒல்லியான மனிதர், இந்தியாவுக்கு ஒருபுத்துயிர் கொடுத்து அதனைத் துடிக்கிற ஒரு சக்தியாகச் செய்து விட்டாரல்லவா? இவருடைய ஆயுதங்கள் என்ன? சத்தியம்; அஹிம்சை. இந்தப் புராதன நாட்டிலே தான், மகாத்மா காந்தியைப் போன்ற தலைவர்கள் தோன்ற முடியும். இந்தியாவின் புராதன நாகரிகத்தை 'ஆரண்ய நாகரிகம்' என்று சொல்வதுண்டு. இது மிகவும் பொருத்தமுடைத்தல்லவா? ஜனக் கூட்டத்திலிருந்து விலகி, இந்த உலகப் போராட்டத்தி லிருந்து ஒதுங்கி இருந்து, மனிதன், தன்னைத்தானே ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண்டுமென்று முற்காலத்து நமது முன்னோர்கள் கருதினார்கள். இவர்களுடைய ஆராய்ச்சி யெல்லாம் அந்தர் முகமாகவே நடை பெற்றது. மேனாட்டார் ஸ்தூல உலக ஆராய்ச்சியில் முன்னேற்ற மடைந்திருந்தார்களென்றால், கீழ் நாட்டாராகிய இந்தியர், சூட்சும உலக ஆராய்ச்சியில்

தர்ம ராணி—குழந்தைகளுக்கான சிறு கதை

'பாழும் போலி வைரங்களே! போலி இரத்தினங்களே! உங்கள் பகட்டு இவ்வளவுதானா! இவ்வளவு சீக்கிரத்திலா உங்கள் தன்மையைக் காட்ட வேண்டும்! நேற்று மாலையில் உங்களை விற்றேன், இன்று காலையில் சிறையில் கிடக்கிறேன். நேற்றே தொகையை அரண்மனையில் பெற்றிருந்தால் இதற்குள் வெகு தூரம் போயிருப்பேனே! கள்ளங் கவடற்ற எத்தனையோ மாதர்களை ஏமாற்றி வந்த நீங்கள் இந்த 'தர்ம ராணி' இடத்திலா என்னைக் காட்டிக் கொடுப்பது! இதன் கொடுமையை நீங்கள் அறியாது இன்னும் என் முன் பொய் மினுக்கு மினுக்கிக் கொண்டிருக்கிறீர்களே! என் பிராணனுக்கே ஆபத்து வந்ததே! காட்டு மிருகங்களா என்னைக் கிழித்துத் தின்ன வேண்டும்! இதுவும் ஒரு தண்டனையா? இந்த தர்ம ராஜ்யத்திலா இந்த அநீதி! இங்கு அரசாளும் ராணிக்கு இரக்கம் வேண்டாமா? தெய்வமே சிறியேன் செய்த சிறுபிழைக்கு இந்தக் கொடிய தண்டனை அடுக்குமா?' என்று மாணிக்கம் ஓலமிட்டழுது கொண்டு சிறைச்சாலையில் கிடந்தான்.

ஃ ஃ ஃ

இது நடந்த காலத்தில் போலி இரத்தினங்கள் செய்யப்படும் விஷயம் வெகு ரகசியமாயிருந்தது. அப்படிப் பட்ட தொன்றுண்டு என்பது கூட நாட்டில் பொதுவாகத் தெரியாது. ஒரு சிலரே அவைகளைச் செய்யும் முறைகளை அறிந்திருந்தார்கள். அவர்கள் வெகு ரகசியமாகத் தயாரிப்பார்கள், அந்நாட்களில் சொற்ப செலவில் செய்யப் படும் அவ்வைரங்களை ஊரூராகச் சென்று விற்று பெருத்த லாபமடைந்து வந்தார்கள் வியாபாரிகள்.

இவர்களில் ஒருவனான மாணிக்கம் இவ்வியாபாரத்தில் பெரும் பணம் சம்பாதித்து வந்

அதிக முற்போக்கடைந்திருக்கிறார்கள். மனதை ஒரு முகப் படுத்தல், பிறரை அடக்கியாளக் கூடாதென்ற உறுதி, சமரஸ ஞானம் முதலியவை இந்தியக் கலை ஞானத்தின் ஆணிவேர்களாயிருந்தன.

அப்படியானால் முற்கால இந்தியாவில் கனவு காண்பவர்களும், ஞானிகளும், மஹாத்மாக்களுந்தான் இருந்தார்களா? இப்படிக் கேட்கிறவர்கள் இந்தியாவின் முற்கால சரித்திரத்தை அறியாதவர்கள். வின்சென்ட் ஸ்மித் என்ற ஆங்கில சரித்திராசிரியரால் இந்திய நெபோலியன் என்று அழைக்கப்படுகிற சமுத்திரகுப்தன் பெரிய ராஜ தந்திரியாக இருந்தான். சாணக்கியனைப் போன்றதொரு அரசியல் நிபுணனை வேறெந்த நாட்டிலேனும் காண முடியுமோ? உண்மையென்னவென்றால், இந்தியா ஒரு காலத்தில் செல்வத்தில் திளைத்திருந்தது. அநேக ராஜ்யங்களையும், ஏகாதிபத்தியங்களையும் நிருவகித்து வந்தது. இவைகளுக்கு மத்தியில் துறவு, அஹிம்சை முதலியன தோன்றின. இந்தியாவில் ஒரு மனிதனுடைய பெருந்தன்மை எப்படி அளக்கப் படுகிறதென்றால் அவன், தனதுடைமை யென்று எவ்வளவு குறைவாக வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதைப் பொறுத்துத் தான். 'அநித்தியத்தின் மத்தியிலே நித்தியத்தைக் காண்கிறவர்களுக்கும், பலவற்றின் மத்தியில் ஒன்றைப்பார்க்கிறவர்களுக்கும் சாந்தி உண்டாகும்' என்பது இந்தியாவின் புராதன வாசகம். இதைத் தற்கால உலகம் செவி சாய்த்துக் கேட்குமானால் அதற்கு நிச்சயம் விமோசனம் கிடைக்கும். ஜீவ சிருஷ்டி ஒவ்வொன்றிலும் பரமாத்மா வீற்றிருக்கிறார் என்ற உண்மையை நமது தினசரி வாழ்க்கையில் காட்டிக் கொண்டு விட்டோமானால் அதை விடச் சிறந்த தொண்டு நாம் உலகத்திற்குச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை.

தான். சாமான்ய ஜனங்களிடை விற்பதை விட அரசர்களிடம் வியாபாரம் செய்தால் மேன்மையாயிருக்கும் என்றெண்ணி கருணாபுரத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு ஒரு அரசி நெறி வழுவாது ஆண்டு வந்தாள். அவள் ஒப்பற்ற நேர்மை யுடையவளாகையால் அவளை அவ்வூரார் 'தர்ம ராணி' என்றழைத்து வந்தார்கள்.

இவ்வரசி, மாணிக்கத்தின் வைரங்களைக் கண்டதும் வெகு ஆசையோடுபெருத்ததொகைக்கு வாங்கினாள். மறுநாள் அவனுக்குப் பணத்தைக் கொடுத்த பிறகு வைரப் பரீக்ஷை தெரிந்தவர்கள் அவை போலி இரத்தினங்கள் என்று கூறினார்கள்.

இராணிக்கு அடக்க வொண்ணாக் கோபம் வந்து விட்டது. உடனே தன் ஆட்களை அனுப்பி மாணிக்கத்தைச் சிறையிலடைக்கச் செய்தாள். அவன் செய்த மோசத்திற்காக அவனைக் காட்டு மிருகங்களுக்கு இரையாக்குவதென்று கட்டளை இட்டாள்.

பணத்தாசையினால் ஏமாற்றிய குற்றத்திற்கு இவ்வளவு கடுந் தண்டனையா என்று யாவரும் திடுக்கிட்டார்கள். சிலர் மாணிக்கத்துக்காக மன மிரங்கி அவன் பெற்ற விலைப் பணத்தை இராணியிடம் திருப்பிக் கொடுத்து விட்டு அவனை மன்னிக்கும்படி கேட்டார்கள்.

இராணி பணத்தைப் பெற்றுக் கொண்டு வைரங்களைத் திருப்பிக் கொடுத்தாளே யன்றி தண்டனையை நிறுத்தவில்லை. அதை நிறைவேற்றித்தான் ஆகவேண்டும் என்றாள். வைரத்திற்கும் பணத்திற்கும் சரியாய் விட்டது. அவன் செய்த மோசத்திற்குச் சிக்ஷை வேண்டாமா என்றாள்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை. சூரிய ஒளி இன்னும் நன்றாகப் பரவ ஆரம்பிக்க வில்லை. கருணாபுரத்தின் கிழ்ப்புறத்தி லுள்ள ஒரு மலைக் குகைக்கெதிரில் 'தர்மராணி'க் கோர் ஆசனம் போடப்பட்டது. அதற் கெதிரில் ஒரு பெரிய கூண்டில் மாணிக்கத்தை குகைவாயி லருகில் நிறுத்தினார்கள். ஆயிரக் கணக்கில் ஜனங்கள் வேடிக்கை பார்க்க அங்கு வந்து கூடினார்கள்.

கைதியின் முகம் இரத்த மின்றி வெளுத்திருந்தது. கை கால்கள் உதறலாயின. சிங்கமோ, புலியோ, கரடியோ தன்னை வந்து விழுங்கப் போகிற தென்று கண் கொட்டாமல் குகை வாயிலையே நோக்கிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம்போலிருந்தது. கூடியிருந்த ஜனங்களும் திறந்த வாயோடும் விரிந்த கண்ணோடும் குகையை நோக்கிக் கொண்டு பதுமைகள்போல நின்றனர்.

மகாராணி ஆசனத்தில் வந்தமர்ந்தாள். குகையில் ஒரு ஜந்து நடமாடும் சத்தம் கேட்டது. மறு நிமிஷம் யமன் வரப் போகிறான் என்றே மாணிக்கம் எண்ணி விட்டான். திடீரென்று குகையி லிருந்து துள்ளிக் குதித்துக் கொண்டு வெளி வந்தது ஒரு வெள்ளாட்டுக் குட்டி. அது காட்டில் வளர்ந்து வந்தபடியால் இப் பெரும் ஜனக் கூட்டத்தைக் கண்டு திகைத்து நின்றது. மாணிக்கத்திற்கு இன்னது செய்வ தென்று தோன்ற வில்லை. ஜனங்கள் 'கொல்' என்று சிரித்தார்கள். அவனுக்கு அப்பொழுதுதான் விஷயம் புரிந்தது. புலி வாயி லிருந்து தப்பியவனைப்போல ஆனந்தம் பொங்க மகாராணியிடம் போய் நமஸ்கரித்தான்.

'நீ என்னை ஏமாற்ற முயன்றதற்கு இந்த ஏமாற்றம் எப்படி இருக்கிறது?' என்று கேட்டாள் மகாராணி.

'எனது பழய பாவ ஜன்மம் போய் புனிதமான புத்துயிர் பெற்றேன். இனி இத் தொழில் செய்யேன்' என்றான் மாணிக்கம்.

எஸ்.

அமெரிக்க மனோ தத்துவ சாஸ்திரிகள் சிலர், ருஷ்யாவில் பொதுவுடமை ஆட்சி நீண்ட காலம் நடைபெறு மென்றும், ஆனால் 1960ம் வருஷத்திற்கு மேல் ஜெர்மனியில் நாஜி ஆட்சி நடைபெறுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஃ ஃ ஃ

பெல்கிரேட் என்ற நகரத்தில் அறுபது வயதுள்ள ஓர் அம்மையாருக்குச் சமீபத்தில் 31-வது குழந்தை பிறந்தது. இதற்கு முன் பிறந்த 30 குழந்தைகளும் சௌக்கியமா யிருக்கின்றன.

சுசீலை மணம்—ஒரு சிறு பிரஹஸனம்

—எஸ். எஸ்.

இது மோலியர் என்ற பிரெஞ்சு ஆசிரியன் எழுதிய நாடகத்தின் பகுதியொன்றைத் தழுவி எழுதப்பட்டது. இடையிலும் கடையிலும் சேர்த்துள்ள நிஷ்கலையின் தனி மொழிகள் இச் சிறு பிரஹஸனத்தின் படிப்பினையாகச் சேர்க்கப்பட்டன. இவையும் இன்னும் சிலவும் முதனூலில் இல்லை.

புருஷ பாத்திரங்களின் பெயர்களை அதிகமாக மாற்றாமல் தமிழ் விகுதிகளைச் சேர்த்திருக்கிறோம். முதனூலைப் படிப்பவர்கள் அப்பெயர்களை எளிதில் கண்டு கொள்ளலாம். லூசில், நிக்கோய் என்ற பெயர்கள் சுசீலை நிஷ்கலை என்று முற்றும் தமிழாகவே மாற்றப் பட்டன. இவர்கள் மனோபாவங்களில் கீழ் நாட்டு எண்ணங்கள் பல காணலாம்.

நாடக பாத்திரங்கள்

சுரதன்—பணக்காரன், பட்டப்பித்தன்.

கலையந்தன்—நற்குடிப் பிறந்தோன். சுசீலையைக் காதலிக்கிறான்.

கோவியலன்—கலையந்தன் தோழன், நிஷ்கலையைக் காதலிக்கிறான்.

சுசீலை—சுரதன் மகள், கலையந்தனைக் காதலிக்கிறாள்.

நிஷ்கலை—சுசீலையின் தோழி. கோவியலனைக் காதலிக்கிறாள்.

முதற் காட்சி

காதலர் பிணக்கு

கலையந்தனும், கோவியலனும்.

கலையந்தன்—நண்பா, சுரதர் என்ன இப்படிப்பேசுகிறாரே? சுசீலையை மணக்க நற்குடிப் பிறப்பு, நல்லொழுக்கம், நற் செல்வம் இவை போதாதாம்! அரசிளங் குமரனாகவோ பெரும் பட்டதாரியாகவோ இருக்க வேண்டுமாம்.

கோவியலன்—அவருக்கென்ன குறை! அவர் தந்தை, பட்டு வியாபாரத்தில் கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்த பணம் இருக்கிறது. இப்பொழுது, தாம் ஒரு வர்த்தகன் மகன் என்று சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்படுகிறார். வெகு செல்வமாக வளர்ந்து வந்தபடியால் உலகபோக்கு அறியாத பேதையாயிருக்கிறார். பெரிய மனுஷாள், பட்டதாரிகள், அரச குடும்பத்தார் முதலாயினாரோடு தான் சகவாசம் செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசை. அதே பித்துப் பிடித்து அலைகிறார். அதனால் அவர்கள் நய வஞ்சகப் பேச்சை எளிதில் நம்பிவிடுகிறார். நல்ல வேளையாக நாற்பது வயதுவரை நல்லபடியாகக்காலம் கழித்து விட்டார். ஆனால் ஒன்று: இவ்வளவு வயதுக்குமேல் ஏற்பட்ட பித்து அவரை விட்டு நீங்கவே நீங்காவது.

க—பட்டதாரிகள் நயவஞ்சகப் பேச்சிலுள்ள இனிப்பைப் பார்க்கிறாரேயன்றி அவை ஆத்தமற்ற ஓட்டைப் பேச்சுக்கள் என்பது அவருக்குத் தெரிவதில்லை. சாதாரணமாய் இப்பட்டதாரிகள் பெருஞ்செலவாளிகள். எவ்வளவு பண மிருந்தாலும் அவர்கள் ஆடம்பர வாழ்க்கைக்குப் போதாது. தேக உழைப்பினாலோ புத்தி யுழைப்பினாலோ பணம் சம்பாதிக்க வழியற்றவர்கள். அதனால் அன்னியர் பணத்தை எபபடிக் கவரலாம் என்பதே அவர்கள் யோசனை. வேசியர் போல முதலில் வெகு நயமாகப் பேசுவார்கள். தம் வேலை முடிந்தால் ஈவிரக்கமின்றி ஒதுங்கிவிடுவார்கள். இப்படிப் பட்ட ஒருவன் சுசீலையை மணந்தால் கள்ளம் கபடு தெரியாத அவள் வெகு கஷ்டப் படவேண்டி யிருக்கும்.

கோ—இவ்வளவு பரிதாபம் நீ சுசீலையிடம் கொள்ளுகிறாயே, அவளும் அவள் தோழியும் இன்றுகாலை நம்மை எப்படி நடத்தினார்கள் பார்.

க—ஆமாம், அதைப்பற்றித்தான் உன்னிடம் நான் பேச வந்தேன். அவளுக்காக நான் எவ்வளவோ மனம் நொந்தேன், எவ்வளவோ கண்ணீர் வடித்தேன். அவ்வளவையும் அவள் மறந்து விட்டாளே! அவளுக்குத்தான் என்ன கல் நெஞ்சு!

கோ—இதற்காக அவர்களை நாம் சும்மா விடலாகாது.

க—சும்மா விடுவதா? இதற்காக சுசீலையை எப்படித் தண்டிக்கப் போகிறேன் பார். நீ மாத்திரம் அவளுக்காகப் பரிந்து பேச வேண்டாம்.

கோ—நான் ஒரு நாளும் அப்படிச் செய்ய மாட்டேன். ஏனெனில் அவள் தோழி நிஷ்கலையும் என்னை அவமதித்துச் சென்றாள்.

க—நீ பரிந்து பேசினாலும் பயன்படாது, நான் கேட்கப்போவதில்லை. எனக்கு நீ ஒன்று செய். சுசீலையிடத்திலுள்ள குறைகளை ஒன்று விடாது எடுத்துக் காட்டி அவள்மேல் எனக்குண்டாகும் வெறுப்பை அதிகப்படுத்து.

கோ—அவளிடமுள்ள குறைகளையா எடுத்துக்காட்டச் சொல்லுகிறாய்?

க—ஆமாம்; அவள் அழகில் ஈடுபட்ட எனக்கு அவள் குற்றங்கள் தென்படுவதில்லை.

கோ—அவளிடம் என்ன குணம் இருக்கிறது? அவளைவிட அழகுள்ள பெண்கள் எத்தனையோ பேர் உன்னை விரும்புவார்கள்.

க—இப்படிப் பொதுவாக நீ அவளை இழிவுபடுததினால் பயனில்லை. ஏனெனில் மொததத்தில் அவளோடு ஒப்பிடக்கூடிய பெண யாருமயில்லை என்று தான் நினைக்கிறேன்.

கோ—சற்றுப் பொறு, அவசரப்படாதே. ஒவ்வொன்றாக அவள குறைகளை எடுததுக் கூறுகிறேன், அவள கண்கள் சிறிசு.

க—கண்கள் அவளுக்குச் சிறிசுதான். கவிகள் போற்றும் கயற கண்கள வேறெப்படி இருக்கும்! அவை மின் போல மிளிரும்போது என்ன பளபளப்பு, என்ன ஒளிவீசுகின்றன! அவள் பார்வையில் தான் என்ன கூர்மை!

கோ—அவள் வாய் பெரிசு.

க—ஆமாம், வாய் சற்று பெரிசு தான். சிறுவாய் அழகுடையதென்றா எண்ணுகிறாய்? அது எனக்குப் பிடிக்காது. அவளுடைய செவ்விதழ்கள் அழகாய் வளைந்து நிற்க வாய் இம்மட்டு வேண்டாமா? அவள் வாயில் வரும் பேச்சில் தேன் ஒழுகுகிறதே. இந்தப் பெருமை ஒன்றே அதற்குப் போதுமே!

கோ—உயரத்துக்குத் தக்க பருமன் அவளிடமில்லை.

க—ஒல்லியாயிருப்பதனால் அவள் இடை நடங்குவதற்கும், உல்லாச நடைக்கும் ஓர் வனப்பு ஏற்படுகிறது. உடல் பருத்தால் அந்த அழகு இருக்குமா?

கோ—அவளுக்கு எதிலும் ஒரு அசட்டை.

க—அந்த அசட்டையிலும் ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது. அவள் அசட்டையாயிருக்கும் சாயல் கூட அவளழகை வெளிப்படுத்துகிறது.

கோ—புத்தி கூர்மையிலோ........

க—அவளுக்கு யாரும் நிகரில்லை.

கோ—பேச்சிலோ........

க—என்ன நயம்! என்ன சாதுர்யம்!

கோ—முகத்தில் சிரிப்பில்லை.

க—அதுதான் பெண்களுக்கழகு. எப்போதும் பல்லை இளித்துக் கொண்டு எதற்கும் சிரிப்பவளை நாணமற்ற பெண்ணென்றல்லவா சொல்வார்கள்!

கோ—அவளுக்கு புத்தி சபலமானது.

க—அவளுக்கு அதுகூட இனிமையாகவே பொருந்துகிறது. அழகுடையவர்க்குப் பொருந்தாதது ஒன்று உண்டா?

கோ—உள்ள நிலைமை இதுவானால் அவளை நீ இன்னும் காதலிக்கத்தான் செய்கிறாய்.

க—நான் காதலிக்கிறேனா? அவளை வெறுக்கவல்லவோ செய்கிறேன்.

கோ—உன் சொற்படி அவளிடம் ஒரு குறையுமில்லாதபோது அவளை நீ எப்படி வெறுக்க முடியும்?

க—அதில்தான் என் திறமையைக் காண்பாய். அவள் எவ்வளவு என்னை வருந்திக் கெஞ்சினாலும் நான் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கப் போவதில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுவேன்.

இரண்டாம் காட்சி

பெண்கள் பெருந்தன்மை

நிஷ்கலை—(களிப்பினால்மலர்ந்த முகத்தோடு விரைவாய் வழி நடந்து கொண்டு)

ஆஹாஹா! பெண்களைப் புருஷர் அடக்கி விட்டார்களாம்! இந்தப் பேச்சு எவ்வளவு பொய்! அப்படிக் கிருந்தும் இது உலகமெங்கும் பரவி யிருக்கிறது! பைத்தியக்காரப் புருஷர்கள்! இவர்களுக்கா நாம் கட்டுப்பட்டிருக்கிறோம்? நாம் பணிந்து நடப்பது குடும்ப ஒழுங்கைக் காக்க வேண்டுமே என்றுதான்! அதனால் நம்மை அடிமைகள் என்று எண்ணுகிறார்கள்! புருஷர்களில் வெகு சிலரே நம்சுபாவத்தைச் சரியாக அறிகிறார்கள். மற்றவர்களெல்லாம் நம்மை ஒன்று மறியாத பேதைகள் என நினைக்கிறார்கள். அவர்களைப் போல நாம் வெளிப்படையாக வீண் வீரம் பேசுவதில்லை. சமயம் பார்த்து வேலைகளை முடிக்கிறோம். அவைகளில் ஒன்றிரண்டிற்காக எதிர்க்க வேண்டி யிருந்தால் அதையும் செய்கிறோம். அப்படிச் செய்வதிலும் புருஷர்களைப் போல முரட்டுத்தனமாய்ச் செய்வதில்லை. நாம் விரும்பும் முடிவு கடைசியில் கிடைத்தே தீரும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டால் ஒன்றுமறியாதவர்கள் போலப் பணிந்து நம் மேல் அவர்கள் வீண் மனக் கசப்புக்கொள்ளா வண்ணம் மழுப்பி விடுகிறோம். நமது இத்தன்மை எளிதில் அவர்களுக்கு விளங்குவதில்லை.

உதாரணமாக, சுரதர் தம் மகளை ஏதாவது ஒரு பட்டதாரிக்கு மணக்க வேண்டுமென்கிறார். தம் கருத்துக் கிசைந்தபடி அவள் மனதைத் திருப்பி விடலாம் என்பது அவர் நம்பிக்கை. காதலின் தன்மை யறியாத பேதை! தாம் குடும்பத் தலைவன் என்பதனால் வீட்டு ஸ்திரீகள் முன் அதிகாரத்தோடு தடபுடலாய்ப் பேசிவிடுகிறார். அவர்கள் தடுத்துப் பதில் கூறுவதில்லை. அதனால் தம் யோசனையை அவர்கள் ஒப்புக்கொண்டு அதன்படி நடக்கக் கட்டாயப்படுத்தலாமென நினைக்கிறார். அவர்கள் முகஜாடையி லிருந்து அது அவர்களுக் கிஷ்டமில்லை என்றறிந்தும் அவர் தம் அதிகாரத்தைக் கொண்டே தம் கருத்தை முடிக்கப் பார்க்கிறார். அது நடக்கப் போவதில்லை. ஏனெனில் சுசீலை காதலர் கலையந்தரை, அவள் தாய் இப்பொழுது என் மூலம் அழைப்பது அவர்கள் விவாகத்தை நிச்சயப் படுத்துவதற்காகத்தான். கூட இருக்கும் அவர் தோழர் கோவியலரையும் நான் கண்டு பேசாம விருப்பேனா? சுசீலையும் நானும் ஒன்றாகவே மணப்பதாக முன்பு உறுதிகூறி யுள்ளோமாகையால் அவள் மணத்திற்காகப் பாடு படுவதில் எனக்கும் அக்கரை யுண்டு.

'இதோ அவர் வீடு. இருவருமே இங்கிருக்கிறார்கள். (கலையந்தனை நோக்கி) உமக்கொரு சந்தோஷ சாமாச்சாரம்........

க—போதும், போதும்! உங்கள் மோசம் எனக்குத் தெரியாமல் இல்லை. இனி அவளை ஒருபோதும் நம்பவே மாட்டேன் என்று போய்ச் சொல்லி விடு.

நி—உமக் கொரு நற் செய்தி கொண்டு வந்தால் என்னை இப்படியா விரட்டுகிறது?'

க—உங்கள் நற் செய்தி எனக்கு வேண்டவே வேண்டாம். உன் தோழியிடம் சொல்லி விடு அவள் வஞ்சகம் இனி என்னிடம் பலிக்காதென்று.

நி—என்ன வஞ்சகம்? உமக் கென்ன பயித்தியமா? நல்ல சமயத்தில் இப்படி முரண்டிக் கொள்ளலாமா? (கோவியலனை நோக்கி) நீங்களாவது ஒரு சிறிது அவருக்குச் சொல்லலாகாதா?

கோ—எதைச் சொல்லுகிறது? உங்கள் சூழ்ச்சிகளை யறியாத பேதைகளன்று நாங்கள். வந்த வழி பார்த்துக் கொண்டு போ.

நி—என்ன! நீர் கூடவா?

கோ—ஆம் நான் கூடத்தான். உன்னைக் காணக்கூட எனக்குப் பிடிக்கவில்லை, போ.

நி—(தனக்குள்)-இவர்களுக்கு வெறிபிடித்து விட்டதோ என்னவோ! இல்லாவிட்டால் இப்படிப் பேசுவார்களா? புருஷர்களே இப்படித்தான். ஒன்றுமில்லாததைப் பெரிதாக எண்ணிச் சந்தேகிப்பார்கள. விஷயத்தைத் தெளிவு படுத்தத் தாமும் பொறுமையாய் ஆலோசிப்பதில்லை. நாம் சொல்லப் போனாலும் கேட்பதில்லை. ஆனால் தம்முள் மனங் கசிந்து புழுங்குவார்கள். டெஸ்டிமோனாவை ஒத்தெல்லோ செய்தது போலக் கொலை செய்யவும் துணிகிறார்கள். நான் உடனே போய் சுசீலையை அழைத்து வந்து இந்த சந்தேகத்தைப் போக்கா விட்டால் குடி கெட்டு விடும். (வெளியேறுகிறாள்)

மூன்றாம் காட்சி

ஊடல்

கலையந்தன், கோவியலன், சுசீலை, நிஷ்கலை.

சுசீலை—கலையந்தரே, வெகு கோபங் கொண்டு

வாய் திறவாமலிருக்கிறீரே? நான் அப்படி என்ன செய்தேன்?

கலையந்தன்—செய்த வஞ்சனை போதா தென்று ஒன்று மறியாதவள் போலப் பாசாங்கு செய்யவும் கற்றிருக்கிறாயா?

சு—இன்று காலை நான் பேசாமற் போன தைப் பற்றித்தானே இத்தனையும்?

க—தன் வினை தன்னைச் சுடும் என்பது இப்பொழுதாவது விளங்குகிறதா?

சு—அதற்காகத்தானே? சொல்லுமே!

க—ஆமாம்; வஞ்சனைக்காரி, அதற்காகத் தான் நீயாகவே கேட்டதனால் சொன்னேன். இல்லாவிட்டால் உன் முகத்தில் கூட விழித் திருக்க மாட்டேன். இப்போதே மற்றதை யும் சொல்லி விடுகிறேன் கேள். இனி உன் நய வஞ்சத்தில் ஏமாந்து கிடப்பேன் என்று எண்ணாதே. இன்றையிலிருந்து உன்னை வெறுக் கப் போகிறேன். அதனால் என் மனம் புண் படும், பெரிதும் நான் வருந்த வேண்டியிருக் கும். பிராணன் கூடத் துடித்துப் போகும். இருந்தாலும் நான் பின் வாங்க மாட்டேன்.

சு—ஒரு அற்ப விஷயத்திற்கா இவ்வளவு கோபம்! இன்று காலை உம்மை அறியாதவள் போலச் சென்றதற்குக் காரணம் சொல்லுகி றேன் கேளுங்கள்.

க—(அவளைப் பார்க்காது முகம் திருப்பிச் சென்று கொண்டு)—காரணம் நான் கேட்கப் போவதில்லை; நீ சொல்லவே வேண்டாம்; போதும்.

சு—(அவனைப் பின் தொடர்ந்து)—காலை யில் நான்............

க—(முன் சென்று கொண்டே)—வேண்டா மென்கிறேனே!

சு—(அவனைத் தொடர்ந்து கொண்டே)— சற்றுக் காது கொடுத்துக் கேளும்.

க—மாட்டேன்.

சு—நின்று கேட்டால்தானே சொல்லலாம்.

க—எனக்குப் போதில்லை.

சு—ஒரே நிமிஷம்.

க—முடியவே முடியாது.

சு—இரண்டு பேச்சுதான்.

க—வேண்டவே வேண்டாம்.

சு—(அவனைப் பின் தொடராது நின்று)— கேட்காவிட்டால் உம்மிஷ்டம் போலச் செய்யும்.

க—(சுசீலை தன்னைத்தொடராதது கண்டு திரும்பி வந்து)—என்ன சொல்ல வந்தாய்?

சு—(அவனைப் பார்க்காது முகம் திருப்பிச் சென்று கொண்டு) அதைச்சொல்ல இப்போது எனக்கிஷ்டமில்லை.

க—(அவளைப் பின் தொடர்ந்து)—காலையில் நடந்ததற்குக் காரணம் சொல்ல வந்தாயே, அது என்ன?

சு—(முன் சென்று கொண்டே)—நான் அதைச் சொல்லப் போவதில்லை.

க—(அவளைப் பின் தொடர்ந்து கொண்டே) —கெஞ்சிக் கேட்கிறேன் சொல்லேன்.

சு—என்னைத் தடுக்கவேண்டாம் விடுங்கள்.

க—சுசீலை! தெய்வத்தின்மேல் ஆணை, நீ சொல்லித்தான் ஆக வேண்டும்.

சு—அதைச் சொல்ல எனக்கிஷ்டமிருந் தால் தானே!

க—என்னை வாட்டும் கவலையைத் தீர்க்க உனக்கிஷ்டமில்லையானால் நான் எங்காவது போய்ப் பிராணனை விடுகிறேன் போ. என்னை நீ பார்ப்பது இதுதான் கடைசி முறை.

சு—(விலகிச் செல்லும் கலையந்தனைத்தடுத்து) —எங்குச் செல்கிறீர்?

க—நான்தான் சொன்னேனே.

சு—பிராணனை விடவா போகிறீர்?

க—வேறென்ன செய்வது! நீ என்னை வெறுத்தால் என்னால் உயிர் வாழ முடியாது.

சு—நான் உம்மை வெறுக்கிறேனா! அப்படி உமக்குச் சொன்னது யார்?

க—என் மனதைப் புண்படுத்தும் கவலையை ஒளிக்க நீ மறுத்தால் அது என்மேல் உனக் குள்ள வெறுப்பினால்தானே?

சு—நானா மறுத்தேன்? நீர் கேட்க மாட்டே னென்று போனால் அது என் தப்பிதமா?

காலையில் என்கூட அத்தை இருந்தாள். எதிலும் குற்றம் காண்பது அவள் சுபாவம். அவளுக்கு நம் காதல் தெரிந்தால் நீர் செல்லுமுன் என் தந்தையிடம் போய்க் கோள் சொல்லி வைப்பாள். அவளுக்குச் சிறிதும் தெரியலாகாதென்றே காலையில் நீர் நெருங்கி வந்தும் உம்மை அறியாதவள் போலச் சென்று விட்டேன்.

க—(பெருமூச்செறிந்து)—இவ்வளவுதானா! என்னமோ என்று மலைத்தேனே! வேறெதுவுமில்லையா? இன்னொரு முறை சொல்லு.

சு—வேறெதுவுமில்லை, நீராக என்னவோ எண்ணி மலைத்தால் நான் என்ன பண்ணட்டும்!

க—என் கண்ணே, சுசீலா! உன் வாய் மொழி ஒன்றைக் கொண்டே என் மனப் புண், அத்தனையும் ஆற்றி விட்டாயே! அதில் தான் என்ன அமிர்தம் வைத்திருக்கிறாயோ! தெரியவில்லை. என்ன மாயக்காரி நீ! உன் வலலமையை அளக்க என்றால் முடியாது.

சு—இந்த வீண் புகழ் ஒன்றும் எனக்கு வேண்டாம். என் தந்தையிடம் போய் அவரைச் சரிப்படுத்தி நமது விவாகத்தை முடிக்கப் பாரும். அவர் தயவினால்தான் அது நடக்கும்.

க—அவரை எப்படிச் சரிப் படுத்துவேன்! அவர் விரும்புவது போல நீ ஒரு அரசிளங் குமரனுக்குத் தான் வாழ்க்கைப் படத் தகுந்தவள். என் மேல் ஏதோ கருணை கூர்ந்து அன்பு செலுத்துகிறாய். அது என் பூர்வ ஜன்மப் பயனாயிருக்கலாம். கடுந் தவம் புரிந்து இந்த ஜன்மத்திலேயே நான் அரச வம்சத்தில் பிறந்து உன்னை மணக்கலாமானால் அதையும் செய்யத் துணிவேன். அது சாத்தியமில்லையாகையால் வேறு எந்த வழியிலாவது உன் தந்தையைத் திருப்தி செய்து அவர் அனுமதி பெற முயல்வேன். உன் தாயும் நீயும் இதில் எனக்கு உதவி புரிய வேண்டும். உன் உதவி இருக்கும்போது எனக்குக் கைகூடாத தொன்றுமே இல்லை என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை.

சு—என் தாயாரினால் கூடியதை எல்லாம் செய்யும்படி நான் போய்க் கேட்டுக் கொள்கிறேன். நீரும் எந்த வழியிலாவது முயன்று என் தந்தையை இணங்கச் செய்யும்.

—oo✲oo—

நான்காம் காட்சி

சூழ்ச்சி

கலையரந்தன், கோவியலன், நிஷ்கலை.

கோ—நான் சொல்வதைக் கேள், கலையரந்தா! சுரதர் ஒரே பிடிவாதமாயிருக்கிறார். ஒரு உயர்ந்த பட்டதாரிக்கோ ராஜகுமாரனுக்கோ தான் தம் மகளைக் கொடுக்க வேண்டுமென்கிறார். அவருக்கு அதுவே ஒரு பயித்தியமாய் விட்டது. இந்த பித்துக்குளிக்குத் தெரியாமல் சுசீலையை நீ மணந்தால்தான் உண்டு. இல்லாவிடில் நீ அவள் ஆசையை விட்டுவிடு.

க—அவள் ஆசையை விட்டுவிடுவதா! அதைவிட உயிர் விடுவது எனக்குச் சுலபமாயிற்றே! மறு பிறப் பெடுத்து அவளை அடைவதும் கூடக் கஷ்டமாகத் தோன்றுவதில்லை.

நி—ஆமாம்; மறுபிறப் பெடுப்பது கஷ்டமில்லைதான். அது 'பழய உடையை எறிந்து விட்டுப் புதியதைக் கொள்வது போல' என்று பகவத்கீதையில் கூறுவதை நாடகத்தில் சொல்லுக்குச் சொல் நாம் அப்படியே செய்கிறோமல்லவா? நினைத்த மாத்திரத்தில் ஒருவன் பிச்சைக்காரனாகவும், ராஜகுமாரனாகவும், தோட்டியாகவும், தொண்டைமானாகவும் மாறுவதைக் காண்கிறோமே!

க—நாடகத்தில் அது நடக்கும். உலக வாழ்க்கையில் அது சாயுமா?

நி—என் சாயாது? உலகமும் ஒரு நாடக மேடைதானே! நாடகமேடை நிகழ்ச்சிகளைக் கண்டு சிரிக்கிறோம், அழுகிறோம், ஆச்சரியப்படுகிறோம், இகழ்கிறோம், வெறுக்கிறோம், துள்ளிக் குதிக்கிறோம், கோபவெறி கொள்கிறோம்; இதை விட உலக வாழ்க்கையில் அதிகமாக வேறென்ன செய்கிறோம்?

க—அதிகமாக வேறொன்றும் செய்வதில்லைதான். ஆனால் நாடகத்தில் நாம் அப்படிச் செய்வது மதிமயக்கத்தினாலே. அங்கு வரும் பொய் வேஷதாரிகளை மெய்ப் பேர்வழிகளாகக் கொண்டு விடுகிறோம்.

நி—இப்படி மதி மயங்கியவர்கள் இவ்வுலகத்தில் எத்தனை பேர்வழிகள் வேண்டும்? அவர்களுக்குச் சில விஷயங்களில் பொய் மெய்களுக்கிடையிலுள்ள வித்தியாசம் அற்றுப் போகிறது. நம் சுரதரும் அப்படிப் பட்டவர்களில் ஒருவராகும். பட்டதாரிகள் பேச்சில்

அவருக்கு முழு நம்பிக்கை. நீங்களும் அவரிடம் அவர்களைப் போலவே சென்று அவர்களது பொய் உணர்ச்சிக்குப் பதிலாக உங்களுடைய உண்மைக் காதலை அவர்கள்போலே பெருந் தோரணையில் நயமாகச் சொல்லி அவரை இணங்கும்படி செய்வது கஷ்டமன்று.

கோ—பேஷ் நிஷ்களே! நீ நன்றாகச் சொன்னாய்! பெண் புத்தி பின் புத்தி என்கிறாரே நீங்கள்! அது என்ன பேதைமை! இராஜகுமாரனைப்போலே வேஷம் பூண்டு பட்டப் பித்துக்கொண்ட சுரதரை நம் விருப்பத்திற்குச் சுலபமாய் இணங்கச் செய்யலாமென்கிறாய், அல்லவா? நிஷ்களே, உன் அழகைக்கண்டு மோகித்துக் கிடந்தேன். உனது புத்தி நுட்பம் என்னைத் திகைக்கச் செய்கிறது!

நி—இந்த வீண்புகழ் எனக்கு வேண்டாம். நடக்க வேண்டியதைச் சரிவரச் செய்து முடியுங்கள். சுசீலை கலையந்தரை மணந்தால்தான் நமது மணமும் நடக்கும். இல்லாவிட்டால் இல்லை.

கோ—அந்தக் கவலை உனக்கு வேண்டாம். உன் இனிய மொழிகளைக் கேட்டு வரும்போதே உன் யோசனைக்கேற்ற வழியும் எனக்குப் பிடிபட்டு விட்டது.

க—வழி பிடிபட்டு விட்டதா? அது இன்னது என்று எனக்குச் சொல்லு.

கோ—இம் மாதத்தில் நம்மூரில் பகல் வேஷம் போடுவது யாவருக்கும் வழக்கம். துர்க்கி அரசிளங்குமரன் இப்பொழுதிங்கு வந்திருக்கிறான். அவனுக்கும் உனக்கும் ஒரே முக ஜாடை. நீ அவன் வேஷம் தரித்தால் அவனைப் போலவே இருப்பாய். உனக்காக சுரதரிடம் நான் தூது சென்று விவாகத்தை முடிக்கிறேன், பயப்படாதே.

க—என்ன! துர்க்கி அரசிளங்குமரனாகவா என்னை வேஷம் போடச் சொல்கிறாய்? அந்த பாஷையே எனக்குத் தெரியாதே!

கோ—துர்க்கி பாஷை கஷ்டமன்று. அர்த்தமில்லாத சொற்களை அடித் தொண்டையிலிருந்து உச்சரித்து மூக்கினால் சற்று னொண னொணத்துப் பேசு. அதற்கு மேல் நான் பார்த்துக் கொள்கிறேன்.

க—இவ்வளவுதானே?

கோ—பத்து ஆட்களை, தொள தொளர்த்தியான நீண்ட துர்க்கி சட்டையும் பெருந்தலைப்பாகையும் அணியச் செய்து உன் கூட அழைத்துவா. அவர்கள் ஒரு பேச்சும் பேச வேண்டியதில்லை.

க—அதற்கென்ன? செய்கிறேன். நீ போய் மற்றவைகளை முடி.

ஐந்தாம் காட்சி

"மமமுஷி"

சுரதனும் கோவியலனும்.

கோ—(பெருந் தலைப்பாகையும், தொள தொளர்த்தியான நீண்ட சட்டையு மணிந்து கிழவனைப்போன்ற வெள்ளைத் தாடியோடு தரை வரைக்கும் குனிந்து ஸலாம் செய்து கொண்டே)—ஐயா, சுரதரே! நான் யார் தெரிகிறதா?

சு—தெரியவில்லையே!

கோ—(தரையிலிருந்து இரண்டடி கையை உயர்த்தி)—நீர் அவ்வளவுண்டு இருந்தபோது பார்த்திருக்கிறேன்.

சு—என்னைக் குழந்தைப் பருவத்தில் நீர் பார்த்திருக்கிறீரா?

கோ—அப்போது உம்மை வெகு அழகான குழந்தை என்று சிறுமியர் ஆவலோடு அணைத்து முத்தமிடுவார்கள்.

சு—என்னையா? நிஜமாகவா?

கோ—நிசமாகத்தான். உமது தந்தை எங்கள் நகருக்கு வருவார். அவர் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர் என்று எங்கள் ஸுல்தான் அவரை கௌரவமாக நடத்துவார். எனக்கு அவரை வெகு நன்றாகத் தெரியும்.

சு—எனது வம்சம் அவ்வளவு உயர்ந்ததா? என் தந்தையை உமக்கு நன்றாகத் தெரியுமா? அவர் பட்டு வியாபாரம் செய்ததாக இங்கு சிலர் உளறுகிறார்களே?

கோ—அது உண்மை யறியாதவர்கள் பேச்சு. அவருக்குப் பட்டுத் துணிகளின் தராதரம் நன்றாகத் தெரியும். அதனால் அவர் பல நாடுகள் சென்று பலவகைப் பட்டுகளை வாங்கி வருவார். யாருக்கு எது பிடித்தாலும் அதைக் கொடுப்பார். அவ்வளவுதான்.

சு—அப்படியா செய்தி! சரி, நீர் வந்த விஷய மென்ன?

கோ—துர்க்கி அரசிளங்குமரர் இவ்வூர் வந்திருப்பது உமக்குத்தான் தெரியுமே.

சு—அப்படியா? எனக்கது தெரியவே தெரியாது.

கோ—இங்கு வந்த சில நாட்களுக்குள் அவர் உமது மகளைக் காண நேர்ந்தது. அப்போது அவர் என்னுடன், 'மரா பாபா ஸாஹெம்' என்றார். அப்படி என்றால் என்ன தெரியுமா?

சு—தெரியாது. அது என்ன பாஷை?

கோ—துர்க்கி பாஷை. அது வெகு அழகானது. 'மரா பாபா ஸாஹெம்' என்றால் 'அவள் மேல் என்ன காதல் கொண்டேன்!' என்று பொருள்.

சு—நல்ல பாஷைதான். ஆனால் 'மரா பாபா ஸாஹெம்' என்பது 'அவள் மேல் என்ன காதல் கொண்டேன்!' எனப் பொருள் படும் என்று நான் கனவிலும் எண்ணியதில்லை.

கோ—'கக்கரக்க முஷென்' என்றால் என்ன தெரியுமா?

சு—'கக்கரக்க முஷெ'னா? தெரியாதே.

கோ—'கக்கரக்க முஷென்' என்றால் 'என் ஆருயிரே' என்று பொருள்.

சு—'என் ஆருயிரே' என்பதற்கு யாராவது 'கக்கரக்க முஷென்' என்பார்களா? வெகு வேடிக்கையான பாஷைதான் அது.

கோ—நான் உம்மிடம் வந்தது எதற்கு என்றால் எங்கள் அரசிளங் குமரர் உமது மகளை மணக்க விரும்புகிறார். அதற்கு முன் உம்மை 'மமமுஷி'யாக்கப் போகிறார். அதை ஏற்க நீர் தயாராக வேண்டும்.

சு—என்னை 'மமமுஷி'யாக்குவதா? அப்படி என்றால் என்ன?

கோ—எங்கள் ஸுல்தான் வழங்கும் பட்டங்களுள் 'மமமுஷி' என்பதுதான் உயர்ந்தது. அப் பட்டதாரிக் குடும்பத்தில்தான் அரசர் பெண் கொள்ளலாம்.

சு—அப்படியா! 'மமமுஷி'யாவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? உமதரசிளங்குமரருக்கு எனது நன்றியறிவைச் செலுத்துகிறேன். நான் இப்பொழுது செய்ய வேண்டியதைச் சொல்லும்.

கோ—நான் கொணர்ந்துள்ள இவ்வுடைகளை நீர் தரித்துக் கொண்டால் அவரே நேரில் வந்து உம்மை 'மமமுஷி'யாக்கி உமது மகளை மணப்பார்.

சு—எனக்கு ஒரு பயமிருக்கிறது. என் மகள் சற்றுப் பிடிவாத குணமுடையவள். கலையந்தன் என்றொருவனைக் காதலிக்கிறாள்; வேறு யாரையும் கண்ணெடுத்துக் கூடப் பார்க்க மறுக்கிறாள். என் அதிகாரத்திற்குக் கட்டுப் பட அவள் மறுத்தால் என்ன செய்வதென்றுதான் பயப்படுகிறேன்.

கோ—அதைப் பற்றி நீர் கவலைப் படவேண்டாம். இவ்வரசிளங்குமரரைக் கண்ட மாத்திரத்தில் அவளே அவரை ஒப்புக் கொள்வாள். அவர் பெருந்தன்மையைப் பாரும். சொன்னபடி அவரே இதோ வந்து விட்டார்.

(கலையந்தன் ஆட்களோடு வருதல்)

க—(துர்க்கி அரசிளங் குமரனைப் போல உடைதரித்து)—'சுரதரு ஸலாமலேக்கி, உஸ்தின் யோக் கட்டமலேக்கி ப்ரஸம் பாறே அல்லா மோரம்'.

கோ—அவர் சொல்லுகிறார்: 'சுரதரே, வந்தனம். தெய்வம் உமக்குச் சிங்கத்தின் பலத்தையும் சர்ப்பத்தின் அறிவையும் அருள்வாராக' என்று.

சு—அப் பெருந்தகை என்னைப் பெரிதும் கௌரவிக்கிறார். அவருக்கு எல்லா பாக்கியங்களும் உண்டாகுக.

கோ—'ஒஸ்ஸா பினுமென் ஸடோக் பாபல்லி ஒராகோவ் உராம்'.

க—'பெல்மென்'.

கோ—அவர் சொல்வது: துரிதமாகச்சென்று நாமளிக்கும் பட்டம் பெற்று உமது மகளையழைத்து நமக்கு மாலையிடச் செய்யும்'.

சு—இரண்டு சொற்களிலா இத்தனை விஷயங்கள்!

கோ—ஆமாம், துர்க்கி பாஷையின் அழகு அதுதான். பொருள் பல விளக்க, சுருங்கச் சொன்னாலே போதும். இனி காலத்தை வீணாக்க வேண்டாம். விவாகத்தைச் சீக்கிரம் சென்று முடியும்.

தட்டு ஜய பேரி!

(குழந்தைகளின் அன்பன்)

அச்சந் தவிர்! அச்சந் தவிர்!
என்று தட்டு பேரி
ஆர்வம் மிகக் கொண்டு இந்த
அடிமை வாழ்வை நீக்க
கச்சை கட்டி யாருமொரு
கருத்துடனே பெரியர்
காட்டும் வழி நிற்க வென்று
கழறித் தட்டு பேரி! 1

வாட்டும் வறுமைப் பிணியை மாய்க்க
வழிகளருளு மாறு
வாழும் பெரியர் அடியிணையை
வாழ்த்திக் கொட்டு பேரி!
நாட்டிலெங்கும் இன்ப மலர்
நன்கு மலர வென்று
நவிலரிய தமிழினி தான்
நாடிக் கொட்டு பேரி! 2

தமிழ் தமிழ் தமி ழென்று
தட்டு ஜய பேரி!
தழைத்த பெரும் புதுக் கலைகள்
தமிழினிலே தழைய
அமிதமான கலைகள் கற்ற
அறிஞரடி பேணி
அட்ட திக்கும் அதிருமாறு
தட்டு ஜய பேரி! 3

அன்னை வாழ்க

முடிவுரை

உலகியற்கை

நிஷ்கலை.(தனியாக)அப்பாடா! இரு விவாகங்களும் சந்தோஷகரமாகவே முடிந்தன. இதற்கு எவ்வளவு பாடு! காதலர்மனமொத்திருந்தும் சந்தேகங்கள்கிளம்பாமலிருக்கவில்லை. அவைகளைப் போக்க என்ன பொறுமை வேண்டியிருந்தது. பட்டப் பித்து ஒரு பெருந்தடையாக வந்தது. அதை வெல்ல ஏதேதோ யுக்தி செய்ய வேண்டியதாயிற்று. இவ்வுலக இயற்கையை என்னென்று சொல்வது! நன்மையும் தீமையும் இங்கெப்பொழுதும் கலந்தே இருக்கின்றன. இப்படி இருக்க வேண்டுமென்பது கடவுளின் சித்தம் போலும். ஆனால் விஷயங்களின் முடிவு தற்சமயம் எப்படிப் பட்டதாயினும் கடைசியில் நன்மை பயப்பதாகவே காணப்படுகிறது. இதுவும் அவனருளே யாகும்.

ஒலி மின்சாரக் கருவியின் அரிய சேவைகள் யாவை ?

"விஞ்ஞான போதகர்"

சாஸ்திர ஆராய்ச்சிகளினால் உண்டாகும் புதிய இயந்திர விநோதங்களினால் உலகத்தில் பல காரியங்களை வெகு சீக்கிரமாயும், இலகுவாயும் முடித்துக் கொள்ள முடிகிறது. குறைந்த முயற்சியில் கடுந்த வேலையைச் சொற்ப நேரத்தில் செய்யவும், செய்த வேலையைப் பல முறை திரும்பத் திரும்பச் செய்யாமலும், மனிதரின் இயற்கைத் தவறுதல்கள் ஏற்படாமலும் காரியங்களை முடிப்பதற்குத் தானாகவே புரியும் இயந்திரங்கள் அதிகம் உபயோக மாகின்றன. தற்காலம் அரிய, பெரிய, சிறிய வேலைகளனைத்தையும் சிறு பொத்தானை அமிழ்த்தியவுடனே அல்லது சிறிய கம்பியை இழுத்த மாத்திரத்தில் காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றலையுடைய அதி அற்புத இயந்திரக் கருவிகள் ஆயிரக் கணக்காயுண்டாகிவிட்டன. தானாகவே காரியங்களைச் செய்யும் அற்புத அமைப்புகளில் ஆகாயத் தந்தி, ஒலி பரப்புங் கருவி, மின்சார வண்டிகள், மோட்டார் விமானங்கள் போன்ற எண்ணிலா வகைகளில் வெளிச்சத்தால் உண்

டாகும் மின்சாரக் கருவியும் தலை சிறந்து விளங்குகிறது. தற்காலம் இந்த 'போட்டோ எலெக்ட்ரிக் செல்' என்று சொல்லப்படும் ஒளி மின்சாரக் கருவி சகல வேலைகளையும் தானாகவே நமக்கு முடித்து சௌகரியத்தை அளிக்கும் அவ்வளவு அற்புதமான அரிய சக்தி வாய்ந்ததா யிருக்கிறது.

வெளிச்சம் ஏதாவதொரு உலோகத்தில் விழுந்தால் அப் பதார்த்தத்திலிருந்து மின்சார அணுக்கள் வெளிக்கிளம்புகின்றன வென்று கடந்த மாத 'ஜோதி'யில் மின்சாரம் உண்டாகும் பல வகைகளில் ஒளியா லுண்டாகும் மின்சாரத்தையும் குறிப்பிட் டிருக்கிறோம். ஒளியானது உலோகத் தகடுகளிலும் உப்பு வகைகள் பூசப்பட்ட தகடுகளிலும் தாக்கினால் அதிகமான மின்சார அணுக்கள் புற்றீசல்போல் புறப்படுகின்றன வென்றுங் கூறினோம். இவ்வாறு வெளிச்சம் தாக்கி



'போடோ எலெக்ட்ரிக் செல்' எனும் ஒளி மின்சாரக் கருவி.

மின்சாரம் உண்டாகும் தகடும், மின்சார அணுக்களைச் சேர்த்துக் கிரகிக்கும் வலையும் ஒரு சிறிய கண்ணாடிக் குழலில் அமைக்கப் படுகின்றன. இவ் விதமான கருவிக்கு ஒளி மின்சாரக் கருவி (Photo-Electric Cell) என்று பெயர்.

இக் கருவியில் ஏற்படும் மின்சார சக்தி வெகு குறைவானதால் அதன் சக்தியை அதிகப் படுத்துவதற்கு 'வால்வ்' (Thermionic Valve) என்று சொல்லப்படும் உஷ்ணத்தா லுண்டாகும் மின்சாரக் கருவி உபயோகப் படுகிறது. இக் கருவியைப் பற்றியும் கடந்த மாத 'ஜோதி'யில்



'வால்வ்' எனும் உஷ்ண மின்சாரக் கருவி.

குறிப்பிட் டுள்ளோம். 'வால்வ்' கருவியில் உண்டாகும் மின்சார அணுக்களோடு ஒளி மின்சாரக் கருவியின் மின்சார அணுக்களைச் சேர்த்து சக்தியை அதிகப் படுத்துகின்றனர்.



ஒளி மின்சாரக் கருவியை உஷ்ண மின்சாரக் கருவியோடு இணைத்து மின்சார சக்தியை அதிகரிக்கும் சிறியதோர் மாதிரி. சில வேறு கருவிகள் காட்டப்படவில்லை.

O = வெளிச்சம் உண்டாகும் இடம்

L = வெளிச்சக் கதிர்களைச் சேர்த்து முனை காட்டும்கண்ணாடி.'லென்ஸ்'

S = சிறு துவாரம்

E = ஒளி மின்சாரக் கருவி (Photo Electric cell)

V = உஷ்ண மின்சார கருவி (Thermionic valve)

B_1, B_2 = மின்சாரப் பொறிகள் (Batteries)



ஒளி மின்சாரக் கருவியும், உஷ்ண மின்சாரக் கருவியும் சேர்த்து அமைத்துள்ள பெட்டி.

ஒளி மின்சாரக் கருவியில் வெளிச்சம் விழுந்தால் மின்சாரம் உடனே யுண்டாகி பல வேலைகள் தானாகவே நடந்தேற முடிகிறது. வெளிச்சம் தடைப்பட்ட மாத்திரத்தில் மின்சார அணுக்களும்உண்டாகாமல் போகவே காரியங்களும் தடை பட்டுப் போகின்றன. இவ்வரிய செய்கையால் வெகு சொற்ப அமைப்பில் அனேக அற்புதச் செயல்கள் தானாகவே செய்யப் பட்டு வருவதைக் கேட்க ஆச்சரியமாகவே யிருக்கும்.

ஒரு ஹோட்டலில் வேலை செய்பவன் ஓர் அறையினுள் காப்பி முதலியவைகளைத் தட்டிலேந்திக் கொண்டு

ஒளி மின்சாரக் கருவிக்குள் செலுத்தப்படும் வெளிச்சம் உண்டாக்கும் மின்சார விளக்கு.

போக வேண்டுமாயின் அவன் கதவைத் தட்டால் மெதுவாகத் தள்ள வேண்டியிருப்பதாலுண்டான ஆபத்துகள் அனேகம். அவனே தள்ளித் திறவாமல் மற்றொருவர் திறந்து கொடுத்தால் எவ்வளவோ உதவியாயிருக்கும்? இவ்வேலையை ஒளி மின்

சாரக் கருவி வெகு எளிதில் முடித்துக் கொடுக்கும். வாசலில் ஒரு புறத்திலிருந்து சிறிய வெளிச்சக் கதிரை ஒரு மின்சார விளக்கிலிருந்து நேர் முகமாக மறு புறத்திலமைக்கப் பட்டுள்ள ஒளிக் கருவியினுள் சதா செலுத்தப் பட்டிருக்க வேண்டும். இந்நிலையில் உண்டான மின்சாரத்தால் காந்த சக்தியுடைய தாழ், கதவைப் பூட்டி வைத்திருக்கும். இந்த நிலையில் வேலைக்காரன் வாசலுக்குள் செல்லும் போது குறுக்காகப் பாய்ந்து விழும் வெளிச்சத்தைத் துண்டு தறித்து விடுவதால் அத்தருணத்தில் மின்சாரம் உண்டாகாமல் போகவே காந்த சக்தியுடைய தாழ் வெளிவந்து கதவு தானகவே திறந்து இவன் அப்பால் போனவுடன் எப்பொழுதும் போல வெளிச்சக்

ஒளி மின்சாரக் கருவியால் வேலைக்காரி தட்டு கொண்டு போகும்போது கதவு தானகத் திறக்கிறது.

கதிர் ஒளி மின்சார கருவியினுள் விழுந்து மின்சாரம் உண்டாகி கதவு தானகவே இழுத்து சாத்தப்படுகிறது.

இது போலவே மோட்டார் வண்டி தங்கியிருக்கும் விடுதியின் கதவுகளையும் தானகவே திறக்கவும் மூடவும் செய்யலாம். இவ் விடுதிகளில் ஒளி மின்சாரக் கருவிகள் அமைந்திருந்தால் மோட்டார் நெருங்கி வரும் போது அதன் முன்னுள்ள மின்சார விளக்கின் வெளிச்சம் அதன் மேல் விழவும், மின்சாரம் உண்டாகி கதவு தானகவே திறந்து கொள்ளவும் மோட்டார் உட்சென்று வெளிச்சம் மறைந்தவுடன் கருவியின் மின்சாரம் உண்டாகாமல் போகவே எப்பொழுதும் போல கதவு, சில இழுக்கும் கருவிகளால் தானகவே மூடிக் கொள்ளவும் முடிகிறது. இதுபோலவே புகை வண்டிகள் இரவில் ஓடி வரும்போது அதன் முன் பிரகாசிக்கும் பெரிய மின்சார விளக்கின் வெளிச்சம் ஆங்காங்கு அமைத்துள்ள ஒளி மின்சாரக் கருவியில் விழுந்து அதிலிருந்து இணைத்துள்ள அபாயக் குறிகளைத் தெரிவித்துக் கொள்ள முடிகிறது. வண்டி கடந்துசென்றவுடன் அபாயக் குறி அமர்ந்துவிடுகிறது. இப்படியில்லாவிட்டால் சதா மின்சாரம் எரிந்து வீண் செலவாகிறது.

ஒளி மின்சாரக் கருவியினுதவியால் திருடர்களைக் கையோடு பிடிக்க முடிகிறது. இங்கே கண்ணுக்குப் புலப்படும் சாதாரண வெளிச்சம் உபயோகிப்பதில்லை. 'இன்ப்ராரெட்' (Infrared) என்ற கண்ணுக்குப் புலனுகாத வெளிச்சத்தை வாசலில் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் சென்று ஒளி மின்சாரக் கருவியில் விழச்செய்தால் திருடர்களுக்கு இவ்வெளிச்சம் குறுக்காக ஓடுவது தெரியாமல் வாச

லருகில் சென்றதும் கதவு திறக்கப் பட்டு அவர்கள் உட்சென்றதும் கதவு தானுகவே நன்ருய் பூட்டிக் கொள்ளு கிறது. அவ்வாறு பூட்டிக் கொண்ட



ஓர் ஆபீஸின் வாசல் முன் அமைக்கப்பட் டிருக்கும் ஒளி மின்சாரக் கருவி.

ஒளி மின்சாரக் கருவியி லிருந்து அடுத்துள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு கம்பியால் மின்சாரமணியை இணைத்து விட்டால் திருடர் உட் சென்றதும் அல்லது பாங்கிப் பெட்டிகளை உடைக் கும் போதும் போலீஸ் அதிகாரி தெரிவிக்கப்பட்டு கள்ளனைக் கை யோடு பிடித்துவிட முடிகிறது.

ஒளி மின்சாரக் கருவியையும் மேற் கூறிய கண்ணுக்குப் புலனுகா வெளிச் சத்தையும் வீட்டு வாசலில் அமைத்து ஒளி மின்சாரக் கருவியை பேசுங் கருவியோடு இணைத்துவிட்டால் யாரா வது வீட்டிற்குப் புதிதாக விருந் திற்கு வந்தால் அவர் வாசலில் நுழைந்து குறுக்காகக் கண்ணுக்குப் புலனுகாமல் ஓடும் வெளிச்சத்தை மறைத்த மாத்திரத்தில் 'தங்கள் வரவு நல்வரவாகுக' வெனச் சப்தம் உண்டாகும்படி செய்து விருந்தாளி



இரும்புப் பெட்டி அறையின் கதவுகளில் ஒளி மின்சாரக் கருவியால் பூட்டப்படும் காந்தத் தாழ்கள் அமைக்கப்பட் டிருக்கும் விதம்.

யோடு அபாயமணியை அடிக்கவும் செய்யலாம். அல்லது திருடர் ஓர் ஆபீஸை கைவைப்பதா யிருந்தால் களை உபசரித்து ஸ்தம்பித்து விடச் செய்யலாம்.

பெரிய ஆலைகளில் அடுப்புகளிலி

ருந்து புகை ஏராளமாக 'சிம்னிகள்' வழியாக மேலே போய்க் கொண்டிருக்கும். இவ்வாறு ஏற்படும் புகையின் அதிகத்தையும் குறைவையுங் கொண்டு அடுப்பு எரியும் தன்மையைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

பெரிய மருந்துச்சாலைகளில் பலவித சேர்க்கையால்உண்டாக்கப்படும் திராவகங்களை போத்தல்களில் அடைத்த பிறகு அத் திராவகங்கள் யாவும் கலப்புடன் கூடியவைகளா யிருப்பதைத் தெரிந்து கொள்ள ஒவ்வொரு போத்



ஆலைகளில் புகைக் குழாய்களில் மேற்செல்லும் புகையின் தன்மையைத் தெரிந்து கொள்ள வெளிச்சம் ஒரு புறத்திலிருந்து புகையை ஊடுருவிச் சென்று ஒளி மின்சாரக் கருவியில் விழுவதைக் காணலாம்.

இதற்காக அடுப்புகளுக் மேலே புகையை வெளிப்படுத்தும் கோபுரங்களில் குறுக்காக ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்கு ஓடும்படியாக வெளிச்சத்தை அமைத்து, அவ்வெளிச்சம் ஒளி மின்சாரக் கருவியில் விழும்படி செய்யப்படுகிறது. இப்படியிருக்கும் பொழுது புகை அதிகமாய் வந்தால் வெளிச்சம் அதிகம் சிதறப்பட்டு ஒளி மின்சாரக் கருவியில் வந்து விழுகிறது. புகை கொஞ்சமாய் வந்தால் வெளிச்சத்தின் அளவுக்குத் தகுந்தவாறு ஒளி மின்சாரக் கருவியில் மின்சாரம் உண்டாகி புகையின் தன்மையைப் 'பதிவு' செய்யும் இயந்திரத்திற்கு உதவி புரிகிறது. மேலும் இதே அமைப்புகளால் எங்காவது திடீரென்று நெருப்புப் பிடித்துப் புகையுண்டானதும் அபாய மணியை அடிக்க பெரிய ஆலைகளில் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

தலையும் மேற் கூறியவாறு ஒரு புறமிருந்து மறுபுறம் ஒளி மின்சாரக் கருவியில் விழும் வெளிச்சத்தின் நேர் பாதையில் வைத்து எடுத்தால் போத்தல்களினுள்ள திராவகத்தின் ஒரே தன்மையை உணர்ந்து கொண்டு தகுதியற்றதை எடுத்து விடலாம்.

பெரிய அச்சாபீஸ்களில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் அச்சாகி வெளிவரும்போது அவைகளை எண்ணுவதென்றால் இலேசான காரியமல்ல. சாதாரண முறையில் எண்ணும்போது தப்பான எண்ணிக்கை ஏற்பட ஏதுவுண்டு; அதிக சிரமமுமுண்டு. இக்காரியத்திற்கு ஒளி மின்சாரக் கருவி மிகவும் உபயோகப் படுகிறது. பத்திரிகைகளோ அல்லது சிறிய மூட்டைகளோ இயந்திரங்களிலிருந்து முடிவாகி வெளியே சிறிய கால்வாய் போன்ற வழிகளில் தள்ளப்படுகின்



பத்திரிகைகள் முடிவாகி கால்வாயில் ஒவ்வொன்றாய் வேகமாய் தள்ளப்படும் போது ஒளி மின்சாரக் கருவியால் எண்ணப் படுகிறது.

றன. அக்கால்வாய்களில் ஒரு புறம் ஒளி மின்சாரக் கருவியையும் மறு புறம் வெளிச்சக் கதிர் உண்டாகிப் பாய்ந்து வரவும் செய்தால் பத்திரிகைகள் வெளிச்சக் கதிரைக் கடந்து, கடந்து போகும் போது வெளிச்சம் சிறிது, சிறிது தடுக்கப் படுவதால் மின்சாரக் குழலில் மின்சாரம் நின்று நின்று உண்டாகிறது. இவ்வாறு விட்டு விட்டு உண்டாவதைக் கணிக்க ஓர் 'மீட்டர்' (Metre) கருவியை ஏற்படுத்தினால் எத்தனை பத்திரிகைகள் கடந்து சென்றனவென்று எளிதில் பிழையறத் தெரிந்து கொள்ளலாம்.

காகிதம் செய்யும் இயந்திர சாலைகளில் காகிதங்கள் ஓரங்களில் கிழிந்து போயிருப்பதைத் தெரிவித்து அதனை இயந்திரக்காரன் எடுத்து விடும்படியாகவும் தெரிவிப்பதற்கு ஒளி மின்சாரக் கருவியை அமைத்துக் கொள்ளுகின்றனர். காகிதம் செய்யப் பட்டுச் சுற்றிக் கொண்டே வரும் போது எங்காவது கிழிந்திருந்தால் குறுக்காக வரும் வெளிச்சத்தை அனுமதித்து ஒளி மின்சாரக் கருவியில் விழுவும் உடனே மணியடித்துக் கிழிந்திருப்பதைத் தெரிவிக்கிறது.

வேட்டை நாய், குதிரை முதலிய பிராணிகள் ஓடும் பந்தயங்களில் அவைகள் ஓடி முடிந்த நேரத்தைக் கணிக்க ஒளி மின்சாரக் கருவி உபயோகமாகிறது. குதிரைகள் வரிசையாக நின்று குறுக்குக் கயிறுகள் தூக்கப் பட்டதும் கடியாரம் தானாக ஓடச்செய்யப்படுகிறது. பின்பு வெளிச்சத்தைப் பந்தயப்பாதைக்குக் குறுக்காக ஓடச்செய்து ஒளி மின்சாரக் கருவியில் விழச் செய்யப் படுகிறது. குதிரைகள் சுற்றி வந்து குறுக்காகப் போய்க் கொண்டிருக்கும்



பந்தயக் குதிரை ஓடி வெற்றியடைந்த நேரத்தைப் பெரிய கடிகாரம் காட்டுவதற்கு ஒளி மின்சாரக் கருவி உபயோகப் படுகிறது.

வெளிச்சத்தைத் தடுத்த மாத்திரத்தில் ஒளி மின்சாரத்தில் மின்சாரம் தடைப்பட்டு கடிகாரம் உடனே நின்று விடுகிறது. இதனால் குதிரைகள் ஓட ஆரம்பித்துக் கடைசியாக வெற்றிக் கம்பத்தை அடைந்த நேரத்தையாவரும் அறிந்து கொள்ள ஒரு

பெரிய கடியாரத்தை ஒளி மின்சாரக் கருவியில் இணைத்து உபயோகப் படுத்த முடிகிறது.

ஒளி மின்சாரக் கருவி வெளிச்சத்தின் அதிகத்தையும் குறைவையும் மிக நுட்பமாக அளவிட முடியும். ஆகவே சூரிய வெளிச்சம் மாலையில் குறைந்த சமயம் ஒளி மின்சாரக் கருவியில் வெளிச்சம் குறைவாக விழ ஏற்பட்டு தெருவிலுள்ள மின்சார விளக்குகளை ஏற்றுவிக்கும் சாவியைப் பொருத்தி விளக்குகளை ஏற்றுவிக்கவும், பின்பு காலையில் சூரிய வெளிச்சம் உண்டாகி ஒளி மின்சாரக் கருவியில் விழுந்ததும் முன்பு பொருத்திய சாவியைப் பிரித்து விட்டு மின்சார விளக்குகளைத் தானாகவே நிறுத்திவிடச் செய்யவும் முடிகிறது. முக்கியமாக மேகம் இருண்டு அல்லது தூசு படிந்து இருள் ஏற்பட்டால் உடனே நமக்குத் தெரியாமல் தெருக்களில் விளக்கேற்றி வைக்கவும் பின்பு இருள் கடந்தவுடன் விளக்கை அணைத்து விடவும் சாதகமாயிருக்கிறது.

மோட்டார் வண்டியிலும் இதே மாதிரி அமைத்து சூரியன் அஸ்தமனமாகி அல்லது இருள் கவிந்து வெளிச்சம் குறைந்தவுடன் தானாகவே மோட்டார் விளக்கை ஏற்றும்படி செய்ய முடிகிறது. இதனால் வண்டி யோட்டுபவன் விளக்கேற்ற மறந்து போலீஸ் தண்டனைக்குட் படும் உபத்திரவம் ஒருவாறு ஒழிந்து போகுமல்லவா? பெரிய தெருக்களில் ஒவ்வொரு கம்பெனியும் இராத்திரியில் மின்சார எழுத்துகளால் விளம்பரங்களை ஏற்படுத்தி யிருப்பார்கள். இவ்வித விளம்பர மின்சார எழுத்துக்கள் மாலை நேரங்களில் எரிந்து பிரகாசிக்கச் செய்ய ஒரு மனிதன் போய் சாவியைத் தட்டிவிட வேண்டும். இல்லாவிட்டால் ஒரு சிறு கடியார அமைப்பு வைத்து மணி ஆறு ஆனதும் சாவி பொருந்தும்படி செய்யலாம். இவ்விரண்டு வகையிலும் அவ்வளவு திருப்திகரமாக சாவியை ஏற்றவும் அணைக்கவும் செய்ய முடியாது. மனிதனிருந்தால் அவன் காலையிலும் மாலையிலும் போய் சண் காணிக்க மறந்துவிட்டால் அதிக நஷ்டம் உண்டாகும். கடிகார அமைப்பிலும் சதா கண்காணிப்பு வேண்டி யிருக்கிறது. மேலும் இவ்விருவகையிலும் நடுப்பகலில் இருள் கவிந்து கொண்டால் விளம்பர மின்சார எழுத்துகளை எரியவுஞ் செய்ய முடியாது. ஆகவே இருள் கவிந்த எந்தச் சமயத்திலும் அதாவது சூரியவெளிச்சம் குறைந்து ஒளி மின்சாரக் கருவியில் மின்சாரம் உண்டாகத் தடைப்பட்ட எல்லாச் சமயத்திலும் விளம்பரமின்சார எழுத்துக்கள் எரியும்படி சாவியைத் தட்டிவிட முடிகிறது. இதனால் குறைந்த செலவில் மிகுந்த விளம்பரஞ் செய்து கொள்ள ஏதுவா யிருக்கிறது.

படக்காட்சி சாலைகளில் படங்களைப் பேச வைப்பதற்கு ஒளி மின்சாரக் கருவி அத்யாவசியமா யிருக்கிறது. படம் பிடிக்கும்போது ஒலி பரப்புங் கருவியின் மூலம் சப்தங்களை மின்சார சக்தியாக்கி அச்சக்தியால் வெளிச்சத்தை அசைந்தாடச்செய்து காட்சிகளை படம் எடுத்துக்கொண்டே யிருக்கும் போது அதன் ஓரத்தில் அவ்வெளிச்சத்தை விழும்படி செய்தால் சுருளில் இருட்டாகவும், வெளிச்சமாகவும் கோடு கோடாக முதலாவது உண்டாக்கிய சப்தத்திற்குத் தகுந்தவாறு ஓரிடத்தில் இலேசான இருட்டாயும்மறுவிடத்தில் அதிகம் இருட்டாயும் உண்டாகும். இருட்டா யிருக்கும் பாகத்தில் சப்தம் குறைவாயும், தெளி

வாயிருக்கும் இடங்களில் சப்தம் அதிகமானதாயுமிருக்கும்.

புகைப் படங்கள் அனுப்பும் விதத்திற்கும் ஒளி மின்சாரக் கருவி அத்யா



படச் சுருளில் பேச்சை வெளிச்சமாக்கி

அமைத்திருப்பதை இடதுபுற ஓரத்தில் காணலாம்.

இவ்வாறு காட்சியையும், சப்தத்தையும் ஒருங்கே படச் சுருளில் அமைத்த பின்பு காட்சி சாலைகளில் கொணர்ந்து காட்சிப் பாகத்தைத் திரையில் காட்டும் அதே சமயம் படச் சுருளின் ஓரத்தில் சிறிய வெளிச்சக் கதிரைச் செலுத்தி அதன் மறுபுறத்தில் ஒளி மின்சாரக் கருவியில் விழச் செய்து அதி லுண்டான மின்சார சக்தி திரை மறைவி லுள்ள ஒலி பரப்புங் கருவியை அசைத்து மறுபடியும் முன் போன்ற சப்தம் உண்டாக்கப் படுகிறது.

அதாவது படச் சுருளில் சப்தம் ஒளியாக அமைக்கப்பட் டிருப்பதை மறுபடியும் ஒளியை அதில் செலுத்தி ஒளி மின்சாரக் கருவியால் மின்சார சக்தியாக மாற்றிப் பின்பு இம் மின்சார சக்தியை ஒலி பரப்புங் கருவியால் சப்தமயமாக்கப் படுகிறது.

'போட்டோ டெலெகிராபி' (Photo Telegraphy) என்று சொல்லப்படும் ஆகாயத் தந்தி மூலம் வசியமா யிருக்கிறது. இங்கே புகைப் படத்தை ஒரு சுழலும் நீண்ட குழாயில் சுற்றப் படுகிறது. இந்தக் குழாய் மெதுவாகச் சுழல்வதோடு நேராக நகர்ந்து கொண்டும் செல்லும். இதன் மீது கூரிய வெளிச்சக் கதிரைப் பிரதி பிம்பிக்கச் செய்து ஒளி மின்சாரக் கருவியில் விழுந்தவுடன் புகைப்படத்தின் வெண்மை கருமைக்குத் தகுந்த வண்ணம் ஒளி மின்சாரக் கருவியில் மின்சாரம் உண்டாகிறது. இந்த மின்சாரத்தை 'வால்வ்' என்ற கருவியில் புகுத்தி ஆகாய மார்க்கமாய் கம்பியில்லாத் தந்தி மூலம் மற்றோரிடத்திற்கு அனுப்பி அங்கு வந்து சேரும் மின்சார அலைகளை மறுபடியும் ஒலி பரப்புங் கருவி கொண்டு ஒளி மயமாக்கி அவ் வொளியை முன்போல பட



ஆகாயத் தந்தி மூலம் போட்டோ படங்களை மற்றோரிடத்திற்கு அனுப்ப, ஒளி மின்சாரக் கருவி, வெளிச்சம் பிரதிபிம்பிக்கப் படும் படச் சுருளும் அமைக்கப் பட்டிருக்கும் சிறிய பெட்டி.

மெடுக்க முடிகிறது. மேனாடுகளில் 'டெய்லி டெலிகிராப்' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள் இவ்விதமாகவே வெளி நாட்டுக் காட்சிப் படங்களைப் பெற்று அச்சு வாகன மேற்றுகிறார்கள்.

மேலே கூறியவாறு படத்தைப்பேச வைக்கும் முறையையும், போட்டோ படங்களை ஆகாயத் தந்தி மூலம் அனுப்பப்படும் வகையையும் சேர்த்து 'டெலிவிஷன்' (Television) என்ற தூரப் பார்வை அதாவது தற்கால 'ரேடியோ' மாதிரி இருந்த விடத்திலேயே காட்சிகளையும், பேசுவதையும் ஒருங்கே சேர்த்து கண்டும், கேட்டும் ஆனந்திக்கக் கூடியதை அமைக்க முடிகிறது. அதாவது படச் சுருளில் அமைக்கப்படும் காட்சிகளையும், சப்தப் புகைப் படத்தையும் வெளிச்சத்தைக் கொண்டு ஒளி மின்சாரக் கருவிகளில் மின்சார மயமாக்கி காட்சியும், பேச்சும் மின்சார அலைகளாக ஆகாயத்தில் அலைந்து மற்றோரிடத்தில் கிரகிக்கப்பட்டு முன்போல வெளிச்ச மயமாக்கிப் பின்பு ஒன்றைக் காட்சியாகவும், மற்றதைச் சப்தமயமாகவும் மாற்றி ஒரே சமயத்தில் காணவும், கேட்கவும் செய்து கொள்ள முடிகிறது. என்ன ஆச்சரியம் பாருங்கள்!

ஆகவே ஒளி மின்சாரக் கருவி இது போன்ற இன்னும் எத்தனையோ அரிய காரியங்களில் உபயோகப் பட்டு ஜன சமூகத்திற்கு உற்சாக மூட்டுகிறது. அவையனைத்தும் எடுத்துக் கூற இவண் இடந்தராது. மேற் கூறியவைகளில் பேசும் படம், புகைப் படம் அனுப்பும் வகை, தூரப்பார்வை இவைகள் ஒளி மின்சாரக் கருவியின் தலைசிறந்த உபயோகத்தை உணர்த்தா நிற்கின்றன.

இந்தியாவின் ஏற்றுமதி—இறக்குமதி வியாபாரம்

பொருள் உற்பத்தி

இந்தியா அரசாங்கத்தாரால் வெளியிடப்பெறும் 1938ம் வருஷத்து ஜனவரி-பிப்ரவரி மாதத்து அறிக்கைப்படி இந்தியாவில் நடைபெறும் தொழில்களில் முக்கியமானவை சில கீழே தரப்படுகின்றன. மொத்த உற்பத்தி அதிகமாயிருப்பதைக் கொண்டு இவை விருத்தியடைந் திருக்கின்றன வென்று நாம் ஊகித்துக் கொள்ள வேண்டும்.

பெயர்		மொத்த உற்பத்தி	
		1936—37	1937—38
சணல்	.... டன்	1,155,310	1,194,492
காகிதம்	.... அந்தர்வெயிட்	884,716	979,832
இரும்பு, எஃகு	டன்	555,528	588,511
சர்க்கரை	.... அந்தர்வெயிட்	16,213,468	17,988,283
தீக்குச்சி	.... குரோஸ்	18,887,620	19,565,914
வர்ணங்கள்	.... அ. வெயிட்	209,054	419,851

இந்தியா அரசாங்கத்தாரின் 1934—35-ம் வருஷத்து அறிக்கையிலிருந்து கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன :—

ஏற்றுமதி (இந்தியாவிலிருந்து)

ஆயிரக் கணக்கில்

பெயர்		1933—34		1934—35	
		அளவு	மதிப்பு ரூ.	அளவு	மதிப்பு ரூ.
பருத்தி	டன்	489	265,894	615	344,983
சணல்	,,	748	109,327	752	108,711
தேயிலை	பவுண்ட்	317,842	198,462	324,835	201,319
அரிசி	டன்	1,733	105,214	1,592	103,028
எண்ணெய் வித்துக்கள்	,,	1,124	136,615	875	105,410
தோல் (பதனிட்டது)	,,	—	—	58,298	54,788
தோல் (பதனிடாதது)	,,	42	42,533	40	31,306
புண்ணாக்கு	,,	287	16,472	348	19,699
மரம் (தேக்கு)	,,	27	6,131	43	9,041
புகையிலை	பவுண்ட்	29,206	9,013	26,349	7,755
காப்பிக்கொட்டை	அந்தர் வெயிட்	186	10,245	141	7,271
மிளகு, மிளகாய் முதலிய மசாலைச் சாமான்கள்	அ. வெ.	270	7,220	286	7,734

இறக்குமதி (இந்தியாவுக்கு)

ஆயிரக் கணக்கில்

பெயர்	1933—34 அளவு	1933—34 மதிப்பு ரூ.	1934—35 அளவு	1934—35 மதிப்பு ரூ.
பருத்தி டன்	43	35,570	61	52,838
இயந்திர வகைகள்	—	127,693	—	126,367
உலோகப் பொருள்கள் } டன்	329	55,332	370	63,802
எண்ணெய்	—	—	67,547	69,719
மோட்டார் முதலிய வாகனங்கள்	—	—	47,683	66,000
மின்சாரம், சங்கீதம் முதலியவை சம்பந்தப்பட்ட கருவிகள்	—	—	40,101	47,262
பட்டு	—	—	35,860	33,709
வர்ணங்கள்	—	—	24,610	30,751
இரும்புச் சாமான்கள்	—	—	28,783	30,530
ரசாயன வகைகள்	—	—	27,006	29,239
உணவுப் பொருள்கள்	—	—	27,156	28,906
காகிதம் அ. வெ.	2,564	2,938	26,319	27,282
சர்க்கரை டன்	261	27,097	223	21,085
ரப்பர் சாமான்கள்	—	—	19,135	21,128
மருந்துச் சாமான்கள்	—	—	19,342	19,190
கண்ணாடிச் சாமான்கள்	—	—	12,213	13,256
பழ வகைகள்	—	—	10,014	12,999
சுருட்டு முதலியவை } பவுண்ட்	4,895	7,215	3,072	6,182
சோப்பு அ. வெ.	303	7,837	207	6,321
பூட்ஸ் முதலியவை } ஜோடி	7,313	4,751	4,256	3,477
புஸ்தகங்கள் அ.வெ.	30	4,933	34	5,188
கடிகார வகைகள்	—	—	1,593	1,625

ஜோதி

சினிமாவும் தேச முன்னேற்றமும்

—டி. வீர ராகவன்

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விஷயத்திற்குப் பிரபல்யம் ஏற்படுகிறது. எல்லாத் துறைகளுக்கும் இது பொருத்தமானது. தமிழ் நாட்டை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஒரு காலத்தில் தமிழ் நாவல்களுக்கு இருந்த கிராக்கி சொல்லி முடியாது. திடுக்கிடும் சம்பவங்கள், மயிர்க் கூச் செறியும் நிகழ்ச்சிகள் என்று சொன்னால் ஜனங்களும் அதில் ஒரு பரபரப்பு, உற்சாகம் காண்பிக்கிற காலம் இருந்தது. இப்பொழுது அந்த மயக்கம் இல்லை. எதனையும் ஆராய்ந்து பார்க்கிற காலமாயிருக்கிறது இது. உலகம், காலத்தினாலும், இடத்தினாலும் சுருங்கச் சுருங்க மனிதன், தன்னுடைய நிலைமை என்ன வென்பதைப் பற்றித் திடமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறான். இதனால் மனிதனுடைய அறிவானது நுனிப்புல் மேய்வதை விடுத்துக் கொஞ்சம் ஆழமாகப் போக விரும்புகிறது. தமிழ் நாட்டில் தோன்றியுள்ள இலக்கிய மறு மலர்ச்சிக்கு இதுதான் காரணம். ஆழ்ந்த கருத்துக்க ளடங்கிய நூல்களையே தான் தமிழர்கள் இப்பொழுது விரும்புகிறார்கள்.

இப்படியே நாடகங்கள் ஒரு காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. நாடகத்தையே தொழிலாகக் கொண்டவர்களும் அஃதில்லாதவர்களும் நாடக மேடையில் ஏறுவது மோட்ச லோகத்து ஏணிப் படியில் ஏறுவதுபோல எண்ணிக் கொண்டிருந்தார்கள். இதற்கான சந்தர்ப்பங்களும் அப்பொழுது நிறைய இருந்தன. ஆனால் இப்பொழுது நாடகங்களை காணோம். நாடகக் கலையில் உண்மையான அபிமான முடையவர்கள் பலர் இருந்தாலும் அந்த அபிமானத்தைச் செயலளவில் காட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் இப்பொழுது இல்லவே இல்லை.

நாடகம் வகித்திருந்த ஸ்தானத்தை இப்பொழுதுசினிமா கவர்ந்துகொண்டு விட்டது. ஜனசமூகத்தின் வாழ்விலே சினிமா ஒரு நிரந்தர ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டுவிட்டது. இதனை ஒரு கலையாகக் கொள்ளலாமா வென்பதைப் பற்றி இன்னும் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன வென்பது உண்மை. ஆனால் சமுதாய வாழ்வுக்குப் புதிது புதிதாகச் சேர்க்கப் பட்டு வருகிற பல அங்கங்களில், இந்தச் சினிமா, நவீனச்சேர்க்கையென்பதை யாருமே மறுக்க முடியாது. ஆகையால் இதைப்பற்றி நாம் சிறிது கவனஞ் செலுத்துதல் அசியமாகிறது.

எந்த வஸ்துவையும் அல்லது எந்த விஷயத்தையும் நல்ல நோக்கத்திற்காக உபயோகப் படுத்துகிற வரையில் அதனால் ஒரு ஜாதியோ, ஓர் இயக்கமோ நன்மையடைகிறது. ஆனால் அதனையே கீழான விஷயங்களுக்காக உபயோகப் படுத்துகிற போது பல தீமைகள் அதன் வாயிலாகப் பரவுகின்றன. உதாரணமாக, மேனாட்டு சர்வாதிகார நாடுகள், அதாவது இத்தலி, ஜெர்மனி முதலியநாடுகள் இந்தச் சினிமாவை பெரிய பிரசாரக் கருவியாக உபயோகப் படுத்திக் கொண்டு வருகின்றன. ஐரோப்பிய மகா யுத்த காலத்தில் துண்டுப் பிரசுரங்களை அச்

சடித்து ஆகாய விமானங்களிலிருந்து விநியோகித்து சத்துருக்களின் மனோ உறுதியில் ஒரு தளர்ச்சியை ஏற்படுத்துவது நேசக் கட்சியாருடைய முக்கிய வேலையாயிருந்தது. இந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அநுஷ்டானத்திலிருந்த பிரசாரமுறை. இப்பொழுது சினிமா, ரேடியோ முதலியன பிரசாரக் கருவிகளாயிருக்கின்றன. இத்தலி எதியோப்பியாவை விழுங்கியதற்கும், ஜெர்மனி ஆஸ்திரியாவை ஏப்பமிட்டதற்கும் இந்த நவீனப் பிரசாரந்தான் காரணம்.

தவிர, இந்தச் சினிமா மூலமாகத் தங்கள் நாட்டை உயர்த்தியும் பிற நாடுகளைத் தாழ்த்தியும் பிரசாரம் செய்து, இதன் மூலமாகத் தங்கள் நாட்டாருடைய உணர்ச்சிகளை உச்சஸ்தாயிலேயே வைத்திருப்பது இந்தச் சர்வாதிகாரிகள் அநுஷ்டிக்கிற ஒரு புது முறை. இதே மாதிரி சில ஜன நாயக நாடுகளிலும் நடைபெறுகின்றன. மற்றும், தாங்கள் செய்கிற காரியம் சரியானது என்று ஜனங்களின் மனதிலே நன்றாகப் பதியுமாறு செய்வதற்கு சில அரசாங்கங்கள் இந்தச் சினிமாவை ஒரு சாதனமாக உபயோகிக்கின்றன. இதில் அவ்வளவு ஆட்சேபம் இருப்பதாகத் தெரியவில்லை. பிறரைத் தாழ்த்தி அதன் மூலமாகத் தங்களை உயர்த்திக் கொள்ள முயல்வதுதான் பெரிதும் ஆட்சேபிக்கத் தக்க விஷயமாயிருக்கிறது.

இந்தப் பிரசார வேலையை நம் நாட்டுச் சினிமாக்கள் இன்னும் செய்யவில்லை. இதற்குக் காரணம் நமது அரசாங்கம் தேசீய மயமாக இல்லாமலிருப்பதாயிருக்கலாம். அப்படி தேசீய மயமான அரசாங்கம் ஏற்பட்ட காலத்திலும், நமக்கு ஏகாதிபத்திய நோக்கம் இல்லாமையினால், பிறர்க்குத் தீங்கு பயக்கும் விதத்தில் சினிமாவை பிரசாரக் கருவியாக உபயோகப் படுத்தாமலிருக்கலாம். இதைப்பற்றி இப்பொழுது நாம் கவலைப் பட்டுக் கொண்டிருக்க வேண்டுவதில்லை.

பொதுவாக, சினிமாவினால் பல நன்மைகளை யடைய முடியும். புராதனத்திலிருந்து நிகழ் காலத்திற்கு நயக்கு ஒரு பாடங் கற்பித்து, இதிலிருந்து வருங் காலத்திற்கு நமக்கு ஒரு வழி காட்டியாக அமைவதற்கு இந்தச் சினிமாவைத் தவிர வேறென்ன சாதனம் இருக்கிறது? உதாரணமாக, நமது நாட்டுப் புராதன சம்பவங்கள் பலவற்றை அப்படியே படம் பிடித்துப் பாமர ஜனங்களுக்குக் காட்டுவோமானால், நமது பூர்வீகர்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது, நமது வாழ்க்கை இனி எப்படி அமைய வேண்டுமென்பதை அவர்கள் நன்கு கண்டு கொள்வார்கள். புராணங்களிலும் இதிகாசங்களிலும் காணப்படுகிற கதைகளை அந்தந்தக் காலத்து நடை உடை பாவனைகளுடன் அப்படியே நாம் காண்பிக்க வேண்டும். இதில் அதிகமான கஷ்டம் இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டுப் பட முதலாளிகள், இந்தப் புராணப் படங்களைப் பிடிப்பதுதான் மிகவும் சுலபமென்று கருதி, இதில் பணத்தையும் உழைப்பையும் செலவழிக்கிறார்கள். இது ஆபாசமாக முடிவது ஒருபக்கமிருந்தாலும், இதனால் ஜனங்களுக்கு லவலேசமும் நன்மை உண்டாவதில்லை. இதைப்பற்றிப் பின்னர் "ஜோதி" ஆசிரியர் அநுமதி கொடுத்தால் விரிவாக எழுத முயல்வேன். மேனாட்டுப் படங்களில் இந்தக் குறையை அடியோடு அகற்றியிருக்கி

ஞர்கள். எந்தக் காலத்தில் ஒரு சம்ப வம் நிகழ்வதாகப் படம் எடுக்கப்படு கிறதோ அந்தக் காலத்திற்குத் தகுந்த இட அமைப்பு, காட்சி ஜோடனை முதலியவைகளை யெல்லாம் அவர்கள் நன்ருகக் கவனிக்கிருர்கள். ஒவ் வொரு நூற்ருண்டிலும் ஜனங்களு டைய உடைகள், அவர்களுடைய மனேபாவங்கள் இவை யெல்லாம் மாறுதலடைகின்றன. அந்தந்த நூற் ருண்டுக்குத் தக்கபடி நடிகர்களு டைய உடையும் மனேபாவமும் இருந்தால்தான் அந்தக் காட்சி சோபிக்கிறது. பதினெட்டாவது நூற் ருண்டின் கடைசி காலத்திலே இருந்த நெபோலியனுடைய வாழ்க்கையின் ஒரு பகுதி படமாகப் பிடிக்கப்படுகிற தென்று வைத்துக் கொள்வோம். நெபோலியன் காலத்துச் சரித்தி ரத்தை நாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் காலத் துச் சமுதாயத்தின் மனே நிலையை ஆராய்ச்சி செய்ய வேண்டும். இத் தகையவர்களால்தான் வெற்றிகரமாக அந்தப் படத்தை எடுக்க முடியும். நெபோலியன் காலத்துச் சரித்திரத் தைப் படிக்காத ஜனங்கள் இந்தப் படத்தைப் பார்த்து, 'ஓ, நெபோலி யன் இப்படி இருந்தானு? அவன் வெற்றி கொண்ட நாடுகளில் ஜனங் கள் இந்த விதமான மனே நிலையி லிருந்தார்களா' என்பதை யெல்லாம் தெரிந்து கொள்வார்கள். இதனுல் அவாகளுடைய அறிவு விருத்தியா கிறது.

இதேபோல் நமது வாழ்க்கையில் இன்னின்ன குறைபாடுகள் இருக்கின் றன, இவற்றினுல் விளைகிற தீமைகள் இவை, இவற்றிற்குப் பரிகாரங்கள் இன்னின்ன வென்று இந்தச் சினிமா படங்கள் எடுத்துக் காட்டலாம். இது ஜனங்களுக்கு நல்ல கல்வியறிவைப் போதிக்கக் கூடியதா யிருக்கும். இந்த மாதிரியான படங்கள் ஜெர்மனி யிலும் ருஷ்யாவிலும் அதிகமாகத் தயாரிக்கப்பட்டு கிராம ஜனங்க ளிடையே காண்பிக்கப் படுகின்றன.

இந்த மாதிரியான விஷயத்திலும் இந்தியா, இன்னும் ஓர் அடிகூட எடுத்து முன் வைக்கவில்லே.

ஒரு தேசத்தை முன்னேற்றுவிப்ப தற்கும் அல்லது அதனைப் பின்தூக்கி ழுப்பதற்கும் சினிமா ஒரு சிறந்தசாத னம். தேச முன்னேற்றம் அல்லது சமூக முன்னேற்றம் என்ற ஒன்றினை யே குறிக்கோளாகக் கொண்டு பிடிக் கப்படுகிற படங்களுக்கு ஆரம்பத்தில் அநேக இடையூறுகள் ஏற்படலாம். பொது ஜனங்களுடைய ஆதரவு இல்லாம லிருக்கலாம். பண நஷ்டமும் உண்டாகலாம். ஆனல் பின்னர் இவற் றினுல் உண்டாகிற நன்மைகளை ஜனங் கள் உணர்ந்து கொண்டு விட்டார்க ளானுல் அதிகமான ஆதரவு ஏற்படு மென்பது நிச்சயம்.

தென்னுப்பிரிக்காவைச்சேர்ந்த தாங்க நிகா மாகாணத்தில் நீக்ரோவர்கள் மட்டுமே நடிக்கிற ஒரு சினிமா கம் பெனி தொடங்கப் பட்டிருக்கிறது. ஆப்ரிக்க சுதேசிகளின் அதிபதியாயிருக் கப் பட்ட ஒருவனுடைய மகள், இந் தக் கம்பெனியின் படங்களில் பிரதம நடிகையாயிருப்பாள். இவளுக்குச் சம் பளம் என்ன தெரியுமா? நூறு பசுக் களை இவளுக்குக்கம்பெனியார் கொடுத் து விட வேண்டியது. அதற்குப் பதில் அவள் கம்பெனியார் எடுக்கும் எல்லாப் படங்களிலும் நடிக்க வேண்டியது.

நமது நிருபர்களுடன்—

வ. வெ. சு. ஐயரின் ஜீவிய சரிதம்

ஐயா,

தமிழறிஞர் வ. வெ. சு. அய்யரின் ஜீவியசரித்திரம் இதுவரை வெளிவந்துள்ளதா? அப்படியானல் எங்கு கிடைக்கும்? வெளியிட யாரும் உத்தேசித்துள்ளார்களா? இல்லையேல் தாங்கள், ''ஜோதி''யில் வெளியிட்டு ஆவலைப் பூர்த்தி செய்யக் கோருகிறேன்.

—'காதி'

நாமறிந்த வரையில் ஸ்ரீ ஐயரின் ஜீவிய சரிதம் இன்னும் நூல் வடிவாக வெளி வரவில்லை. ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், இவருடைய வாழ்க்கையை எழுதியிருக்கிருர் என்று அறிகிறோம். ஆனல் இது புத்தக வடிவில் வெளியாகவில்லை. ஸ்ரீ ஐயரோடு நெருங்கிப் பழகியிருக்கிற காரணத்தினல், நமக்கு இவருடைய சரிதத்தை எழுதி வெளியிட வேண்டுமென்ற ஆவல் நீண்ட நாட்களாகவே உண்டு. அது பூர்த்தியாகும் நாளை நண்பரோடு நாமும் சேர்ந்து ஆசையோடு எதிர் பார்க்கிறோம்.

—ஆசிரியர்

குதிரைப்பந்தயமும் மகாத்மா காந்தியும்

ஐயா,

இந்திய மக்களுக்காகத் தமது உயிரையே அர்ப்பணம் செய்து, பற்பல நன்மைகளை உலகம் போற்றும் மகாத்மா காந்தி செய்திருக்கின்றார். ஆனல் அவர் ஏன் குதிரைப் பந்தயங்களை நிறுத்தி, அப் பந்தயங்களினல் பற்பல குடும்பங்கள் அழிவதை நிறுத்த ஏற்பாடு செய்யவில்லை? அப்படி மகாத்மா காந்தி இந்த நன்மையை ஏழை மக்களுக்காக வேண்டி, செய்யாது இருப்பது எக் காரணத்தைப்பற்றி? இதைத்தாங்கள் எனக்கு இம்மாதம் வெளிவரும் ''ஜோதி''யின் மூலமாய் அன்புடன் பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—மு. தி. ச.

இந்த விஷயத்தில் மகாத்மா காந்தியின் கவனஞ் செல்லவில்லை யென்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? நண்பர் நினைக்கிறதை விட அதி சீக்கிரமான காலத்திலேயே, இந்த மாதிரியான தீமைகள் இந்தியாவில் இல்லாமல் போகும். இந்தியா சுதந்தரம் பெறுத வரை இந்த மாதிரியான சில்லரைத் தீமைகள் இருந்து கொண்டுதானிருக்கும். அதனல்தான் மகாத்மா காந்தி போன்ற தலைவர்கள், சுதந்தரம் பெறும் முயற்சியிலே இறங்கியிருக்கிருர்கள்.

—ஆசிரியர்

இந்தியாவில் தொழில்கள்

அன்புள்ள ஐயா,

இந்தியாவில் தற்போது எந்தெந்த தொழில்கள் அபிவிருத்தி யடைந்துள்ளன? மூலாதாரப் பொருள்கள் எவை எவை ஏற்றுமதி செய்யப் பெறுகின்றன? எந்தெந்த சாமான் அதிகப்படியாக இறக்குமதி யாகின்றன? புள்ளி விபரத்தோடு தெரிவியுங்கள்.

—ரெ. மு. இராமநாதன்

இது சம்பந்தமான புள்ளி விவரங்கள் 83ம் பக்கத்தில் வெளியிடப் பட்டிருக்கின்றன. நண்பர் அவற்றைப் பார்வையிடுமாறு கேட்டுக் கோள்கிறோம்.

—ஆசிரியர்

தர்மம்

ஆசிரியரவர்களே,

1. வேலையாட்கள் முதலாளிகளுடைய பணத்தை அனுமதி இல்லாது தர்மம் செய்தால் முதலாளி துரோகம் ஏற்படும் என்று சில பெரியார்கள் சொல்லுகிறார்கள். (2) முதலாளிகள் ஆர்டர் இல்லாது தர்மம் செய்வதில் துவேஷம் ஒன்றும் இல்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். அதை எந்த முறையில் செய்வது நலம் என்பதை தயவு செய்து அறிவு ஊட்டும் "ஜோதி"யில் அன்புடன் விளக்கிக் காட்டும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

— ராம. முத்து

வேலை யாட்கள், முதலாளிகள் பணத்தை அவர்களின் அநுமதியின்றித் தர்மம் செய்வது துரோகமென்றே கருதப் படுகிறது. பிறர் சோத்து ஒன்றும் சம்பந்தமின்றித் தன்னால் முடிந்த அளவு (சக்திக் கேற்ப) தர்மம் செய்வது தான் சாலச் சிறந்தது.

—ஆசிரியர்

சில சந்தேகங்கள்

1. ஊழ்வினைப் பயனென்பது என்ன? இந்த ஜன்மத்தில் மனிதன் அதற்கு என்னதான் சாதனம் செய்ய முடியும்?

2. சகுனம் பார்ப்பது எதற்கு? சிலர் கிழே இறங்கும்போதும் ஏறும் போதும் ஒவ்வொன்றுக்கும் சகுனம் பார்த்துச் சஞ்சல மடைகின்றனரே, அதன் கருத்தென்ன?

3. ஜாதகம்பார்க்கவேணுமா? அதனால் தடை செய்து கொள்ளக் கூடியது எதுவுமுண்டா? அல்லது நடப்பது நடந்தே தீருமா?

4. மனிதன் நினைத்ததைச்சாதிக்க முடியுமா? வினைப்பயனிருந்தால்தான் முடியுமா? உள்ளியர் தெள்ளியராயினும் ஊழ்வினை மெள்ளென நுழைந்து விடும் என்பதன் கருத்து என்ன?

—முத்துக்கணபதி

இந்த நண்பர்கேட்டிருக்கும் நான்கு கேள்விகளும் ஒரே கேள்வியிலேயே அடங்குவனவாக இருக்கின்றன.

முற் பிறப்பில் தான் செய்த நல்வினை தீவினைக் கேற்ப சௌக்கியமாகவோ அவதியுற்றோ வாழ்ந்து வரும் ஓரியல்பே ஊழ் என்பது. உதாரணமாக ஒருவன் பல லக்ஷம் தேடி வைத்திருக்கலாம். அவனுக்கு வாய்த்த மகன் அதனைப் பெருகக வேண்டிய திருப்ப, கெட்ட வழிகளில் ஒழித்து விட்டுக் கஞ்சிக்கும் எதிர் பார்த்துக் கைகட்டி அலையலாம். ஒருவன் கல்லூரி கட்டலாம்; ரோட்டுப்போடலாம்; பல தருமங்கள் செய்யலாம். ஆயினும் இந்தத்தருமங்கள் செய்யத் தொடங்கிய பின்னரே அவனுக்குக் குஷ்ட நோய் ஏற் பட்டிருக்கலாம். இத்தகையன ஊழ் வினையின் பயனென்ன முந்தையோர் நியதி வகுத்துள்ளனர்.

'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும், அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை, நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல்'

என்ற நல்வழிப் பாட்டின்படி நடப்பது ஊழ்அன்றிவேறு ஏதும்உண்டோ?

உள்ளியர் தெள்ளிய ராயினும் ஊழ் வினை மெல்ல நுழைந்து விடும் = எண்ணியவர் அறிவுடையவராயினும் ஊழ் வினை (எவ்வாறோ அவர் செய்யுங் காரியத்திற்) புகுந்து (பயன்) விளைக்கும் என்னும் இதற்கு மேற்கண்ட அரிய தோர் பாவே இலக்ஷியமாக அமைந்திருக்கவில்லையா?

ஆனால் ஊழ் ஊழ் என்று கையைக் கட்டிக் கொண்டிருந்தால காரியம் ஏதும் நடக்குமா? ஒரு காலும் நடவாது. நிஷ்காமிய கருமத்தைப (பிரதி பலனை எதிர் பாராமல ஒரு காரியஞ் செய்வது) பரப்ப முயன்ற முன்னோர் எங்குதான் தன் முயற்சி முறறுப் பெறுமல் இடுக்கணைக் கண்டு உள்ளஞ் சோர்வுறுவானோ மனிதன என அருளுடன் வலியுறுத்தியதாகும் ஊழ்.

'ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' சோர் வடையாமல இடை விடாது முயற்சி செய்பவர் ஊழையும் வெல்லுவர் என்ற குறள் நமக்குச் சிறந்த வழி காட்டியலலவா? இதனையே நாம கடைப்பிடிக்க வேண்டும.

இனி, ஜாதகம் பார்ப்பது அவரவர் தன்மையையும் திருப்தியையும் சார்ந்திருக்கிறது. 'நடப்பது நடந்தே தீருமா' என்றதற்குப் பதில் மேலே அமைந்திருக்கிறது.

சகுனம் பார்த்தே எந்தக் காரியத்தையும் செய்வதென்பதுமுன்னோர் ஏற்படுத்திக் கொண்ட தோரு பழக்கம். இது இந்தியாவில் மட்டுமல்ல, மேல் நாட்டிலுங் கூட உண்டு. கறுப்புப் பூனையைக் கண்டு விட்டால் வழியில் போகும் ஓர் ஆங்கிலேயன் அந்த வேலையின் மேற் செல்லான்.

சகுனம் பார்ப்பது அவரவர் அநுபவத்தையும் இடத்தையும் பொறுத்ததாகும். நல்ல சகுனம் வாய்த்தால் மகிழ்வு கொள்ளுதல் போல் கெட்ட சகுனத்துக்குச் சஞ்சலங் கொள்கின்றனர். இந்த அநாவசியத்தைஇப்போது யாவரும் உணர்ந்து சகுனம் பார்ப்பதைவிட்டொழித்து வருவது கண்கூடு.

—ஆசிரியர்

மோட்டார் உற்பத்தி

ஐயா,

இந்தியாவில் எங்கெங்கு எத்தனை மோட்டார் உற்பத்திக் கம்பெனிகள் இருக்கின்றன? அக் கம்பெனிகள் யாரால் நடத்தப் படுகின்றன. ஸ்ரீ விஸ்வேஸ்வரய்யா ஐரோப்பாவினின்று திரும்பியதும் என்ன செய்துள்ளார்? விபரமறிவிக்க வேண்டுகிறேன்.

—'நேசன்'

இந்தியாவில் ஒரு மோட்டார் உற்பத்திக் கம்பெனிகூட இல்லையென்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். நாம் மோட்டார்களுக்காகச் செலவழிக்கிற அவ்வளவு பணமும் அந்நிய நாடுகளுக்கே செல்கிறது. 1934–35ம் வருஷத்தில் மட்டும் மோட்டார்கள், மோட்டார் சைகிள்கள், மோட்டார் பஸ்கள், இவைகளுக்கான சாமான்கள் முதலியன சேர்ந்து, 46,641,000 ரூபாய்க்கு இறக்குமதியாகி யிருக்கிறது இந்தியாவில். கல்கத்தா நகர சபையின் ஆதரவில் ஓர் அன்பர் மோட்டார் ஒன்றைத் தயாரித்தார்.

ஆனால் துரதிருஷ்ட வசமாக அந்த மோட்டார் வண்டி எரிந்து விட்டது. அவரும் காலமாகி விட்டார் என்று தெரிகிறது. காங்கிரஸ் மந்திரிகள் இது சம்பந்தமாக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பது, நல்ல பலனை அளிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்போம்.

ஸர் விசுவேசுவரய்யாவுக்கு இப்பொழுது 76 வயதுக்கு மேலாகிறது. இப்பொழுதும் இவர், பல மாகாண அரசாங்கங்களுக்கும், சுதேச சமஸ்தானங்களுக்கும் பொருளாதார சம்பந்தமாகவும் இஞ்சினீரிங் சம்பந்தமாகவும் அரிய யோசனைகள் சொல்லி திட்டங்கள் வகுத்துக் கொடுத்து வருகிறார். இந்தியா அனைத்திற்கும் அநுஷ்டானத்தில் கொண்டு வரக் கூடிய மாதிரி இவர் ஐந்து வருஷப் பொருளாதாரத் திட்டமொன்றை வெளியிட்டிருப்பதை நண்பர் படித்திருப்பாரென்றே நம்புகிறோம்.

—ஆசிரியர்

ஹரிஜனங்கள்

அன்பு மிக்க ஆசிரியரவர்களே,

நம்மால் தாழ்ந்த ஜாதியாரென்று சொல்லப்படும் ஹரிஜனங்களைக் கோவிலினுள் செல்ல அனுமதியளிக்காதிருக்கிறார்களே, பெரியோர்கள்; ஹரிஜனங்கள் கோவிலினுள் நுழைந்தால் அக்கோவிலினுள் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல இறைவன் தீட்டுப் பட்டுப்போய் விடுவாரா? என்னே அவர்களின் நோக்கம்? அதை நமது 'ஜோதி'யில் விளக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ராம சுப்ரமணியம்

ஹரிஜன இயக்கம் நமது நாட்டில் இவ்வளவு தீவிரமாகவும் இத்தனை நாட்களாகவும் நடைபெற்று வந்திருக்க, இந்த நண்பருக்கு இப்பொழுதுதான் இந்தச் சந்தேகம் உதித்திருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. கடவுள் தீட்டுப் பட்டு விடுவார் என்ற மூட நம்பிக்கையால் தான் ஹரிஜனங்களைக் கோயிலுக்குள் விட ஒரு சிலர் ஆட்சேபிக்கிறார்கள் என்பதை இந்த அன்பர் இதுவரை தெரிந்து கொள்ளவில்லையா? தயை செய்து இவர், 'சுதந்திரச் சங்கு' காரியாலயத்தாரால் வெளியிடப் பட்டிருக்கும் ஹரிஜனத் தொண்டு, ஹரிஜனப் பணி, ஹரிஜன சேவைமுதலிய சிறிய புத்தகங்களைப் படித்துப் பார்க்குமாறு விரும்புகிறோம்.

—ஆசிரியர்

காந்தீயம்

ஆசிரியர் அவர்களுக்கு,

காந்தீயம் என்றால் காந்தியின் வாழ்க்கை லட்சியம் பூராவையும் குறிக்குமா என்பதற்குப் பதில் எதிர் பார்க்கிறேன்.

—ரா. வேங்கடராமன்

ஆம்; அப்படித்தான். ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியுள்ள 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலை இது சம்பந்தமாக நண்பருக்குச் சிபார்சு செய்ய விரும்புகிறோம்.

—ஆசிரியர்

டாக்டர் ஷுஷ்நிக்கின் காதல் கதை

——"நேசன்"

இஃது ஒரு ஹிந்தி கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டதென்று 'நேசன்' அறிவிக்கிறார். இந்தக் கட்டுரை, விண்ட்ஸர் கோமகனின் காதலை நமக்கு நினைவூட்டுகிறது.

1934ம் வருஷத்தில் டாக்டர் ஷுஷ்நிக் ஆஸ்ட்ரியாவின் சான்ஸலரானார். 1935ம் வருடம் ஜூலை மாதம் அன்னாரின் மனைவியார் மோட்டார் விபத்தால் ஆவி துறக்க நேரிட்டது. அடுத்தாற்போல் அன்னவரின் அன்னையும் தமது 65வது வயதில் உயிர் நீத்தாள். இவ்விதம் உயிருக்கு உறுதுணையாளர்களாகிய மாதாவையும், மனைவியையும் பறிகொடுத்த டாக்டர் ஷுஷ்நிக் மனமுடைந்து போய் விட்டார். இனிய வாழ்க்கையை யிழந்து உலகத்தில் இன்னற்படுவதைக் காட்டிலும், அமைதி பெற்ற மரணத்தை நாடுவதே மேலென ஷுஷ்நிக் அடிக்கடி நினைத்த போதிலும், தனது தாய் நாட்டின் சேவைக்கேனும் தான உயிர் வாழ வேண்டியது அவசியமென நிச்சயித்தார்.

1937ம் வருஷம் ஒரு நாள் டாக்டர் ஷுஷ்நிக் ஒரு நடன மேடைக்குப் போக நேர்ந்தது. நடன மேடையிற் காட்சியளித்த ஒரு மாதரசி ஷுஷ்நிக்கின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியையும், அவர் வாழ்வில் என்றுங் காணாத மகிழ்ச்சியையும் எழுப்பினாள்.

அம் மங்கை 1908ம் வருஷம் ஜூன் மாதம் 5ம் நாள் வியன்னாவில் ஒரு தனவந்தர் வீட்டில் பிறந்து வேராபுகர் என்ற பெயருடன் அருமையாய் வளர்ந்து வந்தாள். அழகும், அறிவும் வாய்க்கப் பெற்றவள். அவள் ஸ்பெயின் தேசப் பழக்கப்படி கற்பிக்கப் பட்டவள். ஒரு சங்கீதப் பிரியை. அதில் சிறந்த புலமையும் பெற்றிருந்தாள். வேராவின் கீத இனிமையைக் கண்ட அநேக நாடகக் கம்

சமஸ்தானப் பிரஜையும் காங்கிரஸும்

ஐயா,

சமஸ்தானப் பிரஜை, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் அத்தாக்ஷிப் பத்திரம் பெற்று 4 அணா அங்கத்தினராய்ச் சேர்ந்து கொள்ளலாமா?

'காதி'

அன்பருடைய கேள்வி மிகவும் சரியான கேள்வி. ஆனால் இதைப்பற்றி காங்கிரஸ் விதிகளில் தெளிவாக ஒன்றும் குறிக்கப்படவில்லை. எந்த ஒரு சமஸ்தானப் பிரஜையும், அருகாமையிலுள்ள ஒரு கிராம அல்லது நகர, அல்லது தாலுகா காங்கிரஸ்கமிட்டியில் 4 அணா அங்கத்தினராகச் சேர்ந்து பின்னர் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி சேவையில் ஈடுபடலாம். சமஸ்தானத்தில் காங்கிரஸ் ஸ்தாபனம் இருந்தால் அதற்கும் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும் நேர்முகமான தொடர்பு ஒன்றுமில்லை யென்பது நண்பருக்குத் தெரிந்திருக்குமென்றே நம்புகிறோம்.

—ஆசிரியர்

பெனிகள் வேராவைத் தமது நடிகையாகக் கொள்ள வேண்டுமெனப் பெருமுயற்சி செய்தும், வேராவின் பெரியோர்கள் ஒத்துக் கொள்ளாமையால் முடியாது போய்விட்டது.

வேராபுகர் ஒவ்வொருக்கால் தோட்ட விருந்துகட்குச் சென்று ஓரிரு இனிய பாடல்களைப் பாடிக் கீத விருந்தில் கூட்டத்தாரைக் குளிரச் செய்வாள். வேரா இவ்விதம் தோட்ட விருந்துகளிற் கலந்து கொள்வது அவளின் சிறிய தந்தைக்குப் பிடிக்கவில்லை. பலமுறை வேராவைத் தடுத்தும் அவள் இளமானைப்போல் எதையும் பொருட் படுத்தாது ஆடிப்பாடித் திரியலானாள்.

1924ம் வருஷம் பிப்ரவரி மாதம் 23ந்தேதி வேரா, கௌண்ட்புகர்என்பவரை மணந்துகொண்டாள். கௌண்ட்புகர் வேராவைக் காட்டிலும் பதினொரு வயது மூத்தவர். இருப்பினும் வேரா தனது விவாகத்தின் பின் சுதந்தரமாய் வாழலாமென்றும், தனது உயிரினுமினிய பாடல்களை மேடையிற் சென்று பாடலாமென்றும், தனக்கு யாரும் தடை செய்பவர்களிருக்க முடியாதென்றும் மனக் கோட்டை கட்டியிருந்தாள். ஆனால் அவள் கோட்டை அடியோடு தகர்ந்து விட்டதென்றே சொல்லலாம். அவள் கணவன், அவளுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த முயன்ருன். மேடையில் பாடுவதை விரும்பவில்லை. இதனால் இருவருக்கும் பிணக்கு ஏற்பட்டது. எனவே வேரா மற்றொரு மணாளனைக் காதலித்து மணந்து கொண்டாள். வேராவின் முதற் கணவரும் பிறிதொரு மங்கையை மணந்து கொண்டதும் இருவருக்கும் விவாக ரத்து ஏற்பட்டு விட்டது.

இதன் பிறகுதான் வேராவுக்கும் ஷுஸ்னிக்குக்கும் சந்திப்பு ஏற்பட்டது. டாக்டர் ஷுஸ்னிக் சங்கீதப் பிரியராகையால் சங்கீத வேராவும் அவருக்குப் பிரியையாகி விட்டாள். சில நாட்சென்றதும் வேராவைத் தன்னிடம் அழைத்துக் கொண்டார். பின்பு தனது குழந்தைகளுடன் உல்லாசமாய்ச் சிறிதுகாலம் வாழவேண்டுமென்ற நோக்குடன் டாக்டர் ஷுஸ்னிக் வேராவையும் உடனழைத்துக் கொண்டு ஓரிடத்தில் தங்கியிருந்தார். ஆனால் இவர் வேராவை முறைப்படி மணந்து கொள்ளவில்லை. இதனால் இவருடைய விரோதிகளாகிய நேஷனல் சோஷலிஸ்ட் கட்சிக்காரர்கள் பெருத்த கிளர்ச்சி செய்யலானார்கள். 'ஆஸ்ட்ரியாவின் சான்ஸலர் விவாகரத்துச் செய்து கொண்டுள்ள ஒரு பெண்ணைக் காதலிப்பது சம்பிரதாய விரோதமாகும்' என்று எங்கும் பெருத்த கிளர்ச்சி வளர ஆரம்பித்து விட்டது. இதையறிந்த ஆஸ்ட்ரியத் தலைமைப் பாதிரியார் டாக்டர் ஷுஸ்னிக்கை யழைத்து 'ஆஸ்ட்ரியக் குடியரசு சான்ஸலராயிருந்து கொண்டு, விவாக ரத்தான ஒரு மங்கையை மணந்து கொள்ள ஒருபோதும் உரிமை யளிக்கப்பட மாட்டாது; ஆகலால் வேராவின் காதலை விலக்கிவிட வேண்டும்' என்று எச்சரிக்கை செய்தார். வாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட ஷுஸ்னிக்கிற்குப் புத்துபிரளித்து இன்னமு ஊட்டிவரும் வேராவை அவர் எங்ஙனம் ஒதுக்கித் தள்ளமுடியும்? எனது இவ்வுயரிய பதவியை யான் இழந்தாலும், எங்கள் காதலை இழக்க முடியாதென டாக்டர் ஷுஸ்னிக் பலமுறை தனது பதவியை ராஜீநாமாச் செய்ய முனைந்தார். உள்ள மகிழ்ச்சியின்றி உலகத்தை ஆண்டாலும், என்ன பலன்தான்

பெறமுடியும்? இருப்பினும், இவர் தன் தாய் நாட்டின் நலத்திற்காகப் பதவியி லிருந்து வந்தார். வேராவும் ஷூஸ்நிக்கின் ஆதரவில் 'வேல்வேடியர் கார்டன்' என்னுமிடத்தில் வசித்து வந்தார். வேரா அங்கிருப்பது ஷூஸ்நிக்கின் ரகசியப் போலீஸாரைத் தவிர வேறு யாருமறிய முடியாதிருந்தது. டாக்டர் ஷூஸ்நிக் கின்மேல் கொண்டுள்ள காதல் காரணமாகவும், இனி என்றும் இவருடனேயே வாழவேண்டுமென்ற உறுதியாலும் வேரா எங்கும் செல்லாது தனியே இருந்து வந்தாள்.

டாக்டர் ஷூஸ்நிக் பலமுறை தமது பதவியைத் துறக்க முயற்சித்தார். ஆனால் வேரா குறுக்கிட்டு 'நமது தனிப்பட்ட சுக வாழ்வைக் காட்டிலும் தேசப்பொது நலமே பெரிதெனத் தடுத்து வந்தாள்.

1938ம் வருஷம் மார்ச்சு மாதம் 11ந் தேதி ஜெர்மானியப் படைகள் ஆஸ்ட்ரியாவை அபகரித்துக் கொண்டன. அத்தினத்திலேயே டாக்டர் ஷூஸ்நிக், ரோமாபுரி போப்பரசருக்குத் தந்தி மூலம் தமது திருமணத்திற்கு அனுமதி கோரினர். போப்பரசரும் அனுமதியளித்துவிட்டார். ஆனல் ஷூஸ்நிக் காதலர்கள் எவ்வாறு எங்கு மணம் புரிந்து கொண்டார்களென்று யார் தான் கூறமுடியும்? இப்பொழுது ஷூஸ்நிக் எங்கிருக்கிருரோ அதுவே தெரியவில்லையே.

மனித சமூகத்தை உத்தாரணம் செய்வது இந்தியா தான்

உலக அறிஞர்களுள் ஒருவரும் காந்தியடிகளின் பக்தருமான ரோமெய்ன் ரோலண்ட் என்பாரை, கல்கத்தாவுக்கு வந்து சில பிரசங்கங்கள் செய்யுமாறு, கல்கத்தா சர்வ கலாசாலை உப அத்தியட்சகரான ஸ்ரீ சியாமா பிரசாத் முகர்ஜி கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கு ரோமெய்ன் ரோலண்ட் எழுதியுள்ள பதில் வருமாறு:—

சில பிரசங்கங்கள் செய்யுமாறு என்னை அழைப்பித்துக் கௌரவப் படுத்திய கல்கத்தா சர்வ கலா சாலையினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் என்னல் நேசிக்கப் படுகிற உங்கள் நாட்டிற்கு வருகிற பாக்கியம் எனக்குக் கிடைக்கும். ஆனல் நீண்ட தூரப் பிரயாணமும், சீதோஷ்ண மாறுதலும், தற்போதைய என தேக நிலைக்கு இடம் அளிக்காது. இதற்காக நான் உண்மையில் வருந்துகிறேன். தற்போது உலகத்திலே ஏற்பட்டிருக்கிற நெருக்கடியில், மனித சமூகத்தின் உத்தாரணத்திற்கு இந்தியாவையே நான் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறேன். எனவே, இந்தியாவின் விழிப்பு எனக்கு அதிக மகிழ்ச்சியை யளிக்கிறது.

துலாக்கோல்



ஆனந்தமடம்

மூல நூலாசிரியர்: பங்கிம் சந்திர சட்டர்ஜி; மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி, பி. ஏ; வெளியிட்டோர்: மெஸர்ஸ் அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள்கிரவுன் அளவு 1x16; 256 பக்கங்கள்; விலை ஒன்றே கால் ரூபாய்.

இந்த ஆனந்த மடத்தின் காலஞ்சென்ற ஸ்ரீ திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்களுடைய மொழி பெயர்ப்பையும், ஸ்ரீ மஹேசகுமார சர்மா அவர்களுடைய மொழி பெயர்ப்பையும் நாம் படித்துப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஸ்ரீ குமாரஸ்வாமியினுடைய இந்த மொழி பெயர்ப்பு, அவை இரண்டைக் காட்டிலும் ஸ்வாரஸ்யமாயிருக்கிறதென்று நாம் சொன்னால், ஸ்வர்க்க வாசிகளாகிய அந்த இரண்டு அறிஞர்களுடைய திறமையை நாம் குறைகூறியதாகாது. வங்க இலக்கியம் எப்படி நாளுக்கு நாள் சோபித்துக் கொண்டு வருகிறதோ அப்படியே, அந்த இலக்கிய மலர்களின் பாஷாந்தரங்களும் சோபிக்க வேண்டியதுதானே. இந்தச் சோபைக்குக் காரண பூதர்களுள் ஒருவராயிருக்கும் விஷயத்தில் ஸ்ரீ குமாரஸ்வாமி தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளப் பூர்ண உரிமை யுடையவர்.

ஸ்ரீ பங்கிம் சந்திரருடைய அபூர்வ கற்பனா சக்தி இந்த நூலின் பல இடங்களிலும் ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது. 12வது அத்தியாயத்தில் கல்யாணியின் பிரிவினால் மஹேந்திரன் பிரலாபிப்பது, சோகத்தின் சிகரத்தை எட்டிப் பார்ப்பதாகும். ஜீவானந்தனுடைய மனைவி சாந்தியை பங்கிம் சந்திரர் வருணிக்கிறார்:—

முகிலிடையே மின்னல்போலவும், மனதின் கண் மேதைபோலவும், ஓசை நிரம்பிய உலகில் இன்னிசைபோலவும், மரண துக்கத்தினிடையே திகழும் ஓர் அழிவற்ற இன்பம்போலவும் அவளுடைய ரூபலாவண்யம் அநிர்வசநீயமான இனிமையும், உயரிய பாவமும், அன்பும், சாந்தமும், நிரம்பி விளங்கிற்று. .... பக்—86.

சாந்தி, கந்தல் புடவையுடன் ஜீவானந்தன் தங்கியுள்ள குடிசைக்குள் நுழைகிறாள். அஃதெப்படி இருக்கிறது?

எங்கோ பன்னீர்ப் புட்டி சட்டென்று திறக்கப் பட்டு வாசனை வீசுவது போலவும், யாரோ, கனலும் தீயில் குங்கிலியம் தூவியவுடன் மிருது மணமுடைய புகைகம் மென்று பரவுவது போலவும் இருந்தது. .... பக்—89.

மூர்ச்சையாகிக் கிடந்த கல்யாணி கண் விழிக்கிறாள். எப்படி?

மெல்ல மெல்ல கீழ்த் திசையில் புலரும் வைகறையின் மலர்ச்சியைப் போன்றும், அதிகாலையில் இதழ் விரிக்கும் அரவிந்த மலர் போன்றும், உள்ளத்தில் எழும் முதல் பிரேமானுபவம் போன்றும் அவள் கண்களைத் திறக்கலானாள்.

பக்—94.

மன்மதன் செய்கிற வேலையைப் பாருங்கள்.

தெய்வ மகளிரின் கடைக்கண் நோக்கி னுண்டாகும் மின்னலைக் கொண்டு நிருமிக்கப்பட்ட மோஹனாஸ்த்ரத்தை மலர்வில்லாளி விவாகமான தம்பதிகளின் மேல் வீணே பிரயோகிப்பதில்லை. ஆங்கிலேயர் பூர்ணிமை இரவுகளில் வீதிகளில் ஆவி விளக்கை (Gaslight) ஏற்றுகின்றனர். வங்காளிகள் எண்ணெய் இட்ட தலையிலேயே எண்ணெயை ஊற்றிக் கொள்வர். மனிதர்களின் விஷயந்தான் இப்படியிருக்கிற தென்றால் சந்திரன்கூடச் சூரியன் ஒளிர்ந்து கொண் டிருக்கும்போது சிற்சில சமயங்களில் உதயமாகிறான். வருணன் நீர் நிரம்பிய கடலிலேயே மழை பொழிகிறான். பணம் நிரம்பி வழியும் பேழைகளிலேயே குபேரன் செல்வத்தை நிரப்புகிறான். எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு போய்விட்ட இடத்திலேயே மீண்டும் கூற்றுவன், எஞ்சிய உயிரைக் கவர வந்து வற்புறுத்துகிறான். ஆனால் ரதிபதியான மாரவேள் ஒருவனிடம் மட்டும் இத்தகைய அசட்டுக் காரியங்கள் இல்லை. எங்கு விவாகமுடி விழுந்து விட்டதோ அங்கு மதனதேவன் வீண் சிரமம் எடுத்துக் கொள்வதில்லை.

பக்—107-108.

மூன்றும் பாகம் நான்காம் அத்தியாயத்தில் கல்யாணிக்கும் பவானந்தனுக்கும் நடைபெறுகிற சம்பாஷணையின் மூலமாக கல்யாணியின் வைராக்கிய சித்தத்தையும், தாயன்பையும் மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர்.

பங்கிம் சந்திரர், நமது தற்போதைய கடமை என்ன வென்பதைப் பற்றி நூலின் கடைசி அத்தியாயத்தில் பின் வருமாறு அழகாகக் கூறுகிறார்:—

இப்போது இந்தத் தேசத்தில் வெகு காலமாகப் பஹிர் விஷயமான ஞானம் அற்றுப் போய்விட்டது. இதனாலேயே சுத்தமான ஹிந்து மதமும் அழிவுற்றது. ஆர்ய தர்மம் புது ஜீவனைப் பெற வேண்டுமானால் முதலில் இந்த நாட்டில் புறப் பொருளைப் பற்றிய அறிவு பரவும்படி செய்ய வேண்டும்.

பக்—252.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னே சொன்ன இந்தக் கவிஞனுடைய வாக்கு இப்பொழுது எவ்வளவு உண்மையாக இருக்கிறது? இதனை இனியேனும் உணர்ந்து நடப்போமா?

மெஸர்ஸ் அல்லயன்ஸ் கம்பெனியாருடைய மற்றப் பதிப்புக்களைப்போல் இஃது உயரிய காகிதத்தில் சுத்தமான எழுத்துக்களால் அச்சிடப் பெற்று நல்ல பைண்டுடன் விளங்குகிறது. இந்தக் கம்பெனியார், ஸ்ரீ பங்கிம் சந்

திருடையமற்ற நூல்களையும் தமிழில் கொணரப் போவதாக அறிந்து நாம் பெரு மகிழ்ச்சி யடைகிறோம்.

வார்தா திட்டம்

• ஆசிரியர்: ஸ்ரீ பெ. கோ. சுந்தரராஜன், பி.ஏ.,எல்.டி., வெளியிட்டோர்: மணிக் கொடி புத்தகசாலை, ஜி. டி. மதராஸ்; டபிள் கிரவுன் அளவு 1x16; பக்கம்: 128; விலை எட்டு அணா.

இஃது ஒரு பிரசார நூல். வார்தா கமிட்டியின் அறிக்கையும், அதற்குச் சுருக்கமான வியாக்கியானமும் இதில் அடங்கி யிருக்கின்றன. இதற்குப் பொருத்தமாக சென்னை அரசாங்கத்துப் பிரசார மந்திரி ஸ்ரீ எஸ். ராமனாதன் 'இதற்கு முகவுரை கொடுத்திருக்கிறார். 'தற் காலத்தில் படித்தவர்கள் ஏன் வேலை யில்லாமல் திண்டாடுகிறார்கள் என்பதற்கு கனம் மந்திரி, தமது முகவுரையில் அழகானதொரு காரணங் கூறுகிறார். இது நிரம்ப உண்மையாகவும் அநுபவத்திற்குப் பொருத்தமாகவும் இருக்கிறது.

> ஏதோ ஒரு பையில் சாமானைப் போட்டுத் திணிப்பதுமாதிரி பிள்ளைகளுடைய மூளையில் புஸ்தகங்களைத் திணிப்பதுதான் தற்காலத்திய கல்வியின் நோக்கமாகும். ஒரு பையில் எவ்வளவுக் கெவ்வளவு சாமான்கள் திணிக்கப் படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு பை கனங் கொள்வதால் அதைத் தூக்கிச் செல்வது கஷ்டமாகி விடுகிறது. அதைப்போல் எவ்வளவுக் கெவ்வளவு தற்காலப் படிப்பை அதிகமாய் வாசிக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு பையன் பாரமுள்ள மூட்டையைப்போல் பிறரால் தூக்கிச் செல்லப்பட வேண்டுமே யொழிய தானாகவே இயங்குவதற்குச் சக்தியற்றுப் போகிறான். படிப்பென்பது வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு பயிற்சியா யிருக்க வேண்டுமே யொழிய நம்மைத் தடுப்பதற்கு ஒரு பாரமாய்ப் போய் விட்டதால்தான் படித்தவர்கள் வேலை யின்றித் திண்டாடுகிறார்கள்.

இந்த நிலைமையி லிருந்து நமது தேசத்து எதிர்கால சந்ததியாரை விடுதலை செய்வதுதான் வார்தா திட்டத்தின் நோக்கம்.

'பள்ளியில் எழுத்தறிவுக்காக வந்து சேரும் பிள்ளைகளுக்கு 14 வயதுக்குள் எழுத்தறிவோடு கைத் தொழில் திறமையும் போதித்து அவர்கள் ஜீவனத்துக்காக வேலை செய்துபிழைக்கும் சக்தியை அடையும்படி செய்வதே' வார்தா திட்டத்தின் நோக்கம். இந்த நோக்கத்தை ஏன் மகாத்மா காந்தி முதலியோர் வற்புறுத்துகின்றனர் என்பதற்கு ஸ்ரீ சுந்தரராஜன், இந்த நூலில் சில அடிப்படையான காரணங்களை எடுத்துக் காட்டுகிறார்.

> வேலை யில்லாத் திண்டாட்டம் வரும்போது பள்ளியில் படித்த பையனுக்கு மன வருத்தமும், பொருளாதார நெருக்கடியினால் ஊதியம் கிடைக்காதபோது தொழிலாளிக்கு மனக் கசப்பும் ஏற்பட்டு ஒருவரை யொருவர் சந்தேக மனப்பான்மையுடன் கருதக் காரண மேற்படுகிறது. இந்தப் பிளவுகளினால் சமூகம் முழுவதற்கும் ஏற்படும் தீமையை ஒழித்து ஒப்பற்ற நன்மையாகிய சமூக ஒற்றுமையைக் கைத் தொழில் சம்பந்

தப்பட்ட கல்வி நிலை நாட்டும். இந்தத் திட்டந்தான், கைத்தொழில் கற்பவனும் பாடம் கற்பவனும் ஒரே பொதுவான கல்வியைக் கற்று, தொழிலுக்கும் அறிவுக்கும் ஒருவித முரண்பாடும் கண்டறிய முடியாத சந்தர்ப்பத்தை அளிக்கிறது. பக். 12.

எத்தகைய கல்வித் திட்டத்திலும் சரித்திரத்திற்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டுமென்பது நமது நிர்ணயமான அபிப்பிராயம். இந்த முக்கிய ஸ்தானத்தை வார்தா கமிட்டியினர் சரித்திரத்திற்குக் கொடுத்திருக்கின்றனர்.

சரித்திரம் வெறும் சண்டைகளும் தேதிகளும் கொண்ட ஜாபிதா அன்று. மனித வர்க்கத்தின் வளர்ச்சியைப் பற்றித் தெரிவிக்கும் ஓர் நூல்; சமூக ஒற்றுமைக்கு வழிகாட்டும் பாடம்; யுத்தத்தில் நாடுகளை ஜெயித்தவர்களைவிட மனித சமூகத்திற்கு நன்மை செய்தவர்களே சிறந்தவர்கள்; பலாத்காரத்தைவிட அஹிம்சையே சிறந்தது என்ற விஷயங்களைப் புகட்டுவது தான் சரித்திரம் என்ற முறையில் வார்தா அறிக்கையில் சரித்திரத்தைப் பற்றிய திட்டம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பக். 38.

வார்தா கல்வித் திட்டத்திற்கு இந்தியாவில் பலத்த எதிர்ப்பு ஒன்றும் இல்லை. ஏகதேசமாகத் தலைகாட்டுகிற எதிர்ப்புகள், கல்வித் துறையில் உழைத்து அநுபவம் பெற்றவர்களிடமிருந்து வரவில்லை. தற்காலக் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற விஷயத்தில் எல்லாருக்கும் எவ்வித அபிப்பிராய வேற்றுமையும் இல்லாத போழ்து, வார்தா திட்டத்தைப் பற்றி ஒரு முகமான கருத்துக் கொண்டு இதனை நடை முறையில் கொணரச் செய்தால் தான் நல்லது. அந்தக் காலம் வெகு தூரத்திலில்லை என்பதை மட்டும் நாம் நன்கு அறிகிறோம். அக்காலம் விரைவினில் வருவதற்கு இந்த நூல் ஒரு தூண்டுகோலாயிருக்குமல்லவா - தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில்?

புஸ்தகத்திற்குக் கொஞ்சம் நல்ல காகிதத்தை உபயோகித்திருக்கலாம். அல்லது விலையையாவது சிறிது குறைத்திருக்கவேண்டும்.

வரப்பெற்றோம்

1. கம்பை செட்டியார் ஹைஸ்கூல் 1938-ம் வருஷ மலர்.
2. புதுக்கோட்டை உடற்பயிற்சி பிரசார சபையார் வெளியிட்ட 'மெய்யுறுதி'.

இவை அனுப்பியவர்க்கு வந்தனம்.

பரஸ்பரப் புகழுரைகள்—

முஸோலினி—ஹிட்லர்

1938-ம் வருஷம் மே மாதம் முதல் வாரத்தில் ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர், ரோமாபுரிக்கு விஜயம் செய்தார். அம்மாதம் ஏழாந்தேதி, முஸோலினி, ஹிட்லருக்கு அரசாங்க விருந்தொன்றளித்தார். அப்பொழுது இருவரும் நிகழ்த்திய பிரசங்கங்கள் அப்படியே இங்கு வெளியிடப் பெற்றிருக்கின்றன:—

முஸோலினியின் பிரசங்கம்.

தலைவரே,

நானும், இத்தாலிய அரசாங்கமும், இத்தாலிய ஜனங்களும் உங்களை மிகவும் சந்தோஷத்தோடு வரவேற்கிறோம். ரோமாபுரியின் பரம்பரைப் பெருமை, புகழ் ஆகிய இரண்டும் சேர்ந்து இருக்கிற தற்போதைய நிலையிலே உங்களை நாங்கள் வரவேற்கிறோம்.

தங்களுடைய ரோமாபுரி விஜயமானது, நமது இரண்டு நாடுகளுக்கு மிடையேயுள்ள ஒற்றுமையைப் பலப்படுத்துவதாகிறது. நாம் கோரிய இந்த ஒற்றுமையின் அடிவேர்கள் உங்களுடைய புரட்சியிலே, எங்களுடைய புரட்சியிலே அமைந்திருக்கின்றன. நம்மிரு நாட்டாரும் கொண்டுள்ள இருவகை லட்சியங்களிலேயும் இந்த ஒற்றுமையின் பலம் இருக்கிறது. நம்மிரு சமூகத்தினருடைய சரித்திரம், இந்த ஒற்றுமைக்கு அஸ்திவாரமா யமைந்திருக்கிறது.

சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னர், இத்தலியும்ஜெர்மனியும்முறையே தங்கள் ஆயுத பலத்தினால் தேசிய ஒற்றுமையை ஸ்தாபித்துக்கொள்ளப் புரட்சி செய்திருப்பதாக இரண்டு நாட்டுச் சரித்திரங்களும் கூறுகின்றன. அப்பொழுது ஏற்பட்ட ஒற்றுமையே இப்பொழுதைய ஒற்றுமைக்கும் காரணமாயிருக்கிறது.

இரண்டு நாடுகளும், ஒற்றுமையாயிருக்கவேண்டு மென்று நம்பிக்கையோடும் மன உறுதியோடும் போராடி வந்திருக்கின்றன. இந்த ஒற்றுமையைப் பலப்படுத்த இரண்டு நாடுகளும் உழைத்திருக்கின்றன. சமீப காலத்தில் தான், இரண்டு நாடுகளும் பொய் லட்சியங்களிலிருந்து திரும்பியிருக்கின்றன.

இரண்டு நாடுகளும் சென்ற சில ஆண்டுகளாக ஒற்றுமையான நோக்கத்துடன் ஒன்றுகவே சென்று கொண்டிருக்கின்றன.

பாசிஸ்ட் இத்தலியானது, நட்புக்குரிய லட்சணம் ஒன்றுதான் என்பதை நன்முக உணர்ந்திருக்கிறது. இதை நான் பெர்லினிலும் கூறியிருக்கிறேன். நாஜி ஜெர்மனியும் பாசிஸ்ட் இத்தலியும் ஒன்றுதான் என்பதை உணர்வதுதான் இந்தலட்சணம். இந்த விதிக்குக் கட்டுப்பட்டு இத்தலி நடந்துகொண்டிருக்கிறது; இனியும் நடக்கும்.

இந்த ரோம்-பெர்லின் அச்சின் அவசியத்தைப் பற்றியும் நோக்கங்களைப் பற்றியும் பன்முறை வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஜெர்மனி

யும், இத்தலியும் நடை முறையிலே கொண்ட முடியாத லட்சியங்களையெல்லாம் கைவிட்டு விட்டன. சர்வ தேச ஜனங்களும் சௌக்கியமாயும் அமைதியாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் காரியங்களைச் செய்து வருகின்றன. இந்த ஒரு நிலைமைக்கு எப்பொழுது வர முடியுமென்றால் ஒவ்வொரு ஜன சமூகத்தாருடைய சாதாரண பிரஜா வுரிமைகளையும் அங்கீகரித்து அவர்களும் மற்றவர்களைப் போல் வாழவேண்டுமென்ற உண்மையை ஒப்புக்கொண்ட பிறகு தான்.

ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிப்படையா யமைந்துள்ள ஐரோப்பிய சமாதானம் நீடித்து நிற்க வேண்டுமென்றால், மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் மேலே சொன்ன உண்மையை உணர்ந்து கொண்டு விட்டால் போதுமானது.

தலைவரே, நான் சமீபத்தில் தங்கள் நாட்டுக்கு விஜயஞ் செய்திருந்த போது, நீங்கள் செய்துள்ள அபாரமான வேலைகளையும் அதனால் ஏற்பட்டிருக்கிற பலத்தையும் பார்த்தேன். எல்லாம் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஒரு ஜன சமூகத்திற்கு அத்தியாவசியமாக வேண்டப் படுகிற ஒழுங்கு, உறுதி, பிடிவாதம் முதலிய சுபாவங்களை உங்கள் ஜனங்களிடத்தில் எவ்வளவு அருமையாகப் புகுத்தியிருக்கிறீர்கள் என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன்.

நீங்களும், உங்களுடைய உத்தியோகஸ்தர்களும், உங்களுடைய ஜனங்களும் எனக்கு அளித்த வரவேற்பை நான் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டேன். தங்களுடைய திறமையான வேலைப் பாட்டை நானும் பாசிஸ்ட்டு இத்தலியும் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

தங்களுடைய தேகசௌக்கியத்திற்காகவும், ஜெர்மானிய சமுதாயத்தின் நன்மைக்காவும் நான் பிரார்த்திக்கிறேன்.

ஹிட்லரின் பதில்

தலைவரே,

இத்தாலிய அரசாங்கத்தின் சார்பாகவும் இத்தாலிய ஜனங்களின் சார்பாகவும் தாங்கள் என்னை வரவேற்றுப் பேசியதற்காக நான் மிகவும் நன்றி யுடையவனா யிருக்கிறேன்.

புகழ் நிறைந்ததும், புராதனப் பெருமை நிறைந்ததும், பாசிஸ்ட் இளைஞர்களுடைய சக்திபொருந்திய குறிகள் நிறைந்ததுமான ரோமாபுரியில் நான் இப்பொழுது இருப்பதைக் குறித்து மகிழ்ச்சி யடைகிறேன்.

இத்தாலிய பூமியில் நான் காலடி எடுத்து வைத்தபோதே எனக்கு ஒரு வகையான ஆனந்தம் உண்டாயிற்று.

பாசிஸ்ட் இத்தலியைச் சிருஷ்டித்து ஒரு புதிய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தவர் என்ற முறையிலும், ஜெர்மனியின் பெரிய நண்பர் என்ற முறையிலும் உங்களை நாங்கள் ஜெர்மனியில் வரவேற்றோம்.

நாஜி புரட்சியும், பாசிஸ்ட் புரட்சியும் இப்பொழுது இரண்டு புதிய நாடுகளைச் சிருஷ்டித்திருக்கின்றன. சிதறிப் போயிருக்கிற, அமைதியற்ற நிலையில் இருக்கிற தற்போதைய உலகத்தில் சமாதானத்திற்கும் முன்னேற்றத்திற்கும் காரண பூதமாக இந்த இரண்டு நாடுகளும் இருக்கின்றன.

ஜெர்மனியும் இத்தலியும் ஒரேவிதமான லட்சியங்களைக் கொண்டவை. இதனால் இருநாடுகளும் அதிகநெருக்க

முள்ளவை. நம்மிரண்டு நாட்டிலு முள்ள ஜனங்களும் சேர்ந்து 120 லட்சம் பேரா யிருக்கிறோம். நாம் நம்முடைய உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள உறுதி பூண்டிருக்கிறோம். அந்த உரிமைகள் எந்த விதத்திலேனும் தாக்கப்படுமாயின், அதை எதிர்த்துப் போராடவும் தீர்மானித்திருக்கிறோம்.

நம்மிரு ஜன சமூகத்தி னுடைய மனப்பான்மைகளையும் நிலைமைகளையும் அறியாமல் எதிர்த்து நிற்கும் சக்திகளோடு நாமிரு நாட்டாரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

நம்மிருவருக்கும் உள்ள நட்பானது சென்ற சில ஆண்டுகளாக நன்கு நிரூபித்துக் காட்டப்பட் டிருக்கிறது. இந்த நட்பை இன்னும் நாம அதிகமாக வளர்த்துக் கொண்டு போக வேண்டும்.

தலைவரே, "நீங்கள் சமீபத்தில் பெர்லினுக்கு 'விஜயஞ் செய்திருந்த போது, தாங்களும் பாசிஸ்ட் இத்தலியும் கையாள்கிற பொது நெறியொன்றைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டீர்கள். 'தெளிவாகவும் ஆனால் உறுயாகவும் மனம் விட்டுப் பேசுவது; யாராவது நண்பர் அகப்பட்டால் அவரோடு கடைசி வரை செல்வது' என்பது தான் அந்தப்பொது நெறி.

இந்தப் பொது நெறியை நாஜி ஜெர்மனி பரிபூர்ணமாக அங்கீகரிக்கிறது. சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் ரோமாபுரியின் மகத்துவம் எப்படி யிருந்ததோ அப்படியே அதனை மீண்டும் கொண்டுவந்த பெனிடோ முஸோலினியை நானும் நாஜி ஜெர்மனியும் வாழ்த்துகிறோம்.

தங்களுடைய நாட்டுக்கு வடக்கே அநேக ஜாதியார் சேர்ந்து ஒரு புதிய ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இப்பொழுது நானும் தாங்களும், சென்ற இரண்டாயிர வருஷ சரித்திர அநுபவத்தைக் கொண்டு, நம்மிரு ஜாதியார்களுக்கு மிடையே இயற்கையாக ஏற்பட்ட எல்லைப்புறத்தை அங்கீகரிக்கத் தீர்மானித் திருக்கிறோம். நம்மிரண்டு நாடுகளுக்கு மிடையே ஆல்ப்ஸ் மலையினால் ஏற்படுத்தப் பெற்ற இயற்கை எல்லையை அங்கீகரிக்க வேண்டு மென்று நான் ஜெர்மானிய ஜனங்களிடையே சொல்லி யிருக்கிறேன். ரோமாபுரிக்கும் பெர்லினுக்கும் சேர்ந்து எதிர்காலத்திலே நல்ல பிரகாசமான வாழ்க்கை இருக்கிற தென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தலைவரே, மிகவும் நெருக்கடியான காலங்களில் தாங்களும் தங்கள் நாட்டாரும் எங்களுக்கு மிகவும் நெருங்கி ஒற்றுமையோடு இருந்தது போலவே இத்தலியின் கஷ்டமான காலங்களில் நானும் நாஜி ஜெர்மனியும் நட்புப் பூண்டு ஒற்றுமையுடனிருக்கத் தீர்மானித் திருக்கிறோம்.

இத்தலியின் இளைஞர்கள் காட்டும் அற்புதமான வீர உணர்ச்சியை நான் எப்பொழுதும் என் உள்ளத்தில் வைத்துக் கொண் டிருப்பேன்.

உங்களுடைய தரைப்படை வீரர்கள், கருஞ் சட்டைப் படையினர், கடற் படையினர், ஆகாயப் படையினர் எல்லாரையும் கண்டு நான் மகிழ்ச்சி யுற்றேன். இவர்களை நான் என்றும் மறக்க முடியாது.

தாங்கள் செய்து கொண்டு வருகிற நிர்மாண வேலைகள் யாவும் வெற்றி பெற வேண்டு மென்று விரும்புகிறேன்.

தாங்களும் இத்தாலிய ஜனங்களும் சௌக்கியமாக இருக்க வேண்டு மென்று பிரார்த்திக்கிறேன்.

சினிமா பக்தர்களுக்கு

புராதன காலத்து ஆரியர்களுடைய வாழ்க்கையைச் சித்திரித்து 'ப்ருத்வி புத்ரா' என்ற பெயருடன் ஜயந்த் பிக்சர்ஸ் கம்பெனியார் ஒரு படம் தயாரித்து வருகிறார்கள்.

∴ ∴ ∴

பிரெஞ்சு புரட்சி சம்பந்தமான கதையொன்று, மெட்ரோ—கோல்ட்வின் மேயர் பிக்சர் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மேற்படி புரட்சி ஏற்படுகிற காலத்தில் பாரிஸ் நகரத்து வீதிகள் இருந்தன போலவும், ஜனங்கள், போர் வீரர்கள் முதலியோருடைய உடைகள் முதலியன இருந்த மாதிரியும் காட்சி ஜோடனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் படத்துக்காக ஆயிரக்கணக்கான பேர் நடிகர்களாகச் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள்.

∴ ∴ ∴

சினிமா படங்களில் கார்ட்டூன்கள் என்ற ஒரு வகையுண்டு. இவற்றில் ஆழ்ந்த கருத்துக்களை நகைச்சுவையில் திணிக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுவது சகஜம். சமீபத்தில் ஸ்ரீ டிஸ்னே என்பவர், மூன்று விதமான கார்ட்டூன்கள் தயாரித்திருக்கிறார். இதற்காகும் செலவு பன்னிரண்டு லட்சம் பவுன் என்று சொல்லப் படுகிறது. இந்தக் கார்ட்டூன் படம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தலி, போலிஷ், ஸ்வீடிஷ், ஜெக்கோ—ஸ்லோவேகியன், ஸ்பானிஷ், அராபி, ஹிந்துஸ்தானி ஆகிய ஒன்பது பாஷைகளில் எல்லா நாடுகளிலும் விநியோகிக்கப் படுமாம்.

∴ ∴ ∴

ஹாலிவுட்டிலே இப்பொழுது ஒரு பெரிய கூக்குரல் கிளம்பியிருக்கிறதே தெரியுமா உங்களுக்கு? சில படங்களில், ஆளோடு ஆளாக வர வேண்டிய சிலர் தேவையாயிருக்கும். இவர்கள் பேசவோ, நடிக்கவோ ஒன்றுந் தேவையில்லை. இப்படிப்பட்டவர்களை 'சும்மா நிற்கிறவர்கள்' என்று சொல்வதுண்டு. அப்படி இவர்களைச் சொல்லக்கூடாதாம். அது இவர்களுக்குக் கௌரவக் குறைவாயிருக்கிறதாம். 'டைரெக்டரின் திருஷ்டிகள்' என்று இவர்களைச் சொல்ல வேண்டுமாம். இதற்காக ஒரு கிளர்ச்சி!

∴ ∴ ∴

இந்தியாவிலுள்ள பிரபல சினிமா நடிகர்கள் சிலர் சேர்ந்து 'ரூபி பிக்சர்ஸ் கம்பெனி' என்றொரு புது கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். இதனைச் சேர்ந்துள்ள நடிகர்களுக்குச் சம்பளம் கிடையாது. சினிமா தொழில் முன்னேற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இவர்கள் உழைப்பார்கள். கம்பெனிக்கு வருகிற லாபத்தில் எல்லாரும் பங்கிட்டுக் கொள்வார்கள். இந்தக் கம்பெனியில் டி. பில்லிமோரியா, ஜால் மர்ச்செண்டு, சுலோசனா முதலியவர்கள் சேர்ந்திருக்

கிறார்கள். இந்தக் கம்பெனியின் முதல் படமாக 'ப்ரேம் ஜோதி' என்றொரு படம் தயாராகிக் கொண்டு வருகிறது. இது காதலும் தியாகமும் நிறைந்த கதை.

ஃ ஃ ஃ

நெபோலியனுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியைச் சித்திரித்துச் சினிமா படம் எடுக்கப்பட்டிருப்பதை நேயர்கள் அறிவார்கள். இப்பொழுது ஓர் இங்கிலீஷ் படக் கம்பெனியார், சிறந்த கப்பற்படை வீரனாகிய நெல்ஸனுடைய வாழ்க்கையைச் சித்திரித்து ஒரு படம் எடுக்க ஏற்பாடாடு செய்திருக்கின்றனர். இதற்குச்சுமார் முப்பது லட்சம் ரூபாய் செலவழிக்கப் போகிறார்களாம். லெஸ்லி ஹோவார்ட் என்பவர் நெல்ஸன் வேஷம் தரிப்பார். நெல்ஸன், டிராபல்கார் யுத்தம் என்ற பெரிய கடற்படை யுத்தத்தில் வெற்றி பெற்றான். இந்த யுத்தம் அப்படியே காண்பிக்கப்படும். இது சம்பந்தமான போடோக்கள் ஸ்டூடியோவில் எடுக்கப் பெறாமல், சமுத்திரத்திலேயே எடுக்கப் பெறுமாம். இதற்காக நெல்ஸன் காலத்தில் யுத்தக் கப்பல்கள் இருந்த மாதிரியாகவே சுமார் இருபது கப்பல்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் படம் 'ஷூட்டிங்' நடக்கிறபோது சுமார் நாலாயிரம் பேருக்கு வேலை யிருக்கும். சினிமா சரித்திரத்திலேயே இதொரு பெரிய முயற்சி என்று சொல்லப் படுகிறது.

ஃ ஃ ஃ

ஷர்லி டெம்பிள் என்ற குழந்தை சினிமா நடிகைக்கு, நாம் எதிர்காலத்தில் என்ன செய்வது, எப்படிப் பிழைப்பது என்பவைகளைப் பற்றிக் கவலையே இல்லை யென்னும் படியாக அவளுடைய கார்டியன்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுது அவளுக்குக் கிடைக்கிற பணத்தை, ரொக்கமாக அவளிடத்திலேயோ அவளுடைய கார்டியன்களிடத்திலேயோ பட முதலாளிகள் கொடுப்பதில்லை. எல்லாவற்றையும் கவர்ன்மெண்ட் பாண்டுகளிலே போட்டு வைக்கிறார்கள். தவிர, இவளுக்கு வயது வந்த பிறகு, மொத்தமாக எல்லாப் பணமும் கிடைக்குமாறும் ஏற்பாடு செய்யவில்லை. இவளுடைய ஆஸ்தியின் ஒரு தொகை, இவளுக்கு 20 வயது ஆன காலத்திலும், இன்னும் ஒரு பகுதி, 30 வயது காலத்திலும், மற்றொரு பகுதி 40, 50 வயது காலங்களிலும் இவளுக்குக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஷெர்லியின் தாயார், இப்பொழுது வாரத்திற் கொருமுறை குடும்பச் செலவுக் கென்று நூறு பவுன் விகிதம் ஸ்டூடியோ அதிகாரிகள் கொடுத்து விடுகிறார்கள். வயதான பிறகு, சம்பாதிக்கிற கவலையெல்லாம் இல்லாமல், சிறு வயதிலேயே சம்பாதித்துச் சேமித்து வைக்கிற பாக்கியத்தைப் பெற்றுள்ள ஷெர்லி டெம்பிளைக் கண்டு பொறாமைப் படாதவர் யார்?

சீனாவுக்கு உதவி செய்யும்பொருட்டு முப்பதினாயிரம் ரூபாய் தேவை யென்று காங்கிரஸ் பிரசிடெண்ட் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கிராம ஜனங்களிடத்தில் கல்வியைப் புகட்டுவதற்காக ஐ. மாகாண அரசாங்கத்தார் பத்து லட்சம் ரூபாய் செலவழிக்கத் தீர்மானித் திருக்கின்றனர்.

இன்னும் இருபது வருஷங்களுக்குள் பத்து லட்சம் குடும்பங்களை மஞ்சுகோவில் குடியேற்றி வைக்க வேண்டுமென்று ஜப்பான் திட்டம் போட்டிருக்கிறது.

கட்டுரைப் பஞ்சம்

—"வருணன்"

பத்திரிகாசிரியர்களுடைய தலை, வழுக்கை விழுந்திருப்பதற்குக் காரணம் இத்தனை நாட்களாக எனக்குத் தெரியாமலே இருந்தது. நேற்று முன் தினம் மாலை 'நாட்டாண்மை' ஆசிரியர் ஸ்ரீ தீர்த்தகிரியைச் சந்தித்துப் பேசிய பிறகுதான் உண்மை தெரியவந்தது. அவர் நிரம்ப சரளமான சுபாவி. கொஞ்சங்கூட கள்ளங் கபடில்லாதவர். இன்றைய தினம் ராத்திரி வீட்டிலே காற்படி அரிசிக்குக்கூட வழியில்லை யென்று தன்னுடைய பரிதாப நிலையை எல்லாரிடத்திலும் ரகசியமாகச் சொல்லுவார். இதற்குமேல், உலகத்திலேயுள்ள எல்லாப் பத்திரிகாசிரியர்களுடைய நிலைமையும் இப்படித்தான் என்று சொல்லிக் கொண்டு தாமே சமாதானமும் செய்து கொள்வார். இவருடைய நண்பர்கள் ஒருவராவது இவருடைய கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூட உதவி செய்தது கிடையாது. ஆனால் தேனொழுகப் பேசிவிட்டுப் போய் விடுவார்கள்; இவருடைய பத்திரிகாலயத்தின் படி யிறங்கியதும் 'நாட்டாண்மை' ஆசிரியர் நன்றாகத்தான் எழுதுகிறார்; ஆனால் ஒரு 'ஸ்க்ரூ லூஸ்' போல்இருக்கிறது என்று உரத்த குரலில் பேசத் தொடங்கி விடுவார்கள். ஸ்ரீ தீர்த்தகிரியின் காதில் இந்த வார்த்தைகள் எத்தனையோ முறை விழுந்திருக்கின்றன. ஆனால் அவர் இவற்றையெல்லாம் லட்சியம் செய்கிறவரா? பேனாவைக் காகிதத்தில் குத்திக் கொண்டு, புருவங்களை நெற்றியிலே ஏற்றிக் கொண்டு, உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, இன்னும் என்னென்னவோ கோனஷ்டைகளெல்லாம் செய்து கொண்டு 'நமக்கு ஒரு ஸ்க்ரூ லூஸ் என்று சொல்கிறவனெல்லாருக்கும் இரண்டு ஸ்க்ரூ லூஸ்' என்று சொல்லிக் கொண்டு திருப்தியடைந்து விடுவார்.

பாவம், இவரும் எப்படியோ இருபத்திரண்டு வருஷகாலம் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுக் காலங் கடத்தி விட்டார். உலகத்திலே வேறெந்த திருப்தியை அடையாவிட்டாலும் ஒரே ஒரு திருப்தி மட்டும்இவருக்கு இருந்தது. அதாவது தமது கவலைகளைப் பிதிரார்ஜித சொத்தாக அடைந்து அநுபவிப்பதற்குப் புத்திர பாக்கியம் இல்லாதது பற்றி இவருக்குப் பரம திருப்தி; ஒரு பெருமைகூட. யாராவது இதைப்பற்றி இவரிடத்தில் பிரஸ்தாபித்தால், 'எனக்கென்ன. ஐயா, கட்டா, காய்தாவா? இந்த நிமிஷத்திலேயே துணியை உதறித் தோள் மேலே போட்டுக் கொண்டு மானஸரோவரத்துக்கும் போவேன்; அதற்கப்பாலும் போவேன்' என்று ஜம்பமாகப் பேசுவார்.

உலகத்திலே நிரந்தரமான சில உண்மைகள் உண்டு. அவற்றில் ஒன்று பத்திரிகாசிரியர்களுக்குச் சந்தான பாக்கியம் அதிகமாகக் கிடையாதென்பது. இவர்களுக்கு, இந்தப் பாக்கியத்தைப் பெற அவா இருந்தாலும், அவகாசம் எங்கே யிருக்கிறது? பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்க, ஓயாமல் ப்ரூப் படிக்க, யாருடைய மனமும் புண்படாமல் எப்படி எழுதுவதென்பதைப் பேனாக் கட்டையினால் மண்டையில் அடித்துக் கொண்டு சிந்திக்க, தம்மைப் பார்க்க

வருகிறவர்களிடத்திலே யெல்லாம், மனம் இருந்தாலும் இரா விட்டாலும் பல்லைக் காட்டிக் காட்டிப் பேச, இப்படி எழுதித் தொலையாத ஏழாயிரம் விஷயங்களில் மனதைச் செலுத்தத்தான் இவர்களுக்கு அவகாசம் இருக்கிறதே தவிர, இல்லறம், காதல் என்பதைப் பற்றி ஆராய எங்கே பொழுது இருக்கிறது? இதனால் தான் அநேக பத்திரிகாசிரியர்களுடைய எழுத்துக்களிலே ஈரமே இருப்பதில்லை போலும்.

ஸ்ரீ தீர்த்தகிரியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இரட்டை மண்டை; கொஞ்சம் கூன் முதுகு; நாள் பூராவும் குனிந்து கொண்டே எழுதியும் ப்ரூப் பார்த்தும் வந்தால் வெகு சீக்கிரத்தில் ததீசி மகரிஷியின் அவதாரமாக வேண்டியதுதானே. நெற்றியிலே எண்ணாயிரம் கோடுகள்; கீழ் நோக்கிய பார்வை; குழிந்த கண்கள்; ஒட்டிய தாடை; மேலே ஒரு சட்டை மட்டுந்தான் போட்டுக் கொண்டிருப்பார். அதில் இங்கி நட்சத்திர மண்டலம். இவருடைய பேனாக்கட்டை இருக்கிறதே, அது ஓர் அலாதி வஸ்து. நுனி ஒடிந்து, நூல் கயிற்றினால் நிப்(முள்)பைச் சேர்த்துக் கட்டப்பெற்ற அந்தப் பேனாக்கட்டை எழுதுகோலாக இருக்கிற நேரந் தவிர மற்ற நேரங்களில் ஆசிரியருடைய சிந்தனா சக்தியை மண்டையில் தட்டித் தட்டி எழுப்புவதற்குத் தூண்டுகோலாயிருக்கும்; அவருடைய காது அழுக்கை நோண்டும்; முதுகில் தினவு உண்டானால் அதனைச் சொரியும் கருவியாக அமையும்; கோடை காலத்தில் ஆசிரியருடைய தேகத்திலே கொட்டும் வியர்வையை வழித்தெடுக்கும். சுருக்கமாகச் சொன்னால் ஆசிரியருடைய செங்கோல் இது. இதனைக் கொண்டுதானே இவர் உலகத்தையாள்கிறார். இவருடைய மேஜை இருக்கிறதே, அது ஒரு பொருட்காட்சிசாலை. எல்லா இடங்களிலும் சகஜமாகப் பார்க்க முடியாத வஸ்துக்கள் என்று எதை எதை நீங்கள் கருதுகிறீர்களோ அவை யெல்லாம் அதில் இருக்கும். எலிப் புழுக்கைமுதல் அபிதான சிந்தாமணிவரையில் அந்த மேஜையில் நீங்கள் தரிசிக்கலாம். துருப் பிடித்த கத்தரிக்கோலும், ஒட்டினால் பிடித்துக் கொள்ளாத உலர்ந்துபோன பசையும், மேஜையின் இரண்டு பக்கங்களிலும் துவார பாலகர்கள் மாதிரி இருக்கும். எழுதுகோல் கூட முக்கியமில்லை நமது தீர்த்தகிரி ஆசிரியருக்கு. கத்தரிக்கோலும் பசையும் மேஜைமீது இல்லாவிட்டால், இவருடைய பஞ்சப் பிராணன்களும் ககன மார்க்கத்திலே சஞ்சரித்திடச் சென்று விடும். இதனால் தான் இவர் அடிக்கடி 'ஆசிரியர்கள் அரசர்களைவிட மேலானவர்கள்' என்று சொல்கிறார் போலிருக்கிறது. அரசருக்கு ஒரு கோல் தான்; அது செங்கோல். ஆசிரியர்களுக்கோ இரண்டு கோல். ஒன்று எழுதுகோல்; மற்றொன்று கத்தரிக்கோல. ரொம்பப் பொருத்தமாயிருக்கிறதல்லவா?

இவருடைய தலையங்கங்களுக்கு விசேஷமான ஒரு மதிப்பு உண்டு எல்லாரும் எழுதும் விஷயங்களைப் பற்றி இவர் எழுதவே மாட்டார். மற்றவர்கள் எழுதாத, அல்லது அவர்களால் எழுத முடியாத விஷயம் எதுவென்று பார்த்துத் தான் இவர் எழுதுவார். விஷயம் எப்படியிருக்கிறதோ, இவர் தலையங்கங்களுக்குக் கொடுக்கிற தலைப்புகள் மகா அற்புதமாயிருக்கும். 'நெல்லும் காந்தியும்' 'மூட்டைப் பூச்சியும் யூதனும்', 'சேனாதிபதி முதலியாரின் திருமணம்', 'ஹிட்லரும்

ப்ரஹ்மசரியமும்'; இத்தியாதி, இத்தியாதி.

சென்ற வாரம் இவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது எனக்கு நெடு நாளாக இருந்த சந்தேகத்தை இவரிடம் தெரிவித்துக் கொண்டேன். 'பத்திரிகாசிரியர்களுடைய தலை வழுக்கை விழுவதேன்?' என்று கேட்டேன். இதே தலைப்புப் பெயர் கொடுத்து மறுநாள் 'நாட்டாண்மை' பத்திரிகையில் ஒரு தலையங்கம் வெளி வந்து விட்டது. அதை அப்படியே கத்தரித்து இந்தக் கட்டுரையோடு ஒட்டியிருக்கிறேன்.

பத்திரிகாசிரியர்களுடைய தலை

வழுக்கை விழுவதேன்?

உலகத்தில் வெகு சீக்கிரத்தில் பத்திரிகாசிரியர்களுக்குத்தான் தலை வழுக்கை ஏற்பட்டு விடுகிறது. நமது அநுபவமும் இப்படித்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவாயிருக்குமென்று நாம் அநேக உடற்கூறு நூல்களையும் மனோதத்துவ சாஸ்திரங்களையும் புரட்டிப்பார்த்தோம். சரியான காரணத்தை எந்த ஆசிரியரும் கூறவில்லை. நாம் இதைப்பற்றி நீண்ட நாட்களாக ஆராய்ச்சி செய்து பின் வரும் முடிவுக்கு வந்திருக்கிறோம். அம்முடிவு என்னவெனின், பத்திரிகாசிரியர்களுக்கு அடிக்கடி ஏற்படுகிற கட்டுரைப் பஞ்சம்தான் இதற்குக் காரணம். பத்திரிகையில் எதை வெளியிடுவது என்று இவர்கள் யோசித்து யோசித்துக் கடைசியில் என்னென்னவோ புனை பெயர்களைப் போட்டும், நடையை மாற்றியும் இவர்களே அநேக விஷயங்களைப்பற்றி எழுத வேண்டியிருக்கிறது. இதற்காக இவர்கள் அடிக்கடி தங்கள் பேனாக் கட்டையை மண்டையில் அடித்து அடித்துச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. மூளையைக் கவிந்து கொண்டிருக்கும் மண்டையோட்டின் பேரிலுள்ள சதை மிகவும் சொல்பமானது. இதனால் அடிக்கடி இந்த எழுது கோலின் தாக்குதலினால் மண்டை மேலுள்ள மயிர்கள் உதிர்ந்து போய் வழுக்கை உண்டாகி விடுகிறது. இதைவிட வேறு காரணம் இருக்க முடியாது.

சுருக்கமான இந்தத் தலையங்கத்தைப் பார்த்து நான் பிரமித்துப் போனேன். இந்த முடிவு சரியானால் வக்கீல்களுக்கும் ஏன் வழுக்கை விழுகிறதென்ற சந்தேகம் எனக்கேற்பட்டது. வக்கீல்கள் ஒரு பக்கத்துக் கட்சியை எடுத்துச் சொல்கிறவர்கள்; பத்திரிகாசிரியர்களோ இரண்டுபக்கத்துக் கட்சியையும் எடுத்துச் சொல்ல வேண்டியவர்கள். இந்த நிலைமையில் பார்த்தால் முன்னவருக்கு ஒரு பக்கம் வழுக்கையும், பின்னவருக்கு இரண்டு பக்கம் வழுக்கையுமல்லவோ விழ வேண்டும். ஆனால் இப்படியிருக்கலாம். இரண்டு பேருக்கும் அடிக்கடி ஒரே விதமான பஞ்சம் ஏற்படுவதனால் இரண்டு பேருக்கும் ஒரே மாதிரியான வழுக்கை விழக்கூடும்.

பத்திரிகாசிரியர்களுக்குக் கட்டுரைப் பஞ்சம்; வக்கீல்களுக்கு கேஸ் பஞ்சம். காலம் இப்படித்தானே இருக்கிறது!

இந்தக் கட்டுரையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

—ஆசிரியர்.



1938

மே

26 ஜப்பானிய மந்திரிச் சபையில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்நிய நாட்டு மந்திரியாகிய ஹிரோடா ராஜிநாமா செய்து விட்டார். அவருக்குப் பதில் உகாகி நியமிக்கப் பட்டிருக்கிறார்.

இந்தியாவுக்குச் சமஷ்டி அரசியல் தேவையில்லையென்று லண்டனில் புலாபாய் தேசாய் பேசினார்.

27 ஸர் பிரான்சிஸ் வைலி மத்திய மாகாண கவர்னர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

மாஸ்கோ (ருஷ்யா) நகரத்திலுள்ள எல்லா இந்தியர்களும் பாசிஸ்ட்டுகளின் ஏஜண்டுகள் என்று சொல்லி அரசாங்கத்தாரால் கைது செய்யப் பட்டதாக 'பம்பாய் செண்டினல்' பத்திரிகை கூறுகிறது.

சீன—ஜப்பானிய சண்டையில் சீனர்கள் வான்பெங், லுங்காய் என்ற இரண்டு ஊர்களைப் பிடித்துக் கொண்டு விட்டனர்.

28 இந்தியாவில் சமஷ்டி அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்றும் அதன் அமைப்பில் எவ்விதமாற்றமும் ஏற்படாதென்றும் லார்ட் ஜெட்லண்ட் லண்டனில் நடைபெற்ற ஒரு விருந்தில் பேசினார்,

இன்று ஐரிஷ் பார்லிமெண்ட் கலைக்கப் பட்டது. புதிய தேர்தல்கள் இனி நடைபெறும்.

30 காண்டன் நகரத்தை இன்று ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டுத்தாக்கின. சுமார் 1100 பேர் மரணம்.

டோக்கியோ நகரத்தில் பொதுவுடமைவாதிகள் என்று சொல்லப்பட்ட 235 பேர் மீது இரகசிய விசாரணை தொடங்கப் பெற்றது.

பிராங்கோ கட்சியுடன் தாங்கள் ஒற்றுமைப் பட்டிருப்பதைக் காட்டிக் கொள்வதாக இன்று ரோமாபுரியில் இத்தாலியர் ஒரு பெரிய கொண்டாட்டம் கொண்டாடினர். முஸோலினி இந்தக் கொண்டாட்டத்தில் பேசினார்.

31 ஜப்பானியர் இன்றும் காண்டன் நகரத்தின் மீது வெடி குண்டு வீசினர். இங்ஙனம் குண்டுகளால் தாக்குவது நான்காவது முறை.

ஜூன்

1 சட்ட சபை அங்கத்தினர்களுக்கு மாதம் 75 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயிக்கப் பட்டிருந்த மசோதா பீஹார் சட்டசபையில் இன்று நிறைவேறியது.

ராணுவப் படைகள் தங்கியிராத நகரங்களிலிருந்து குண்டுகளைப் பொழியும் ஜப்பானின் செயலைக் கண்டித்து சீன ஸ்தானீகர் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி லார்ட் ஹாலிபாக்ஸிடம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

யுத்தம் ஏற்படுமானால் கட்டாய ராணுவச் சேவகம் அமுலுக்குக் கொண்டுவரப் படுமென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி காமன்ஸ் சபையில் கூறினார்.

சென்னை அஸெம்ப்ளி தலைவரான புலுசு சாம்பமூர்த்தி இன்றைய தினத்திலிருந்து, தினம் காலை மூன்று மணி நேரம் மௌன விரதம் பூண்டிருப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்.

2 தமது ஐரோப்பிய பிரயாணத்தை முன்னிட்டு பண்டித ஜவஹர்லால் நேரு இன்று பம்பாயினின்று புறப்பட்டார்.

தென்னமெரிக்காவிலுள்ள சில்லி என்ற நாடு, சர்வதேச சங்கத்திலிருந்து இன்று விலகிக் கொண்டு விட்டது.

ஸ்பெயின் யுத்தத்தில் இரு கட்சியினருக்கும் ஒரு சமரஸத்தை ஏற்படுத்தி வைக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முயற்சி செய்து கொண்டிருப்பதாக இன்றைய பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன.

தம் பெயரை வெளியிட விரும்பாத ஓர் அன்பர் வார்தாவில் அமைக்கப் பட்டிருக்கும் அகில இந்திய கல்வி ஸ்தாபனத்திற்கு 7000 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

ஸ்பெயினிலே பிராங்கோ அரசாங்கத்தை ஜெக்கோ ஸ்லோவேகியா அங்கீகரித்துக் கொண்டு விட்டது,

உலகத்தில் முதன் முதலாக டெலிபோனைச் செய்து காட்டியவன் ஜார்ஜ் பாரெஸ்ட் என்பவன். இவன் இன்று தனது 92-வது வயதில் காலமானான்.

4 ஹிந்து—முஸ்லீம் சமரஸத்தைப்பற்றிப் பேசுவதற்காக அகில இந்திய முஸ்லீம் லீகின் நிருவாகக் கமிட்டிக்கூட்டம் இன்று பம்பாயில் கூடியது.

ஜெக்கோ—ஸ்லோவேகியா படையினர் ஜெர்மன் எல்லைப்புறத்தில் பதினொரு முறை அத்துமீறிப் பிரவேசித்ததைக் கண்டித்து ஜெர்மன் அரசாங்கம் இன்று ஓர் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது.

பெல்லாரி ஜில்லாவில் பிரபல தலைவராயிருந்த திவான் பகதூர் எம். கோபாலசாமி முதலியார், தமது திவான் பகதூர் பட்டம் முதலியவைகளைத் துறந்து விட்டார். இவர் சமீபத்தில் நடைபெற்ற ஜில்லா போர்ட் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றிருக்கிறார்.

சிறந்த விஞ்ஞான நிபுணராகிய சிஜ்மண்ட் ப்ருட் என்பவர் இதுகாறும் வியன்னாவில் வசித்து வந்தார். இவர் ஒரு யூதர். இதனால் இவர் வியன்னாவிலிருந்து வெளியேறும்படி நாஜி அதிகாரிகளால் உத்திரவிடப்பெற்று இன்று லண்டனுக்குப் பிரயாணமானார். இவர் லண்டனிலேயே தங்கி யிருப்பார் என்று தெரிகிறது.

இந்தியா அரசாங்கத்தின் சட்ட அங்கத்தினராக ஸர் மன்மத நாத் முக்கர்ஜி நியமிக்கப் பட்டார்.

6 பிரெஞ்சு தெற்கு எல்லைப் புறத்தை ஒன்பது ஆகாய விமானங்கள் குண்டுகளால் தாக்கின. இந்த விமானங்கள் யாருடையன வென்று தெரியவில்லை.

அரசாங்க ஊழியர்களுக்கு பர்மாவிலேயே செய்யப் பட்ட துணிகளாலாய உடைகளை அளிக்க வேண்டுமென்று பர்மா அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

சீனாவுக்கும் ருஷ்யாவுக்கும் ரகசிய உடன்படிக்கை நடைபெற்றிருப்பதாக ஜப்பானிய அரசாங்கம் கூறுவதோடு, ருஷ்யாவின் பலத்தின் பேரில்தான் சீனா இவ்வளவு தூரம் போராடுகிறதென்றும் தெரிவிக்கிறது.

7 ஐக்கிய மாகாண அரசாங்கத்தார் ஸ்திரீகளைப் போலீஸ் படையில் நியமித்திருக்கின்றனர். இவர்கள் இன்று கான்பூரில் நடைபெறுகிற மில் தொழிலாளர் வேலை நிறுத்த சம்பந்தமாக மில்களுக்கு எதிரில் பாராவாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கல்கத்தாவிலிருந்து புறப்பட்ட பஞ்சாப் மெயில் மதுபூர் என்றஇடத்தில் கவிழ்ந்து விட்டது. பலருக்குக் காயம்.

அமெரிக்கப் பாதிரி யொருவரை ஒரு ஜப்பானிய சோல்ஜர் இன்று பீகிங் நகரத்தில் சுட்டுக்கொன்று விட்டான்.

பம்பாயில் வெளியாகும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் நூறாவது வருஷக் கொண்டாட்டம் இன்று கொண்டாடப்பட்டது.

8 சென்னைப் பிரதம மந்திரியும் விளம்பர மந்திரி ஸ்ரீ ராமநாதனும் சேலம் ஜில்லா

வில் சுற்றுப் பிரயாணஞ் செய்து விட்டு இன்று சென்னை வந்து சேர்ந்தார்கள்.

ஐரோப்பாவில் சமாதானம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் வரவரக் குறைந்து வருகின்றன வென்றும், இதற்கு பிரான்ஸும் பிரிட்டனுமே காரணமென்றும் இத்தாலிய பத்திரிகைகள் எழுதத் தொடங்கியிருக்கின்றன.

மகாத்மா காந்தியின் இரண்டாவது குமாரரான ஸ்ரீ மணிலால் காந்தி இன்று தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பி விட்டார். இவர் இந்தியாவில் சுமார் நான்கு மாத காலம் இருந்தார்.

9 ஆறாவது ஜார்ஜ் மன்னருடைய பிறந்தினக் கொண்டாட்டம் இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மெங்கும் கொண்டாடப் பட்டது.

பண்டித ஜவஹர்லால் நேரு இன்று சூயஸ் துறை முகத்தில் ராய்ட்டர் நிருபருக்குப் பேட்டி கொடுதது் பேசினார்.

10 பிரான்ஸ்—ஸ்பெயின் எல்லைப்புறத்தில் அந்நிய நாட்டு ஆகாய விமானங்கள் எது வந்தாலும் அவற்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு பிரெஞ்சு அரசாங்கத்தார் உத்திரவு செய்திருப்பதாக இன்று பிரெஞ்சு சட்டசபையில் பிரதம மந்திரி கூறினார்.

பண்டித ஜவஹர்லால் நேரு, கெய்ரோவில் வாப்த் கட்சியின் தலைவரான நஹாஸ் பாஷாவுடன் விருந்துண்டார்.

11 பிரிட்டிஷ் கப்பல்களைப் பறக்க விட்டுக் கொண்டு பல அந்நிய நாட்டுக் கப்பல்கள் ஸ்பெயினுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்கின்றன வென்று ஸ்பெயின் செய்தியொன்று கூறுகிறது.

லண்டன் முதலிய பிரதேசங்களில் பூமியதிர்ச்சி ஏற்பட்டு சொற்ப சேதம் ஏற்பட்டது.

12 சீனாவுக்கு அநுதாபஞ் செலுத்து முகத்தான் அகில இந்திய சீன தினம் இன்று இந்தியா வெங்கும் கொண்டாடப் பட்டது.

ஸ்பெயின் யுத்தத்தில் அலிகாண்டி என்ற ஊரின் மீது பிராங்கோ கட்சியினர் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளை வீசி யெறிந்தனர். சுமார் 500 பேர் மரணம்.

ஐரோப்பிய சமாதானம் பங்கமடையுமானால் அதற்கு ஜெக்கோ-ஸ்லோவேகியா தான் காரணமாயிருக்கு மென்று ஹிட்லரின் பிரதிநிதி ஹெர் ஹெஸ் இன்று பெர்லினில் பேசினார்.

14 பண்டித நேரு இன்று ஜினேவா வந்து சேர்ந்தார்,

பர்மா அரசாங்கத்து நிருவாகத்தைச்சிக்கனமான முறையில்சீர் திருத்தியமைப்பதற்கும் எந்தெந்த வழிகளில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகப்படுத்தலா மென்பதைப் பற்றியும் சிபார்சுகள் செய்வதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டியார் இன்று தங்கள் அறிக்கையை வெளியிட் டிருக்கின்றனர்.

15 ஹிந்து—முஸ்லீம் சமரஸ சம்பந்தமாக மகாத்மா காந்திக்கும் ஜனாப் ஜின்னாவுக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்து இன்று வெளியிடப்பெற்றது,

சீனாவிலுள்ள மஞ்சள் நதியில் வெள்ளப் பெருக்கெடுத்து சுமார் இரண்டாயிரம் கிராமங்களடங்கிய 3000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசம் ஜலத்தில் அமிழ்ந்திருக்கிறது. இதனால் சீனப் படைகளுக்கும் ஜப்பானியப்படைகளுக்கும் அதிக நாசம் என்று இருதரப்பினரும் சொல்கிறார்கள்.

ஸ்ரீ கே. எப். நாரிமனும் டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவும் சமஸ்தான எல்லைக்குள் வரக்கூடாதென்று ஹைதராபாத் சமஸ்தான அரசாங்கத்தார் ஓர் தடையுத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

எதியோப்பியாவின் பிரசித்திபெற்ற மன்னனாகிய மெனலிக் அரசனுடைய தங்க உருவச்சிலையை இத்தாலியர் ரோமாபுரிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று அபிசீனிய வெற்றியின் இரண்டாவது வருஷக் கொண்டாட்டம் ரோமாபுரியில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது இத்தலிக்கு வரவழைக்கப்பட்டிருந்த ஒரு எதியோப்பிய தலைவன், மேற்படி உருவச் சிலையினிடம் சென்று வணங்கினான். இவன் பின்னர் தன் உருவிய கத்தியை எடுத்துக் கொண்டு தெருவிலே ஓடினா

னென்றும் உடனே பாசிஸ்ட் அதிகாரிகள் சுட்டுக்கொன்று விட்டார்களென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

பிராங்கோ படையினர் இரண்டு பிரிட்டிஷ் கப்பல்களின் மீது வெடிகுண்டுகள் வீசி யெறிந்தனர்.

16 பண்டித ஜவஹர்லால் நேரு இன்று ஸ்பெயின் அரசாங்கத்துத் தலை நகராகிய பார்சிலோனாவுக்கு விஜயஞ் செய்தார். பல தலைவர்களைக் கண்டு பேசினார்.

ஆஸ்திரியா அரசாங்கம் முன்னர் வாங்கியிருந்த கடனுக்கு ஜெர்மனி பொறுப்பேற்றுக் கொள்ள முடியாதென்று ஜெர்மன் பொருளாதார மந்திரி கூறினார்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டிடங்களையெல்லாம் இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலேயே இன்ஷ்யூர் செய்ய வேண்டுமென்று பம்பாய் அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

பெர்லின் நகரத்தில் சென்ற ஒரு வாரத்திற்குள் 1500 யூதர்கள் எவ்விதக் காரணமுமின்றிக் கைதி செய்யப் பட்டிருக்கிறார்கள்.

இன்று சென்னையில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் அகில இந்திய ரேடியோ ஸ்தாபனம் வேலை செய்ய ஆரம்பித்தது. பிரதம மந்திரி முதலில் ஒரு பிரசங்கம் செய்தார். இரவு 9-30 மணிக்கு கவர்னர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

17 ஜெர்மனியில் அமுலில் இருப்பது போல் ஆஸ்திரியாவிலும் ஒவ்வொருவரும் இரண்டு வருஷக் கட்டாய ராணுவச் சேவகம் செய்ய வேண்டு மென்ற விதி அமுலில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஜப்பானிய அரசாங்கத்தார், முஸோலினி, சியானோ முதலிய இருபத்தெட்டு இத்தாலியர்களுக்குக் கௌரவப்பட்டங்கள் வழங்கி யிருக்கின்றனர்.

ஆஸ்ட்ரியாவின்மாஜி சான்ஸலரான ஷுஷ்நிக்குக்கும் புக்கர் என்ற ஒரு மாதுக்கும் இன்று விவாகம் நடைபெற்றது.

கொச்சி சமஸ்தானத்தில் இன்று புதிய அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்படி திவானுக்கு உதவியாக ஒரு மந்திரியும் இருப்பார்.

18 காண்டன் நகரத்திலுள்ள நிரபராதிகளான ஜனங்களின் மீது ஆகாய விமானக்குண்டுகள் போடப்படுவதைக் கண்டித்து சோவியத் அரசாங்கப் பிரதிநிதி டோக்கியோவில் ஜப்பான் அரசாங்கத்திடம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். சோவியத் அரசாங்கம், இத்தகைய அறிக்கையைச் சமர்ப்பிக்க உரிமையில்லை யென்று ஜப்பான் அரசாங்கம் கூறுகிறது.

20 ண்டித நேரு பாரிஸ் நகரத்திலிருந்து டியோ மூலம் ஒரு பிரசங்கம் செய் தார்.

ஜெர்மனிக்கு விரோதமாக மூன்று புரு வர்களும் ஒரு ஸ்திரீயும் தேசத் துரோ க் குற்றஞ் செய்ததாக இன்று பெர்லி ல் தூக்கி விடப்பட்டனர்.

சென்னை அரசாங்கத்துப் பிரதம காரிய ரிசியான ஜி. டி. போக் ஐ. சி. எஸ். ரிஸா மாகாண கவர்னராக நியமிக்கப் ட்டிருக்கிறார். இப்பொழுது ஒரிஸா ன் கவர்னராயுள்ள ஸர் ஜான் ஹப் க் 10-8-38 லிருந்து ரஜாவில் செல்வார்.

சென்னை அரசாங்கத்து சுகாதார மந் ரியான டாக்டர் ராஜன் ஸ்ரீ ரங்கம் ழக்கு சித்திரைத் தெருவிலுள்ள தமது ட்டை, ஸ்ரீ ரங்கம் நகரசபைப் பள்ளிக் டத்தின் உபயோகத்திற் கென்று நன் கொடையாக அளித்து விட்டார்.

க்கு சீனா முழுவதும் யுத்தம் பரவக் டு மாதலால், இந்தப் பிரதேசத்தில் சிக்கும் அந்நியர்கள் வெளியேறி விடு நலமென்று ஜப்பானிய அரசாங்கத் ர் எல்லா அந்நிய நாட்டு அரசாங்க ளுக்கும் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

யுதங்களை எடுத்துச் செல்கிற எந்தக் ப்பலையும் தாங்கள் முழுகடித்து விடப் வதாக பிராங்கோ கட்சியைச் சேர்ந்த ரு தலைவர் கூறினார்.

21 ிட்டிஷ் அரசாங்கத்தின் அந்நிய நாட் க் கொள்கையைக் கண்டித்து தொழிற் சியினர் பார்லிமெண்டில் கொண்டு த தீர்மானம் தோல்வியுற்றது. நிரபரா களான ஜனங்களின் மீது ஆகாய விமா க் குண்டுகளினால் தாக்கக்கூடாதென்ப தப் பிரிட்டிஷ் அரசாங்கம் பலமாகக்

கண்டிக்கிறதென்று இந்த வர்த்தத்தின் போது பிரதம மந்திரி சேம்பர்லேன் கூறினார்.

21 ஆஸ்திரியாவிலுள்ள அறுபது பாதிரிமார்கள் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்,

இத்தலியைச் சேர்ந்த இரண்டு யுத்தக் கப்பல்கள் இன்று மால்டா தீவை வந்தடைந்தன. சென்ற பன்னிரண்டு வருஷத்திற்குப் பிறகு இது தான் முதல் தடவை இத்தாலியக் கப்பல்கள் இந்தத் தீவிற்கு விஜயஞ் செய்தது.

திருவாங்கூர் நேஷனல் அண்ட் கொயிலோன் பாங்கி தற்காலிகமாக மூடப்பட்டது.

கால் நடைகளுக்கு மேய்ச்சல் வசதிகள் என்னென்ன இருக்கின்றன வென்பதைப் பற்றி விசாரிக்கச் சென்னை அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை நியமித்திருக்கின்றனர்.

22 ஆருவது ஜார்ஜ் மன்னருடைய மாமியார் ஸ்ட்ராத்மோர் சீமாட்டி தமது 83வது வயதில் இறந்து போனார்.

ஜெர்மனி முழுவதும் யூதர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பெறுமென்று டாக்டர் கோயபெல்ஸ் ஓர் அறிக்கை விடுத்தார்.

23 பண்டித நேரு, தமது ஸ்பெயின், பாரிஸ் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இன்று லண்டன் வந்து சேர்ந்தார்.

ஜனாப் பஸ்லுல் ஹக் தலைமையின் கீழ் இருந்த வங்காள மந்திரிச் சபை இன்று ராஜிநாமா செய்து விட்டது. ஜனாப் நவுஷர் அலியைத் தவிர்த்த மற்றவர்கள் அடங்கிய மந்திரிச் சபையொன்று மீண்டும் அமைக்கப் பட்டது.

தேசீய பொருளாதார விஷயங்களில் சிக்கனம் செய்ய வேண்டுமென்றும், கட்டாய ராணுவச் சேவகத் திட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வருவதென்றும் இன்று ஜப்பானிய மந்திரிச் சபை தீர்மானித்திருக்கிறது.

பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் பெரியசச்சரவு நடைபெற்றது. வங்காளத்தில் புதிதாகச் சீர்திருத்தியமைக்கப்பட்ட மந்திரிச் சபை இன்று ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டது.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் கல்கத்தா நகர சபை அங்கத்தினர் பதவியிலிருந்து ராஜீநாமா செய்து விட்டார்.

ஜெர்மனியிலுள்ள ஆண் பெண் எல்லாரும் ஏதேனும் ஒரு வேலையைக் கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று தளபதி கோயரிங் மூலமாக ஓர் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு இன்று லண்டன் சேர்ந்தார்.

ஜப்பல்பூருக்குப்பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள கோரா என்ற கிராமத்தில் அடுத்த காங்கிரஸ் கூடுவதென்று நிச்சயிக்கப் பட்டது.

வாஜிரிஸ்தான் எல்லைப் புறத்தில் ஷாமி பீர் என்பவர் வந்து எல்லைப் புற ஜாதியினரைக் கலகத்துக்குத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார் என்றும், தற்போதைய ஆப்கன் அரச பரம்பரையை வீழ்த்தி விடுவதே இவர் நோக்கமென்றும் இந்திய அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

25 ஹிந்து முஸ்லீம் சமரஸப் பேச்சுக்கள் சம்பந்தமாக செவகான் கிராமத்தில் மகாத்மா காந்தியுடன் மௌலானா அஸாத்தும் திரு சுபாஷ் சந்திர போஸும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தார், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் விடுத்துள்ள அறிக்கையில், பிராங்கோ படையினர், எவ்விதப் பாது பாதுகாப்புமில்லாத நகரங்களின் மீது ஆகாய விமானக் குண்டுகள் போட்டு வருவதை நிறுத்தாவிட்டால், மற்ற நாடுகளிலுள்ள முக்கிய நகரங்களின் மீது வெடி குண்டுகள் எறிந்து பதிலுக்குப் பதில் செய்யப் படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

லார்ட் பிராபோர்ன் இன்று ஆக்டிங் வைசிராய் பதவியை ஏற்றுக் கொண்டார்.

டாக்டர் டக்ளாஸ் ஹைட் இன்று ஐர்லாந்தின் பிரசிடெண்ட் பதவியை ஏற்றுக் கொண்டார்.

ஸர் ராபர் ரீட் வங்காள கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டார்.